உ

சிவமயம்

இரௌரவாகமத்துள்ள

# ஸ்ரீ சிவஞானபோதம்

ஸம்ஸ்கிருத மூலமும்.

25. MAY 193
TANJORE

அதற்குத் திருமந்திரநகர்

மெஸ்ஸர்ஸ். ரா. மா. கம்பெனியார்

வேண்டுகோளின்படி,

ஸ்ரீ பிரஹ்மநிஷ்டபண்டித

வி. குப்புஸ்வாமி மஹராஜ் அவர்கள்

இயற்றிய

## தத்துவப்பிரகாசிகை யென்னும் தமிழுரையும்.

இவை

கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருதபண்டிதர்

பிரஹ்மஸ்ரீ S. சுப்பிரமணியசாஸ்திரிகளால்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீ - ல - ஸ்ரீ ராம. வீராஸ்வாமிராஜு அவர்களால்

தஞ்சை

ஸ்ரீ வித்தியாவிநோதினி முத்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

விலை] 1916. [ரூபாய் கஉ.

*Copy-Right Registered.*



## INTRODUCTION

BY

SRIMAN

**T. PONNAMBALAM PILLAI Avl.,**

M. R. A. S. Retired Excise Commissioner

TRAVANCORE.

# Sivagnana Botham.

There is scarcely a Hindu south of Madras who has not heard of Srimat Kuppuswamy Raju Garu of Tanjore. Notwithstanding his profound scholarship in Sanskrit, Tamil, Telugu and Hindi, and his familiarity with English, Mahratti, Canarese, Urdu and some other languages, and his intimate acquaintance with all the phases of the religions of his mother country, his modesty has always kept him in the back ground, without permitting him to push himself forward in the lime-light of publicity. But in spite of himself, his vast erudition and the austere

life he has been leading for the last several years, coupled with his intense love for his countrymen, which has impelled him to establish schools on religious basis, to found libraries and reading rooms and endow them, and to publish a graduated series of religious books, that the truths of Hinduism may be grasped step by step, have made his name and fame known to a large section of his co-religionists in Southern India, nay, beyond its bounds. He is a real Sanyasin in the real sense of the term, unlike those yellow robed imposters, who are to be found all over the country to feed on the sweat of the industrious. It is an individual of this character that ought to be dubbed Swamy, and not those human sharks that eat away the vitals of the country.

2. An erudite sage, as Srimat Kuppuswamy Raju is, is well qualified to write a commentary on Sivagnana Botham, the greatest authority on Saiva Siddhanta the

faith of the majority of the Tamil speaking population of Southern India. There are already four commentaries on this great sacred book. The first is by Sivagnana Swamykal of the Thiruvavaduthurai Mutt, the second by one Pandi Perumal, the third by Vijagra Yogikal of the Surianar Coil Mutt, and the fourth by Mr. J. M. Nallasamy Pillai B. A., B. L. The first is indeed a learned work, but owing to the abstruse language used in elucidating an abstruse subject, and to the large amount of technicalities introduced into his commentary, in a pedantic spirit, it could be understood and appreciated only by people who have spent years in mastering the Tamil classics, and the intricacies of a highly scientific grammar, viz the Tolkapiam. The second is rather tame, and not looked upon with favour, by the generality of the Saiva Siddhantists. The commentary of Vijagra Yogikal is still in Sanskrit Manuscript, and it is therefore

a sealed book, and will continue to be so, till the labours of the present learned and God-fearing Pandara Sannathykal of Susianar Coil and his desciples, are brought to a close. Mr. Nallasamy Pillai's work is in English, and he has done his utmost to render it as intelligible as possible, to that portion of the public for which he intended it, but the glamour that halos the work of Sivagnana Swamykal, was a drag on him. It is therefore refreshing to find this new Commentary in the field, in order to elucidate the Sivagnana Bhotham in such a way, that it may be easily understood by the ordinary reader. It ought therefore be warmly welcomed by the votaries of the Saiva Siddhanta. It must however be submitted, that the new commentary is not without being beset with technicalities, and other difficulties, but following the example of Sivagnana Yogikal, the commentator has added copious notes wherever any explanation is called for.

3. As there is no material difference between the Sanskrit and Tamil versions of the Sivagnana Bhotham, the commentator has taken up the former text, translated it into Tamil and commented upon it, Sutram by Sutram. The commentary has certain new features about it. The Agamas are considered to be the foundation of all religious belief amongst the Saiva Siddhantists, and they certainly form the code to regulate their every day religious practices. But at the same time it is their firm conviction, that the truths contained in the Agamas, and Vedas, are identically the same, if not they converge towards the same end. In confirmation of this statement, it is said by certain Siddhanta Sages that

"வேதமோ டாகம மெய்யா மிறைவநூல்"

The Veda and the Agama are indeed true books of god.

"வேதம் பசு, அதன் பால் மெய்யாகமம்"

The Veda is cow & its milk is the truthful Agama.

In consonance with these statements the learned commentator has demonstrated the identity of the spirit of these two revealed books, and in doing so, has laid under contribution, all the Upanishads and the Puranas, and all other sacred & profane literature in Sanskrit & Tamil. In the same manner, he has reconciled the supposed antagonism between the Vedanta and Siddhanta. The Masterly manner in which the commentator has marshalled his facts and arguments, and the endless array of authorities both from published and unpublished works, brought to bear on every important question, are an undoubted proof of the high intelligence, and the vast store of information he possesses. The latter could not have been secured but by a patient labour, and researches of years. It may perhaps be sacrilege if one were to compare the merits

of this humble and modest individual, with those of a cononised Saint as Sivagnana Swamykal. The trite saying, that no prophet is honoured in his time and country, holds good in the case of Srimat Kuppusamy Raju. For, I must take leave to say that he is more erudite than Sivagnana Swamy was. Perhaps if the swamy had the advantage afforded by the printing press established under the aegis of the benign British Rule, he would have been more learned. But the fact is, as I have opined, whatever may have been the causes.

4. In concluding this necessarily short notice, I cannot but confess, that I took upon myself this task with great reluctance at the instance of the publishers of this volume. Sriman Kuppusamy Raju completed the commentary after an arduous labour of years, handed it over to them, and went away to Benares. Had he remained at Tanjore and passed the sheets through the Press, unostent-

ations as he has been all along his life, he would not have sought the aid of anybody, much less that of this humble writer to write an introduction to the work, or to prop it up, and commend it to the favour of the public. As he stands to me in the relationship of a preceptor, (for it was from him I took my first lessons on Sivagnana Bhotham), and as my knowledge of Saiva Siddhanta is meagre, it is rather presumptuous on my part to say anything respecting the work. However as I could not but comply with the request of the Publishers, I have made the introduction as brief as possible.

Sivasallam
Alwarkurichi
5—11—1916.

T. PONNAMBALAM PILLAI.

பரமபதிதுணை.

## பண்டிதர் கோ. வடிவேலுசெட்டியாரவர்களது அபிப்பிராயம்.

### நிலைமண்டிலவாசிரியப்பா.

நித்தியா நந்த நிறைபரி பூரணன்
அத்த னேகன் சொலற்கரும் பான்மையன்
எறும்புகடை யானை யெண்ணி னுயிரும்
உறுகிரி முதலா வுற்ற பொருள்களும்
தானே யாகிய தத்துவ னுத்தமன்
பானேர் மொழியுமை பங்கன் பரமன்
மக்கண்மெய் யுணர்வு மாறா துற்றுத்
தக்கநன் னிலையைச் சார்ந்திடு மாறு
மொழிவே தப்பொருண் முரணா தறிய
வழிவழி யாக வரும்பல நூல்களுள்
ஒன்றா யுள்ள வுயர்சிவா கமத்துள்
நன்றா விளங்கு நல்சிவ ஞான
போத மதற்குப் பொருளறி யாமல்
ஏத நிறைய வியற்றினார் பலருரை
அவ்வுரை மக்கட் கரணா காது
வெவ்விய தீமை விளைத்து வருவதைத்
தஞ்சைவாழ் சீமான் சற்குரு சிகாமணி
நெஞ்சி னெறியை நீக்கிய நிமலன்

தன்மய நிலையைச் சார்ந்த மகாமுனி
புன்செய லென்றும் பொருந்தா வுத்தமன்
நூற்பல வுணர்ந்த நுண்ணறி வாளன்
ஏற்பன வற்றை யியம்புந் தயாநிதி
தப்பற வுண்மை சார்வார்க் கருள்பவன்
குப்பு சாமியென் கோமான் கண்டு
பொருந்து மாறு பொருந்த நல்லோர்
பொருந்துமிவ் வுரையெனப் புகலத் தத்துவப்
பிரகா சிகையெனும் பொலிவா முரையை
வரமார் வேத மாபுரா ணங்கள்
ஆகமங் கீதை யன்பர்வாக் கியங்கள்
வாகாய்க் காட்டி வரைந்தன னவ்வுரை
சுருதியர்த் தத்தைச் செவ்வே விளக்கி
வருதலி னதுதான் மனமறு நெறிபெற
விழைவோர் தமக்கு விருந்து போல்வதாம்
தழைசெறி கடுக்கைத் தண்ணரு ளாளன்
அருணெறி காட்டு மற்புத தீபமாம்
மருளிலா நெறியை வாய்ப்பக் காட்டும்
அவ்வுரை தன்னை யன்பாய்ப் படிப்போர்
செவ்விய நிலையைச் சேருத றிடனே.

கோ. வடிவேலுசெட்டியார்,
கோமளேசுவரன்பேட்டை,
சென்னை.



தஞ்சை ஸ்ரீ பிரஹ்ம நிஷ்டபண்டித
வி. குப்புஸ்வாமி மஹராஜ் அவர்கள்.

# முகவுரை.

ஸ்ரீமந் மேருபர்வதத்தின் சோதிசிகரமென்னும் பெயரையுடைய மகாகைலாசத்தில் சுத்தமாயாஸ்வரூப வடவிருக்ஷத்தின்கீழ் சுத்தவித்தியாமய மந்திரபீடத்தில் ஜீவர்களின் பாசத்தினை நீக்குதற்பொருட்டுத் தக்ஷிணாபிமுகமாய் வீற்றிராநின்ற ஸ்ரீகண்ட பரமேசுவரனை ஸ்ரீநந்திகேசுவரர் நமஸ்கரித்து, ஸ்வாமி! முன் சரியாகிரியாயோகபாதங்கள் அநுக்கிரகிக்கப்பட்டன. இப்போது பக்குவாத்மாக்கள் நல்ல மோக்ஷத்தினை யடைதற்பொருட்டு ஞானபாதத்தினை அனுக்கிரகிக்க வேண்டுமென்று அதிவிநயத்தோடு கேட்கப் பகவானும், அந்தப் பிரசினத்தாற் சந்தோஷமடைந்து அவ்வாறேயாகுக வென்று அனுக்கிரகஞ்செய்யலாயினர்:—

சிருஷ்டிகாலத்திற் பரமசிவம் சதாசிவமூர்த்தியை யதிஷ்டித்து ஈசானமுகத்தினின்றுஞ் சிவாகமங்களைத் தோற்றுவித்து, அவற்றைப் *பிரதிசங்கிதைக்கிரமத்தால் பிரணவர்முதலிய

* ஒருவிஷயத்தைப் பலவாகப் பிரித்து தனித்தனி

சிவர் பதின்மருக்கும் மகாருத்திரர்முதலிய உருத்திரர் பதினெண்மருக்கும் காமிகாதி இருபத்தெட்டினையும் அனுக்கிரகம் செய்தருளினார். அவர்கட் குபதேசிக்குங்காலத்தில் உபசுரோதாவாயிருந்த ருரு என்னும் முனிவர் ஞானமார்க்கத்தினைச் சங்கிரகவடிவமாக உபதேசிக்கவேண்டுமென்று கேட்க, அப்போது அவருக்கு எல்லா வாகமங்களின் சாரமாகப் பன்னிரண்டு அநுஷ்டுப்புச் சந்தசுவடிவ சூத்திராத்மகமான சிவஞானபோத மென்னும் சாத்திரத்தினை யுபதேசித்தருளினர், அதனோடு அவ்வாகமங்களெல்லாவற்றையும் * மகௌகக்கிரமத்தால், வித்தியேசரெண்மருள் முதல்வரான அநந்தேசுவரதேவருக் கநுக்கிரகித்தார். அந்தப்படியே அவர் எனக்குபதேசித்தார். யான் கேட்டவண்ணமே யாம் உனக்குபதேசிக்கின்றோம். நீயும் பக்கு

ஒவ்வொருவருக்குச் சொல்லுமுறை பிரதிசங்கிதைக் கிரமமாம். (प्रतिसंहिताक्रमः)

* மிகுதியாக வகுத்துச் சொல்லப்பட்ட பலவற்றையும் தொகுத்தொருவருக்குச் சொல்லும் முறை மகௌகக்கிரமமாம். (महौघक्रमः)

வான்மாக்கட் குபதேசிப்பாயாக வென்றரு ளினர். இத்தகைய சர்வவேதாகம சாரபூதமா யுள்ள இதனைத் தாந்திரிகமென்றும் துவைதப் பிரதிபாதகமென்றும் அவைதிகமென்றும் பா ராதுப் பராமுகப்படுகின்றனர். சாஸ்திரங்களில் வேதபாஹ்யமான வாமாதியாகமங்களே தாந் திரிகமென்று ஒதுக்கப்படுவன. வேதசாரமான காமிகாதிகள் அங்கீகரிக்கத் தக்கனவேயாம். அதனை,

"शैवागमोऽपि द्विविधः श्रौतोऽश्रौतश्च सस्मृतः ।
श्रुतिसारमयः श्रौतः स्वतन्त्र इतरोमतः ॥ ११ ॥

स्वतन्त्रो दशदा पूर्वं तथाऽष्टादशधा पुनः ।
कामिकादिसमाख्याभिः सिद्धः सिद्धान्तसंज्ञितः १२॥

श्रुतिसारमयो यस्तु शतकोटिप्रविस्तरः ॥

சைவாகமும் சிரௌதம் அசிரௌதமென இருவகையாய்க் கருதப்படுகின்றது. சுருதிசார மயமானது சிரௌதமாம். சுவதந்திரமானது அசிரௌதமாம். ஸ்வதந்திரம் பூர்வம் பத்து வகையாகவும், சித்தாந்தப் பெயரினது மறுபடி யும் பதினெண்வகையாகவும், காமிகமுதலிய

பெயர்களால் சித்தித்துள்ளதாம். சுருதிசாரமயம் எதுவோ, அது நூறுகோடிவிஸ்தாரமுள்ளதாம்'' என்னும் சிவபுராணம்வாயுசங்கிதை பூர்வபாகம் உஅ-ம் அத்தியாயவாக்கியத்தாலும்,

"सिद्धान्तो वेदसारःस्यादन्यद्वेदबहिष्कृतम् ।
सिद्धान्तविहिताचारो वैदिकाचार उच्यते ॥

சித்தாந்தம் வேதசாரமாம். மற்றையது வேதத்திற்குப் புறம்பாகியதாம். சித்தாந்தத்தில் விதிக்கப்பட்ட ஆசாரம் வைதிகாசாரமெனப்படும்'' என்னும் காமிகவசனத்தாலும்,

"कामिकादिप्रभेदानां यथा देवो महेश्वरः ।

காமிகமுதலிய பேதங்கட்கு எப்படி தேவனாகியமகேசுவரன் கர்த்தாவோ,'' என்னும் சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்ட முதலத்தியாய வாக்கியத்தாலும்,

"वयन्तु वेदशिवागमयोर्भेदं न पश्यामः वेदोपि शिवागम इति व्यवहारो युक्तः । तस्य तत्कर्तृकत्वात् अतः शिवागमो द्विविधः त्रैवर्णिकविषयः सर्वविषयश्चेति । वेदस्त्रैवर्णिकविषयः । सर्वविषयश्चान्यः । उभयोरेकव शिवः कर्ता ॥

யாம் வேதசிவாகமங்களிரண்டற்கும் பேதத்தினைக் காணோம். வேதம் சிவாகமமென்னும்வியவகாரம் யுக்தமாம்; அதற்கு அவன் கர்த்தாவாதலின். ஆதலால் சிவாகமமும், மூவர்ணவிஷயமானது சர்வவிஷயமானது என்று இருவகைத்தாம். வேதம் (பிராஹ்மணத்துவாதி) மூவர்ணவிஷயமானது; மற்றையது சர்வவிஷயமானது. இரண்டற்கும் சிவனொருவனே கர்த்தா" என்னும் நீலகண்டசிவாசாரியர்வாக்கானும்,

" शिवो हि सर्वेष्वागमेषु षट्त्रिंशत्तत्त्वानि निरूपयन् कालतत्त्वस्योत्पत्तिमंगीचकार । निखिलशैवागमसारमार्याभिः संगृह्णानो भोजराजः शुद्धानि पंचतत्त्वानि शिवशक्तिसदाशिवेश्वरविद्याख्यानि निर्दिश्येतराणि निर्दिशन् मायाकार्योत्पत्तिपूर्वकमेव कालं निरदिक्षत् । पुंसो हि कर्तृतार्थं मायातस्तत्त्वपंचकं भवति । कालो नियतिश्च तथा कलाविद्या च रागश्चेति तान्येतानि मायासहितानि एकादशतत्त्वानि सांख्यप्रसिद्धानि पंचविंशति तत्त्वानि चोद्दिश्य क्रमेण विवृण्वन्निदमाह 'नानाविधशक्तिमयी सा जनयति कालतत्त्वमेवादौ । भाविभवद्भूतमयं कलयति जगदेष कालगतः ॥

சிவனே சர்வாகமங்களிலும் முப்பத்தாறுதத்துவங்களை நிரூபித்துக் காலதத்துவத்தின் உற்பத்தியினையு மங்கீகரித் திருக்கின்றனன். எல்லாச் சைவாகமங்களின் சாரத்தினை ஆர்யைகளால் சங்கிரகிப்பவரான போஜராஜரும், சுத்தமான பஞ்சதத்துவங்களான சிவம் சத்தி சதாசிவம் ஈசுவரம் வித்தை யென்பவற்றை யெடுத்துக்காட்டி, மற்றவற்றையும் காட்டுபவராய், மாயாகாரியோற்பத்தியினை முன்னிட்டே காலத்தினையும் காட்டினார். புருஷனுக்குக் கர்த்திருத்தன்மையின் பொருட்டு மாயையினின்று காலம் நியதி கலை வித்தை ராகம் என்று தத்துவ பஞ்சக முண்டாயிற்று. மாயையோடுகூடி அவ்விந்தப் பதினொருதத்துவங்களையும் சாங்கியப்பிரசித்தமான இருபத்து நான்கு தத்துவங்களையும் காட்டிக்கிரமமாக விவரித்து 'நாநாவித சக்திமயமான அம்மாயை வருவது நிகழ்வது சென்றதெனும் வடிவகாலதத்துவத்தினையே முதலிற் பெறுகின்றது. காலத்திருக்கும் இவன் உலகத்தினை விழுங்குகின்றான்' என்று இதனைக்கூறினார்" என்று காலமாதவியத்துக் கூறிய வித்தியாரணியஸ்வாமிகள்வாக்கானும் தெளிவதோடுயாம் சுருதியாதி அநேகப் பிரமாணபூர்வகமாகக் காட்டிய உரையினைக்கொண்டு இது வேதசா

ரமே யென நிச்சயித்து இதனைச் சிவாநுபூதிச் செல்வரான பெரியார்முகமாய்க் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடிச் சிவாநுபூதிச் செல்வராவார்களாக. உரையெழுதப்புகுந்த வுண்மைநோக்க மிதுவே. இதில் புத்திப்பிரமசத்தால் யாதேனும் விரோதமுளதாயின், அதனைப் பிரமாணபூர்வகமான யுக்தியோடு எவரேனும் எடுத்துக்காட்டுவாராயின், அதனை ஆதரவோடு கொண்டு அவர்கள் செய்யும் நன்றியையு மிக மேன்மையாய்ப் பாராட்டப்படும். அத்திருத்தமும் மறுபதிப்பில் வெளிபிடப்படும்.

இச்சாந்திரத்திற்குப் பதிபசுபாசவிவேகம் விஷயமாம். விவேகவாயிலாகப் பாசவிடுதியால் அகண்டாகார சச்சிதாநந்தாத்வய பரிபூர்ண சிவப்பிராப்திவடிவமுக்தி பிரயோஜனமாம். சத்திநிபாதமுடைய முமுக்ஷு அதிகாரியாவன். இந்நூலிற்கும் விஷயத்திற்கும் பிரதிபாதகபிரதிபாத்தியபாவசம்பந்தமாம். நூலிற்கும் அதிகாரிக்கும் அத்தியேதவ்விய அத்தியேத்ருபாவசம்பந்தமாம். அதிகாரிக்கும் பிரயோஜனத்திற்கும் பிராபகபிராப்பியபாவசம்பந்தமாம். இவ்வாறே மற்ற சம்பந்தங்களையும் அறிக.

வி. தி.

# சிறப்புப்பாயிரம்.

தஞ்சை கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல்
சம்ஸ்கிருத பண்டிதர்
பிரஹ்மஸ்ரீ
S. சுப்பிரமணியசாஸ்திரிகளியற்றியன.

श्रीः

अद्वैतब्रह्मविद्यायामपि निष्ठामुपेयिवान् ।
सर्वदर्शननिष्णातः सकलागमसारवित् ॥

श्रीकुप्पुस्वामिराजाख्यो राजयोगविशारदः ।
व्यतानीद्यां शिवाद्वैतसुखसंतानसिद्धये ॥

श्रीशिवज्ञानबोधस्य व्याख्या तत्त्वप्रकाशिका ।
सा प्राप्य जगतीमेतां जीयादाचन्द्रतारकम् ॥

S. Subrahmanya Sastri.

அரிமழம்.

## பிரஹ்மஸ்ரீ

## சிவாநந்தஸ்வாமிகளியற்றியன.

பொன்வரையி னொளிச்சிமயக் கைலைவட வடிவாழும் புனிதன முன்னூ, லென்வரையு மருள்பழுத்த வெழினந்திக் குலகுய்ய வியம்பும் வேதச், சென்னியுறை பொருட்சாரச் சிவஞான போதமெனுஞ் சிறந்த நூற்கு, நன்னரரு ளினனொருநூற் றொன்பதுயர் நூன்மேற் கோ ணல்கி மாதோ.

தத்துவப்ர காசிகையென் றோருரைதஞ் சையர்கோமான் சாந்தி யாதி, யுத்தமநற் குணங்களுக்கோ ருறையுளென் னுயிராளே னுரைவல் லார்க, ளொத்திடவே வேதாந்த சித்தாந்த மொன்றென்றே யுலக மெல்லாஞ், சத்தியமே வடிவென்னச் சாற்றுகுப்பு சாமியெனுந் தவத்தோர் வேந்தே.

**Sivanandaswami.**

## நிலைமண்டில ஆசிரியப்பா.

கடல்புடை சூழ்ந்த கவின்பெறு முலகிற்
செயிர்தரு வினைமரீஇத் தேம்புபு திரியு
முயிர்பிழைத் துய்ய வுவந்தன னாகி
முழுமுதற் பெருமான் மொழிந்தன நூல்கள்
வேதா கமமென விளங்கிய வன்றே
பாட்டுரை யென்னப் பயிலு மவ்விரண்டு
ணாட்டிய சிறப்பி னணியுயர்ந் ததுதான்
ஆகம மென்ன வோகையி னவில்ப
வத்தகு நூலுள் ரௌரவா கமத்துப்
பாச விமோசனப் படலத் தாறிரண்
டாகிய வத்தி யாயத் திடையே
யுள்ளன சூத்திர மொருபது மிரண்டுஞ்
சிறந்தன வாதலின் சிவஞான போத
மெனப்படு மதன் பொருளினிதினின் விளங்க
நூல்பல காட்டி நுண்ணிதி னாய்ந்
தொப்பிகந் துயர்ந்த வுரைவகுத் தருளினன்
திப்பிய குணத்தவன் றிண்மையில் வடிவன்
வாய்வலி யடக்கிய காய்புல னுடையவன்

பலநூல் வகுத்த நலமிகு பெரியோன்
என்னனை யவர்க்கும் புன்மதி யகற்ற
மன்வலி படைத்த நன்மதி யுடையோன்
குப்புசாமி யெனப் பெயர் கொள்ளுமெஞ்
செப்ப மார் தவத்துச் சீர்த்திமிக் கவனே.

அ. பாலசுப்பிரமணிய பிள்ளை.
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
டவுன் ஹைஸ்கூல்,
கும்பகோணம்.

# இந்நூலிற் காட்டிய பிரமாணநுக்கிரமணிகை.


அ — பக்கம்.

க. அக்கினிபுராணம் ... உரு-உஅரு.

உ. அசிந்தியவிசுவசாதாக்கியாகமம் ... கருஉ-கஎஎ-உகூங ஙஙங

ங. அதர்வசிரோபநிஷதம் சுங-சுஅ-எசு-ககஅ.

ச. அத்யாத்மோபநிஷதம் சுசு-உச0-உஅக.

ரு. அத்வயதாரகோபநிஷதம் ... ஙகங.

சு. அந்நபூர்ணோபநிஷதம். எச-உசஅ-உஅக-ஙகஉ.

எ. அமிருதநாதோப நிஷதம் ... ரு0.

அ. அமிருதபிந்தூப நிஷதம் ... எஎ.

ஆ

கூ. ஆகமமுணர்ந்தோர்வாக்கு ... உஅஎ.

க0. ஆகமம் ... கருசு-கசு0.

கக. ஆத்மபோதோப நிஷதம் ... உகரு-உசுஉ-உசுங.

கஉ. ஆத்மோபநிஷதம் ... உகூஉ.

கங. ஆபஸ்தம்பதருமசூத்ரம் ... ஙஎ.

இ

௧௪. இலிங்கபுராணம் ... ௬௦-௭௭-௭௯-௧௦௧-௧௪௦ ௨௧௪-௨௭௧-௩௦௪.

ஈ

௧௫. ஈசாவாசியோபநிஷதம் ... ௨௯௧.

௧௬. ஈசுவரகீதை ... ௪௩-௬௧-௯௩.

உ

௧௭. உண்மைவிளக்கம் ... ௪௪-௧௬௮.

ஐ

௧௮. ஐதரேயோபநிஷதம். ௧௧-௧௫.

க

௧௯. கடருத்ரீயோபநிஷதம் ௧௧-௭௨-௧௬௦-௨௨௪ ௨௫௧.

௨௦. கடவல்லியுபநிஷதம். ௯௯-௧௪௫-௧௬௮-௧௭௨ ௨௧௪-௨௪௫-௨௪௮ ௨௫௪.

௨௧. கடோபநிஷதம் ... ௨௯௧.

௨௨. கந்தாநுபூதி ... ௨௭௪-௨௯௭.

௨௩. கருடபுராணம் ... ௩௮-௨௧௦.

கா

௨௪. காசிகாண்டம் ... ௪௪-௨௭௨.

௨௫. காமிகாகமம் ... ௪-௧௨௯-௧௪௫-௧௯௩.

உசா. காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி } கசாஎ.

உஎ. காலமாதவியம் (வித்யாரணியர்) ... } ருகருஎ.

கு

உஅ. குறள் ... அ.

கூ

உகூ. கூர்மபுராணம் ... } சா0-கூஉ-கூங-கசாகூ உகூரு-உசா0-உஎ0 உஎக-உகூச-உகூரு.

கே

ங0. கேனோபநிஷதம் ... கசாங.

கை

ஙக. கைவல்யோபநிஷதம். } ககூஎ-உஙஅ-உரு0 உருச-உஅ0.

ச

ஙஉ. சதாசிவசிவாசாரியர்... அ.

ஙங. சநத்குமாரசங்கிதை மலயாசலகண்டம். } உகக-உகங.

ஙச. சரபோபநிஷதம் ... உசாச.

ஙரு. சாஸ்வதிரஹஸ்யோபநிஷதம் ... } எஎ.

ஙசா. சர்வசாரோபநிஷதம். ருகூ-கச அ-கஎஉ.

௩௭. சர்வஞானோத்தரம்... ௨௪-௧௦௦-௧௪௩-௧௯௮-௨௨௫-௨௮௪.

சா

௩௮. சாண்டில்யோபநிஷதம் ... ௨௩௯.

௩௯. சாந்தோக்கியோபநிஷதம் ... ௧௬-௧௭-௧௮-௬௬-௧௮௮-௨௩௭-௩௦௬-௩௨௬.

சி

௪௦. சிவகீதை ... ௩௦-௧௪௩-௧௭௫-௨௫௬-௨௮௪.

௪௧. சிவஞானசித்தியார் ... ௯௪-௯௮-௧௬௭-௨௭௪-௨௮௭-௩௦௦.

௪௨. சிவஞானபோதம் உதாரணவெண்பா மெய்கண்டதேவர். ௪௪-௧௬௦-௧௮௧.

௪௩. சிவஞானபோதம் தமிழ் ... ௯௬-௧௬௭-௧௮௭-௨௭௪.

௪௪. சிவஞானபோதசூத்ரம் தமிழ் ... ௨௭௪.

௪௫. சிவஞானபோதவார்த்திகம் மெய்கண்டதேவர் ... ௯௬-௯௮-௧௫௭-௨௮௯.

௪௬. சிவதருமோத்தரம் ... ௩௯௨.

சஎ. சிவபுராணம் கைலாச ஸம்ஹிதை ... ருஅ-க0சா-கசச-க எரு ககூஉ-உக0.

சஅ. சிவபுராணம் ஞான ஸம்ஹிதை ... ஙங-ஙச-ஙரு-கஎரு உ0ச.

சகூ. சிவபுராணம் வாயுஸம்ஹிதை ... ச-ருசா-சாக-ககச-ககசா கஉஉ.

ரு0. சிவவாக்கியர் ... உகூஎ.

சு

ருக. சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம் ... சக.

ருஉ. சுவச்சந்தபாரமேசுவராகமம் ... கருச.

ருங. சுவாயம்புவாகமம் ... கஉசா-கருரு-ககூங.

ருச. சுவேதாசுவதரோபநிஷதம் ... உக-உஉ-கூகூ-கஎரு உசரு-உசசா-உசகூ ஙஉஉ.

சூ

ருரு. சூதசம்ஹிதை ... ச-உசா-உஅ-உகூ-ருரு சா0-அச அரு-அஅ க0உ-க0ங-ககூ0-உஉசா உஉஎ-உஉகூ-உருங உகூச-ஙகூக.

ருசா. சூதகீதை தமிழ் ... சசா-அக-கூக-கூஉ-கசஅ கஎசா-ககூக-உ0ச-உஙங உஙரு-உருச-உகூச.

சை

௫௭. சைவசமயநெறி ... ௧௭௭-௨௫௪-௨௯௭.

தா

௫௮. தாயுமானுர் ... ௨௭௫.

தி

௫௯. திருக்களிற்றுப்படியார் ... ௪௪-௯௮-௨௩௭-௨௪௭-௨௬௧.

௬௦. திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம் ... ௩௮-௯௪-௨௯௬.

௬௧. திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம் ... ௩௯-௧௬௭-௨௪௭-௨௭௨-௨௮௭-௩௩௨.

௬௨. திருமந்திரம் ... ௪௨-௨௩௭-௨௪௧-௨௬௨-௨௭௨-௨௯௭.

௬௩. திருவாசகம் ... ௪௨-௯௫-௨௩௬-௨௪௫-௨௭௨-௨௯௬-௩௦௫.

௬௪. திருவிசைப்பா ... ௧௬௭.

௬௫. திருவிளையாடல் ... ௨௭௨.

௬௬. திருவுந்தியார் ... ௪௪-௧௯௪-௨௪௫-௨௫௪-௩௦௪.

தே

௬௭. தேவிகாலோத்தரம் ... ௮-௨௯-௧௭௭-௨௮௩-௨௯௯.

சூஅ. தேஜோபிந்தூபநிஷதம் ... நகச

தை

சூகூ. தைத்திரீயோபநிஷதம் ... கூ-க0-சூஅ-உந-அ.

நா

எ0. நாரதபரிவிராஜகோபநிஷதம் ... உகசு-உரு0.

நி

எக. நிராலம்போபநிஷதம். சுந-எஉ-எகூ-க00-க0ரு.
எஉ. நிருசிம்மதாபினிஉபநிஷதம் ... எக-உகரு.

நீ

எந. நீலகண்டசிவாசாரியர் ச.

ப.

எச. பகவத்கீதை ... நஎ-உசக-
எரு. பஞ்சமபிரஹ்மோபநிஷதம் ... உஎஅ.
எசு. பட்டினத்தார்பாடல். கூகூ-கூச கூசு-கூஎ-கூஅ உஎகூ.
எஎ. பத்திரகிரியார்பாடல். கந-கூசு-உசுக.
எஅ. பராக்கியஆகமம் ... சுச-கசுசு-நஉஎ.

பா.

எகூ. பாசுபதபிரஹ்மோப நிஷதம் ... ககூரு-உசுஎ-உசுஅ ஙOஉ-ஙகக.

அO. பாரதம் ... உககூ.

பி.

அக. பிரசிஞேபநிஷதம்... உககூ.

அஉ. பிரஹ்மகீதை ... உகூ-உஎ-உஅ-சஅ-ருO அக-ககூசு-ககக-உOக உஙO-உருஎ-உருஅ உருக-உசுO-உசுஅ உசுகூ-ஙகரு-ஙஉரு.

அங. பிரஹ்மபிந்தூபநிஷதம் ... உருO-உருரு.

அச. பிரஹ்மபுராணம் ... அக-உஎO.

அரு. பிரஹ்மமீமாம்ஸாசூத்ரம் ... உரு-கOசு.

அசு. பிரஹ்மவித்யோபநிஷதம் ... உகூக.

அஎ. பிருகதாரணிகோபநிஷதம் ... கங-கச-கரு-கசுங-கசுஅ உஉக-உசசு உசுஉ உஅO-ஙஉசு.

பை.

அஅ. பைங்கலோபநிஷதம் உO-ருகூ-கஅங-உஙஅ உஅO-உககூ-ஙOO ஙOங-ஙOஅ.

பௌ.

௮௯. பௌஷ்கரம் ... ௫-௬-௪௫-௫௫-௧0௧-௧௨௨-௧௨௪-௧௨௮-௧௩௨-௧௩௩-௧௪௯-௧௬௬-௧௬௯-௧௮௪-௨௨௪.

ம.

௯0. மகாநாராயணோபநிஷதம் ... ௨௬௫.

௯௧. மகோபநிஷதம் ... ௧௮௮-௨௪௩-௨௪௮-௨௫௧-௨௫௫-௨௬௫-௨௬௬.

௯௨. மண்டலபிராஹ்மணோபநிஷதம் ... ௧௪௯-௨௬௪.

௯௩. மநுதர்மசாஸ்திரம் ... ௨௪௭.

௯௪. மணவாசகங்கடந்ததேவர் ... ௧௮௧.

மா.

௯௫. மாண்டூக்யோபநிஷதம் ... ௨0-௨௩௮.

மி.

௯௬. மிருகேந்திராகமம் ... ௫-௧௪௬-௨௨௫.

மு.

௯௭. முண்டகோபநிஷதம். ௫-௧௮-௧௯-௨0-௧௮௮ ௨௧௮-௨௪௪-௨௫௬ ௩௨௨-௩௨௬.

மை.

௯௮. மைத்திராயணி உப நிஷதம் ... ௨௬௪.

௯௯. மைத்திரேயிஉபநிஷதம் ... ௨௨௩-௨௬௨-௨௭௯.

ய.

௧00. யஞ்ஞவாாகபகவத் கீதை ... ௨௭0-

யோ.

௧0௧. யோககுண்டலிவுப நிஷதம் ... ௧௮0-௧௮௪-௩௧0.

௧0௨. யோகசிகோபநிஷதம் ௨௨-௬௯-௧௨௩-௧௭௪ ௧௯0-௩௨௧.

௧0௩. யோகதத்வோபநிஷதம் ... ௧௯௭.

ரு.

௧0௪. ருத்ரஹ்ருதயோப நிஷதம் ... ௧௮௯-௨௧௬-௨௪௬ ௨௫௧.

வ.

க0ரு. வராகோபநிஷதம் ... } கக-சாக-எ௪-எரு-எசா
கசாகூ-கஎ௩-கஅகூ
உஉ௩-உ௪௪-உருக
உஎகூ-உஅஉ-௩0௩
௩கஉ.

வா.

க0சா. வாதுளாகமம் ... உ௩-சாக-கஎஎ.

க0எ. வாயுசங்கிதை ... உருஎ-உசாக.

ஜா.

க0அ. ஜாபாலதர்சனோப
நிஷதம் ... } உஎசா-உஎஎ.

ஸ்.

க0கூ. ஸ்கந்தோபநிஷதம். உஉக.

இந்நூலிற்காட்டிய

பிரமாணநுக்கிரமணிகை

முடிந்தது.



ஓம்.

ओं गणेशाय नमः

ओं श्रीशिवाय परमगुरवे नमः

ओं श्रीशिवकामवल्लीसमेताचिदम्बरेशाय नमः

# ॥ श्रीशिवज्ञानबोधः ॥

# ஸ்ரீ சிவஞானபோதம்.

உரை மங்கலம்.

नत्वा श्रीगणनाथं च नन्दिकेशादिकान्गुरून् ।
दक्षिणास्यं महादेवं सच्चित्सुखमयं शिवम् ॥ १ ॥

ஸ்ரீகணநாதரையும் நந்திகேசர் முதலிய ஆசிரியர்களையும், தக்ஷிணாமூர்த்தியும் மஹா



ஓம்.

ओं गणेशाय नमः

ओं श्रीशिवाय परमगुरवे नमः

ओं श्रीशिवकामवल्लीसमेताचिदम्बरेशाय नमः

# ॥ श्री शिवज्ञानबोधः ॥

# ஸ்ரீ சிவஞானபோதம்.

உரை மங்கலம்.

नत्वा श्रीगणनाथं च नन्दिकेशादिकान्गुरून् ।
दक्षिणास्यं महादेवं सच्चित्सुखमयं शिवम् ॥ १ ॥

ஸ்ரீகணநாதனையும் நந்திகேசர் முதலிய ஆசிரியர்களையும், தக்ஷிணாமூர்த்தியும் மஹா

தேவரும் சச்சிதாநந்தரூபியுமான பரமசிவனை யும் நமஸ்கரித்து,

" मुमुक्षूणां सुखेनैव शिवानुभवसिद्धये ।
क्रियतेऽस्य मया व्याख्या नाम्ना तत्त्वप्रकाशिका॥२॥

முமுக்ஷுக்களுக்கு எளிதில் சிவாநுபவம் சித்தித்தற்பொருட்டு, இந்நூலுக்குத் தத்துவப் பிரகாசிகை என்னும் ஓர் உரை என்னால் இயற் றப்படுகின்றது.

(அவதாரிகை.)

இப்போது இக்காணப்படு முலகிற்கு வேறாக ஓர்பொருளில்லையென்பார்க்கு அநுமா னப் பிரமாணத்தாலுண்டெனச் சாதித்து, அப் பொருளின் *க. தடஸ்தலக்ஷணமுங் கூறுகின் றார்:—

*க. எவ்விலக்கணம் இலக்கியத்தில் ஓர்காலத்திருப் பதாய் அவ்விலக்கியத்தினை இலக்கியமல்லாத பிறவற் றினின்று வேறுபிரித்தறிவிப்பதாமோ, அது தடத் தலக்கண மெனப்படும். இவ்வுலககாரணத்தன்மையிலக் கணம் சிவமாகிய இலக்கியத்தில் ஓர்காலத்திருப்பதாய் அதனை இலக்கியமல்லாத பிரபஞ்சத்தினின்று வேறு பிரித்தறிவிப்பதாதலால் அஃது அச்சிவத்தின் தடத்தலக் கணமாம்.

## முதற்சூத்திரம்.

स्त्रीपुंनपुंसकादित्वाज्जगतः कार्यदर्शनात् ।
अस्ति कर्ता स हृत्वैतत्सृजत्यस्मात्प्रभुर्हरः ॥ १ ॥

(இதன்பொருள்.)

जगतः कर्ता अस्ति=ஜகத்திற்குக் கர்த்தா (செய்பவன்)உளன் स्त्रीपुंनपुंसकादित्वात् कार्यदर्शनात्=ஸ்திரீ (பெண்)பும் (ஆண்)நபும்ஸக (அலி) முதலிய அவயவப் பகுப்புடைமையால் காரியம் காணப்படுதலால்; யாது யாது காரியமாமோ அது அது கர்த்தாவினை யுடையதாம்; குடம் போல. सः=அக்கர்த்தா, एतत्=இக்காணப் படுமுலகினை, हृत्वा=சங்கரித்து (அழித்து), सृजति=படைக்கின்றான். अस्मात्=இதனால் हरः प्रभुः=சங்காரஞ்செய்பவன்காரணமாவன் என்றவாறு.

(வியாக்கியானம்.)

காணப்படும் ஜடகாரியமான ஓர் கடத்தைக் கண்டபோது, இதனைச்செய்த சேதனன் ஒருவனுளனென்று நிச்சயிக்கப்படுவதுபோல இக்கா

ணப்படும் காரியமான ஜடவுலகத்தினைக் கண்டு அக்காரியத்தன்மையேதுவால் இதனை யாக்கியோனாகிய காரணவடிவசேதனன் ஒருவன் உளன் என்பது அநுமிக்கப்படுகின்றது, 'ஸ்திரீ * உ. பும்நபும்ஸகாதித்தன்மையான காரியம்' என்றமையால் சொல்லும் பொருளுமாய இரு கூற்றுப்பிரபஞ்சமும் என்பது தெரிவிக்கப்பட்டது. 'அவன் இவ்வுலகினை யழித்துப் படைக்கின்றான்' என்றமையால், இம்முத்தொழிலையுமுடைய அவன் இத்தொழில்கட்குட்படாத சர்வஞ்ஞத்வாதிலக்ஷண முடைய னாதல்வேண்டு மென்பது பெறப்பட்டது. படவே ஜடமாகிய பிரகிருதிக்கும் கிஞ்சிஞ்ஞனான ஜீவனுக்கும் கர்த்திருத்வம் சம்பவியாதென்பது சூசிக்கப் பட்டதாயிற்று. அது,

"सर्वज्ञः सर्वविद्यस्य ज्ञानमयं तपः ।
तस्मादेतद्ब्रह्म नाम रूपमन्नं च जायते ॥

எவன் சர்வஞ்ஞனோ (சாமானியவடிவமாக எல்லாவற்றையுமறிபவனோ), சர்வவித்தோ (விசேஷவடிவமா யெல்லாவற்றையு மறிப

* உ. ஆத்மாபூர்ணனாதலால் அல்லது ஜாக்கிராதிபுரங்களிலிருப்பவனாதலால் புருஷனெனப்படுகின்றான்.

வனே), எவனுக்கு ஞான (சிருஷ்டிக்கப்படும் சர்வ பதார்த்தவுணர்ச்சி)மயமான தபசு உளதோ, அவனிடத்திலிருந்து காணப்படு மிந்த (காரியவடிவ)பிரஹ்மமும் (ஹிரணியகர்பனும்) நாமமும் ரூபமும் அந்நமுமுண்டாகிறது" என்னும் முண்டகசுருதிவசனமும்,

" विवादाध्यासितं विश्वं विश्ववित्कर्तृपूर्वकम् ।
कार्यत्वादावयोस्सिद्धं कार्यं कुम्भादिकं यथा ॥

விவாதத்திற்கு விஷயமான உலகம் சர்வஞ்ஞனாகிய கர்த்தாவை முன்னிட்டதாம்; காரியத்தன்மையால். நம்மிருவர்க்கும் காரியம் கடமுதலியவற்றைப்போல வென்பது சித்தித்ததாம்" என்னும் பௌஷ்கரவசனமும்,

" अथानादिमलोपेतः सर्ववित्सर्वकृच्छिवः ।
पूर्वंव्यत्यासितस्याणोः पाशजालमपोहति ॥

இனி அநாதியே மலநீங்கியவனும், எல்லா முணர்பவனும், எல்லா மியற்றுபவனுமான சிவன் முன்னமே பரிபாகப்பட்டுள்ள அணுவாகிய ஜீவனது பாசக்கூட்டத்தினை யொழிக்கின்றான்" என்னும் மிருகேந்திரவசனமு மாகிய இவைமுதலியவற்றாற் கூறப்படுவது காண்க.

"अगृह्यो न हि गृह्यते = கிரகிக்கப்படாதவன், கிரகிக்கப்படுகிறதில்லை" "न ग्राह्यः = கிரகிக்கத் தக்கவனல்லன்;" "अप्रमेयः = அளவைகளா லளக்கப்படாதவன்" "अवाङ्मनोगोचरः = வாக்கு மனதுகளுக்கெட்டாதவன்" என்னும் பிரமாணங்களால் கிரகிக்கக்கூடாதவனுயினும், முத்தொழில் பிரசித்தமாய்க் காணப்படுதலின் அத்தொழில் தனக்காசிரயமான கர்த்தாவினையின்றியமையாமை காரணமாக அதனுல் கர்த்தா இலக்ஷியிக்கப்படுகின்றான். அதனை,

"लयभोगाधिकारात्म व्यापारत्रयलक्षितः।
स्वभावादच्युतः शक्तः स पतिः परिपठ्यते ॥

லயம் போகம் அதிகாரமென்னும் வடிவினவாய வியாபாரமூன்றினுல் லக்ஷியிக்கப்படுபவனும், இயல்பாகச் சொரூபத்தினின்று நழுவாதவனுமான சக்தியுடையவன் எவனோ அவன் பதி யென்று சொல்லப்படுகின்றான்" என்று பௌஷ்கரம் கூறுவதும் காண்க.

இவ்வாறு "சங்காரகர்த்தா காரணமாவன்" என்றமையால் அவன் நிமித்தகாரணமாவ

துடன் உபாதானகாரணமுமாவன் என்பது பெறப்பட்டது. "प्रकर्षेण विविधेन भवतीति प्रभुः பலவாக ஆகின்றான் என்பதால் பிரபு" என்னும் விற்பத்தியால் பிரபு என்னும் சொல் உபாதானமென்பதனையே அறிவிக்கின்றது. அதுபற்றியே மெய்கண்டதேவநாயனாரும், "அந்தம் (சங்காரகர்த்தா) ஆதி (முதற்காரணம்)" என்று மொழிபெயர்த்தனர். இவ்வாறு கொள்ளாக்கால், இது இறைவனது தடத்தலக்கணமாதல் அமையாது. 'எது எதனின்றுண்டாகி, எதன்கண் நிலைபெற்று, எதன்கண் ஒடுங்குகின்றதோ அதற்கு அதுவே முதற்காரணமாம்' என்னும் நியாயத்தால் உலகொடுங்கிய விடமான சங்காரகர்த்தாவே முதற்காரணமா மென்பது தோன்ற 'ஹரன் பிரபு हरः प्रभूः' என்றார். இக்கருத்தினை மெய்கண்டதேவர் வார்த்திகப்பொழிப்பில் "சங்காரமே முதலென்றது" என்றும் கருத்துரையில் "சங்காரகாரணனுயுள்ள முதலையே முதலாகவுடைத் திவ்வுலகம்" என்றும் "உலகம் தாமொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத்தாவினின்றன்றி யுளதாகாது" என்றுசிவஞானசுவாமிகளும் உரைத்தமை காண்க. இதற்குச் சம்ஸ்கிருத வியாக்கியான

ழியற்றியருளிய சதாசிவசிவாசாரியரும் தம துரையில்,

" कर्ता एवमेकोऽपि शक्तिद्वाराऽनेको भूत्वा शुद्धाशुद्धमायाविशिष्टतयाऽभिन्ननिमित्तोपादनकस्सन् प्रपञ्चोत्पत्त्यादिकं करोति । तथा च, देविकालोत्तरे, ' भूतानि चाहं स्थिरजंगमानि यावन्ति चान्यान्यहमेव तानि । नाशोऽहमेवास्मि चराचरस्य पिता च माता च पितामहेति "

இவ்வாறு கர்த்தா ஒருவனாயினும் சக்திவாயிலாக அநேகனாகி சுத்தாசுத்த மாயாவிசிஷ்டத்தன்மையால் அபிந்நநிமித்தோபாதானகனாய்ப் பிரபஞ்சத்தின் உற்பத்தி முதலியவற்றைச் செய்கின்றான். அவ்வாறே, தேவிகாலோத்தரத்தில் 'ஸ்திரஜங்கமங்களான பூதங்கள் யான், அந்நியமானவை எவையோ, அவையாவும் யானே; சராசரத்தின் நாசம் யானே; பிதாவும், மாதாவும், பிதாமகனும் நானே' என்று கூறப்பட்டுளது" என்று எழுதியிருக்கின்றனர். திருவள்ளுவநாயனாரும் கடவுளின் தடத்தலக்கண முரைப்பவராய் "அகரமுதல வெழுத்

தெல்லாமாதிபகவன் முதற்றேயுலகு" என்றுரைத்தமையானும் தெளிக.

இவ்வபிப்பிராயத்தினையே வெளிப்படையாகக் கூறும் சுருதியாதிகள் வருமாறு:—

"यतो वा इमानि भूतानि जायन्ते। येन जातानि जीवन्ति। यत्प्रयन्त्यभिसंविशन्ति। तद्विजिज्ञासस्व। तद्ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा॥

எதனின்று இப்பூதங்கள் பிறக்கின்றனவோ, பிறந்தவை எதனால் ஜீவிக்கின்றனவோ, இறந்தனவாய் எதனிலொடுங்குகின்றனவோ, அதனை 'அது பிரஹ்மம்' என்று விசேஷமாயறிய விரும்புக. அவன் (பிருகு) தபத்தினை (விசாரத்தினை)ச் செய்தான். அவன் தபத்தினைச் செய்து (ஏகாக்கிரமனதால் பரியாலோசித்து)" என்பது தைத்திரீயம். ந-க,

"आनन्दो ब्रह्मेति व्यजानात्। आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। आनन्देन जातानि जीवन्ति। आनन्दं प्रयन्त्यभिसंविशन्तीति।

ஆநந்தத்தினின்றே நிச்சயமாக இப்பூதங்களுண்டாயின. உண்டானவை ஆநந்தத்தினால் ஜீவிக்கின்றன. இறந்தனவாய் ஆநந்தத்தினையே சேர்ந்தொடுங்குகின்றன. என்பதனால் ஆநந்தம் பிரஹ்மம் என்று அறிக' இது தைத்தீரீயம் ௩-௬.

"तदात्मानँ स्वयमकुरुत

அது தன்னை ஸ்வயமேசெய்தது" தைத்.௨-௭.

"तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः ।

அந்த இந்த ஆத்மாவினின்று ஆகாய முண்டாயிற்று" தைத்திரீயம். ௨-க.

"सोऽकामयत । बहुस्यां प्रजायेयेति । सतपोऽतप्यत ॥ स तपस्तप्त्वा । इदँ सर्वमसृजत । यदिदं किंच । त सृष्ट्वा । तदेवानुप्राविशत् । तदनुप्रविश्य । सच्चत्यच्चाभवत् ॥

அது வெகுஆவேன் பலவாகப்பிறப்பேன் என்று சங்கற்பித்தது. அது தவத்தினைச் செய்தது. அது தவம் (சங்கற்பம்) செய்து, இவ்

வெல்லாவற்றையும் படைத்தது. யாதொரு இவ்வுலகுளதோ அதனைப்படைத்து அதனையே அநுப்பிரவேசித்தது. அதனை அநுப்பிரவேசித்து சத்தும் (இருப்பதும் பிரத்தியக்ஷமும்) தியத்தும் (அதுவும் பரோக்ஷமும்) ஆயிற்று" தைத்திரீயம். உ-சு.

"ब्रह्मभूतात्मनस्तस्मादेतस्माच्छक्तिमिश्रितात् । अपञ्चीकृत आकाशः संभूतो रज्जुसर्पवत् ॥

அந்த இந்த சக்திமிசிரிதமான பிரஹ்மவடிவ ஆத்மாவினின்று அபஞ்சீகிருத ஆகாசம் ரஜ்ஜு சர்ப்பம்போ லுண்டாயிற்று" கடருத்ரீயோபநிஷத்து.

"चिद्विवर्तजगतोऽस्य कारणं तत्सदाहमिति मौनमाश्रय ॥

சித்விவர்த்தமான ஜகத்தாகிய இதற்குக் காரணமான அச்சித்து எப்போதும் யானென்று மௌனத்தினை ஆசிரயி" வராகோபநிஷத் அத்யாயம். ரு-எ.

"कतरः स आत्मा एन वा रूपं पश्यति येनवा शब्दं शृणोति येन वा गन्धानाजिघ्रति येन वा वाचं करोति

येन वा स्वादु चास्वादु च विजानाति ॥" "एष ब्रह्मैष इन्द्र एष प्रजापतिरेते सर्वे देवा इमानि च पञ्च महाभूतानि पृथिवी वायुराकाश आपोज्योतींषीत्येतानी-मानि च क्षुद्रमिश्राणीव । बीजानीतराणि चेतराणि चाण्डजानि च जारुजानि च स्वेदजानि चोद्भिज्जानि-चाश्वाः गावः पुरुषा हस्तिनो यत्किंचेदं प्राणि जंगमं च पतत्रि च यच्च स्थावरं सर्वं तत्प्रज्ञानेत्रं प्रज्ञाने प्रति-ष्ठितं प्रज्ञानेत्रो लोकः प्रज्ञापतिष्ठिता प्रज्ञानं ब्रह्म ॥"

"எதனால் ரூபத்தைப் பார்க்கின்றோமோ, எதனால் சப்தத்தினைக் கேட்கின்றோமோ, எதனால் கந்தங்களை முகர்கின்றோமோ, எதனால் வாக்கினை விரிக்கின்றோமோ, எதனால் உருசியினையும் உருசியின்மையினையும் அறிகின்றோமோ அந்த ஆத்மா யாது?" "இந்தப் பிரஹ்மா, இந்த இந்திரன்: இந்தப்பிரஜாபதி இவ்வெல்லாத் தேவர்கள், இப்பஞ்சமகாபூதங்கள் பிருதிவி வாயு ஆகாசம் அப்பு ஜோதிஸ் என்னுமிவைகளும், (கொசு முதலிய) க்ஷுத்ர மிசிரங்களும், பீஜங்களும்; இதர இதரங்களான (வேறு வேறான) அண்டஜங்களும்,

ஜராயுஜங்களும், ஸ்வேதஜங்களும், உற்பிஜ்ஜங்களும், குதிரைகளும், கோக்களும், புருடர்களும், யானைகளும், யாதொரு இந்தப்பிராணி ஜங்கமங்களும் (நடப்பனவும்), பக்ஷிகளும் (பறப்பனவும்), யாதொரு ஸ்தாவரமுமான அவ்வெல்லாம் பிரஞ்ஞாநேத்திரமாம்; பிரஞ்ஞானத்தில் நிலைத்துள்ளதாம். *பிரஞ்ஞாநேத்திரம் லோக (சராசரப்பிரபஞ்ச)மாம். பிரஞ்ஞை பிரதிஷ்டையாம். பிரஞ்ஞானம் (பேரறிவு) பிரஹ்மமாம்" இவை ஐதரேயம். ரு-க,ரு.

"अस्य महतो भूतस्य निश्वसित मेतद्यदृग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्वाङ्गिरस इतिहासः पुराणं विद्या उपनिषदः श्लोकाः सूत्राण्यनुव्याख्यानानि व्याख्यानान्यस्यैवैतानि सर्वाणि निःश्वसितानि ॥

இப்பெரும்பூதமாகிய பரமாத்மாவின் மூச்சுவிடப்பட்டதாமிது. யாதொரு ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வாங்கிரசம்,

---

* கரு. இங்கு அக்ஷரமென்றது மூலப்பிரகிருதியாகிய மாயையினை; அது பிரஹ்மஞானபரியந்தம் அழியாததாயிருத்தலின்.

இதிஹாஸம், புராணம், வித்தை, உபநிஷதங்கள்; சுலோகங்கள், சூத்திரங்கள், அநுவியாக்கியானங்கள், வியாக்கியானங்கள் என்னும் இவையாவும் இந்தப் பிரஹமத்தின் நிசுவசிக்க (மூச்சுவிட)ப்பட்டனவாம்" என்பது பிருகதாரணியகம். ௨-௪-௧0.

"अयं वै दश च सहस्राणि बहूनि चानन्तानि च तदेतद्ब्रह्मापूर्वमनपरमनन्तरमबाह्यमयमात्मा ब्रह्मसर्वानुभूः ॥

இவ்வாத்மா பத்தும், ஆயிரங்களும், வெகுவும், அநந்தங்களுமாம். அத்தன்மைய இது பிரஹ்ம(வியாபக)மும், அபூர்வமும் (முன்மையில்லாததும்), பின்மையில்லாததும், உள்ளின்றியதும், வெளியின்றியதுமாம். இவ்வாத்மா பிரஹ்மமாம். எல்லாவற்றையும் அநுபவிப்பதாம்" என்பது பிருகதாரணியகம். ௨-ரு-௧௯.

"इदं ब्रह्मेदं क्षत्र मिमे लोका इमे देवा इमानि भूतानीदँ सर्वँ यदयमात्मा ॥

இந்தப் பிரஹ்மம், இந்த க்ஷத்திரம், இந்த லோகங்கள், இந்தத் தேவர்கள், இந்தப்பூதங்

கள், இவ்வெல்லாமும் யாதொரு இவ்வாத்மா வாம்” என்பது பிருகதாரணியகம். ௨-௪-௬.

“आत्मैवेदमग्र आसीत् पुरुषविधः सोऽनुवीक्ष्य नान्यदात्मनोऽनुपश्यत् सोऽहमस्मीत्यग्रे व्याहरत्ततोऽहं नामाभवत् ॥

இது (சுட்டப்படுமுலகு) முன் புருஷவிதனை ஆத்மாவாகவே இருந்தது. அது தொடர்ந்து பார்த்து ஆத்மாவின் அந்நியத்தினைக் காணவில்லை. அதுமேல் யானிருக்கிறேன் என்று வியவகரித்தது. அதனால் யான் என்னும் பெயருண்டாயிற்று” என்பது பிருகதாரணியகம். ௧-௪-௧.

“आत्मा वा इदमेक एवाग्र आसीन्नान्यत्किंचन मिषत् स ईक्षत लोकान्नु सृजा इति ॥

இது முன் நிச்சயமாக ஆத்மாவாகவே யிருந்து, வேறெதுவும் உண்மையிலிருந்ததில்லை. அது உலகங்களைச் சிருஷ்டிப்பேனென என்று பார்(சங்கற்பி)த்தது” என்னும் இவை முதலியன ஐதரேயம். ௧-௧-௧.

“सदेव सौम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम् ॥

சோமியனே! இதுசிருஷ்டிக்குமுன் ஒரே அத்விதீய சத்தான சிவமாகவே இருந்தது"

"तदैक्षत बहु स्यां प्रजायेयेति ॥

அது வெகுவாவேன் பலவாய்ப்பிறப்பேன் என்று பார்த்தது" இவை சாந்தோக்யம். ௬-௧,௩:

"यथा सोम्यैकेन मृत्पिण्डेन सर्वं मृन्मयं विज्ञातं स्याद्वाचारम्भणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम्।

சோமியனே! எப்படி ஒருமண்டிரளால் யாவும் மண்மயமென்று விசேஷமா யறியப்பட்டதாமோ அதாவது, கடமுதலிய, பெயரிட்டுவழங்கப்படுவது வாக்கின் செய்கையான விகாரமாம்; மண் என்பதே சத்தியம்" என்பன முதலியன சாந்தோக்கியம். ௬-௧-௪.

" अनेन जीवेनात्मनाऽनुप्रविश्य नामरूपे व्याकरवाणीति।

இந்த ஜீவனாகிய வடிவத்தால் அநுப்பிரவேசித்து நாமரூப மிரண்டனையும் செய்வேன் என்று" சாந்தோக்கியம். ௬-௩-௨.

" आत्मतः प्राण आत्मत आशात्मतः स्मर आत्मत आकाश आत्मतस्तेज आत्मात आप आत्मत आविर्भावतिरोभावावात्मतोऽन्नमात्मतो बलमात्मतो विज्ञानमात्मतो ध्यानमात्मतश्चित्तमात्मतः संकल्प आत्मतो मन आत्मतो वागात्मतो नामात्मतो मन्त्रा आत्मतः कर्माण्यात्मत एवेदं सर्वमिति ।

ஆத்மாவினின்று பிராணன். ஆத்மாவினின்று ஆசை (திக்கு அல்லது இச்சை). ஆத்மாவினின்று நினைவு. ஆத்மாவினின்று ஆகாசம். ஆத்மாவினின்று தேஜசு. ஆத்மாவினின்று ஜலம். ஆத்மாவினின்று ஆவிர்பாவதிரோபாவங்கள். ஆத்மாவினின்று அந்நம். ஆத்மாவினின்று பலம். ஆத்மாவினின்று விஞ்ஞானம். ஆத்மாவினின்று தியானம். ஆத்மாவினின்று சித்தம். ஆத்மாவினின்று சங்கற்பம். ஆத்மாவினின்று மனம். ஆத்மாவினின்று வாக்கு. ஆத்மாவினின்று பெயர். ஆத்மாவினின்று மந்திரங்கள். ஆத்மாவினின்று கர்மங்கள். ஆத்மாவினின்றே இவ்வெல்லாமுண்டாயின என்று சாந்தோக்யம். எ-உ௬-க.

"सर्वं खल्विदं ब्रह्म तज्जलानिति शान्त उपासीत-

நிச்சயமாக இவ்வெல்லாம் பிரஹ்மம் அதி னின்றுண்டாய் நின்றொடுங்குவன என்று சாந் தனாய் உபாஸிக்க" சாந்தோக்யம். ௩-௧௪-௧.

"ब्रह्मैवेदममृतं पुरस्ताद्ब्रह्म पश्चाद्ब्रह्म दक्षिणतश्चो-त्तरेण। अधश्चोर्ध्वं च प्रसृतं ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥

இது அமிருதமாகிய பிரஹ்மமே. முன்னும் பிரஹ்மம், பின்னும் பிரஹ்மம், தெற்காகவும் வடக்காகவும் கீழும் மேலும் பிரஹ்மம். விரிந்த இவ்வெல்லாம் பிரஹ்மம். இது எல்லா வற்றின் மேலானதாம்" முண்டகம். ௨-௨-௧௧.

"यथोर्णनाभिः सृजते गृह्णते च यथा पृथिव्यामो-षधयः संभवन्ति। यथा सतः पुरुषात्केशलोमानि त-थाक्षरात्संभवतीह विश्वम् ॥

எப்படிச் சிலந்திப்பூச்சி நூலை ஆக்குகின்ற தோ தன்னில் ஒடுக்குகின்றதோ, எப்படிப் பிருதிவியில் ஓஷதிகள் சம்பவிக்கின்றனவோ, எப்படி இருப்பவனாகிய புருஷனினின்று கேச

ரோமங்களுமுண்டாகின்றனவோ, அப்படி இங்கு விசுவம் அக்ஷர(பிரம)த்தினின்று சம்பவிக்கின்றது" முண்டகம். க-அ.

"पुरुष एवेदं विश्वम्

இவ்வுலகு* புருஷனே" முண்டகம். உ-க-க0

"तदेतत्सत्यं यथा सुदीप्तात्पावकाद्विस्फुलिङ्गाः सहस्रशः प्रभवन्ते सरूपाः । तथाक्षराद्विविधाः सोम्य भावाः प्रजायन्ते तत्र चैवापियन्ति ॥ १ ॥ दिव्यो ह्यमूर्तः पुरुषः स बाह्याभ्यन्तरो ह्यजः । अप्राणो ह्यमनाः शुभ्रो ह्यक्षरात्परतः परः ॥ २ ॥ एतस्माज्जायते प्राणो मनः सर्वेन्द्रियाणि च । खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी ॥ ३ ॥

அவ்விது சத்தியமாம். எப்படி நன்றாய்ச் சுடர்கின்ற அக்கினியினின்று சமானவடிவுள்ள பொறிகள் ஆயிரங்களாக உண்டாகின்றனவோ, அப்படி சோமியனே! அக்ஷரமாகிய புருஷனி

---

* சஅ வித்வான்களால் எவ்வாற்றாலும் நிரூபிக்கக் கூடாததெனவே, அவித்வான்களால் சத்தியமென்று நிரூபிக்கக்கூடியதாமென்பது அறிவிக்கப்பட்டது.

னின்று பலவிதமான உள்பொருள்கள் செவ்வையாயுண்டாகின்றன; அதன்கண்ணே ஒடுங்குகின்றன. அவன் திவ்யன் (ஸ்வப்பிரகாசன்) அமூர்த்தன் புருஷன், வெளியுள்ளானவன், பிறப்பில்லாதவன், அப்பிராணன், அமனன், சுத்தன், அக்ஷரமான பரத்தினும்பரன். இப்புருஷனி னின்று பிராணனும், மனதும், எல்லாவிந்திரியங்களும், ஆகாயமும், வாயுவும், தேயுவும், அப்புவும், எல்லாவற்றையும் தாங்கும் பிருதிவியுமுண்டாயின." முண்டகம். உ-க உ-ந.

"एष सर्वेश्वर एषः सर्वज्ञ एषोन्तर्याम्येषयोनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ॥

இவ்வாநந்தமயன் சர்வேசுவரன், இவன் சர்வஞ்ஞன், இவன் அந்தர்யாமி, இவன் எல்லாவற்றின் யோனி, இவன் பூதங்களின் உற்பத்தியும் நாசமுமாவன்" மாண்டூக்கியம். ௬.

"सदेव सोम्येदमग्र आसीत् । तन्नित्यमुक्तमविक्रियं सत्यज्ञानानन्दं परिपूर्णं सनातनमेकमेवाद्वितीयंब्रह्म ॥

சோமியனே! இது முன் சத்தாவே இருந்தது. அந்தச்சத்து நித்தியமுக்தமும், அவிக்கிரிய

மும், சத்தியஞானஆநந்தமும், பரிபூர்ணமும், சநாதனமும் (பழமையானதும்) ஒரே அத்விதீய முமான பிரஹ்மமாம்'' பைங்கலோபநிஷதம். க-க.

"भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा सर्वं प्रोक्तं त्रिविधं ब्रह्ममेतत् ।

போக்தா போக்கியம் பிரேரிப்பவன் என்று சொல்லப்படும் மூவிதமான எல்லாவற்றையும் இந்தப் பிரஹ்மமென்று மதித்து'' சுவேதாசுவதரம். க-கஉ.

"त्वं स्त्री त्वं पुमानसि त्वं कुमारऽत वा कुमारी । त्वं जीर्णो दण्डेन वंचसित्वं जातो भवसि विश्वतोमुखः ॥ नीलः पतङ्गो हरितो लोहिताक्षस्तडिद्गर्भ ऋतवः समुद्राः । अनादिमत्त्वं विभुत्वेन वर्तसे यतो जातानि भुवनानि विश्वा ॥

நீ ஸ்திரீ, நீ புருஷன், நீ குமாரன் அல்லது குமாரி, நீ ஜீர்ணன் தண்டத்தால் வஞ்சிக்கின் றாய், நீ எப்புறத்தும் முகமுள்ளவனாய்ப் பிறந்த வனாகின்றாய், நீலன், பதங்கன், பசியன், செங்

கண்ணன், மேகம், ருத்ரர்கள், சமுத்திரங்கள். எந்த உன்னிடத்தினின்று எல்லாப் புவனங்களு முண்டாயிருக்கின்றனவோ அந்த அநாதியுடைய நீ விபுத்துவமாக இருக்கின்றாய்” சுவேதாசுவதரம். ச-ரு.

“उपादानं प्रपञ्चस्य ब्रह्मणोऽन्यन्न विद्यते । तस्मात्सर्वप्रपञ्चोयं ब्रह्मैवास्ति न चेतरत् ॥ व्याप्यव्यापकता मिथ्या सर्वमात्मेति शासनात् । इति ज्ञाते परे तत्वे भेदस्यावसरः कुतः ॥ ब्रह्मणः सर्वभूतानि जायन्ते परमात्मनः । तस्मादेतानि ब्रह्मैव भवन्तीति विचिन्तय ॥ ब्रह्मैव सर्वनामानि रूपाणि विविधानि च । कर्माण्यपि समग्राणि बिभर्तीति विभावय ॥ सुवर्णाज्जायमानस्य सुवर्णत्वं च शाश्वतम् । ब्रह्मणो जायमानस्य ब्रह्मत्वं च तथा भवेत् ॥

பிரபஞ்சத்திற்குப் பிரஹ்மத்தைவிட வேறு உபாதானமில்லை. ஆதலால் இவ் வெல்லாப் பிரபஞ்சமும் பிரஹ்மமே, அந்நியமன்று. எல்லாம் ஆத்மா வென்னும் சாசனத்தால் (கட்டளையால்) வியாப்பிய வியாபகத்தன்மைமித்தையாம்

என்று பரதத்துவ மறியப்பட்டபோது பேதத்திற் கவசர மேது? பிரஹ்மமாகிய பரமாத்மாவினின்று சர்வபூதங்களு முண்டாகின்றன. ஆதலால் இவை பிரஹ்மமே யாகின்றன என்று விசேஷமாய்ச் சிந்திப்பாயாக. பிரஹ்மமே எல்லா நாமங்களையும், பலவகையான ரூபங்களையும் எல்லாக் கர்மங்களையும் தரிக்கின்றதென்று விசேஷமாகப் பாவிப்பாயாக. சுவர்ணத்தினின் றுண்டாகியதற்குச் சுவர்ணத்துவம் சாசுவதமாம். அதுபோல பிரஹ்மத்தினின் றுண்டாகியதற்குப் பிரஹ்மத்துவம் சாசுவதமாம்.” யோகசிகோபநிஷத். ச-ரு-ச-ரு-சு-எ.

“तच्छिवे तु पराशक्तिस्सहस्रांशात्तु जायते । तच्छक्तेस्तु सहस्रांशादादिशक्तिसमुद्भवः ॥ तच्छक्तेस्तु सहस्रांशादिच्छाशक्तिसमुद्भवः । तस्याः शक्तेः सहस्रांशाज्ज्ञानशक्तिसमुद्भवः ॥ तस्याः शक्तेः सहस्रांशात्क्रियाशक्तिसमुद्भवः । बिन्दुरूपं पराशक्तिर्नादस्स्यादादिरिष्यते ॥

அச்சிவத்தின்கண் ஆயிரமம்சத்தினின்று பராசக்தி பிறக்கின்றது. அச்சக்தியின் ஆயிரமம்சத்தினின்று ஆதிசக்தி யுண்டாகின்றது.

அச்சக்தியின் ஆயிரம் அம்சத்தினின்று இச்சாசக்தியுண்டாகின்றது. அச்சக்தியின் ஆயிரமம்சத்தினின்று ஞானசக்தி யுண்டாகின்றது. அச்சக்தியின் ஆயிர மம்சத்தினின்று கிரியா சக்தியுண்டாகின்றது. சித்ரூபம் பராசக்தியாம். நாதம் ஆதிசக்தியாமென்று அங்கீகரிக்கப்படுகின்றது'' என்பது வாதுளாகமம்.

हरः एक एवावशिष्टः

சிருஷ்டிக்கு முன் ஹரன் ஒருவனே எஞ்சியிருப்பவன்'' மிருகேந்திரம்.

"अहमेको नमे कश्चिन्नाहमन्यस्य कस्यचित् ।
न तं पश्यामि यस्याहं तन्न पश्यामि यो मम ॥"

யான்ஒருவனே. எனக்கு ஒருவனுமில்லை. யான் மற்றொருவனுடையவனல்லன். யான் எவனுடையவனாவேனோ அவனைக் காணேன். எவன் என்னுடையவனாவானோ அவனை யான் காணேன்.'' சர்வஞானோத்தரம்.

"जन्माद्यस्य यतः ॥"

"இதன் (காணப்படுமுலகின்) ஜன்மாதி (உற்பத்தி ஸ்திதிலயம்) எதனின்று முண்டா

கின்றதோ (அந்த வஸ்துவாகிய பிரஹ்மம் விசாரிக்கத்தக்கதாம்.)”

“ शास्त्रयोनित्वात् ॥

“ சாஸ்திர (வேத)த்திற்குப் பிறப்பிடமாகவின்.”

“ ईक्षतेर्नाशब्दम् ॥

ஈக்ஷிக்கின்றது என்பதனால் வேதத்திற்காரணமாகச் சொல்லப்படாத ஜடப்பிரகிருதி ஜெகத்காரணமாகாது” என்பன பிரஹ்மமீமாம்ஸாசூத்திரங்கள்.

“ एकमेवमिदं विद्धि नभेदः सकलं जगत् ।
वासुदेवाभिधेयस्य स्वरूपं परमात्मनः ॥
पीतनीलादिभेदेन यथैकं दृश्यते नभः ।
भ्रान्तिदृष्टिभिरात्मापि तथैकः स पृथक् पृथक् ॥

இந்த ஸகலஜகத்தும் வாசுதேவ (எங்கும் வஸிக்கும் ஸ்வயம்பிரகாச)னெனப்பெயரிய பரமாத்மாவின் ஸ்வரூபம் ஒன்றேயென்று அறிக. பேதமில்லை. எப்படி ஆகாயமொன்றே பசுமை கருமை முதலிய பேதமாக மயக்கதிருஷ்டிக

ளால் காணப்படுகின்றதோ, அப்படி அஃ தொன்றே வேறு வேறாகக் காணப்படுகின் றது.” அக்னிபுராணம் அத்தியாயம் ௩௮0.

“ अहमेव परं तत्त्वं मत्तो जातं जगत्सुराः ।
मय्येव संस्थितं नष्टं मत्समो नाधिकः सदा ॥

தேவர்களே! யானேபரமான தத்துவம் (உண் மை). என்னிடத்தினின்று ஜகத் துண்டா யிற்று. என்னிடத்திலேயே செவ்வையாய் நிலைத்துளது. என்னிடத்திலேயே நஷ்டமா கின்றது. எப்போதும் எனக்குச் சமமானது மதிகமானதுமில்லை.” சூதசங்கிதை சிவமாகாத் மியம் அத்தியாயம் உ-௪-௩௪.

“ आत्मसंज्ञः शिवश्शुद्धं एक एवाद्वयस्सदा ।
अग्रे सर्वमिदं देवा आसीत्तन्मात्रमास्तिकाः ॥
ततो नान्यन्मिषत्किंचित्सपुनः कालपाकतः ।
प्राणिनां कर्मसंस्कारात्स्वशक्तिगतसत्त्वतः ॥
स ऐक्षत जगत्सर्वंनुसृजा इति शंकरः ॥

ஆஸ்திகர்களான தேவர்களே! (சிருஷ்டிக்கு) முன் இவ்வெல்லாம் எப்போதும் ஒரே அத்

வயமும் சுத்தமுமான ஆத்மா வெனப் பெயரிய சிவம் எதுவோ அதுமாத்திரமாகவே இருந்தது. அதனின் வேருக விளங்கும் வஸ்து எதுவுமிருந்த தில்லை. மறுபடியும் காலபாகத்தால் பிராணிகளின் கர்மசம்ஸ்காரத்தால் தனது சக்தியிலுள்ள சத்துவத்தால் ஜகத்தெல்லாவற்றையும் சிருஷ்டிப்பேன் என்று பார்த்தார் அச்சங்கரர்." பிரஹ்மகீதை அத்தியாயம் உ-சு-உ-ங.

"ब्रह्म रूपात्मनस्तस्मादेतस्माच्छक्तिमिश्रितात् ।
अपंचीकृत आकाशः संभूतो रज्जुसर्पवत् ॥

சக்தி கலந்த அந்த இந்த பிரஹ்மவடிவ ஆத்மாவினின்று அபஞ்சீகிருத வாகாயமுண்டாயிற்று; இரச்சுசர்ப்பம்போல." பிரஹ்மகீதை. அத்தியாயம் ங-சு-ஙச.

"यथोर्णनाभिः सृजते गृह्णते च सुरर्षभाः ।
यथा पृथ्व्यामोषधयः संभवन्ति यथा सतः ॥ ८ ॥
पुरुषात्केशलोमानि तथा चैवाक्षरात्सुराः ।
विश्वं संभवतीहैव तत्सर्वं स्वप्नोपमम् ॥ ९ ॥

சுரசிரேஷ்டர்களே! எப்படிச் சிலந்திப்பூச்சி நூலினைச் சிருஷ்டிக்கின்றதோ, கிரகிக்கின்ற

தோ, எப்படிப் பிருதிவியில் ஒஷதிகள் சம்பவிக்கின்றனவோ, எப்படி ஜீவித்திருப்பவனாகிய புருஷனிடத்தினின்று கேச ரோமங்கள் உண்டாகின்றனவோ, அப்படியே சுரர்களே? அக்ஷரமாகிய பிரஹ்மத்தினின்று இங்கு விசுவம் சம்பவிக்கின்றது. அது முழுவதும் சொப்பனம் போன்றதாம்."

"यः सर्वज्ञः सर्वविद्यो यस्य ज्ञानमयं तपः॥१०॥
तस्मादेतत्सुरा ब्रह्म नामरूपान्न पूर्वकम्।
जायते सत्यवत्स्वप्न प्रपंचोपममेव तत् ॥ ११ ॥

எவன் சர்வஞ்ஞனோ, எவன் சர்வவித்தோ, எவனுடையதபசு ஞானமயமோ, அவனிடத்திலிருந்து தேவர்களே! இரணியகருப்பனென்னும் பிரஹ்ம நாமரூபான்ன பூர்வகமான இது சத்தியம்போ லுண்டாகின்றது. அது சொப்பனப்பிரபஞ்சம் போன்றதேயாம்." இவை பிரஹ்மகீதை அத்யாயம் எ.

"अहमेको जगद्धातुरासं प्रथममीश्वरः।
वर्तामि च भविष्यामि न मत्तान्योस्ति कश्चन॥८

முதலில் ஜகத்தைப் படைக்கும் ஈசுவரனை; நான் ஒருவனே இருந்தேன்; இருக்கின்றேன்

இருப்பேன். என்னின் வேறான தெதுவுமில்லை." சூதசங்கிதை சிவமாகாத்மியகண்டம் அத்தியாயம் உ.

"ब्रह्मैवेदमिति प्राह श्रुतिरप्यति निर्मला ।
विदुषामनुभूतिश्च तथैव हि न संशयः ॥

இது (உலகம்) பிரஹ்மமே என்று அதிநிர்மலமான சுருதியும் கூறுகின்றது. சிவஞானியரின் அநுபூதியும் அவ்வாறேயாம்; சம்சயமில்லை." சூதசங்கிதையஞ்ஞவைபவகண்டம் அத்தியாயம் கரு-சுக0.

"भूतानि शंभुर्भुवनानि शंभुर्वनानि शंभुर्गिरयश्च शंभुः । स एव सर्वं न ततोऽतिरिक्तं ततः स एकः परमार्थमेतत् ॥ १८ ॥

பூதங்களும் சம்பு, புவனங்களும் சம்பு, வனங்களும் சம்பு, மலைகளும் சம்பு. அவனேயாவும். அவனின்வேறான தில்லை ஆதலால் அவன் ஒருவனேயுளன். இது பரமார்த்தம்." சூதசங்கிதை யஞ்ஞவைபவகாண்டம் அத்யாயம் கரு.

"शिवाद्यवनिपर्यन्तो लोकोयं शंकरात्मकः ॥८१॥

சிவமுதல் அவனிபரியந்தமான இவ்வுலகம் சங்கரவடிவினதாம்.'' தேவிகாலோத்தரம்.

"मत्तोहि जायते विश्वं मय्यैवैतत्प्रधार्यते ॥ १ ॥
मय्येवेदमधिष्ठाने लीयते शुक्तिरूप्यवत् ।
अहं तु निर्मलः पूर्णः सच्चिदानन्द विग्रहः ॥ २ ॥
असंगोनिरहंकारः शुद्धं ब्रह्म सनातनम् ।
अनाद्यविद्यायुक्तः सन् जगत्कारणतांव्रजे ॥ ३ ॥
अनिर्वाच्या महाऽविद्या त्रिगुणा परिणामिनी ॥४॥
ततो मम समायोगाच्छक्तिः सा त्रिगुणात्मिका ६
अधिष्ठाने तु मय्येव भजते विश्वरूपताम् ।
शुक्तौ रजतवद्रज्जौ भुजंगो यद्वदेव तु ॥

சிவமாகிய என்னிடத்தினின்றே உலக முண்டாகின்றது. என்னாலேயே அது மிகத்தரிக்கப்படுகின்றது. அதிஷ்டானமாகிய என்னிடத்திலேயே இது இப்பிவெள்ளிபோல் ஒடுங்குகின்றது. யானே நிர்மலன், பூர்ணன், சச்சிதாநந்த விக்கிரகன், அசங்கன், நிரகங்காரன், சநாதனமான சுத்தப்பிரஹ்மம். அநாதியவித்தையோடு

கூடியவனுய் ஜகத்காரணத்தன்மையினை அடைகின்றேன். அநிர்வாச்சியமான மகாஅவித்தை பரிணாமமுள்ளதாய் முக்குணவடிவினதாம். ஆதலால் எனது சம்மந்தத்தினுல் அம்முக்குணவடிவ சக்தியானது அதிஷ்டானமாகிய என்னிடத்திலேயே சுத்தியில் வெள்ளிபோலவும், பழுதையிற் பாம்புபோலவுமே உலக வடிவத்தன்மையை யடைகின்றது." சிவகீதை அத்யாயம் ௬.

पर्वताश्चैव नद्यश्च वृक्षाश्च धनदस्तथा ।
ब्रह्मादितृणपर्यंतं यत्किंचित् दृश्यते जगत् ६६

तत्सर्वं शिवतो जातं नात्र कार्या विचारणा ।
अरूपश्च सरूपश्च जायते शंकरः स्वयम् ६७

बीजात् वृक्षप्ररोहश्च नानात्वमुपजायते ।
अंते च फलमेव स्यात्तस्मात्फल मुदाहृतम् ६८

आदौ मध्ये शिवश्चैव अन्ते शिव उदाहृतः ।
सर्वं शिवमयं चैतच्छिवः सर्वमयस्तथा ॥ ६९ ॥

अहं शिवः शिवश्चाहं त्वंचापि शिव एव च ।
सर्वं शिवमयं ब्रह्म शिवात्परं न किंचन ॥ ७१

अज्ञानादन्यभावश्च ज्ञानेभ्यः समुदाहृतः ।
कारणं कार्यवस्तुत्वे एक एव न चापरः ॥
कारणं च शिवः साक्षात्कार्यं दृश्यं मतं बुधैः ।
अज्ञानाच्चैव कार्ये तु कारणे भेद इष्यते ॥
ज्ञानिनां नैव भेदोस्ति सर्वं शिवमयं जगत् ॥"

பர்வதங்களும், நதிகளும், விருக்ஷங்களும், குபேரனும், பிரஹ்மாதி ஸ்தம்பப்புல் பரியந்தமுமான யாதொரு ஜகத்துக் காணப்படுகின்றதோ, அது முழுவதும் சிவத்தினின்றுண்டாயிற்று. இதில் விசாரணை செய்யவேண்டியதில்லை. சங்கரன் தானே அரூபமும் ஸரூபமுமாகப் பிறக்கின்றான். வித்தினின்று விருக்ஷவிளைவும் (இலைபூமுதலிய) பன்மையுமுண்டாகின்றது. முடிவிலும் பலமே (வித்தே)யாகின்றது. ஆதலால் பலமே உதாகரிக்கப்பட்டுளது. முதலிலும் நடுவிலும் சிவமே. முடிவிலும் சிவம் உதாகரிக்கப்பட்டுளது. இவ்வெல்லாம் சிவமயம். அப்படியே சிவன் சர்வமயன். யான் சிவன். சிவன்யான். நீயும் சிவனே. எல்லாம் சிவமயமான பிரஹ்மம் சிவத்தின் வேறான தெதுவு மில்லை. அஞ்ஞானத்தினால் வேற்

றுத்தன்மையாமென்று ஞானங்களால் நன்கு தாகரிக்கப்பட்டுளது. காரியத்தின் வஸ்துத்துவத்தில் (பொருட்டன்மையில்) காரணமொன்றேயுளது; வேறில்லை. காரணம் சாக்ஷாத் சிவன். காரியம் திருசியமென்பது அறிஞர்களால் கொள்ளப்பட்டது. அஞ்ஞானத்திஞற்றுன் காரியத்திலும் காரணத்திலும் பேதம் அங்கிகரிக்கப்படுகின்றது. ஞானிகட்குப் பேதமில்லை. எல்லா ஜகத்தும் சிவமயமாம்."

"विष्णुरुवाच ॥ एतस्माच्च शिवादन्यदृश्यं नैवभवेदिह । वस्तुतस्तु शिव इति प्रसिद्धं वेदसंमतम् ॥ १

விஷ்ணுசொல்லலாயினர்:— இச்சிவத்தின் வேறான திருசியம் இங்கு இருப்பதே இன்று. உண்மையாகவோ சிவமே என்பது பிரசித்தமான வேதசம்மதமாம்." சிவபுராணம் ஞான சங்கிதை அத்யாயம் கஎ—கஅ.

"यतः सर्वं समुत्पद्येद्येनैव पाल्यते हि तत् ।
यस्मिंश्च लीयते सर्वं येन सर्वमिदं ततम् ॥४॥
तदेव शिवरूपं हि प्रोच्यते च मुनीश्वराः ।
विष्णुनातच्च न ज्ञातं ब्रह्मणा न तथैव च ॥ ५ ॥

எதனின்றெல்லாமுண்டாகின்றதோ, எதனாலேயே அது காக்கப்படுகின்றதோ, எதனிடத்தில் யாவுமொடுங்குகின்றதோ, எதனால் இவ்வெல்லாம் விரிக்கப்பட்டதோ அதுவே நிச்சயமாக சிவரூபமென்று சொல்லப் படுகின்றது. முனீசுவரர்களே! அது விஷ்ணுவினால் அறியப்பட்டதன்று. அவ்வாறே பிரஹ்மாவினாலும் (மற்றுமுள்ள தேவர்முதலியோராலும் அறியப்பட்டதன்று.)" சிவபுராணம் ஞானசங்கிதை அத்யாயம் எ௬.

"यतः सर्वं समुत्पन्नं निर्गुणात्परमात्मनः ।
तदेव शिवसंज्ञं हि वेदवेदांतिनो विदुः ॥ ३ ॥
तस्मात्प्रकृतिरुत्पन्ना पुरुषेण समन्विता ॥ ४ ॥

எந்த நிர்குண பரமாத்மாவினின்று எல்லாம் செவ்வனே யுண்டாயிற்றோ, அதனையே சிவமெனும் பெயருடையதாக வேதவேதாந்திகள் அறிவர். அதனின்று பிரகிருதி புருஷனோடு கூடியதா யுண்டாயிற்று."

"एको ह्यनेकतां यातो ह्यनेकोप्येकतां व्रजेत् ।
एकं बीजं बहुभूत्वा पुनर्बीजं च जायते ॥ ३५ ॥

ஒருவனே அநேகத் தன்மையடைகின்றான், அநேகனாயினும் ஏகத்தன்மையினையடைகின்றான். ஒரு வித்து வெகுவாகி மறுபடியும் வித்தே யாகின்றது'' சிவபுராணம் ஞானசங்கிதை அத்யாயம் என.

"ज्ञाता ज्ञानं तथा ज्ञेयं सर्वं शिवमिदं जगत् ।
ब्रह्मादितृणपर्यंतं यत्किंचित् दृश्यते जगत् ॥

एतत्सर्वं स एवास्ति नात्र कार्या विचारणा ।
यदेच्छा तस्य जायेत तदा च क्रियते त्विदम् ॥

सर्वं स एव जानाति तं जानाति न कश्चन ।
रचित्वा च स्वयं चैव प्रविश्य दूरतः स्थितः ॥

यथा च ज्योतिषश्चैव जलादौ प्रतिबिंबता ।
वस्तुतो न प्रवेशो वै तथैव च स्वयं शिवः ॥

वस्तुतस्तु स्वयं सर्वं रूपेणैव तु भासते ।
अज्ञानं च मतेर्भेदो नास्त्यन्यस्य द्वयं पुनः ॥

दर्शनेषु च सर्वेषु मतिभेदः प्रदृश्यते ।
परं वेदांतिनो नित्यमद्वैतप्रतिपादिनः ॥

ஞாதா ஞானம் அப்படியே ஞேய மென்னும் இவ்வெல்லாஜகத்தும் சிவமாம். பிரஹ்மாதி திருணபரியந்தமான யாதொரு ஜகத்துக் காணப்படுகின்றதோ, இவ்வெல்லாம் அவனே. இதில் விசாரணை செய்யவேண்டியதில்லை. எப்பொழுது அவருக்கு இச்சை பிறக்கிறதோ, அப்பொழுது இது செய்யப்படுகின்றது. எல்லாவற்றையும் அவரே அறிகின்றார். அவரை ஒருவரும் அறிகிறதில்லை. தாமே படைத்துப் பிரவேசித்து விலகி நிற்கின்றார். எப்படிச் சூரியனது பிரதிபிம்பத்தன்மை ஜலமுதலியவற்றிலுண்டாகின்றதோ, வாஸ்தவமாகப் பிரவேசமில்லையோ, அவ்வாறே சிவனும் தானே பிரவேசித்தும் பிரவேசிப்பதில்லை. உண்மையாகவே தாமே எல்லாவடிவாகவும் விளங்குகின்றார். துவைதவிஷயமான மதியின் பேதம் அஞ்ஞானமாம் (அவித்தையாலாகியதாம்). மற்றதற்கு (ஜகத்விலக்ஷண பிர்ஹ்மத்திற்கு) மறுபடியும் இரண்டாவதில்லை. வைசேஷிகாதி எல்லாச் சாத்திரங்களிலும் மதிபேதம் காணப்படுகின்றது. (அது அவித்தையினலாகியதாம்.) வேதாந்திகள் எப்போதும் கேவலம் அத்வைதத்தினைப் பிரதிபாதிப்பவர்களாவர்.'' சிவபுராணம் ஞானசங்கிதை. அத்தியாயம் எஅ.

"तस्मात्कायाः प्रभवन्ति सर्वे समूलं शाश्वतिकः स नित्यः ॥

அவனினின்று காயங்கள் யாவும் காரணத்தோடு உண்டாகின்றன. அவன் சாசுவதமானவன் நித்தியன்." ஆபஸ்தம்பதர்மசூத்ரம் க-அ-உ௩-உ.

"अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा ।
मत्तः परतरं नान्यत्किंचिदस्ति धनंजय ॥ २ ॥

யான் எல்லா ஜகத்தின் ஆக்கமும் அவ்வாறே அழிவுமாவேன். தனஞ்சயனே! என்னின் மேலானதாக வேறெதுவுமில்லை."

"बहूनां जन्मानामंते ज्ञानवान्मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥१९॥

வெகுஜன்மங்களின் முடிவில் ஞானமுடையவன் 'எல்லாம் வாசுதேவன்' என்று என்னைப் பஜிக்கின்றான். அம்மகாத்மா மிகத் துர்லபன்."

"भवन्ति भावा भूतानां मत्त एव पृथग्विधाः ॥" ५

பூதங்களின் வெவ்வேறு விதமான பாவங்கள் என்னிடத்தினின்றே யுண்டாகின்றன."

"अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते ॥ ८ ॥

யான்எல்லாவற்றின் உற்பத்திகாரணன். என்னிடத்தினின்றே யாவும் பிரவர்த்திக்கின்றன." இவைபாரதத்தில் கீதையின் எ-க௦. அத்தியாயங்கள்.

" यथैक हेममणिना सर्वं हेममयं जगत् ।
तथैव ज्ञातमीशेन ज्ञातेनाप्यखिलं भवेत् ॥

எப்படி ஒரு பொன்மணியினால் (இது பொன்மயமென்னு முணர்ச்சியினால்) எல்லாமணிகளும் பொன்மயமென்று மதிக்கப்படுகின்றனவோ, அப்படியே ஜகத்து ஈசனாற்பிறந்ததென்றுணர்ந்ததனாலும் யாவும் ஈசமயமாகின்றன." கருடபுராணம்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.

"தோற்றமு மீறு மாகிநின்றாய் சோபுரமேயவனே."

"தேவராயு மசுரராயுஞ் சித்தர் செழுமறைசேர், நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி

கால் நீரு, மேவாராய விரைமலரோன் செங் கண்மா லீசனென்னு, மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே."

"குற்ற நீ குணங்கணீ கூடலாலவாயிலாய், சுற்ற நீ பிரானு நீ தொடர்ந்திலங்கு சோதிநீ, கற்றநூற் கருத்து நீ அருத்த மின்பமென் றிவை, முற்று நீ புகழ்ந்துமுன் னுரைப்ப தென்முகம்மனே."

திருநாவுக்கரசுசுவாமிகள்.

"பூவின்கள்வாசனை மலை நில நீர் தீ வளியாகா சமா மீசனை."

"காலமு நாள்களூழி படையாமு னேகவுரு வாகி மூவருருவிற், சாலவுமாகி மிக்க சமயங் கள்ாறினுருவாகி நின்றதழலோன்"

"மாயனாய் மாலனாகி மலரவனாகி மண்ணாய்த் தேயமாய்த் திசையெட்டாகித் தீர்த்தமாய்த் திரிதர்கின்ற, காயமாய்க் காயத்துள்ளார்"

"மந்திரமு மறைப் பொருளு மானான்றன்னை மதியமு ஞாயிறுங் காற்றுந் தீயும், அந்தரமு மலைகடலு மானான்றன்னை"

"இழித்திடும்மை யேழுலகுந் தானாகும்மே"

" நன்றுங் கறிந்தவர்க்குந் தானேயாகி நல்வினையுந் தீவினையு மானான்றன்னை "

" ஒழியாமே யெவ்வுயிரு மானான்றன்னை "

" நீதி யாய் நிலனாகி நெருப்பாய் நீராய் நிறைகாலா யிவையிவற்றினியமமாகிப், பாதியா யொன்றாகி யிரண்டாய் மூன்றாய்ப் பரமாணுவாய்ப் பழுத்த பண்களாகிச் சுவைகலந்த வப்பாலாய் வீடாய் வீட்டினாதியா யந்தமாய் நின்றான்றன்னை யாரூரிற் கண்டடியே னயர்த்தவாறே."

" ஓசையொலியெலா மானாய் நீயே "

"உற்றிருந்தவுணர் வெலாமானாய் நீயே "

" எல்லாவுலகமுமானாய் நீயே "

"ஊனாகி யுயிராகி யதனுணின்ற வுணர்வாகிப் பிறவனைத்து நீயாய் நின்றாய்."

" ஊனவனை யுடலவனை யுயிரானானை யுலகேழுமானானை யும்பர் கோவை "

" ஒன்றாயுலகனைத்து மானார் தாமே "

" அல்லும் பகலுமாய் நின்றார்தாமே, யந்தியுஞ் சந்தியு மானார்தாமே, சொல்லும் பொரு

ளுமானார்தாமே, தோத்திரமுஞ் சாத்திரமுமா னார் தாமே."

"சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச் செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகிப், புவனாகிப் புவனங்களனைத்துமாகி."

"விண்ணாகி நிலனாகி விசும்புமாகி"

"வேதமோர் நான்கா யாறங்கமாகி விரிக் கின்ற பொருட்கெல்லாம் வித்துமாகி"

"அப்ப நீ யம்மை நீ"

சுந்திரமூர்த்தி சுவாமிகள்.

"ஊனானை யுயிரானை யுடலானை யுலகானாய், வானானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்"

"பாரொடுவிண்ணும் பகலுமாகிப்"

"மண்ணீர் தீவெளிகால் வருபூதங் களாகி மற்றும் பெண்ணோ டாணலியாய்ப் பிறவாவுரு வானவனை"

"ஒருமேகமுகிலாகி யொத்துலகந்தானா யூர் வனவு நிற்பனவு மூழிகளுந்தானாய், பொருளே வுகடலாகிப் பூதங்களைந்தாய்"

"ஊனையுற்றுயிராயினீர்" இவையன்றி மற் றுமனேக தேவாரப்பாக்களுள.

மாணிக்கவாசக சுவாமிகள்.

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி; ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்; கோனாகி யானெனதென் றவரவரைக்கூத்தாட்டு; வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே."

"போற்றியிப் புவன நீர் தீக் காலொடு வானமானாய்; போற்றி யெவ்வுயிர்க்குந் தோற்றமாகிநீ தோற்றமில்லாய்; போற்றியெவ்வுயிர்க்குமீறா யீறின்மையானாய்; போற்றியைம்புலன்கணின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே."

"பலவாகிநின்றவா தோணோக்கம்"

"பார்பதமண்டமனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர்படரொளிப் பரப்பே"

"கூறுநாவே முதலாகக் கூறுங்கரணமெல்லாநீ; தேறும்வகைநீ திகைப்புநீ தீமைநன்மைமுழுதுநீ, வேறோர்பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை யுன்னை விரித்துரைக்கிற், றேறும்வகையென் சிவலோகா திகைத்தாற் றேற்ற வேண்டாவோ." இவை திருவாசகம்.

"அவன் றானகலிடமேழுமொன்றாகி; யிவன்றானென நின்றெளியனு மல்லன்; சிவன் றான் பலபல ஜீவனுமாகி; நவின் றானுலகுறு நம்பனுமாமே."

" தானேதிசையொடு தேவருமாய் நிற்குந் ; தானேயுடலுந் தத்துவமாய் நிற்குந்; தானே கடன் மலையாதியுமாய் நிற்குந்; தானேயுலகிற் றலைவனுமாமே."

" உடலாயுயிராயுலகமதாகிக்; கடலாய்க் கார் முகில் பொழிவானு; யிடையாயுலப்பிலி யெங் குந்தானுகி; யடையார் பெருவிழி யண்ணனின் றுனே." இவை திருமந்திரம்.

" நன்ருய் ஞானகனமாகி நானுமெல்லாம் பிறப்பிடமா ; யொன்ருய் வேருேர் பொருளி ன்றி யொளியா யொன்ருே டுவமிப்ப; தன் றுயகில சராசரங்கட் காதாரந்தானுமென் றும்; பொன்றுத்துவாய் விகாரப்பொருளாய்ப் புலனுய்ப் புணர்ப்பரிதாய் (உ).

இரண்டாவ திலாதளவைகளா, லெட்டாத் துவா யெங்கெங்குஞ்; சிரங்கால்கைகண்முக முடைத்தாய்த் தெரியப்படாதாய்த் திரமாகி; யிரும்பார் நீர்தீகால்வான மெல்லாமிருத்தற் கிடமாகும்; பரந்தானுணர்ந்தோர் நிர்க்குண மாம் பரவியோமமென்பர்களால் (௩) "

இவை ஈசுவரகீதை.

" இலகொளியாயிரம் புனல் பெய்குடங்க டொறு மியைந்து நாளுமல கில்பல வுருவா

கித்தோன்றுதல்போற் சராசரங்க ளனைத்துமாகி;" காசிகாண்டம்.

"ஏகனுமாகி யநேகனுமானவ; னாதனுமானவனென்றுந்தீபற;" திருவுந்தியார்.

"வானகமும் மண்ணகமுமாய் நிறைந்த வான்பொருளே"

"சிவன்முதலேயன்றி முதலில்லை யென்றும்" திருக்கழிற்றுப்படியார்.

"அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போன்" உண்மைவிளக்கம்.

"இலயித்ததன்னி லிலயித்ததாமலத்தா லிலயித்தவாறுதாவேண்டும்—இலயித்த; தத்திதியி லென்னினழியா தவையழிவ; தத்திதியுமாதியுமாமங்கு."

"என்றலாவீறே முதல்" மெய்கண்டதேவர் உதாரணவெண்பா.

"கற்றநூற் பொருளுஞ் சொல்லுங் கருத்தினி லொடுங்கித் தோன்றும்; பெற்றியும் சாக்கிராதி யுயிரினிற் பிறந்தொடுக்க; முற்றதும் போலவெல்லாவுலகமு முதித் தொடுங்கப்; பற்றொடுபற்றதின்றி நின்றனன் பரனுமன்றே" சிவஞானசித்தியார்.

அவ்விறைவன் விவர்த்தோபாதான மாவ னேயன்றிப் பரிணாமியுபாதான மாகான். அவ் விறைவனது சக்தியும

"नात्र शक्तिरुपादानं चिद्रूपत्वाद्यथाशिवः ।
परिणामोऽचितः प्रोक्तश्चिद्रूपस्य न युज्यते ॥

இங்குச்சக்தி உபாதான மாகாது சிவனைப் போல சித்ரூபமாயிருத்தலின். அசித்திற்குப் பரிணாமம் சொல்லப்பட்டுளது. சித்ரூபத்திற்கு ப்பொருந்தாது" என்னும் பௌஷ்கரவசனத் தால் பரிணாமியுபாதானமாகாது. ஆதலால் கற் பிதமான பரிக்கிரக ஜடசக்தியே ஜகத்திற்குப் பரிணாமியுபாதானமாம். அதற்கு அதிஷ்டா னமாதல் பற்றிச் சிவத்தை முதற்காரணமெனா றது. சிவம் சித்ரூபம். அது ஜடத்திற்கு எவ் வாறு உபாதான காரணமாம். அது நிமித்த காரணமாகலான், உபாதானம் மண்போல் வே றுதல் வேண்டாமோ வென்னும் இவைமுதலி யபிரசினங்கட்குச் சர்வசக்திமானாகிய சிவனி டத்துச் சிறிதும் அவகாசமின்று; உலகத்திற் போல உபமிக்கப்படாதவனாகலின். அங்ஙனம் செய்யுமாற்றலில்லை யாயின், அவன்சர்வசக் திமான் என்னுந்தன்மைக்கு இழுக்குண்டா கும். அவன் தனது சக்தியினால் ஜடமான

மாயையினைக் கற்பித்து அதனின்று எல்லாவுல கத்தினையும் படைத்தானென்பதே சர்வசாஸ் திரங்களின் சம்மதம். ஆதலால் ஜடம் சித்தி லிருந்து எப்படியுண்டாகும். மாயை கற்பித மாயின் எப்படி எப்போதுண்டாயிற்று? பிர ஹ்மமாகிய சிவத்திற்குப் பிராந்தியுண்டாக லாமா? குயவன் முதலியோருக்குத் தண்டசக் கிராதிகளைப்போல அவனுக்குக் காரணம் யாது? உபாதானம் யாது? என்பன முதலிய இத் தகைய சங்கைகளைச் செய்யலாகாது எனெ னின், அத்தன்மைய காரியங்களைச் செய்யும் அற்புதமான அநந்த சக்திகள் அசிந்தியனு யுள்ள பரமாத்மாவினிடத்துள. அவையாவும் புத்திகற்பனைக் கெட்டாவாகலின் சுருதியாதி பிரமாணங்களைக்கொண்டே நிச்சயிக்கவேண்டி யனவாம். இதிற் பிரமாணவசனங்கள்:—

"चित्स्वरूपः शिवश्चेत्यं जगत्सर्वं चराचरम् ।
तथा सति विरुद्धं तज्जगच्छंभुः कथं भवेत् ॥२४॥
इत्येवमादिचोद्यस्य द्विजेन्द्रा नास्ति संभवः ।
यत्र वेदविरोधः स्यात्तत्र चोद्यस्य संभवः ॥२५॥
चोदना लक्षणेधर्मे न यथा चोद्यसंभवः ।
तथा न चोदनागम्ये शिवे चोद्यस्य संभवः ॥२६॥

बाध्यबाधकभावस्तु व्याधिभेषजयोर्यथा ।
शास्त्रेण गम्यते तद्वद्यमर्थोऽपि नान्यतः ॥ २७ ॥

ईश्वरस्य स्वरूपे च जगत्सर्गादिषु द्विजाः ।
अतीन्द्रियार्थेष्वन्येषु मानं नः श्रुतिरेव हि ॥ २८ ॥

अथवा देवदेवस्य सर्वदुर्घटकारिणी ।
शक्तिरस्ति तया सर्वं घटते माययाऽनघाः ॥ २९ ॥

प्रतीतिसिद्धा सा माया तत्त्वतोऽत्र न संशयः ।
तया दुर्घटकारिण्या सर्वतत्त्वोपपद्यते ॥ ३० ॥

सा तिष्ठतु महामाया सर्वदुर्घटकारिणी ।
वेदमानेन संसिद्धं सर्वं तद्ग्राह्यमेव हि ॥ ३१ ॥

சித்ஸ்வரூபன் சிவன். சராசரமான ஜகத்து முழுதும் ஜடமாம். அவ்வாறாகவே, விருத்தமான அந்த ஜகத்து எவ்வாறு சிவனாகும்? என்னுமித்தன்மையது முதலிய சோத்தியத்தின் (வினாவின்) சம்பவம் இங்கில்லை. துவிஜேந்திரர்களே! எங்கு வேதவிரோத முளதோ அங்குச் சோத்தியத்தின் சம்பவமாம். சோதனா (வேதவிதி)லக்ஷ(பிரமா)ணமுள்ள தர்மத்தில்(யாகாதிகளில்) சோத்தியத்தின் சம்பவமெப்படியில்லையோ, அப்படியே சோதனை(விதி)யினால்

அறியத்தக்க சிவனிடத்துச் சோத்தியத்தின் சம்பவ மில்லை. எப்படி வியாதிகளுக்கும் மருந்துகளுக்குமுள்ள பாத்தியபாதகபாவம் (கெடுக்கப்படுவது கெடுப்பதெனுந்தன்மை) சாஸ்திரத்தினால் அறியப்படுகின்றதோ, அதுபோல இவ்வர்த்தமும் சாஸ்திரத்தினாலன்றிப் பிறிதொன்றால் நிச்சயிக்கப்படமாட்டாது. துவிஜர்களே! ஈசுவரனது சொரூபத்திலும், ஜகத்தின் சிருஷ்டிமுதலியவற்றிலும், அதீந்திரியமாம். மற்றவற்றிலும் நமக்கு நிச்சயமாகச் சுருதியே பிரமாணமாம். அல்லது தேவதேவனது நிகழாதன வெல்லாவற்றையும் நிகழ்த்துவிக்கும் சக்தியுளது. பாபமில்லாதவர்களே! அந்த மாயையினால் யாவும் நிகழும். உண்மையாக அந்த மாயை தோற்றமாத்திரத்தாற் பெறப்பட்டதாம். இதிற் சம்சயமில்லை. நிகழாததனை நிகழ்த்துவிக்கும் அம்மாயையால் யாவும் அச்சிவனுக்குப் பொருந்துகின்றது. நிகழாததெல்லாவற்றினையும் நிகழ்த்தும் அம்மகாமாயை நிற்க வேதப்பிரமாணத்தினாற் செவ்வையாய்ப் பெறப்பட்டுள்ள அவ்வெல்லாம் நிச்சயமாகக் கிரகிக்கத்தக்கதேயாம்.” சூதகீதை அத்யாயம் ங.

“शिवात्सत्यपरानन्द प्रकाशैकस्वलक्षणात् ।
आविर्भूतमिदं सर्वं चेतनाचेतनात्मकम् ॥ १ ॥

अद्वितीयोऽविकारी च निर्मलं स शिवः परः ।
तथापि सृजति प्राज्ञाः सर्वमेतच्चराचरम् ॥ २ ॥
मणिमन्त्रौषधादीनां स्वभावोपि न शक्यते ।
किमु वक्तव्यमाश्चर्यं विभोरस्य परमात्मनः ॥ ३ ॥
श्रुतिः सनातनी साध्वी सर्वमानोत्तमोत्तमा ।
प्राह चाद्वैतनैर्मल्यं निर्विकारत्वमात्मनः ॥ ४ ॥
सर्गस्थित्यन्तमप्याह चेतनाचेतनस्य च ।
अतीन्द्रियार्थविज्ञाने मानं नः श्रुतिरेव हि ॥ ५ ॥
श्रुत्यैकगम्ये सूक्ष्मार्थे स तर्कः किं करिष्यति ।
मानानुग्राहकस्तर्को न स्वतन्त्रः कदाचन ॥ ६ ॥

சத்தியபராநந்தப் பிரகாசத்தினை முக்கியமான தனது லக்ஷணமாகவுடைய சிவனிடத்தினின்றும் இச்சேதனாசேதனவடிவமெல்லாமுண்டானதாம். அச்சிவன் அத்விதீயனும், அவிகாரியும், நிர்மலனும் பரனுமாயுளான். அங்ஙனமாயினும், பேரறிவாளரே! இவ்வெல்லாச் சராசரத்தினையும் சிருஷ்டிக்கின்றான். மணிமந்திரௌஷதமுதலியவற்றின் ஸ்வபாவமும் சொல்லவாற்றாதெனின், விபுவாகிய இப்பரமாத்மாவினியல்பான ஆச்சரியத்தினைப் பற்

றிச் சொல்லவேண்டியதென்னே? சநாதனமும், சாதுவும், சர்வப்பிரமாணங்களின் உத்தமோத்தமுமான சுருதி ஆத்மாவுக்கு அத்வைத நிர்மலத்தன்மையினையும் நிர்விகாரத்தன்மையினையும் கூறுகின்றது; சேதனுசேதனங்களின் சிருஷ்டி ஸ்திதி நாசங்களையும கூறுகின்றது. அதீந்திரியார்த்தங்களின் விசேஷஞானத்தில் நமக்கு நிச்சயமாக சுருதியே பிரமாணமாம். சுருதியொன்றினுலேயே அறியத்தக்கதான சூக்ஷ்மார்த்தத்தில் அத்தர்க்கம் என்ன செய்யும்? சுருதிப்பிரமாணுநுக்கிரக முடையதாம் * ரு. தார்க்கம், ஒருபோதும் ஸ்வதந்திரமாகாது."

(இதன்பின் அவ்வத்தியாயத்தில் வேதப்பிராமாணியம் செவ்வையாய் நிரூபிக்கப்பட்டுளது.)

பிரஹ்மகீதை. அத்தியாயம். ந.

"अतश्च कारणं नित्यमेक मेवाद्वयं सुराः ॥२९॥
कुलालादेर्मृदादेश्च भेदे दृष्टेपि भूतले ।
अचैतन्यान्मृदादेस्तु कुलालादिरपेक्ष्यते ॥ ३० ॥

---

* ரு आगमस्याविरोधेन ऊहनं तर्क उच्यते ॥

ஆகம (சாஸ்திர)த்திற்கு விரோதமின்றி ஊகித்தல் தர்க்கமெனப்படுமென்பது அமிர்தநாதோபநிஷதம்.

अत्र कारणमद्वैतं शुद्धं चैतन्यमेव हि ।
तेन नापेक्षते ह्यन्यत्कारणं चेतनात्मकम् ॥३१॥
स्वयं चेतनमप्येतत्कारणं न कुलालवत् ।
अपेक्षते मृदा तुल्यमचिद्रूपं तु कारणं ॥ ३२ ॥

प्रतीत्या केवलं शक्तिरचिद्रूपा तमोमयी ।
सर्वप्रकारैर्विद्वद्भिरनिरूप्याऽस्ति शांकरी ॥ ३३ ॥
तया दुर्घटकारिण्या तादात्म्येनैव संगतम् ।
कारणं सकलस्रष्टृ सर्वसंहर्तृ चास्तिकाः ॥ ३४ ॥

पालकं च सदा सच्च चिद्रूपत्वात्सुरोत्तमाः ।
चिद्रूपस्य तु सत्यत्वं युक्तमेवास्तिकाः सदा ॥३५॥
अचिद्रूपाहिरज्ज्वादेर्मृषात्वं संमतं खलु ।
अतस्तत्कारणं देवाः सदैवैकं च शाश्वतम् ३६

इदं सर्वं जगत्पूर्वं सदेवासीत्सुरर्षभाः ॥
घटकुड्यादयो भावा भूतानि भुवनानिच ।
सर्वं ब्रह्मातिरेकेण नास्ति ब्रह्मैव सत्सदा ॥६३॥

अज्ञानमयमेवेदं सर्वमित्यपि भाषणम् ।
नैव भाषणमज्ञानाभावादेव शिवं विना ॥ ९७ ॥

तस्मादज्ञानमज्ञानकार्यं च सुरपुङ्गवाः ॥ ९८ ॥
एकं ब्रह्मैव नैवान्यदिति मे निश्चिता मतिः ।
ऐतदात्म्यमिदं सर्वमित्याह हि परा श्रुतिः ॥ ९९

शिव एवास्ति नैवान्यदिति यो निश्चयः स्थिरः ।
सदा स एव सिद्धान्तः पूर्वपक्षास्तथा परे १२७

अयमेवहि वेदार्थो नापरः परमास्तिकाः ।
गृह्णामि परशुं तप्तं सत्यमेव न संशयः ॥ १२८

अयमेव हि सत्यार्थो नापरः परमास्तिकाः ।
विश्वासार्थं शिवं स्पृष्ट्वात्रिर्वः शपथयाम्यहम् ॥

ईश्वरउवाचः—

अहं हि सर्वं न च किंचिदन्यन्निरूपणायामनिरूपणायाम् । इयं हि वेदस्य परा हि निष्ठा ममानुभूतिश्च न संशयश्च ॥ १४६ ॥

*தேவர்களே ! இதனுலும் நித்தியமான ஒரே அத்வயம் காரணமாம். குலாலன் முதலியவற்றினும் மண்முதலியவற்றிற்கு உலகத்தில் பேதம் காணப்படுவதாயினும், அசைதன்யமான மண்முதலியவற்றிற்குக் குலாலாதி அபேக்ஷிக்*

கப்படுகின்றது. இங்கோ அத்வைதமும் சுத்தமுமான சைதன்யமே காரணமென்பது பிரசித்தம். அதனால் சேதனவடிவ வேறு(நிமித்த)காரணத்தினை அபேக்ஷிக்கிறதில்லை. ஸ்வயம் சேதனமாயுமிக்காரணம் குலாலனைப்போல மண்ணிற்குச்சமமான அசித்துவடிவகாரணத்தினை அபேக்ஷிக்கிறதில்லை. அசித்துவடிவினதும், தமோமயமும், எவ்வாற்றானும் * சு. வித்வான்களால் நிரூபிக்கக்கூடாததுமான கேவலம் சங்கரனது சக்தி பிரதீதியினால்(தோற்றமாத்திரத்தால்) இருக்கின்றது. அந்த நிகழாததனை நிகழ்த்தும் சக்தியோடு தாதாத்மியத்தினாலேயேகூடியதாய்ச் சத்தும், எப்போதும் சித்ரூபத்தன்மையால் ஆஸ்திகர்களான சுரோத்தமர்களே! காரணமும், எல்லாவற்றினையும் சிருஷ்டிப்பதும், இரக்ஷிப்பதும், எல்லாவற்றினையும் சங்கரிப்பதுமாம். சித்ரூபத்திற்குச் சத்தியத்துவம் ஆஸ்திகர்களே! எப்போதும் யுக்தமேயாம்; அசித்ரூபமான பழுதையிற்பாம்புமுதலியவற்றிற்கு நிச்சயமாகப் பொய்ம்மை சம்மதிக்கப்பட்டதேயாம். ஆதலால் தேவர்களே! அக்கா

* சு. வித்வான்களால் எவ்வாற்றானும் நிரூபிக்கக்கூடாதெனவே, அவித்வான்களால் சத்தியமென்று நிரூபிக்கக்கூடியதாமென்பது அறிவிக்கப்பட்டது.

ரணம் சாசுவதமான சத்தொன்றேயாம். தேவ சிரேஷ்டர்களே! இவ்வெல்லாஜகத்தும் முன் சத்தாகவே இருந்தது. குடம் சுவர்முதலிய பதார்த்தங்களும் பூதங்களும் புவனங்களுமான யாவும் பிரஹ்மத்தின் வேறாக இல்லை. எப்போதும் சத்தாகிய பிரஹ்மமேயாம். இவ்வெல்லாம் அஞ்ஞானமயமே யென்று பேசுதலும் பேச்சே யன்று; சிவத்தைவிட வேறாக அஞ்ஞான மின்மையினாலே. ஆதலால் சுரபுங்கவர்களே! அஞ்ஞானமும் அதன்காரியமும் ஒன்றாகிய பிரஹ்மமே; வேறில்லை யென்பது எனது நிச்சயிக்கப்பட்ட மதியாம். 'இவ்வெல்லாம் இவ்வாத்ம சொரூபமே' என்று பிரசித்தமாகிய மேலான சாந்தோக்கியசுருதி கூறுகின்றது. 'சிவமேயுளதுவேறில்லை' யென்னும் ஸ்திரமான நிச்சய மெதுவோ, அதுவே யெப்போதும் சித்தாந்தமாம். அவ்வாறே மற்றவை பூர்வ பக்ஷங்களாம். பரமாஸ்திகர்களே! இதுவே பிரசித்தமான வேதார்த்தமாம்; வேறில்லை. காய்ச்சியமழுவை யேந்துகின்றேன்; சத்தியமே; சம சயமில்லை. பரமாஸ்திகர்களே! இதுவே சத்தியார்த்தம்; வேறில்லை. விசுவாசத்தின்பொருட்டு சிவனைத் தொட்டு யான் முக்காலும் ஆணையிடுகின்றேன் என்றார் பிரஹ்மா. (அப்போது அவர் ஆணையிட்டநிமித்தம் அச்சபை

யில் ஆவிர்ப்பவித்து) ஈசுவரன் சொல்லாயினர்:- "யாவும் யானே; நிரூபிக்குமிடத்தும் நிரூபிக்கா விடத்தும் என்னைவிட வேறெதுவுமில்லை. இது வே வேதத்தின் மேலான நிஷ்டையும் எனது அநுபூதியுமாம், சம்சயமுமில்லை." என்பனவும் இதைத்தொடர்ந்தனவும் பிரஹ்மகீதை அத்தியாயம் ரு.

"नहि संकल्पमात्रैण कुलालैः क्रियतेघटः ।
शिवसंकल्पमात्रेण बिन्दुक्षोभकरःसदा ॥

குயவர்களால் சங்கற்பமாத்திரத்தால் கடம் செய்யப்படுகிறதில்லை, சிவன் சங்கற்பமாத்திரத்தால் பிந்துக்ஷோபம் செய்பவராகின்ருர் எப்போதும்." பௌஷ்கரம்.

सदाकारा परानन्दा संसारोच्छेदकारिणी ।
सा शिवा परमा देवी शिवाभिन्ना शिवंकरी ॥३॥

जगत्कारणमापन्नः शिवोयो मुनिसत्तमाः ।
सातस्यापि भवेच्छक्तिस्तया हीनो निरर्थकः ॥४॥

सर्वज्ञत्वं गतो यस्तु शिवः साक्षादुपाधिना ।
सा तस्यापि भवेच्छक्तिस्तया हीनो निरर्थकः ॥५॥

ईक्षितृत्वं गतोयस्तु शिवः साक्षादुपाधिना ।
सा तस्यापि भवेच्छक्तिस्तया हीनो निरर्थकः ॥६॥

அந்தச் சிவை சத்துவடிவினள், பராநந்தை, சம்சாரநாசத்தினைச் செய்பவள், மேலான தேவி, சிவாபின்னை, சிவ(கல்யாண)த்தினைச் செய்பவள். முநிசிரேஷ்டர்களே! ஜகத்காரணத்தினை யடைந்த சிவன் எவரோ, அவருக்கும் அவள் சக்தியாகின்றாள். அவளை யின்றிய அவர் பயனுடையவ ராகார். சாக்ஷாத் உபாதியினால் சர்வஞ்ஞத்தன்மையினை யடைந்த சிவன் எவரோ, அவருக்கும் அவள் சக்தியாகின்றாள். அவளின்றிய அவர் பயனற்றவராவர். சாக்ஷாத் உபாதியினால் ஈக்ஷி(சிருஷ்டிக்கவாலோசி)க்குந் தன்மையினை யடைந்த சிவனெவரோ அவருக்கும் அவள் சக்தியாகின்றாள். அவளின்றிய அவர் பயனற்றவராவர். (ஈக்ஷணஞ்செய்பவராகார்)" சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் அத்யாயம் கஅ.

अव्यक्तं कारणं यत्तदात्मना समधिष्ठितम् ॥ ७ ॥

महदादिविशेषान्तं सृजतीत्यपि संमतम् ।
किं तु तत्रापि कर्तृत्वं नाव्यक्तस्य न चात्मनः ॥८॥

अचेतनत्वात्प्रकृतेरज्ञत्वात्पुरुषस्य च ।
प्रधानपरमाण्वादि यावत्किंचिदचेतनम् ॥ ९ ॥
न तत्कर्तृस्वयं दृष्टं बुद्धिमत्कारणं विना ।
जगच्च कर्तृसापेक्षं कार्यं सावयवं यतः ॥ १० ॥
तस्माच्छक्तः स्वतन्त्रो यः सर्वशक्तिश्च सर्ववित् ।
अनादिनिधनश्चायं महदैश्वर्यसंयुतः ॥ ११ ॥
स एव जगतः कर्ता महादेवो महेश्वरः ।
परिणामः प्रधानस्य प्रवृत्तिः पुरुषस्य च ॥ १२ ॥
सर्वं सत्यव्रतस्यैव शासनेन प्रवर्तते ॥

அவ்வியக்தமா(மாயையா)கிய காரணம் எதுவோ, அது ஆத்மாவினால் செவ்வையா யதிஷ்டிக்கப்பட்டதாய் மகதாதிவிசேஷாந்தத்தினைச் சிருஷ்டிக்கின்றதென்பதும் சம்மதம். ஆனால் அங்கும் கர்த்திருத்வம் அவ்வியக்தத்திற்கு மில்லை; ஜீவாத்மாவுக்கு மில்லை; பிரகிருதி அசேதன மாதலாலும், புருஷன் அஞ்ஞனாதலாலும், பரமாணுமுதலிய எவ்வளவு அசேதன முளவோ அவையுமாகா. புத்தியுடைக்காரண மின்றித் தானாக அதனைச் செய்வதொன்றைக் கண்டதில்லை. எதனால்

ஜகத்துக் காரியமும் அவயவமுடையதுமா யுள்ளதோ அதனால் சக்தனாய், ஸ்வதந்திரனாய், எவன் சர்வசக்திமானாய், சர்வஞ்ஞனாய், ஆதியந்தமில்லாதவனா யிருக்கின்றானோ, அத்தன்மைய இப்பெருத்த ஐசுவரியத்தோடுகூடிய மகாதேவனான மகேசுவரனே ஜகத்திற்குக் கர்த்தாவாவன். பிரகிருதியின் பரிணாமமும் புருஷனது பிரவிருத்தியுமான யாவும் சத்தியவிரதனான அவனது ஆணையினாலேயே பிரவர்த்திக்கிறது.'' சிவபுராணம், வாயுசங்கிதை பூர்வபாகம் அத்தியாயம். எ.

“ अनुग्रहतिरोभावसंहृतिस्थितिसृष्टिभिः ।
करोत्यविरतं लीलामेकः शक्तियुतः शिवः ॥८५॥
बहुनेह किमुक्तेन मुनेसारं वदामि ते ।
शिव एवेदमखिलं शक्तिमानिति निश्चितम् ॥८६॥

சக்தியோடுகூடிய சிவன் ஒருவனே அநுக்கிரகம் திரோபாவம் சங்காரம் ஸ்திதி சிருஷ்டியென்பவற்றால் அவிரதமான (ஒழிவின்றிய) லீலையினைச் செய்கின்றான். முனியே! வெகு வார்த்தையினா லென்ன பிரயோஜனம்? உனக்குச் சாரத்தினைக் கூறுகின்றேன்:— சக்திமானான சிவனே இவ்வெல்லா மென்பதே துணியப்பட்ட

தாம்." சிவபுராணம் கைலாசசங்கிதை அத்யாயம். ௧0.

"அவனேபாச மவனேகட்டுண் டவனே கட்டுமதிபதியு மவனே பசுக்க ளாகின்றான்." ஈசுவரகீதை தத்துவநிஜவிபூதி.

மாயை அநாதிகல்பிதம், நாசமுடையது, ஆதி, நாசமின்றிய தென்று பலவிதமாகச் சுருதியாதிகள் கூறுகின்றன:—

"तस्मिन्मरुशुक्तिकास्थाणुस्फटिकादौ जलरौप्यपुरुषरेखादिवल्लोहितशुक्लकृष्णगुणमयी गुणसाम्यानिर्वाच्या मूलप्रकृतिरासीत् ॥

அந்தப் பிரஹ்மத்தில் கானல் இப்பி தறி படிக முதலியவற்றில் நீர் வெள்ளி புருடன் இரேகைமுதலியவற்றைப்போல செம்மை வெண்மை கருமைக் குணமயமும், குணசாம்யமும் அநிர்வாச்சியமு மான மூலப்பிரகிருதி இருந்தது." பைங்கலம். ௧.

माया नाम अनादिरन्तवती प्रमाणाप्रमाणसाधारणा न सती नासती न सदसती स्वयमधिका

विकाररहिता निरूप्यमाणासतीतरलक्षणशून्या सा मायेत्युच्यते ॥

மாயை யென்பது அநாதியந்தமுடையது, பிரமாணுப்பிரமாண சாதாரண மானது, சத்து மன்று அசத்து மன்று சதசத்து மன்று. இயல்பாக அதிகமானது. விகாரமின்றியது. நிரூபிக்குமிடத்து இதரலக்ஷண மின்றியதாம். அது மாயை யெனப்படும்." சர்வசாரோபநிஷதம். "ஆங்கவனைப் பிரியாத மாயையு மற்றவன்போலநாதியாகும்" கூர்மபுராணம்.

"மாயைதன் மறைப்பிற்சீவர் மருவிடுமளவுந் தோன்றுன், தூயநற்கருமமேமோங்கத் தோன்றிடுஞ் சிவஞானத்தால், பாயவம்மாயை நீங்கும் பகர்ந்தவம்மாயை யெங்கு மாயசைதன்னியத்தினிடமுண்டாகியதுமாதோ (ரு)" சூதசங்கிதை வேதார்த்தமுரைத்தது.

"அவ்விசாரமுண்மையி னுளார்தமைமறையாது, வவ்வுநீர்மைகொள் பிரளயகாலத்தம் மாயை, செவ்விதாகிய நம்மிடத்தொடுங்கிடும்." சூதசங்கிதை.

"உலகெலாம் படைத்து மாயையுமியற்றியொழிவற வழித்திடுமுதலே." இலிங்கபுராணம்.

"ஆதியாய சிவனுமைமையிற் சத்தியுண்டா மதன் பின்ன, ரோதுமாயையுண்டாமற்றதன் பின்னுரைக்கு மவ்வியத்தந்; தீதின்றாகத்தோ ன்றுமால்." வாயுசங்கிதை.

"யாதொன் றெவராலேனுமறியப்படாத வியல்பா மென்னுதி முடிவின்றிய சத்திமாயை யதனுலே." ஈசுவரகீதை.

"तच्छिवे तु पराशक्तिः सहस्रांशात्तु जायते ॥

அச்சிவத்தின்கண் ஆயிராமிசத்தினின்று பராசக்திபிறந்தது." வாதுளம்.

அன்றியும், சிவனிடத்து ஜீவன் தோன்றி யொடுங்குவதாக, மகாநாராயணேபநிஷதம் ச-வது அத்தியாயமும், அத்வயதாரகம், யோ கசிகம், ருத்ரஹிருதயம், வராகம், சரஸ்வதி ரகஸ்யம், மைத்திராயணீமுதலிய வுபநிடதங் களும், "மாயையு மதன்காரியமு நசித்துப் போனால் ஈசுவரத்துவமுமில்லை" என்று வரா காதியுபநிடதங்களும் கூறுகின்றன.

மேற்கூறிப்போந்த பிரமாணங்களால் "மாயா சக்தி இன்னகாலத்திற் கற்பிக்கப்பட்டதென் றறியப்படாமையால் அநாதியென்றும், ஞானத் தாற் கெடுதலின் நாசமுடையதென்றும்

மகாப்பிரளயத் தொடங்கித் தோன்றுதலால் ஆதியென்றும் மகாப்பிரளயபரியந்தம் அல்லது சிவஞான முண்டாகும் வரையில் நிலைத்திருத்தலாலும் காலதத்துவத்திற்கும் காரணமாயிருத்தலாலும் நித்திய மென்றும், அவ்வாறே கீழ்ப்பட்டதத்துவங்களைமுன்னிட்டு வியாபக மென்றும்" கூறப்பட்டதாகக் கொள்ளுவர் பெரியோர். அவ்வாறே பாசமும் பாசத்தால் ஜீவத்துவமும் இன்னகாலத் துண்டான தென்று நிச்சயிக்கக்கூடாமையின் அநாதியென்றும், முக்திபரியந்தம் நிலைத்தலால் நித்திய மென்றும், பாச நீங்கியபோது சிவத்துவமாகிய வியாபகத்துவம் வெளிப்படுங்காரணத்தால் ஜீவனை வியாபக மென்றும், அவ்வறிவு ஆணவமலத்தால் தகைப்பட்டுளபோது அணு வென்றும், அவ்வியாபக வறிவை மறைக்கும் ஏதுவாற் பாசத்தினை வியாபக மென்றும் கூறிய தென்று கொள்வர் அறிஞர். இவற்றிற்கெல்லாம் போதுமான பிரமாணவசனங்கள் முற்காட்டப்பட்டதன்றிப் பின்னும் காட்டப்படும். இவற்றிற்கு வேண்டிய யுக்திகள் பெருநூல்களில் மிகவிரிவாய்க்கூறப்பட்டிருத்தலாலும், புத்திக்கு மிகக் கடின மாதலாலும், சத்திநிபாதத்துத்தமர்களான பரமாஸ்திகர்களுக்கு ஆகமப்பிரமாணமொன்றே யமையுமென் றவை விடுக்கப்பட்டன.

பிரஹ்மாதியர் முத்தொழிற் செய்பவர்களாயிருக்கச் சிவனே முத்தொழிலும் செய்வனென்பது எவ்வாறு பொருந்து மெனின், அவனே பிரஹ்மாதியர் வடிவாயிருந்து நடத்தலின் பொருந்து மென்பர். அது

"स ब्रह्मा स विष्णुः ॥

அப்பரமாத்மாவே பிரஹ்மா, விஷ்ணு," என்னும் நிராலம்பமும்.

"स्वयं ब्रह्मा स्वयं विष्णुः ॥

தானே பிரஹ்மா தானே விஷ்ணு" அத்யாத்மோபநிஷதம் அதர்வசிரசுமுதலிய சுருதி வாக்கியங்களாலும்,

"एको हि नामभेदैस्थितस्स परमेश्वरः ।
ब्रह्मत्वाद्ब्रह्मणत्वाच्च ब्रह्मैव शिवयोगतः ॥
विष्णुः प्रभवशीलत्वात्प्रभवो जगतां प्रभुः ।
रुजं द्रापयते यस्मात्तेन रुद्रो रुजाक्षयात् ॥

அப்பரமேசுவர னொருவனே பெயருள்ள பேதத்தினால் மூவராக நிலைத்திருப்பன். சிவயோகத்தால் பிரஹ்மத்தன்மையாலும் விபா

பித்தற் றன்மையாலும் பிரஹ்மாவே யாவர். ஜகத்திற்குப் பிரபுவாகிய அவர் மிகுதியா யாருந்தன்மையால் பிரபவரான விஷ்ணுவாவர். ஜீவர்களின் துக்கத்தினை எதனால் ஓட்டுகின்றரோ, அத்துக்கமொழித்தலால் ருத்திர ரெனப் படுகின்றார்." என்னும் பராக்யமுதலிய வாகம வசனங்களாலும் மற்றும் சிவபுராண சூதசங்கிதை முதலியவற்றின் வாக்கியங்களாலும் கூறப்பட்டுளது பிரசித்தம். (க)

## இரண்டாம் சூத்திரம்.

(அ-கை) உளனென்று துணியப்பட்ட அக்கர்த்தா ஜகத்தினைச் சிருஷ்டித்தற் கேது கூறுகின்றார்:—

अन्यस्सन्व्याप्तितोऽनन्यः कर्ता कर्मानूसारतः ।
करोति संसृतिं पुंसामाज्ञया समवेतया ॥ २ ॥

(இ-ள்) व्याप्तितः अनन्यः कर्ता = வியாப்தியினால் ஜகத்தினும்வேருகாத கர்த்தாவாகிய சிவன், अन्यःसन् = உலகத்தின்வேறு யிருந்துகொண்டு, समवेतया आज्ञया = நீக்கமின்றியிருக்

கும் தனது ஆணையாகிய சக்தியினால், पुंसाम् = புருஷ(ஜீவ)ர்களுக்கு, कर्मानुसारतः = அவரவர் கர்மத்தின் பரிபாகத்தினை யநுசரித்து, संसृतिं करोति = சம்ஸாரத்தினைச் செய்கின்றான். எ-று.

இங்கு ஆரோபிதமான ஜகத்து அதிஷ்டான சத்தையினும் வேறாகாமையின் "வியாப்தியி னால் ஜகத்தினும் வேறாகாத" என்றும் அங் ஙனம் வாஸ்தவ அபேதமிருந்தும் கற்பிதபே தத்தினால் அவனே வேறுகர்த்தாவாகிய ஈசனு யிருந்து பஞ்சகிருத்தியம் செய்தலின் "உல கத்தின்வேறு யிருந்துகொண்டு" என்றும் கூறினார். இதிற் பிரமாணவசனங்க ளிவை யாம்:—

"सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम् ॥

சோமியனே! இது முன் ஒரே அத்விதீய (இரண்டாவதற்ற) சத்தாகவே இருந்தது" சாந்தோக்யம். கூ-உ-க.

नेह नानास्ति किंचन—

இங்கு நாநா என்பது எதுவு மில்லை" பிருக தாரணியகம். ச-ச-கக. கடவல்லி. ச-கக.

ब्रह्मादिस्तम्बपर्यन्तं मृषामात्रा उपाधयः ।
ततः पूर्णस्वमात्मानं पश्येदेकात्मना स्थितम् ॥

स्वयं ब्रह्मा स्वयं विष्णु स्वयमिन्द्रः स्वयं शिवः ।
स्वयं विश्वमिदं सर्वं स्वस्मादन्यन्न किंचन ॥

स्वात्मन्यारोपिताशेषाभासवस्तुनिरासतः ।
स्वयमेव परं ब्रह्म पूर्णमद्वयमक्रियम् ॥

असत्कल्पो विकल्पोऽयं विश्वमित्येकवस्तुनि ।
निर्विकारे निराकारे निर्विशेष भिदाकुतः ॥

द्रष्टृदर्शनदृश्यादिभावशून्येनिरामये ।
कल्पार्णव इवात्यन्तं परिपूर्णे चिदात्मनि ॥

तेजसीव तमो यत्र विलीनं भ्रान्तिकारणम् ।
अद्वितीये परे तत्त्वे निर्विशेषे भिदा कुतः ॥

एकात्मके परे तत्त्वे भेदकर्ता कथं वसेत् ॥

பிரஹ்மாமுதல் ஸ்தம்பப்புல்லீறுனவை பொய்மாத்திரமான உபாதிகளாம். ஆதலால் பூர்ணமும் ஒருவடிவாக நிலைத்திருப்பதுமான தானாகிய ஆத்மாவினைக் காண்க. அச்சிவமாகிய ஆத்மா தானே பிரஹ்மாவாம்; தானே

விஷ்ணுவாம்; தானே இந்திரனும்; தானே சிவனும். தானே இவ்வெல்லாவுலகமுமாம். சிவமாகிய தன்னின்வேறான தெதுவுமில்லை. ஸ்வாத்மாவிலாரோபிக்கப்பட்ட எல்லா ஆபாஸவஸ்துக்களையும் நீக்குதலால் தானே பூர்ணமும், அத்வயமும், அக்கிரியமுமான பரம்பிரஹ்மமாம். அசத்திற்குச் சமமான விகற்பமாம். இவ்வுலகம் என்பதனால் நிர்விகாரமும் நிராகாரமும் நிர்விசேஷமுமான ஒருவஸ்துவில் பேதமெங்கிருந்துளதாம்? திருஷ்டாதர்சனம் திருசிய (காண்பான் காட்சி காணப்படுபொருள்) முதலிய தன்மைகளின்றியதும், நிராமயமும், கற்பகாலத்துச்சமுத்திரம்போல் அத்யந்தம் பரிபூர்ணமும், சிதாத்மாவும், ஒளியிலிருள்போலப் பிராந்திக்காரணமான அஞ்ஞானமொடுங்குதற் கிடமானதும், அத்விதீயமும், நிர்விசேஷமுமான பரதத்துவத்தில் பேதமெங்கிருந்துளதாம்? ஒருவஸ்துவினதாகிய பரதத்துவத்தில் பேதகர்த்தா எவ்வாறு வசிப்பன்?" அத்தியாத்மோபநிஷதம். கசு—உரு.

"यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते ।
अथ तस्य भयं भवति ॥

எப்போது இவன் இச்சிவத்தின்கண் சிறிதேனும் பேதத்தினைச்செய்கின்றானே, அப்போது

அவனுக்குப் பயமுண்டாகின்றது.” தைத்திரீயம். உ-எ.

“यस्मिन्निदं सर्वमोतप्रोतं तस्मादन्यन्न परं किंचनास्ति । न तस्मात्पूर्वं न परं तदस्ति न भूतं नोत भव्यं यदासीत् ॥

எதன்கண் இவ்வெல்லாம் குறுக்கும் நெடுக்குமா யிருக்கின்றதோ அதனின் வேறானதும் மேலானதும் எதுவுமில்லை. எது இருந்ததோ, அதனின் முந்தியதும் பிந்தியதும் இருக்கிறதில்லை; இருந்தது மில்லை; இருப்பது மில்லை.” அதர்வசிரஸு. கூ.

“चैतन्यस्यैकरूपत्वाद्भेदो युक्तो न कर्हिचित् ।
जीवत्वं च तथा ज्ञेयं रज्ज्वां सर्पग्रहो यथा ॥१॥

रज्ज्वज्ञानात्क्षणेनैव यद्वद्रज्जुर्हि सर्पिणी ।
भातितद्वच्चितिः साक्षाद्विश्वाकारेण केवला ॥ २ ॥

स्वल्पमप्यन्तरं कृत्वा जीवात्म परमात्मनोः ।
यस्तिष्ठति विमूढात्मा भयं तस्यापि भाषितम् ॥८॥

यदज्ञानाद्भवेद्द्वैतमितरत्तत्प्रपश्यति ।
आत्मत्वेन तदा सर्वं नेतरत्तत्र चाण्वपि ॥ ९ ॥

अनुभूतोऽप्ययं लोको वियवहारक्षमोपि सन् ।
असद्रूपो यथा स्वप्न उत्तरक्षणबाधितः ॥ १० ॥

यद्वन्मृदि घटभ्रान्तिः शुक्तौ हि रजतास्थितिः ।
तद्वद्ब्रह्मणि जीवत्वं वीक्ष्यमाणे विनश्यति ॥१३॥

यथा मृदि घटोनाम कनके कुण्डलाभिधा ।
शुक्तौ हि रजतख्याति जींवशब्दस्तथा परे ॥१४॥

यथैव व्योम्नि नीलत्वं यथा नीरं मरुस्थले ।
पुरुषत्वं यथा स्थाणौ तद्वद्विश्वं चिदात्मनि ॥ १५ ॥

यथैव शून्यो वेतालो गन्धर्वाणां पुरं यथा ।
यथाकाशे द्विचन्द्रत्वं तद्वत्सत्ये जगत्स्थितिः १६

यथा तरङ्गकल्लोलैर्जलमेव स्फुरत्यलं ।
घटनाम्ना यथा पृथ्वी पटनाम्ना हि तन्तवः १७

जगन्नाम्ना चिदाभाति सर्वं ब्रह्मैव केवलम् ।
यथावन्ध्यासुतो नास्ति यथा नास्ति मरौ जलम् १८

यथा नास्ति नभोवृक्षस्तथा नास्ति जगत्स्थितिः ॥
गृह्यमाणे घटे यद्वन्मृत्तिका भाति वै बलात् १९

वीक्ष्यमाणे प्रपञ्चे तु ब्रह्मैवाभाति भासुरम् ॥

சைதன்யம் ஏகரூபமா யிருத்தலால் பேத மோரிடத்தும் யுக்தமன்று. இரஜ்ஜுவில் சர்ப் பக்கிரகம் எப்படியோ, அப்படியே ஜீவத்துவ மென்றறிக. இரஜ்ஜுவினை யறியாததினால் இரஜ்ஜுவே எப்படி க்ஷணத்தில் சர்ப்பமாகத் தோற்றுகின்றதோ அதுபோலக் கேவலம் சித்தே க்ஷணத்தில் விசுவாகாரமாகத் தோற்று கின்றது. ஜீவாத்ம பரமாத்மா விரண்டற்கும் சிறிதேனும் பேதத்தினைச் செய்து எம்மூடாத்மா நிற்கின்றானோ, அவனுக்கும் பயம் சொல்லப்பட்டுளது. எதனை அறியாததினால் துவைத முண்டாகின்றதோ, அதனை வேறாகக் காண்கின்றான். எப்போது எல்லாவற்றையும் ஆத்மாவாகக் காண்கின்றானோ அங்கு அந்நியம் அணுவுமில்லை. இவ்வுலகம் அநுபவிக்கப் படுவதாயினும், வியவகாரசாமர்த்திய முள்ளதாயிருக்கினும், சொப்பனம்போல் பிற்கணத்தில் பாதிக்கப்படுவதாய் அசத்ரூபமேயாம். மண்ணிற் குடப்பிராந்தியும், சுக்தியில் இரஜதஸ்திதியும் போலப் பிரஹ்மம் அறியப்பட்ட போது ஜீவத்துவம் கெடுகின்றது. மண்ணில் குடமென்னும் பெயரும், பொன்னில் குண்டல மென்னும் பெயரும், சுக்தியில் இரஜதவியவகாரமும் எப்படியோ அப்படியே பரத்தில்

ஜீவசப்தமாம். எப்படி ஆகாயத்தில் கரு மையோ, எப்படி மருஸ்தலத்தில் நீரோ, ஸ்தாணுவில் புருஷத்துவமோ, அப்படிச் சிதாத்மாவில் விசுவமாம். எப்படி வேதாளம் சூநியமோ, எப்படிக் கந்தர்வர்களின் புரமோ, எப்படி ஆகாயத்தில் இரட்டைச் சந்திரத்துவமோ, அப்படிச் சத்தியமான ஆத்மாவில் ஜகத்ஸ்திதியாம். எப்படி பேரலை சிற்றலைகளாக ஜலமே விளங்குகின்றதோ எப்படிக் கடமென்னும் பெயரால் பிருதிவியும், படமென்னும் பெயரால் தந்துக்களும் விளங்குகின்றனவோ, அதுபோல ஜகத்தென்னும் பெயரால் சித்து விளங்குகின்றது. எல்லாம் கேவலம் பிரஹ்மமே. எப்படி மலடிமைந்தனில்லையோ, எப்படி மருபூமியில் ஜலமில்லையோ, எப்படி ஆகாய விருக்ஷமில்லையோ, அப்படியே ஜகத்தின் ஸ்திதியில்லை. எப்படிக் கடம் கிரகிக்கப்பட்டபோது மண்ணனது வலிந்து தோற்றுகிறதோ அதுபோலப் பிரபஞ்சம் பார்க்கப்பட்டபோது விளக்கமான பிரஹ்மமே விளங்குகின்றது." யோகசிகோபநிஷதம் அத்தியாயம். ச.

"स वा एष भूतानीन्द्रियाणि विराजं देवताः-कोशांश्च सृष्ट्वा प्रविश्याऽमूढो मूढ इव व्यवहर-

न्नास्ते माययैव तस्माद्द्वय एवायमात्मा सन्मात्रो नित्यः ॥

அந்தப் பிரசித்தமான இவ்வாத்மா பூதங்களையும் இந்திரியங்களையும் விராட்டையும் தேவர்களையும் கோசங்களையும் சிருஷ்டித்துப் பிரவேசித்து, அமூடனை அவன் மாயையினாலேயே மூடனைப்போல வியவகரித்துக் கொண்டிருக்கின்றான். ஆதலால் இவ்வாத்மா சன்மாத்திர நித்தியனான அத்வயனே." நிருசிம்ஹதாபினியுபநிஷதம்.

"यदा ह्येवैष एतस्मिन्नल्पमप्यन्तरं नरः ।
विजानाति तदा तस्य भयं स्यान्नात्र संशयः ॥

எப்போது இந்த நரன் இவ்வாத்மாவில் சிறிதேனும் பேதத்தை யறிகின்றானோ, அப்போது அவனுக்குப் பயமுண்டாம். இதிற் சம்சயமில்லை." கடருத்ரோபநிஷத்.

"ब्रह्मैव स्वशक्तिं प्रकृत्यभिधेयामाश्रित्य लोकान् सृष्ट्वा प्रविश्यन्तर्यामित्वेन ब्रह्मादीनां बुद्धीन्द्रिय नियन्तृत्वादीश्वरः ॥ ब्रह्मविष्णवादीनां नामरूपद्वारा स्थूलोहमिति मित्याध्यासवशाज्जीवः सोहमेकोपि देहारम्भकभेदवशाद्बहुजीवः ॥

பிரஹ்மமே பிரகிருதியென்னும் பெயருள்ள தனது சக்தியினை ஆசிரயித்து, உலகங்களைப் படைத்துப் பிரவேசித்து, அந்தர்யாமித்தன்மையினால் பிரஹ்மாதியரின் புத்தீந்திரிய நியந்திருத்தன்மையால் ஈசுவரனும். பிரஹ்மவிஷ்ணு வீசானேந்திரியாதியரின் நாமரூபவாயிலாக ஸ்தூலன் யானென்னும் மித்தியாத்தியாசவசத்தால் ஜீவனும். அந்த யான் ஒருவனாயினும் தேகாரம்பகத்தின் பேதத்தின் வசத்தால் வெகுஜீவனாவன்." நிராலம்போபநிஷத்.

"देहादेः परतरत्वाद्ब्रह्मैव परमात्मा । स ब्रह्मा स विष्णुः स इन्द्रः स शमनः स सूर्यः स चन्द्रस्ते सुरास्ते असुरास्ते पिशाचास्ते मनुष्यास्ताः स्त्रियस्ते पश्वादयस्त त्स्थावरं ते ब्राह्मणादयः। सर्वं खल्विदं ब्रह्म नेह नानास्ति किंचन ॥

தேகமுதலியவற்றின் மேலானதாயிருத்தலால் பிரஹ்மமே பரமாத்மாவாம். அதுவே அப்பிரஹ்மா, அவ்விஷ்ணு, இவ்விந்திரன், அவ்வியமன், அச்சூரியன், அச்சந்திரன், அச்சுரர்கள், அவ்வசுரர்கள், அப்பிசாசங்கள், அம்மனிதர்கள், அந்த ஸ்திரீகள், அப்பசுவாதிகள், அத்தாவரம்,

அந்தப் பிராஹ்மணுதியர். இவ்வெல்லாம் நிச்சயமாகப் பிரஹ்மம்; இங்கு நாநாவென்பது எதுவுமில்லை.'' நிராலம்பம்.

तस्मिंश्चिद्दर्पणे स्फारे समस्ता वस्तुदृष्टयः ।
इमास्ताः प्रतिबिंबन्तिसरसीव तटद्रुमाः ॥

அப்பெரிய சிற்கண்ணுடியில் இந்த அவ்வெல்லா வஸ்துதிருஷ்டிகளும் தடாகத்திற் கரையிலுள்ள விருக்ஷங்களைப்போலப் பிரதிபிம்பிக்கின்றன.'' அந்நபூர்ணேபநிஷத். ச-எக.

" आदित्यसन्निधौ लोकश्चेष्टते स्वयमेव तु ।
तथा मत्सन्निधावेव ससमस्तं चेष्टते जगत् ॥

शुक्तिकायां यथा तारं कल्पितं मायया तथा ।
महदादिजगन्मायामयं मय्येव केवलम् ॥

ஆதித்தனது சந்நிதியில் உலகம் தானே சேட்டிக்கிறதுபோல எனது சந்நிதியிற்றானே சமஸ்தஜகத்தும் தானே சேட்டிக்கின்றது. சுத்திகையில் வெள்ளி எப்படி மாயை (பிராந்தி) யிறை கற்பிப்பிக்கப்படுகின்றதோ, அப்படி மாயாமயமான மகத்துமுதலிய ஜகத்து என்னிடத்

திற்றான் கற்பிக்கப்படுகின்றது." வராகோபநிஷத். ந-கச, கரு.

अस्तीत्युक्ते जगत्सर्वं सद्रसं ब्रह्म तद्भवेत् ॥
भातीत्युक्ते जगत्सर्वं भानं ब्रह्मैव केवलम् ।
मरुभूमौ जलं सर्वं मरुभूमात्रमेव तत् ॥

जगत्त्रयमिदं सर्वं चिन्मात्रं स्वविचारतः । अज्ञानमेव न कुतो जगतः प्रसङ्गो जीवेशदेशिकविकल्पकथातिदूरे। एकान्तकेवलचिदेकरसस्वभावे ब्रह्मैव केवलमहं परिपूर்णमस्मि ॥

இருக்கிறதென்று சொல்லப்பட்டபோது ஜகத்து முழுவதும் சத்ரஸமான அந்தப் பிரஹ்மமாகின்றது. விளங்குகிறதென்று சொல்லப்பட்டபோது ஜகத்து முழுவதும் கேவலம் பானமா(சித்தா)கிய பிரஹ்மமேயாகின்றது. மருபூமியிற் றோற்றும் ஜலமுழுவதும் அம்மருபூமி மாத்திரமேயாம். அதுபோல மூவுலகான இவ்வெல்லாம் ஸ்வவிசாரத்தினால் சின்மாத்திரமாம். ஜீவேசதேசிகவிகற்பகதை அதிதூரமாயுள்ள ஏகாந்த கேவல சிதேகரஸ ஸ்வபாவத்தில் அஞ்ஞானமேயில்லை. ஜகத்தின் பிரசங்க மெங்கி

ருந்துளதாம். கேவலம் பிரஹ்மமே யான் பரிபூர்ணனு யிருக்கின்றேன்." வராகம். உ-எக எங.

" शिवो गुरुः शिवो वेदः शिवो देवः शिवः प्रभुः।
शिवोऽस्म्यहं शिवः सर्वं शिवादन्यन्न किंचन ॥

சிவன் குரு, சிவன் வேதம், சிவன் தேவன், சிவன் பிரபு, சிவன் யான், சிவன் எல்லாம். சிவனைவிட வேருன தொதுவு மில்லை." வராகம். ச-ஙஉ.

" ॐ यो वै रुद्रः स भगवान् यश्च ब्रह्मा तस्मै वै नमो नमः ॥ १ ॥

ஓம் எவன் ருத்திரனே அவன் பகவான். எவன் பிரஹ்மாவோ அவனுக்கு நமஸ்காரம் நமஸ்காரம்" என்று ஆரம்பித்து இவ்வாறே விஷ்ணு முதலாகச் சத்தியபரியந்தமான ஙO வஸ்துக்களை ருத்திரனுகக் கூறி கடைசியாக

"यो वै रुद्रः सभगवान्यश्च सर्वं तस्मै नमोनमः ३२

எவன் ருத்திரனே அவன் பகவான். எவன் எல்லாமாவனே அவனுக்கு வணக்கம் வணக்கம்." என்று அதர்வசிரசு கூறுகின்றது.

" एक एव हि भूतात्मा भूते भूते व्यवस्थितः ।
एकधा बहुधा चैव दृश्यते जलचन्द्रवत् ॥

பூதாத்மா ஒருவனே பூதங்கடோறும் நிலைத்துள்ளவன். ஜலசந்திரனைப்போல ஒரு வகையாகவும் பலவகையாகவும் காணப்படுகின்றான்." திரிபுரதாபினியுபநிஷத் ௫-௧௨.. பிரஹ்ம (அமிருத)பிந்துபநிஷத் ௧-௨.

प्रकृतित्त्वं ततः सृष्टं सत्त्वादिगुणसाम्यतः ।
सत्यमाभाति चिच्छाया दर्पणे प्रतिबिंबवत् ॥

அந்தப் பிரஹ்மத்தினின்று சத்துவாதி குணசாம்யத்தன்மையாகப் பிரகிருதித்துவம் சிருஷ்டிக்கப்பட்டது. கண்ணாடியிற் பிரதிபிம்பம் போல் சிற்சாயை சத்தியமாகத்தோற்றுகின்றது." சரஸ்வதிரகஸ்யோபநிஷத்.

" शिवजातानि तत्त्वानि पंचाविंशन्मनीषिभिः ।
उक्तानि न तदन्यानि सलिलादूर्मिवृन्दवत् २६
पंचविंशत्पदार्थेभ्यः शिवतत्त्वं परं विदुः ।
तानितस्मादनन्यानि सुवर्णकटकादिवत् ॥ २७ ॥

सदाशिवेश्वराद्यानि तत्त्वानि शिवतत्त्वतः ।
जातानि न तदन्यानि मृद्द्रव्यं कुम्भभेदवत् ॥२८॥
मायाऽविद्या क्रियाशक्तिर्ज्ञानशक्तिः क्रियामयी ।
जाताशिवान्न संदेहः किरणा इव सूर्यतः ॥२९॥

प्रोच्यते शङ्करादन्यदस्तिवस्तु न किंचन ॥ ८ ॥

ईश्वराव्याकृतप्राण विराड्भूतेंद्रियात्मकम् ।
शिवस्यैव विकारोऽयं समुद्रस्येव वीचयः ॥२२॥
ईश्वरं जगतामाहुर्निमित्तं कारणं तथा ।
अव्याकृतं प्रधानं हि तदुक्तं वेदवादिभिः ॥२३॥

அறிஞர்களாற் சொல்லப்பட்ட சிவத்தினின்றுண்டாகிய இருபத்தைந்து தத்துவங்களும் ஜலத்தினின்றுண்டாகிய அலைக்கூட்டத்தினைப் போல அதனின் வேறானவையாகா. இருபத்தைந்து பதார்த்தங்களினும் மேலாகச் சிவதத்துவத்தினை அறிவர். அவை சுவர்ணத்தினின்றுண்டாகிய கடகமுதலியவற்றைப்போல அதனின் வேறானவை யாகா. சிவதத்துவத்தினின்றுண்டானவைகளான சதாசிவேசுவரமுதலிய தத்துவங்கள் அதனின் வேறானவையாகா; மண்

ளுகிய திரவியம் கும்பபேதமாவதுபோல் மா
யை அவித்தை கிரியாசக்தி கிரியாமயமான
ஞானசக்தி யென்பன சூரியனினின்றுண்டா
கிய கிரணங்கள்போலச் சிவத்தினின் றுண்டா
யின; சந்தேகமில்லை. சங்கரனின்வேறான வஸ்து
(பொருள்) எதுவு மில்லை யென்று சொல்லப்படு
கின்றது. ஈசுவராவ்யாகிருத பிராணவிராட்
பூதேந்திரியவடிவினதாகிய இது சமுத்திரத்
தின் அலைகளைப்போலச் சிவத்தினதே விகார
மாம். ஈசுவரனை ஜகத்திற்கு நிமித்தகாரண
மென்றும், அவ்வாறே அவ்வியாகிருதத்தினைப்
பிரதான மென்றும் கூறுவர். அது வேதவாதி
களாற் கூறப்பட்டது." இலிங்கபுராணம் உத்
தரபாகம். அத்யாயம் ககூ.

"चतुर्विंशतितत्त्वानि क्षेत्रशब्देन सूरयः ।
प्राहुः क्षेत्रज्ञशब्देन भोक्तारं पुरुषं तथा ॥१३॥
क्षेत्रक्षेत्रविदावेते रूपे तस्य स्वयंभुवः ।
न किंचिच्च शिवादन्यदिति प्राहुर्मनीषिणः १४"

இருபத்துநான்கு தத்துவங்களை க்ஷேத்திர
சப்தத்தாலும், அவ்வாறே போக்தாவாகிய
புருஷனை க்ஷேத்திரஞ்ஞ சப்தத்தாலும் அறி

ஞர் கூறுவர். க்ஷேத்திரம் க்ஷேத்திரஞ்ஞ னெனு மிவ்விரண்டும் அந்தச் சுயம்புவின் ரூபங் களாம். சிவத்தின் வேறுன தெதுவு மில்லை யென்று அறிஞர் கூறுவர்."

"त्रयोविंशति तत्त्वानि व्यक्तशब्देन सूरयः ।
वदन्त्यव्यक्तशब्देन प्रकृतिं च परं तथा ॥ २४ ॥
कथयन्ति ज्ञशब्देन पुरुषं गुणभोगिनम् ।
तत्रयं शांकरं रूपं नान्यत्किंचिदशांकरम् ॥२५॥

இருபத்துமூன்று தத்துவங்களை வியக்த சப் தத்தாலும், அவ்வாறே மேலான பிரகிருதி யினை அவ்யக்த சப்தத்தினாலும் அறிஞர் கூறு வர். குணத்தைப் புசிக்கும் புருஷனை ஜ்ஞ (அறிபவ)னென்னும் சொல்லாற் கூறுகின்றனர். அம்மூன்றும் சங்கரரூபமாம். வேறுன அசாங் கரரூபம் எதுவு மில்லை" இலிங்கபுராணம். உத்தரபாகம் அத்யாயம் கரு.

"देहमृत्पिण्डहेम्नां च गात्रभाजनभेदतः ।
चराचराणां भूतानां द्वैतता न च सत्यतः ॥

தேகம் மண்டிரள் பொன் என்பவற்றின் துவைதத்துவம் காத்திரம் பாத்திரபேதங்களா

லாவதுபோலச் சராசரங்களான பூதங்களின் துவைதத்தன்மையாம். சத்தியமாக இல்லை."
பிரஹ்மபுராணம்.

"स्थावरं जंगमं चैव तथान्यदपि किंचन ॥२७॥
सर्वमेतदयं शंभुः प्रज्ञानघनलक्षणः ॥
प्रतिष्ठा सर्ववस्तूनां प्रज्ञैषापारमेश्वरी ॥ २८ ॥

ஸ்தாவரமும் ஜங்கமமும் அவ்வாறே மற்றெதுவுமான இவ்வெல்லாம் இப்பிரஞ்ஞானகன லக்ஷணமான சம்புவாம்; இப்பரமேசுவரியான பிரஞ்ஞை சர்வவஸ்துக்களின் பிரதிஷ்டையாம்." பிரஹ்மகீதை அத்யாயம் ௩.

"ईश्वरो जगतः कर्ता मायया स्वीयया पुरा ।
अभेदेनास्थितः पूर्वकल्पवासनयाऽन्वितः ॥ १ ॥
कालकर्मानुगुण्येन स्वाभिन्नस्वीयमायया ।
अभिन्नोपि तया स्वस्यभेदं कल्पयति प्रभुः ॥२॥"

ஜகத்கர்த்தாவாகிய ஈசுவரன் சிருஷ்டிக்கு முன் பூர்வகல்ப வாசனையோடுகூடியவராய்த் தமது மாயையோடு அபேதமாக நின்றனர். காலகர்மாநுகுணமாகத் தன்னின் வேறாகாத

தனது மாயையினால் அபின்னராயினும் அவ னோடு தமது பேதத்தினைக் கற்பிக்கின்றார் பிரபு."

"विजायन्ते च भोगार्थं चेतनानां शरीरिणाम् ।
भोक्तारः पशवः सर्वे शिवो भोजयिता परः ॥३०॥

सुखदुःखादिसंसारो भोगःसर्वमिदं सुराः ।
स्वप्नवद्देवदेवस्य माययैव विनिर्मितम् ॥ ३१ ॥

मायया निर्मितं सर्वं मायैव हि निरूपणे ।
कारणव्यतिरेकेण कार्यं नेति हि दर्शितम् ॥३२॥

मायापिकारणत्वेनकल्पिता मुनिपुङ्गवाः ।
अधिष्ठानातिरेकेण नास्ति तत्त्वनिरूपणे ॥ ३३ ॥

व्यवहारदशा मायाकल्पना नैव वस्तुतः ।
वस्तुतः परमाद्वैतं ब्रह्मैवास्ति न चेतरत् ॥ ३४ ॥

मायारूपतया साक्षाद्ब्रह्मैव प्रतिभासते ।
जगज्जीवादिरूपेणाप्यहो देवस्य वैभवम् ॥ ३५ ॥

स्वस्वरूपातिरेकेण ब्रह्मणो नास्ति किंचन ।
तथापि स्वातिरेकेण भाति हा देववैभवम् ॥३६॥

जगदात्मतया पश्यन्बध्यते न विमुच्यते ।
सर्वमेतत्परं ब्रह्म पश्यन्स्वानुभवेन तु ।
मुच्यते घोरसंसारात्सद्य एव न संशयः ॥ २८ ॥

சேதனர்களான சரீரிகட்குப் போகார்த்தம் பிறக்கின்றன. பசுக்க ளெல்லோரும் போக்தாக்கள். புசிப்பிப்பவன் பரனுன சிவன். சுக துக்காதி சம்சாரம் போகம். தேவர்களே! இவ்வெல்லாம் தேவதேவனது மாயையினுல் சொப்பனம்போல் ஆக்கப்பட்டனவாம். மாயையினுல் நிர்மிக்கப்பட்டயாவும் நிருபிக்குமிடத்து நிச்சயமாக மாயையேயாம். காரணத்திற்கு வேறுகக் காரியமில்லையென்று காட்டப்பட்டது. முநிபுங்கவர்களே! மாயையும் காரணத் தன்மையாகக் கற்பிக்கப்பட்டதாம். தத்துவ நிருபணத்தில் அதிஷ்டானத்தின் வேறுக இல்லை; வியவகார திருஷ்டியினுல் மாயையின் கற்பனையாம்; உண்மையாக இலதேயாம். உண்மையாகவோ பரமாத்வைதமான பிரஹ்மமேயுளது; அந்நியமில்லை. மாயாவடிவத் தன்மையால் சாக்ஷாத் பிரஹ்மமே தோற்றுகின்றது. ஜகத்து ஜீவவடிவமாகவும் தோற

றுகின்றது. தேவனது வைபவம் ஆச்சரியம்! பிரஹ்மத்தின் ஸ்வரூபத்திற் கந்நியமாக எதுவுமில்லை. என்றாலும் தன்னின் வேறாகத் தோற்றுகின்றது; தைவவைபவம் ஆச்சரியமாம்! ஜகத்தினை ஆத்மாவாகக்கண்டு கட்டுப்படுகின்றான்; விடுபடுகிறதில்லை. ஸ்வாநுபவத்தால் இவ்வெல்லாவற்றினையும் பரப்பிரஹ்மமெனக்கண்டு கோரசம்ஸாரத்தினின்று உடனே விடுபடுகின்றான்; சம்சயமில்லை." சூதகீதை ச-வது அத்தியாயம்.

"एकमेवाद्वितीयं सदित्याह श्रुतिरादरात् ।
मायामात्रमिदं द्वैतमिति चाह परा श्रुतिः ॥

ஒரே அத்விதீய சத்திருந்தது என்று (சாந்தோக்ய)சுருதி ஆதரவோடு கூறுகின்றது. மாயாமாத்திரமாம் இத்துவைதம் என்று மேலான (மாண்டூக்ய) சுருதி கூறுகின்றது." சூதசங்கிதையஞ்ஞவைபவகண்டம் அத்தியாயம் கo.

"ब्रह्मणोऽभिन्नरूपे तु चेतना चेतनात्मकः ।
विभागः कल्पितः शक्त्या न स्वतः पण्डितोत्तमाः ॥

பண்டிதோத்தமர்களே! பிரஹ்மத்தின் அபின்னவடித்தில் சேதனசேதனவடிவ விபாகம் சக்தியினுற் கற்பிக்கப்பட்டதாம்; இயல்பாகவன்று."

ब्रह्मणश्चेतनाकारे कल्पिता चेतना भिदा ।
सर्वज्ञत्वादिकास्तम्बपर्यन्ता माययैव तु ॥
उत्कर्षश्चापकर्षश्च मायया तेषु कल्पितः ।
नियन्तृत्व नियम्यत्वाद्याकाराश्च प्रकल्पिताः ॥

பிரஹ்மத்தின் சேதனவடிவத்தில் சர்வஞ்ஞத்துவமுதல் ஸ்தம்பபரியந்தமான சேதனபேதம் மாயையினுற்றுனே கற்பிக்கப்பட்டதாம். அவற்றில் உயர்வும் தாழ்வும் மாயையினுற் கற்பிக்கப்பட்டதாம். நியமிக்குந்தன்மை நியமிக்கப்படுந்தன்மை முதலிய வடிவங்களும் கற்பிக்கப்பட்டனவாம்." சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் அத்யாயம். கஉ.

" घटकुड्यकुसूलादिपदार्थेषु मुनीश्वराः ।
सत्ताया भासते सैका सत्ताकारतयैव तु ॥ २ ॥
सा विशेषेण रूपेण विभिन्नेति च केचन ।
तदसंगतमेवेति प्रवदान्ति मनीषिणः ॥ ३ ॥

विशेषरूपस्याभावाद्भेदाभावेन हेतुना ।
सति भेदे विशेषः स्यान्नाभेदे हि मुनीश्वराः ॥

भेदाकारस्तु सत्ताया विद्यते यदि वस्तुतः ।
भेदाकारस्तु सत्ताया भिन्नश्चेच्छून्यतत्त्ववत् ।
शून्यमेव भवेन्नैव भेदाकारो भवेद्द्विजाः ॥

भेदाकारः स सत्ताया अभिन्नश्चेत्स सैव हि ।
भिन्नाभिन्नौ यदि स्यातां दोषद्वयसमागमः ॥

तस्मात्सत्तातिरेकेण विशेषार्थो न विद्यते ।
विशेषार्थप्रतीतिस्तु भ्रांतिसिद्धा न संशयः ॥

अत एका सदा सत्ता सैव ब्रह्म परात्परम् ।
सत्ताया यदि भिन्नं चेद्ब्रह्मासत्स्यान्नृशृङ्गवत् ॥

तत्रैवं सति विप्रेन्द्रा ये पदार्था घटादयः ।
ते तु सत्तातिरेकेण न विद्यन्ते कथंचन ॥

முனீசுவரர்களே! குடம் சுவர் குதிர் முதலிய பதார்த்தங்களில் எந்தச் சத்தை தோற்றுகின்றதோ, அது சத்தாகாரத்தன்மையால் ஒன்றேயாம், அது விசேஷவடிவத்தால் வேறுபட்

டதாமென்பர் சிலர். அது பொருந்த மின்றியதேயாமென்று அறிஞர் செவ்வனே கூறுகின்றனர்; பேதமின்மையாகிய காரணத்தால் விசேஷவடிவ மின்மையின். முநீசுவரர்களே! பேத முளதேல் விசேஷ முளதாம்; அபேதத்திற் பேத மிராதென்பது நிச்சயம். துவிஜர்களே! சத்தைக்கு உண்மையாகப் பேதாகார முளதெனின், பேதாகாரம் சத்தையினும் வேறுபட்டதெனின், சூநியதத்துவம்போல் சூநியமேயாம்; பேதவடிவமாதலே இன்று. பேதவடிவமாகிய அது சத்தையினும் வேறுபட்ட தன்றெனின், அது (பேதவடிவம்) அதுவே(சத்தையே)யாம். பின்னுபின்ன மாகுகவெனின், (முற்கூறிய) தோஷமிரண்டன் சம்பவமாம். ஆதலால் சத்தையின் வேறாக விசேஷார்த்த முளதாகாது. விசேஷார்த்தத் தோற்றமோ பிராந்தியினாற் சித்தித்ததாம்; சம்சயமில்லை. ஆதலால் சத்தை எப்போதும் ஒன்றும். அதுவே பராத்பரமான பிரஹ்மமாம். பிரஹ்மம் சத்தையின் வேறுபட்டதெனின், மனிதக்கொம்புபோல் அசத்தாம். பிராஹ்மணோத்தமர்களே! அங்கிவ்வாறுளதாக, கடாதிபதார்த்தங்களெவையோ, அவை சத்தையின் வேறாக எவ்வாற்றானு முளவாகா."

" अतः सर्वमिदं शंभुरिति वित्त विचक्षणाः ॥

मृच्छरावादिरूपेण यथा भाति स्वभावतः ।
तथा सर्वतया भाति शिवः सर्वावभासकः ॥

कटकादिविभेदेन यथा हेम प्रकाशते ।
तथा सर्वतयाभाति शिवः सर्वावभासकः ॥

शुक्तिकारजताकारा यथा भाति स्वभावतः ।
तथा सर्वतया भाति शिवः सर्वावभासकः ॥

अन्धकारः प्रकाशश्च यथाकाशे प्रकाशते ।
जडाजडमिदं सर्वं तथा भाति परमात्मनि ॥

वीचीतरङ्गपूर्वास्तु यथा भान्ति महोदधौ ।
महदादिविशेषान्तं जगद्भाति तथात्मनि ॥

" ஆதலால் புத்திமான்களே! இவ்வெல்லாம் சம்புவென் றறியுங்கள். எப்படி மண்ணானது சட்டிமுதலிய வடிவாக இயல்பாய்த் தோற்றுகின்றதோ, அப்படியே எல்லாவற்றையும் விளக்கும் சிவம் எல்லாமாக விளங்குகின்றது. எப்படிப் பொன்னானது காப்புமுதலிய பேதமாகப்

பிரகாசிக்கின்றதோ, அப்படியே எல்லாவற்றை யும் விளக்கும் சிவம் எல்லாமாக விளங்குகின்றது. எப்படிச் சுத்திகை இயல்பாக வெள்ளி வடிவமாகத் தோற்றுகின்றதோ, அப்படியே எல்லாவற்றையும் விளக்கும் சிவம் எல்லாமாக விளங்குகின்றது. எப்படி ஆகாயத்தில் இருளும் ஒளியும் பிரகாசிக்கின்றனவோ, அப்படியே ஜடாஜடமாகிய இவ்வெல்லாம் பரமாத்மாவினிடத்துப் பிரகாசிக்கின்றன. எப்படிப் பெருங்கடலில் பேரலை சிற்றலை முதலியன விளங்குகின்றனவோ, அப்படியே மகத்து முதல் விசேஷமீறுயுள்ள ஜகத்து ஆத்மாவில் விளங்குகின்றது.'' சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம், அத்யாயம் கரு.

"कल्पितद्वैतमात्रे तु नैव मानमियं श्रुतिः ।
तत्र प्रयोजनाभावात्परमार्थनिरूपणे ॥ १९ ॥

अद्वैतं परमानन्दं ब्रह्म वस्तु न चापरम् ।
तत्र प्रयोजनं विप्रा अस्त्येव हि न संशयः ॥

यत्र प्रयोजनं तत्र श्रुतिर्मानमिति स्थितिः ।
अथः प्रयोजमाभावाद्द्वैतं न प्रतिपाद्यते ॥

अनूद्य द्वैतमद्वैतं प्रतिपादयति श्रुतिः ।
स्मृतीनां च पुराणानां भारतादेस्तथैव च ॥

तथा शैवागमादीनां तर्काणां च द्विजोत्तमाः ।
अद्वैतनिष्ठतैवोक्ता न द्वैतपरता सदा ॥

अध्यस्ताज्ञानतत्कार्यनिवृत्तिद्वारतोऽद्वयम् ।
बोधयन्ति मुदा काश्चिच्छ्रुतयः पण्डितोत्तमाः ॥

साक्षाद्विधिमुखेनैव ब्रह्म सत्यादिलक्षणम् ।
बोधयन्ति मुदा काश्चिच्छ्रुतयः पण्डितोत्तमाः ॥

கற்பிததுவைதமாத்திரத்திலே இச்சுருதி பிரமாணமாதலே யின்று; பரமார்த்தநிரூபணஞ் செய்யுமிடத்து அங்குப் பிரயோஜன மின்மையால், பரமாநந்தமாகிய பிரஹ்மவஸ்து அத்வைதமாம்; பிறிதில்லை. பிராஹ்மணர்களே! அங்குப் பிரயோஜனம் நிச்சயமாக வுளதேயாம். சம்சயமில்லை. எங்குப் பிரயோஜன முளதோ அங்குச் சுருதி பிரமாணமா மென்பது நிலையாம். ஆதலால் பிரயோஜன மின்மையின் துவைதம் பிரதிபாதிக்கப்படுகிறதில்லை. துவைதத்தினை யநுவதித்து, அத்வைதத்தினைப் பிரதி

பாதிக்கின்றது சுருதி. பிராஹ்மணோத்தமர்களே! ஸ்மிருதிகட்கும், புராணங்கட்கும், அவ்வாறே பாரதாதிகட்கும், அவ்வாறே சைவாகமமுதலியவற்றிற்கும், தர்க்கங்கட்கும் அத்வைதபரத்துவமே சொல்லப்பட்டுளது; துவைதபரத்துவம் எப்போது மில்லை. பண்டிதோத்தமர்களே! அத்தியஸ்தமான அஞ்ஞானதற்காரியங்களின் நிவிருத்திவாயிலாக அத்வயத்தினைச் சில சுருதிகள் களிப்போடு போதிக்கின்றன. பண்டிதோத்தமர்களே! நேரே விதிமுகத்தினாலேயே சத்தியாதிலக்ஷண பிராஹ்மத்தினைச் சில சுருதிகள் களிப்போடு போதிக்கின்றன." சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம், அத்யாயம் ௩௯.

"भेदाभेदेपि भेदांशो मिथ्याभवति सत्तमाः ।
भेदानिरूपणादेव धर्म्यादेरनिरूपणात् ॥
तस्मान्नास्तीश्वरादन्यत्किंचिदप्यास्तिकोत्तमाः ।
द्वितीयाद्वै भयं जन्तोर्भवतीत्याह हि श्रुतिः ॥

பேதாபேதத்திலும் பேதாம்சம் மித்தையாகின்றது; பேதம் நிரூபிக்கப்படாமையினாலே தர்மிமுதலியன நிரூபிக்கப்படாமையின். அத

லால் ஆஸ்திகோத்தமர்களே! ஈசுவரனின் வேறான தெதுவு மில்லை. இரண்டாவதனால் ஜெந்துக்களுக்குப் பயமுண்டாகின்ற தென்று வேதம் கூறுகின்றது." சூதகீதை, அத்யாயம் ந.

"कल्पितोऽयं द्विजा भेदो नाभेदं बाधते सदा ।
कल्पितानामवस्तुत्वादविरोधश्च सिध्यति ॥ ३ ॥

துவிஜர்களே! கற்பிதமான இப்பேதம் எப்போதும் அபேதத்தினைப் பாதியாது, கற்பிதங்கட்கு வஸ்துத்துவமி(பொருண்மைபி)ன்மையால் அபேதத்தோடு அவிரோதமும் சித்திக்கின்றது." சூதகீதை, அத்யாயம் ச.

"நித்தியமாகியொன்றாய் விபாபியாய்நிறைந்துநின்ற, சுத்தமாய்ப்பரமமாகிச் சுயம்பிரகாசமாகித், தத்துவங்கடந்துநின்ற புருடனுங்காரந்தன்னை, டொத்துத்தான்வேறென்றெண்ணுன் கருத்தன்பாலென்னவோதும்."

"நித்தியமாகுமான்மா வேகமாய்நிகழ்த்துமாயா, சத்தியாயளிப்பில்பேத மாமுறுபேதஞ்சாற்றில், வைத்தநீர்க்குடங்கடோறுந் தோன்றிடுமதியம்போல, வுய்த்திடுமுபாதிதன்னாற் பற்பலவுருவந்தோன்றும்" கூர்மபுராணம், சாங்கியயோக முரைத்தவத்தியாயம்.

"பின்னமின்றிப் பின்னமாய் நித்தியாநந்த மாய்ப் பிரமமாகி," கூர்மபுராணம், சம்பிரதாய வத்தியாயம்.

"கடங்கடங்கடோறுங் கதிரவ னூடாடி, யடங்குமிடந்தானறிந் தன்புற்றாய்நெஞ்சமே"

"சத்திசிவமிரண்டாய்த் தான்முடிவிலொன்றாகிச், சித்திரமாய்நின்ற திறமறியேன் பூரணமே" பட்டினத்தார்.

"கண்டபுனற்குடத்திற் கதிரொளிகள்பாய்ந் தாற்போல், கொண்டசுரூபமதைக் கூறறிவ தெக்காலம்" பத்திரகிரியார்.

"பின்னியபகுதியாம் பிரதானமாயையு; பன்னியபுருடனு மாதியாதியாய்த்; துன்னிய விகாரமுந் தொல்லையீசனி; லன்னியமின் மையா லவனேயாகுமால்." ஈசுவரகீதை, தத் துவநிஜம்.

"பற்றுமாகிவானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபா; ரெற்றுநீர்தீக்காலு மேலை விண்ணிய மானனோடு; மற்றுமாதோர்டல்லுயிராய் பால யனும்மறைகள்; முற்றுமாகிவேறுமானன்மை யதுமுதுகுன்றே."

"ஈறாய் முதலொன்றா யிருபெண்ணாண் குண மூன்றாய், மாறா மறைநான்காய்வரு பூதம்மவை யைந்தா, யாறார்சுவை யேழோசையோ டெட்டுத்திசைதானாய், வேறாயுடனானா னிடம் வீழிம் மிழலையே." இவை திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரப்பாக்கள்.

"முதலாய் நடுவாகி முப்பொருளாய் மூன்றுலகா, யிதமாகி நின்ற வியலறியேன் பூரணமே"

"ஒளியாய்க் கதிர்மதியா யுள்ளிருளா யக்கினியாய், வெளியாகி நின்ற வியனறியேன் பூரணமே"

"பொய்யாய்ப் புவியாகிப் புகழ்வா ரிதியாகி, மெய்யாகி நின்ற வியனறியேன் பூரணமே"

"ஊனாயுடனுயிரா யுண்ணிறைந்த கண்ணொளியாய்த், தேனாய்ருசியான திறமறியேன் பூரணமே"

"வித்தாய்மரமாய் விளைந்தகனியாய்ப் பூவாய்ச், சித்தாகிநின்றதிறமறியேன் பூரணமே" பட்டினத்தார்.

"பெண்ணாகியாணா யலியாய்ப்பிறங்கொளிசேர், விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக், கண்ணாரமுதமாய்நின்றான்"

"ஊனாயுயிராயுணர்வா யென்னுட்கலந்து, தேனாயமுதமுமாய்த் தீங்கரும்பின்கட்டியுமாய்"

"வேதமும் வேள்வியுமாயினார்க்கு மெய்ம்மையும் பொய்ம்மையுமாயினார்க்கு"

"பித்தனே யெல்லாவுயிருமாய்த் தழைத்துப், பிழைத்தவை யல்லையாய் நிற்கு மெத்தனே."

"பேதங்கெடுத்தருள் செய்பெருமை."

"எந்தையெந்தாய் சுற்றமற்றுமெல்லாம்"

"நிரந்தவாகாய நீர்நிலந்தீ காலா யவையல்லையா யாங்கே கரந்தோ ருருவே."

"பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே."

"பூதங்க ளோந்தாகிப் புலனாகிப் பொருளாகிப், பேதங்களனைத்துமாய்ப் பேதமில்லாப் பெருமையனைக்" திருவாசகம்.

"அவைதானேயாய்=அவையேயாய் தானேயாய்" சிவஞானபோதம் தமிழ்.

"ஈண்டு அத்துவித மென்ற சொல்லானே ஏகமென்னின் ஏகமென்று சுட்டுவதுண்மையின், அத்துவிதமென்ற சொல்லே யந்நியநாத்தி(அந்நியமின்மை)யையுணர்த்துமாயிட்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்குமென்றது." மெய்கண்டதேவநாயனார் வார்த்திகப்பொழிப்பு.

"நானேநீ நீயேநா னுமிரண்டு மொன்றானால்; தேனின்றுசியதுபோற் றெவிட்டாய்நீ பூரணமே." பட்டினத்தார்.

"நானெனவு நீயெனவு நாமிரண்டு மற்றொன்றும், நீயெனவே சிந்தைதனி னேர்படுவதெக்காலம்"

"நானவனைக் காண்பதெல்லா ஞானவிழியா லறிந்து, தானவனாய் நின்று சரணடைவதெக்காலம்" பத்திரகிரியார்.

"வானிற்கதிர்மதியாய் வளர்ந்துபின்னொன்றானதுபோல்; ஊனுடலுக்குள்ளிருந்தவுயிர்ப்பதியேன்பூரணமே"

"ஓதுவரிதோ வொருவ ருணர்வரிதோ, பேத மறவெங்கும் விளங்கும் பெருமையன்காண்" பட்டினத்தார்.

" அவனுளனுமாயல்லனுமாமங்கு"

" ஒன்றென்ற தொன்றேகாணொன்றே பதி பசுவா, மொன்றென்ற நீபாசத்தோடுளைகா, ணொன்றின்று, லக்கரங்களின்று மகரவுயிரின் றே, விக்கிரமத் தென்னுமிருக்கு.

(இ-ள்) வேதம் ஒன்று என்று கூறியது ஒன் றனையே. அதாவது பதிப்பொருள் ஒன்றே யுளது. மற்றப் பசுவாகிய ஒன்றென்ற நீயோ பாசத்தோடுளை (பிராந்தி சித்தனுயிருக்கின் ருய்). முதற்காரணமான அகரவுயி ரில்லையாயின் அக்கரங்க ளில்லையா மென்னு மிம்முறைமை பற்றி ஒன்ருகிய சத்ரூபப் பிரஹ்மவஸ்துவில் லையாயின் உலக மில்லை யென்று இருக்குவேதம் கூறுகின்றது."

"பாசமுடலாய்ப் பசுவதுவுந்தானுயிராய், நேசமுடனீபொருளாய் நின்றனையேபூரணமே" பட்டினத்தார்

" பண்ணையுமோசையும் போலப் பழமதுவு, மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா— மண்

ணரு, னத்துவித மாத லருமறைக ளொன்றென்னு, தத்துவித மென்றறை யுமாங்கு." இவை மெய்கண்டதேவநாயனர் உதாரண வெண்பாக்கள்.

" உலகெலாமாகிவேறாயுடனுமா யொளியா யோங்கி, யலகிலாவுயிர்கள் கன்மத்தாணையின மர்ந்து செல்லத், தலைவனுயவற்றின் செய்தி தனக்கெய்தலின்றித்தானே, நிலவுசீரமலனுகி நின்றனனீங்காதெங்கும்" சிவஞானசித்தியார்.

" அவனே யாவுமாய் நின்ற தொன்மை" சிவப்பிரகாசம்.

" அவனே யவனிமுத லாயினனு, மவனே யறிவாய் நின்றனு-மவனேகா, ணுணுகிப் பெண்ணு யலியாகிநின்றனுங் காணுமைநின் றனுங்கண்டு." திருக்களிற்றுப்படியார்.

"எங்கும் பரவடிவா யென்வடிவு நின்வடிவாய்க், கங்குல் பகலின்றி யுனைக்கண்டி ருப்ப தெக்காலம்"

"ஆணுகிப் பெண்ணு யலியாகி வேற்றுருவாய், மாணுகி நின்ற வகையறியேன் பூரணமே."

"ஐவகையும் பெற்றுலக வண்டபகி ரண்ட மெல்லாந், தெய்வமென நின்ற திறமறியேன் பூரணமே" பட்டினத்தார்.

இனி 'நீக்கமின்றி யிருக்கும் தனது ஆணை யாகிய சக்தியினால்' என்பதிற் கூறப்பட்டுள்ள ஆஞ்ஞாரூபசக்தி மூலப்பிரகிருதியாகிய விந்து ரூபமாயையே யாம். இதனைப் பரிக்கிரகசக்தி யென்றும் கூறுவர். அதற்குப் பிரமாணம் வரு மாறு:—

"मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम् ।
तस्यावयवभूतैस्तु व्याप्तं सर्वमिदं जगत् ॥

மாயையினைப் பிரகிருதியென்றும், மாயை யுடையவனை மகேசுவரனென்றும் அறிக. அவ னுடைய அவயவ வடிவங்களால் வியாபிக்கப் பட்டதாம் இவ்வெல்லாஜகத்தும்." சுவேதாசு வதரம், அத்யாயம் ச.

"अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजाः सृज-
मानांसरूपाः ॥

பிறப்பில்லாதவளும் ஒருத்தியும் செம்மை வெண்மை கருமை (இராஜசு சத்துவம் தமசு

என்னும் குண)வடிவினரும், சமானரூபமுள்ள வெகு பிரஜைகளைச் சிருஷ்டிப்பவருமான மாயையினை.'' சுவேதாசுவதரம், அத்யாயம் ச.

" ब्रह्मणः सकाशान्नानाविचित्रजगन्निर्माणसामर्थ्यबुद्धिरूपा ब्रह्मशक्तिरेव प्रकृतिः ॥

பிரஹ்மத்தினின்று நாநாவிசித்திர ஜகத்தினையுண்டுபண்ணும் சாமர்த்திய புத்திரூபமான பிரஹ்மத்தின் சக்தியே பிரகிருதியாம்.'' நிராலம்போபநிஷத்.

" निष्कलस्था पराशक्तिरचला सर्वतोमुखी ।
सुसूक्ष्मा निर्मला नित्यानन्दा निर्वाणदा परा ॥
सा बिन्दुर्भाति तत्त्वेषु सर्वतत्त्वेषु चैव हि ।
तया धृतं जगत्सर्वं एकयानेकरूपया ॥

நிஷ்களத்திலிருப்பதான பராசக்தி சலமின்றியதும், எப்புறத்து முகமுள்ளதும், மிகச் சூக்ஷ்மமானதும், நிர்மலமானதும், நித்தியாநந்தமும், நிர்வாணத்தினைத் தருவதும், பரையுமாம். அச்சக்தி விந்துவாம்; தத்துவங்களினும் எல்லாத் தத்துவங்களினுமே விளங்குகின்

றது. அநேக வடிவினதான ஒன்றாகிய அச் சக்தியினால் எல்லாஜகத்தும் தரிக்கப்பட்டுளது.” சர்வஞானோத்தரம்.

“ यथाबत्कथिताश्चैव तस्माद्ब्रह्म स्वयं जगत् ।
आलिङ्गी भगवान्बीजो स एव परमेश्वरः ॥
शिवेन दृष्टा प्रकृतिः शैवी समभवाद्द्विजाः ।
सर्गादौ सा गुणैर्युक्ता पुरा व्यक्ता स्वभावतः ॥

உள்ளவாறு சொல்லப்பட்டனவேயாம். ஆதலால் பிரஹ்மம் ஸ்வயம் ஜகத்தாம். அலிங்கியாகிய பகவான் பீஜியாவன். அவனே பரமேசுவரன். துவிஜர்களே! சிவசக்தியான பிரகிருதி சிவனாற் பார்க்கப்பட்டதாய் சைவ்வையாயுண்டாயிற்று. சர்க்காதியில் (சிருஷ்டியாரம்பத்தில்) குணங்களோடுகூடிய அந்தப் பிரகிருதி முன் இயல்பாகவே வியக்தமாயிற்று.” இலிங்கபுராணம் பூர்வபாகம், அத்யாயம் ௩.

“ शिवः कालानवच्छिन्नो मायातः स्वीयशक्तितः ।
उत्पादयति विश्वं सः कालाद्युत्पादकः क्रमात् ॥

காலத்தினால் வரையப்படாத சிவன் தனது சக்தியாகிய மாயையினால் உலகத்தினை உண்டு

பண்ணுகிறார். அவர் கிரமமாகக் காலாதிகளை யுண்டுபண்ணுபவராவர்.” பௌஷ்கரம்.

“मन्मायाशक्तिसंकॢप्तं जगत्सर्वं चराचरम् ।
साऽपिमत्तः पृथग्विप्रा नास्त्येव परमार्थतः ॥

விப்பிரர்களே! சராசரமான உலகம் யாவும் எனது மாயாசக்தியினாற் செவ்வையாய்க் கற்பிக்கப்பட்டதாம். அம்மாயையும் உண்மையாக என்னின் வேறாக இலதேயாம்.”

“संविदेव पराशक्तिर्नेतरा परमार्थतः ।
संविद्रूपातिरेकेण यत्किंचित्प्रतिभासते ॥

சம்வித்தே (ஞானமே) பராசக்தியாம், உண்மையாகவேறில்லை. சம்வித்ரூபத்திலும் வேறாகயாதொன்று காணப்படுகின்றதோ.” சூதசங்கீதை சிவமாகாத்மியகண்டம், அத்யாயம் ரு.

“एक एव शिवः साक्षात्सत्यज्ञानादिलक्षणः ।
विकाररहितः शुद्धः स्वशक्त्या पञ्चधास्थितः ॥
ईशानश्चेति तत्पुरुषश्चेति सुव्रताः ।
अघोरश्चेति विप्रेन्द्रा वामदेव इति द्विजाः ॥
सद्योजात इति प्राज्ञा न स्वरूपेण भेदिनः ॥

சத்தியு ஞானுதிலக்ஷணமுள்ள சாக்ஷாத் சிவமொருவனே விகார மின்றியவனுய்ச் சுத்த னய்த் தனது சக்தியினுல் அவிஜர்களே! நல் விரதமுடையோரே! ஈசானமென்றும் தத் புருஷ மென்றும் விப்பிரேந்திரர்களே! அகோ ரமென்றும் வாமதேவமென்றும் சத்யோஜா தமென்றும், ஐவகையாய் நிலைத்திருக்கின் முன். பிராஞ்ஞர்களே! சொரூபமாகப் பேத முடையனவாகா அவை'' சூதசங்கிதை யஞ் ஞவைபவகண்டம், அத்யாயம் கச.

"न शिवेन विनाशक्तिर्न शक्तिरहितः शिवः ।
उमाशंकरयोरैक्यं यः पश्यति सपश्यति ॥ ३० ॥

उमाशंकरयोर्भेदं ये पश्यन्ति नराधमाः ।
अधोमुखोर्ध्वपादास्ते यास्यन्ति नरकार्णवम् ॥

शिवामतामुमामेनां जडशक्तिं तथैव च ।
जडकार्यं जगज्जीवं तेषां भेदं तथैव च ॥

अन्यच्चास्तितया भातं तथा नास्तीतिशब्दितम् ।
सर्वं पूर्णं शिवं पश्यन्स्वयं पूर्णः शिवो भवेत् ॥

पूर्णमेव स्वकं रूपमपूर्णं भाति मायया ।
पूर्णरूपतया मायां पश्यन्पूर्णो भवेत्स्वयम् ॥
स्वपूर्णात्मातिरेकेण जगज्जीवेश्वरादयः ।
न सन्ति नास्ति माया च तद्विशुद्धात्मवेदनम् ॥
स्वपूर्णात्म शिवानन्दनिष्ठामासाद्य मानवः ।
तदैव लभते मुक्तिं स्वपूर्णात्मकां शिवाम् ॥

சிவனைவிட சக்தி யில்லை. சக்தியின்றிய சிவனில்லை. உமாசங்கரர்களது ஒருமையினை எவன் காண்கின்றானோ அவன் காண்கின்றான். எந்த நராதமர்கள் உமாசங்கரர்களது பேதத்தினைக் காண்கின்றனரோ, அவர்கள் தலைகீழும் கால் மேலுமானவர்களாய் நரகசமுத்திரத்தினைச் சேர்கின்றனர். சிவத்தினையும் இவ்வுடையினையும், அவ்வாறே ஜடசக்தியினையும் ஜடகாரியமான ஜகத்தினையும், ஜீவனையும் அவ்வாறே அவற்றின் பேதத்தினையும், இருக்கிறதென்று விளங்கியதும் அவ்வாறே இல்லையென்று சொல்லப்படுவதுமான பிறவற்றையும், எல்லாவற்றையும் பூர்ணசிவனாகக்கண்டு ஸ்வயம் பூர்ணசிவனாகின்றான். பூர்ணமான தனது ரூபம் மாயை

யினால் அபூர்ணமாக விளங்குகின்றது. மாயையினைப் பூர்ணவடிவமாகக் கண்டு ஸ்வயம் பூர்ணனாகின்றான். தானாகிய பூர்ணாத்மாவின் வேறாக ஜகத்து ஜீவன் ஈசுவரன்முதலியன உளவாகா. மாயையும், அவ்விசுத்தாத்மஞானமும் இல்லை. ஸ்வபூர்ணாத்ம சிவாநந்தநிஷ்டையினைச் சாதித்து மானவன் அப்பொழுதே ஸ்வபூர்ணாத்ம சிவவடிவமான முக்தியினைப் பெறுகின்றான்." சூதசங்கிதை யஞ்ஞவைபவ கண்டம், அத்யாயம் கா.

"புருஷர்களுக்கு" என்னும் பன்மையால் ஜீவர்கள் நாநா வென்பது பெறப்பட்டது. வெகுஜீவர்க ளென்பதனை,

"सोऽहमेकोपि देहारम्भकभेदवशाद्बहुजीवः।

அத்தன்மைய யான் ஒருவனாயினும் தேகத்தை யுண்டுபண்ணுவதன்பேதவசத்தால் வெகு ஜீவனாவன்" என்னும் நிராலம்போபநிஷத் முதலியவற்றானும் அறிக.

"கர்மத்தினை யநுசரித்துச் சம்ஸாரத்தினைச் செய்கின்றான்." என்றதனால் இறைவனுக்கு ஜீவர்களை ஏற்றத்தாழ்வுள்ளவர்களாகப் படைத்

தல். சிலரை ஹிம்சித்தல்முதலியவற்றாலாம் பக்ஷபாதமுடைமை இரக்கமின்மைமுதலிய தோஷமின்மையும் கர்மம் அநாதியாயுள தென்பதும் அறிவிக்கப்பட்டதாம்.

"वैषम्यनैर्घृण्ये न सापेक्षत्वात् ॥

கர்மஸாபேக்ஷத்தன்மையால் விஷமத்தன் மையும் இரக்கமின்மையு மில்லை" என்பது பிரஹ்மசூத்ரம். க-சு-கஎ.

அவர் ஜகத்தினைச் சிருஷ்டிக்கும் முறைமை யினைப் பின் வரும் பிரமாணங்களாற் காண்க:—

"शिवशक्तिसमायोगः परमात्मेति निश्चितम् ॥

पराशक्तेस्तु संजाता चिच्छक्तिस्तु तदुद्भवा ।
आनन्दशक्तिस्तज्जास्यादिच्छाशक्तिस्तदुद्भवा ॥

ज्ञानशक्तिस्ततो जाता क्रियाशक्तिस्तु पञ्चमी ।
एताभ्य एव संजाता निवृत्ताद्याः कला मुने ॥

चिदानन्दसमुत्पन्नौ नादबिन्दू प्रकीर्तितौ ।
इच्छाशक्तेर्मकारस्तु ज्ञानशक्तेस्तु पञ्चमः ॥
निजेच्छया जगत्स्रष्टुमुद्युक्तस्य महेशितुः ।

प्रथमो यः परिस्पन्दः शिवतत्त्वं तदुच्यते ।
एषैवेच्छा शक्तितत्त्वं सर्वकृत्यानुवर्तनात् ॥
ज्ञान क्रिया शक्तियुग्मे ज्ञानाधिक्ये सदाशिवः ।
महेश्वरं क्रियोद्रेके तत्त्वं विद्धि मुनीश्वर ॥
ज्ञानक्रियाशक्तिसाम्यं शुद्धविद्यात्मकं मतम् ।
स्वाङ्गरूपेषु भावेषु मायातत्त्वविभेदधीः ।
शिवो यदा निजं रूपं परमैश्वर्यपूर्वकम् ।
निगूह्य माययाखिलपदार्थ ग्राहको भवेत् ॥
तदा पुरुष इत्याख्या तत्सृष्टेत्यभवच्छ्रुतिः ॥

சிவசக்திகளின் நற்சம்பந்தம் பரமாத்மா வென்று நிச்சயிக்கப்பட்டதாம். பராசக்தி யினின் றுண்டானதாம் சிற்சக்தி. அதனின் றுண்டானதாம் ஆநந்தசக்தி. அதனின் றுண் டானதாம் இச்சாசக்தி. அதனின் றுண்டான தாம் ஞானசக்தி. அதனின் றுண்டானதாம் ஐந்தாவதான கிரியாசக்தி. முநியே! இவற்றி னின்றே உண்டாயினவாம் நிவிருத்தியாதி கலைகள். சிதாநந்தத்தினின் றுண்டாயினவாம் நாதபிந்து என்று சொல்லப்படுவன இச்சா

சக்தியினின்று மகாரமும் ஞானசக்தியினின்று ஐந்தாவதுமாயின. தனதிச்சையினால் ஜகத்தினைச் சிருஷ்டிக்க முயன்ற மகேசனது முதல் அசைவு (அறிவு) எதுவோ அது சிவதத்துவமெனப்படுகின்றது. இவ்விச்சையே சக்திதத்துவமாம், சர்வகிருத்தியமும் தொடர்தலால் ஞானக்கிரியா சக்திபிரட்டையில் * எ. ஞான

* எ சாதாக்கிய மெனப்படும் சதாசிவதத்துவம் ஞானக்கிரியாசமத்துவ முளதென்றும், சுத்தவித்தை ஞானதிக்கிய முளதென்றும் பிறவிடங்களிற் கூறப்பட்டுளது.

விந்துவினின்று நாதமாகிய சிவதத்துவமும், அதனின்று விந்துவாகிய சக்திதத்துவமும், அதனின்று சதாசிவதத்துவமும், அதனின்று ஈசுவரதத்துவமும் அதனின்று வித்தியாதத்துவமு முண்டாணமையின், இவ்வைந்தினையும் வைந்தவ மென்றும், சுத்தமாயா தத்துவ மென்றும் ,சிவதத்துவ மென்றும் கூறுவர். இவற்றின் மூலபூதமான விந்துவினைச் சுத்த சத்துவப்பிரதானமாயை யென்றும், சுத்தமாயை யென்றும், மூலமாயை யென்றும், ஊர்த்துவமாயை யென்றும், மூலப்பிரகிருதி யென்றும், குண்டலினி யென்றும் கூறுவர்.

சிவனது நவந்தருபேதமான சிவம், சத்தி, நாதம்,விந்து,சதாசிவன், மகேசுவரன், உருத்திரன்,விஷ்ணு, பிர

திக்கியத்தில் சதாசிவமாம். கிரியாதிக்கியத்தில் மகேசுவரனாகிய தத்துவமென்றுமுநீசுவரனே! அறிவாயாக. ஞானக்கிரியாசக்திஸாம்யம் சுத்த வித்தை வடிவினதாக மதிக்கப்படுகின்றது. வேஷவடிவமான பாவங்களில் மாயாதத்துவ விபேதமுணர்பவனாகிய சிவன் எப்போது பரமைசுவரிய பூர்வகமான நிஜ தனது ரூபத்தினை மாயையினால் மறைத்து சகல பதார்த்தத்தினைக் கிரகிப்பவராகின்றாரோ, அப்போது புருஷன் என்று பெயராம். அதனைச் சிருஷ்டித்து என்றாயிற்று சுருதி"

सर्वकर्तृत्वरूपा च सर्वज्ञत्वस्वरूपिणी ॥
पूर्णत्वरूपा नित्यत्वव्यापकत्वस्वरूपिणी ॥

---

ஹ்மா வென்பவற்றில் மூர்த்தியநான்கும் நிஷ்களவடிவமென்றும், அருவத்திருமேனியென்றும், இலயஸ்தான மென்றும், இடைப்பட்ட சதாசிவம் சகளநிஷ்களவடிவ மென்றும், உருவஅருவத் திருமேனி யென்றும், போகஸ்தான மென்றும், பிந்திய நான்கும் சகளவடிவ மென்றும், உருவத்திருமேனி யென்றும், அதிகாரஸ்தான மென்றும் சொல்லப்படும். இவற்றில் சிவத்திற்குச் சக்தியும், நாதத்திற்கு விந்துவும் மற்றவற்றிற்கு முறையே மனோன்மணியும், மகேசையும், உமையும், திருவும், வாணியும் சக்திகளாவர்.

शिवस्यशक्तयः पञ्च संकुचद्रूपभास्कराः ।
अपि संकोचरूपेण विभान्त्य इव नित्यशः ॥

पशोः कलाख्यविद्येति रागकालौ नियत्यपि ।
तत्त्वपंचकरूपेण भवन्त्यत्र कलेति सा ॥

किंचित्कर्तृत्वहेतुः स्यात्किंचित्तत्त्वैकसाधनम् ।
सा विद्या तु भवेद्रागो विषयेष्वनुरञ्जकः ॥

कालो हि भावाभावानां भासनाभासनात्मकः ।
क्रमावच्छेदको भूत्वा भूतादिरितिकथ्यते ॥

इदंतु मम कर्तव्यमिदं नेति नियामिका ।
नियतिः स्याद्विभोः शक्तिस्तदाक्षेपात्यतेत्पशुः ॥

एतत्पंचक मेवास्य स्वरूपावारकत्वतः ॥

"சர்வகருக்திருக்வவடிவினதும், சர்வஞ்ஞத்வஸ்வரூபமுள்ளதும், பூர்ணத்வவடிவினதும், நித்திபத்வஸ்வரூபமுள்ளதும், விபாபகத்துவஸ்வரூபமுள்ளதுமான சுருங்கியவடிவப்பிரகாசமுள்ளனவாகிய சிவனது சக்திகள் ஐந்தும் நித்தியமும் சுருங்கிய வடிவத்தால் விளங்குவனவுமாய் கலை, வித்தை, ராகம்,

காலம், நியதியென்னும் பசுவின் தத்துவபஞ்சகவடிவமாக ஆகின்றன. அவற்றுள் சொற்பகர்த்திருத்துவத்திற்கு ஏதுவாவது எதுவோ, அது கலையென்றும். சிறிது தத்துவவுணர்ச்சிக்கு முக்கிய சாதனமாயுள்ளது எதுவோ அது வித்தையாம். விஷயங்களிற் பற்றச்செய்வது ராகமாம். பாவாபாவங்களின் விளக்கம் விளக்கமின்மை வடிவினது காலமாம். அது கிரமாவச்சேதகமாய் (கிரமத்தினை வரைவதாய்ப்) பூதமுதலியதாகச் சொல்லப்படுகின்றது. இஃது என்னுல் செய்யத்தக்கது; இஃது என்னுற் செய்யத்தக்கதன்று என்று நியமிப்பது ஈசனது சக்தியான நியதியாம். அதனபேக்ஷையினுல் பசுவானவன் முயலுகின்றுன். இவ்வைந்தும் இவனது ஸ்வரூபத்தினைமறைக்குந்தன்மையினுல் பஞ்சகஞ்சுகம் (சட்டை) எனப்படும் (சுருங்கிய நிஜவடிவமான ஞானுதிகளின் சமஷ்டி யுடையதுபுருஷதத்துவமாம்.")

"सत्त्वादिगुणसाम्यं च बुद्ध्यादित्रितयात्मकम् ।
चित्तं प्रकृतितत्त्वं तदासीत्सत्त्वादिकारणात् ॥
सात्त्विकादिविभेदेन गुणाः प्रकृतिसंभवाः ।

गुणेभ्यो बुद्धिरुत्पन्ना वस्तुनिश्चयकारिणी ।
अहङ्कारस्ततो बुद्धेः संजातस्त्रिविधश्च सः ॥

जीवनं चाथ संरम्भो गर्वश्चास्य त्रिधा वपुः ।
सत्त्वादिभेदात्स पुनस्तैजसादित्रिभेदवान् ।
अहङ्कारात्तैजसात्तु मनोबुद्धीन्द्रियाणि च ॥

वैकारिकादहङ्कारात्कर्माक्षाणि प्रजज्ञिरे ।
भूतादिकादहङ्कारात्तन्मात्राण्यभवन्क्रमात् ।
तेभ्यश्चाकाशवाय्वग्निपाथोभूमिजनिः क्रमात् ॥

சத்துவாதி குணஸாம்யமும் புத்தியாதி மூவடிவினதுமான சித்தமாகிய அந்தப் பிரகிருதி தத்துவமிருந்தது; சத்துவாதிகட்குக் காரணமாதலால் சாத்துவிக முதலிய பேதத்தினால் குணங்கள் பிரகிருதி சம்பவங்களாம். குணங்களினின்று வஸ்து நிச்சயத்தினைச் செய்வதான புத்தியுண்டாயிற்று. அப்புத்தியினின்று அகங்காரமுண்டாயிற்று. அது மூவகைத்தாம், ஜீவனமும், சம்ரம்ப(உற்சாக)மும், கர்வமும் இதனது மூவகையுடலாம். அவ்வகங்காரம் சத்துவாதி பேதத்தால் மறுபடியும்

தைஜஸமுதலிய மூன்றுபேத முடையதாம். தைஜஸாகங்காரத்தினின்று மனதும் ஞானேந்திரியங்களும், வைகாரிகாகங்காரத்தினின்று கர்மேந்திரியங்களு முண்டாயின. பூதாதியகங்காரத்தினின்று தன்மாத்திரைக ளுண்டாயின. அத்தன்மாத்திரைகளினின்று கிரமமாக ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவியென்னும் பூதங்களினுற்பத்தி யுண்டாயிற்று."

" श्रीसुब्रमण्यउवाच :—

तस्माद्वेति समारभ्य भूतसृष्टिक्रमे मुने ।
जातानि पञ्चभूतानि कलाभ्य इति निश्चितम् ।
स्थूलप्रपञ्चरूपाणि तानि भूतपतेर्वपुः ॥
शिवतत्त्वादिपृथ्व्यन्ततत्त्वानामुदयक्रमे ।
तन्मात्रेभ्यो भवन्तीति वक्तव्यानि क्रमान्मुने ॥
तन्मात्राणां कलानामप्यैक्यं स्याद्भूतकारणात् ।
अविरुद्धत्वमेवात्र विद्धि ब्रह्मविदांवर ॥

ஸ்ரீ சுப்பிரமணியர் சொல்லலாயினார் :— அதனின்றென்றாரம்பித்துப் பூதசிருஷ்டிக்கிரமத்தில் முனியே! கலைகளினின்று பஞ்சபூதங்க

ளுண்டாயினவென்று நிச்சயிக்கப்பட்டுளது. ஸ்தூலப் பிரபஞ்சவடிவங்களான அவை பூத பதியின் சரீரமாம். சிவதத்துவாதி பிருதிவிய ந்தமான தத்துவங்களின் உதயக்கிரமத்தில் முநியே! முறையாகத் தன்மாத்திரைகளினி ன்றுண்டாகின்றனவென்று சொல்லத்தக்கன வாம். தன்மாத்திரைகட்கும் கலைகட்கும் ஐக்ய முண்டாகின்றது; பூதகாரணமாதலால். பிரஹ்ம வித்துக்களில் சிரேஷ்டனே! இங்கு விருத்த மின்மையினையே அறிக." என்பன சிவபுராண கைலாசசங்கிதை ௧௦-வது அத்தியாய வாக்கியங்கள்.

"शक्तिः प्रथमसंभूता शान्त्यतीतपदोत्तरा ।
ततो माया ततोऽव्यक्तं शिवाच्छक्तिमतः प्रभोः ॥

शान्त्यतीतपदं शक्तेस्ततः शान्तिपदक्रमात् ।
ततो विद्यापदं तस्मात्प्रतिष्ठापदसंभवः ॥

निवृत्तिपदमुत्पन्नं प्रतिष्ठापदतः क्रमात् ।
एवमुक्ता समासेन सृष्टिरीश्वरचोदिता ॥

कलाभिः पञ्चभिर्व्याप्तं यस्माद्विश्वमिदं जगत् ॥

சாந்தியதீத பதோத்தரமான சக்தி முதலில் உண்டாயிற்று. அதனின்று மாயையும் அதனின்று அவ்யக்தமு முண்டாயின. சக்தியுடைய சிவனாகிய பிரபுவினின்று சாந்தியதீதபதமும், அச்சக்தியினின்று கிரமமாகச் சாந்திபதமும், அதனின்று வித்தியாபதமுமுண்டாயிற்று. அதனின்று பிரதிஷ்டாபத சம்பவமாம்; பிரதிஷ்டாபதத்தினின்று கிரமமாக நிவிருத்திபதமுண்டாயிற்று. இவ்வாறு சுருக்கமாக ஈசுவரனால் விதிக்கப்பட்ட சிருஷ்டியானது சொல்லப்பட்டது. ✻ அ. கலையைந்தினால் வியாபிக்

---

✻ அ. சிவசக்தியாகிய கலை நிவிருத்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை யென்றைவகைப்படும், அவற்றுள்.

க. யானெனதென்னும் சங்கற்பவடிவ பந்தத்தினின்று நிவிருத்தி செய்வது (விடுவிப்பது) நிவிருத்தியாம்.

உ. அப்பந்த நிவிருத்தியினின்று திரும்பாதவண்ணம் ஆத்மாக்களை அதில் பிரதிஷ்டைசெய்வது (நிலைபெறுத்துவது) பிரதிஷ்டையாம்.

ங. அவ்வாறு நிலைபெற்ற ஆத்மாக்கட்கு வித்தையாகிய அநுபூதி ஞானத்தினை யுண்டுபண்ணுவது வித்தையாம்.

கப்பட்ட இவ்வெல்லா ஜகத்து எதனின்றுண்டாயிற்றோ." என்பது சிவபுராணம்வாயுசங்கிதை, பூர்வபாகம் அத்யாயம் எ

"सैका परा च चिद्रूपा शक्तिः प्रसवधर्मिणी ।
विभज्य बहुधा विश्वं विदधाति शिवेच्छया ॥ १५
सा मूलप्रकृतिर्माया त्रिगुणा त्रिविधा स्मृता ।
शिवया च विपर्यस्तं यया ततमिदं जगत् ॥
एकधा च द्विधा चैव तथा शतसहस्रधा ।
शक्तयः खलु भिद्यन्ते बहुधा व्यवहारतः ॥
शिवेच्छया परा शक्तिः शिवतत्त्वैकतां गता ।
ततः परिस्फुरत्यादौ सर्गे तैलं तिलादिव ॥
ततः क्रियाख्यया शक्त्या शक्तौ शक्तिमदुत्थया ।
तस्यां विक्षोभ्यमाणायामादौ नादः समुद्बभौ ॥

---

ச. அவ்வநுபூதிபெற்றவான்மாக்கட்கு இராகத்துவேஷாதி யெல்லாவிகற்பங்களையும் சாந்தமாக்குவது (ஒழியச் செய்வது) சாந்தியாம்.

ரு. அங்ஙனம் சாந்தமாய் நின்றவுணர்ச்சியினையும் ஒழிப்பது சாந்தியதீதையாம்

नादाद्विनिःसृतो बिन्दुर्बिन्दोर्देवः सदाशिवः ।
तस्मान्महेश्वरो जातः शुद्धाविद्या महेश्वरात् ॥
सा वाचामीश्वरीशक्तिर्वागीशाख्या हि शूलिनः ॥
या सा वर्णस्वरूपेण मातृकेति विजृम्भते ॥
अथानन्तसमावेशान्माया कालमवासृजत् ।
नियतिं च कलां विद्यां कलातो रागपूरुषौ ॥
मायातः पुनरेवाभूदव्यक्तं त्रिगुणात्मकम् ।
त्रिगुणाच्च ततोऽव्यक्ताद्विभक्ताः स्युस्त्रयो गुणाः ॥
सत्वं रजस्तमश्चेति यैर्व्याप्तमखिलं जगत् ।
गुणेभ्यः क्षोभ्यमाणेभ्यो गुणेशाख्यास्त्रिमूर्तयः ॥
अभवन्महदादीनि तत्त्वानि च यथाक्रमम् ।
तेभ्यः स्युरण्डपिण्डानि त्वसंख्यानि शिवाज्ञया ॥

அந்த ஏகமும் பரமும் பிரசவதர்மமுடையதும் சித்ரூபமுமான சக்தி வெகுவிதமாய்ப் பிரிந்து, சிவேச்சையினால் விசுவத்தினைப் படைக்கின்றது. எந்தச் சிவையினால் இந்த ஜகத்து விபரியஸ்தமாய் விரிக்கப்பட்டுளதோ, அந்த மூலப்பிரகிருதியான மாயை முக்குணமாய் மூவிதமாய்க் கருதப்படுகின்றது. ஒருவித

மாகவும், இருவிதமாகவும், அவ்வாறே நூறு ஆயிரம் விதமாகவும் வெகு விதமாகவும் வியவகாரத்தினல் நிச்சயமாகச் சக்திகள் பேதப்படுகின்றன. சிவேச்சையினுல் பராசக்தி சிவதத்துவ வொருமையினையடைந்ததாய் ஆதிசிருஷ்டியில் எள்ளினின்று எண்ணெயினைப் போல அதனினின்று வெளிப்படுகின்றது. அதனினின்று சக்தியானின்றெழுந்த கிரியையெனப்படும் சத்தியினுல் கலக்கமடைந்த (காரியமாதற் கெதிர்ப்பட்ட) சக்தியில் ஆதியில் நாதமான துண்டாயிற்று. நாதத்தினின்று விந்து வெளிப்பட்டது. விந்துவினின்று சதாசிவனுகிய தேவன். அதனின்று மகேசுவரன் உண்டானுர். மகேசுவரனினின்று சுத்தவித்தை யுண்டாயிற்று. அது குலியான பரமேசுவரனது வாகீசா என்னும் பெயருடையதான வாக்குகளின் ஈசுவரீசக்தியாம். அது வர்ணரூப (எழுத்து வடிவ)த்தினுல் மாத்திருகையென்று விரிகின்றது. பின் அநந்தனது சமாவேசத்தினுல் மாயை * ௬. காலத்தினையும் நியதியினையும்

---

* ௬. "अक्षरात्संजायते कालः ॥

அக்ஷரமாகிய மாயையினின்று காலமுண்டாயிற்று" என்று அதர்வசிரசு கூறுவதும் காண்க.

கலையினையும் வித்தையினையும் படைத்தது. கலையினின்று ராகமும் புருஷதத்துவமு முண்டாயின. மறுபடியும் மாயையினின்று திரிகுணாத்மகமான அவ்வியக்த முண்டாயிற்று. அம்முக்குணவடிவ அவ்வியக்தத்தினின்று சத்துவம் ரஜசு தமசு என்று மூன்று குணங்கள் பிரிபட்டன. அவற்றால் வியாபிக்கப்பட்டதாம் எல்லாவுலகும் க்ஷோபமடைந்த (காரியாபிமுகப்பட்ட) குணங்களினின்று குணேசரெனப் பெயரிய திரிமூர்த்திகளுண்டாயினர். மகத்து முதலிய தத்துவங்களும் கிரமப்படி உண்டாயின. அவற்றினின்று சிவாஞ்ஞையினால் அளவிறந்த அண்டபிண்டங்களுண்டாயின." சிவபுராணம் வாயு சங்கிதை. உத்தரபாகம், அத்தியாயம் ரு.

प्रकृतेः परिणामोऽयं द्विधा शब्दार्थभावितः ।
तामाहुः प्रकृतिं भूतिं शिवयोः परमात्मनोः ॥

शब्दात्मिका विभूतिर्या सा त्रिधा कथ्यतेबुधैः ।
स्थूला सूक्ष्मा परा चेति स्थूला या श्रुतिगोचरा ॥

सूक्ष्मा चिन्तामयी प्रोक्ता चिन्ताया रहिता परा ।
या परा सा क्रियाशक्तिः शिवतत्त्वसमाश्रया ॥

ज्ञानशक्ति समायोगादिच्छोपोद्बलिता तथा ।
सर्वशक्तिसमष्ट्यात्मा शक्तितत्त्वसमाख्यया ॥

समस्तकार्यजातस्य मूलप्रकृतितां गता ।

सैव कुण्डलिनी माया शुद्धाध्वपरमा सती ।
सा विभागस्वरूपैव षडध्वात्मा विजृम्भते ॥

तत्र शब्दास्त्रयोऽध्वानस्त्रयश्चार्थाः समीरिताः ।
सर्वेषामपि ते पुंसां नैजशुध्यनुरूपतः ॥

लयभोगाधिकाराय पर्याप्ता इति निश्चयः ॥

मन्त्राध्वा च पदाध्वा च वर्णाध्वा चेति शब्दतः ।
भुवनाध्वा च तत्त्वाध्वा कलाध्वा चार्थतः क्रमात् ॥

तत्रान्योन्यं च सर्वेषां व्याप्यव्यापकतोच्यते ॥"

பிரகிருதியின் பரிணாமமாகிய இது சப்தார்த்தத்தன்மையினால் இருவகையினதாம். அப்பிரகிருதியினைச் சிவபரமாத்மாக்களின் விபூதியென்பர். சப்தவடிவினதாகிய விபூதியாதோ அது ஸ்தூலம், சூக்ஷமம் பரம் என்று மூன்று வகையாய் அறிஞர்களாற்சொல்லப்படுகின்றது.

காதுக்கு விஷயமாவது ஸ்தூலமாம். சிந்தை (நினைவு)மயமானது சூக்ஷ்மமெனப்படும். சிந்தையின் நீங்கியது பரமாம். எது பரமோ அது சிவதத்துவசமாசிரயமான கிரியாசக்தியாம். ஞானசக்திசமாயோகத்தினால் இச்சையினால் துணைவலிமிக்கதாய் அப்படியே சர்வசக்தி சமஷ்டிவடிவினதாய்ச் சக்திதத்துவமெனும் பெயரால் சமஸ்த காரியக்கூட்டத்திற்கும் மூலப்பிரகிருதித்தன்மையினை யடைந்ததாகின்றது. அக்குண்டலினியாகிய மாயையே சுத்தாத்வபரமமாய், அதுவே வியாபகஸ்வரூபத்தினதாய் ஷடத்வாவடிவாய் விரிகின்றது. அவற்றுள், மூன்று அத்வாக்கள் சப்தங்களாகவும், மூன்று அர்த்தங்களாகவும் சொல்லப்படுகின்றன. அவை எல்லாப் புருஷர்களுக்கும் நிஜசுத்தியநுஸாரமாக லயபோகாதிகாரத்தின்பொருட்டுப் போதுமானவா மென்பது நிச்சயம். மந்திராத்வாவும், புதாத்வாவும், வர்ணாத்வாவும் சப்தத்தினின்றும், புவனாத்வாவும், தத்வாத்வாவும், கலாத்வாவும் அர்த்தத்தினின்றும் கிரமமாக ஆம். அவற்றுள் எல்லாவற்றிற்கும் ஒன்றற்கொன்று வியாப்பியவியாபகத்துவம் சொல்லப்படுகின்றது."

"शक्त्यादि च पृथिव्यन्तं शिवतत्वसमुद्भवम् ।
व्याप्तमेकेन तेनैव मृदा कुम्भादिकं यथा ।
शैवं तत्परमं धाम यत्प्राप्यं षड्भिरध्वभिः ॥

சிவதத்துவத்தினின் றுண்டாகிய சத்தியாதி பிருதிவியந்தமான இது மண்ணினற் குடமுதலியன வியாபிக்கப்பட்டதுபோல அச் சிவதத்துவ மொன்றினலேயே வியாபிக்கப் பட்டதாம். எது ஆறு அத்வாக்களாலும் அடையப்படுமோ அது சைவமான பரமதர்ம மாம்." சிவபுராணம் வாயுசங்கிதை பூர்வபாகம் அத்தியாயம் உரு.

"ततस्त्वहर्मुखे कालेशिवःशक्त्या समागमात् ।
शिवेच्छैव च सर्वेषामुत्पत्यर्थमनन्तरम् ॥
तदभूत्क्षोभितं विश्वकारणं योगमायया ।
तत्क्षोभतः समुत्पन्नं शास्त्रं नादस्वरूपतः ॥
प्रवृत्तं तदधः किंचिद्विकुब्जाकारतः शिवम् ।
स बिन्दुरिति विख्यातः शरच्चंद्रसमप्रभः ॥

அதன்பின் சிருஷ்டியிறரம்பகாலத்தில் சிவன் சக்தியோடு பொருந்துதலால் சிவேச்

சையினாலேயே எல்லாவற்றினுற்பத்தியின் பொருட்டுப் பின்னர் யோகமாயையினால் விச்வ காரணமாகிய அது கலக்கப்பட்டதாயிற்று. அக் கலக்கத்தால் நாதஸ்வரூபமாகச் சாஸ்திரமுண் டாயிற்று. அதன்கீழ்சிறிது வளர்ந்தவடிவமாகப் பிரவிர்த்தித்தது சிவம். சரற்காலசந்திரனைப் போன்ற பிரபையுடைய அது பிந்துவென்னும் பெயர் பெற்றதாம்." பௌஷ்கரம்.

"मूलाधारगता शक्तिः स्वाधारा बिन्दुरूपिणी।
तस्मादुत्पद्यते नादः सूक्ष्मबीजादिवाङ्कुरः।
तांपश्यन्तीं विदुर्विश्वं यया पश्यन्ति योगिनः॥

हृदये व्यज्यते गोषो गर्जत्पर्जन्यसन्निभः।
तत्र स्थिता सुरेशान मध्यमेत्यभिधीयते॥

प्राणेन च स्वराख्येन प्रथिता वैखरी पुनः।
शाखापल्लवरूपेण ताल्वादिस्थानघट्टनात्॥

अकारादिक्षकारान्तान्यक्षराणि समीरयेत्।

மூலாதாரத்துள்ள சக்தி ஸ்வாதாரமான விந்துவடிவினதாம். அதனின்றும் சூக்ஷ்ம வித்தினின்று முளையுண்டாவதுபோல நாத

முண்டாகின்றது. அதனால் யோகிகள் எல்லாவற்றினைக் காண்கின்றமையால் அதனைப் பசியந்தி யென்றறிவர். இதயத்தில் கர்ச்சிக்கும் மேகம்போல கோஷம் வெளிப்படுகின்றது. அங்கு நிற்பது இரணியகருப்பனே! மத்தியமை யெனப்படுகின்றது. பிராணனாலும் ஸ்வரத்தினாலும் வைகரியெனப்படும். மறுபடியும் அண்ணமுதலியஸ்தானங்களில் மோதலால் அகாராதி, க்ஷகாராந்தமான அக்ஷரங்களை யுச்சரிக்கும்." என்பது யோகசிகோபநிஷதம்.

"वैखरी श्रोत्रविषया स्तूलवर्णपरिग्रहा ।
स्थानेषु विधृते वायौ प्रयोक्तुरुपकारिणी ॥

बुध्या वर्णानुसंधानपूर्वमर्थस्य वाचिका ।
प्राणवृत्तिमतिक्रान्ता वागेषामध्यमाह्वया ॥

वर्णरूपानुसंधानाविरहान्तस्समुज्वला ॥

मायूराण्डरसो यद्वन्निर्विशेषार्थधारिका ।
पश्यन्ती वागियं ज्ञेया तृतीया शिवशासने ॥

सूक्ष्मा चिदेकशरणा निवृत्ताशेषशक्तिका ॥

वैखर्याः कारणं मध्या पश्यन्ती मध्यमां प्रति ।
पश्यन्त्याः कारणं सूक्ष्मा निर्विकल्प स्वरूपिणी ॥
एताश्च वृत्तयोऽणूनां चतस्रः प्रत्ययात्मिकाः ।
अन्तरेव स्थितास्तिस्रो बहिरन्या व्यवस्थिता ॥

வைகரீ என்பது சுரோத்திரவிஷயமும், ஸ்தூலவர்ணபரிக்கிரகமும், தாலுவாதி ஸ்தானங்களில் உதானவாயு வெவ்வேறாகப் பொருத்தப்பட்டபோது சப்தப்பிரயோகஞ்செய்பவனுக்கு உபகாரமுள்ளதும், புத்தியினால் வர்ணாநுசந்தானபூர்வமாய் அர்த்தத்தின் வாசகமாம். பிராணவிருத்தியினை அதிக்கிரமித்த இவ்வாக்கு மத்திமை யெனப் பெயரியதாம். வர்ணரூபாநுசந்தான மின்றியதும் உள்ளே பிரகாசமுள்ளதும், மயில்முட்டையின் ரஸம்போல் நிர்விசேஷ அர்த்தத்தினைத் தரிப்பதுமான இவ்வாக்கு மூன்றாவதான பசியந்தியென்று சிவசாஸ்திரத்தி லறியத்தக்கதாம். எல்லாச் சக்திகளு மொழிந்ததும் சித்தொன்றனையே புகலாயுடையதுமான இது சூக்ஷ்மையாம் (பரையென்பதுவுமிதுவே). வைகரிக்குக் காரணம் மத்தியமை. மத்தியமைக்குக் காரணம்

பசியந்தி. பசியந்திக்குக்காரணம் நிர்விகற்பஸ்வரூபியான சூக்ஷ்மையாம். இவை அணுக்களின் பிரத்யய(ஞான)வடிவமான நான்கு விருத்திகளாம். மூன்று உள்ளிருப்பனவாம். மற்றையது (வைகரீ) வெளியிலிருப்பதாம்.'' பௌஷ்கரம்.

"मायातत्त्वं जगद्बीजमविनाश्यव्ययात्मकम् ।
अविवेकाकुलं सूक्ष्ममनाद्यव्ययमीश्वरम् ॥

* கO. மாயாதத்துவமானது ஜகத்பீஜமும், அவிநாசியும், அவ்யயவடிவினதும், அவிவேகத்தாற் கலக்கமுள்ளதும், சூக்ஷமமும், அநாதியும், அவ்யயமும், ஈசுவரமுமாம்'' ஸ்வாயம்புவம்.

"मायाशक्तिर्विभुर्नित्या देहिनां परमोहिका ।
मोहस्तु विषयाशक्तिर्यदसंसृजते शुभाः ॥

---

* கO இம்மாயையினை மலினசத்துவப்பிரதானம், அவித்தை யென்றும், அசுத்தமாயை யென்றும், அதோமாயை யென்றும், மோகினி யென்றும் கூறுவர்.

மாயை, கலை, வித்தை, அராகம், காலம், நியதி, புருடன் என்னும் ஏழினையும் வித்தியாதத்துவ மென்றும், சுத்தாசுத்ததத்துவ மென்றும் கூறுவர்.

माया तु द्विविधाज्ञेया सूक्ष्मा स्थूला मुनीश्वराः ।
अव्यक्ततासुसूक्ष्मत्वाद्व्यक्तता स्थूलरूपतः ॥
कारणं कार्यता सूक्ष्मतरा व्यक्ततरा वृतः ।
अन्यथाभानहेतुत्वादियं मायेति कीर्तिता ॥
आत्मतत्त्वतिरोधानात्तम इत्युच्यते बुधैः ।
विद्यानाश्यत्वतोऽविद्या मोहस्तत्करणत्वतः ॥
सद्वैलक्षण्यदृष्ट्येयमसदित्युदिता बुधैः ॥

மாயாசக்தி விபுவும் நித்தியமும் தேகிகட்கு மேலான மோகத்தினைச்செய்வதுமாம். மோகமோ சுபங்களையுண்டுபண்ணாத விஷயாசக்தியாம். முநீசுவரர்களே! மாயையோ சூக்ஷமை, ஸ்தூலை யென்று இருவகையினதா யறியத்தக்கதாம். மிகச் சூக்ஷமத்தன்மையால் அவ்யக்தத்தன்மையாம். ஸ்தூலவடிவத்தன்மையால் வியக்தத்(வெளிப்பட்ட)தன்மையாம். மிகச்சூக்ஷமமானது காரணமாம். மிகவெளிப்பட்டது காரியத்துவமாம். வேறுவிதமான விளக்கத்திற்கு ஏதுவாதலால் மாயையென்றுசொல்லப்படுகின்றது. ஆத்மதத்துவத்தினை மறைத்தலால் தமசு (இருள்) என்று அறிஞர்களாற்

சொல்லப்படுகின்றது. வித்தையினால் அழியப்படுந்தன்மை யிருத்தலின் அவித்தையாம். மோககாரணத்தன்மையினால் மோகமாம். சத்தின்வேறுபட்ட தன்மையாற் காணப்பட்ட இது அசத்தென்று அறிஞர்களாற் சொல்லப்படுகின்றது" என்பது காமிகம்.

"मायाया द्विविधा सृष्टिः स्थूलं सुक्ष्मातिमेकेत्यपि ।
दृक्शक्तिव्यञ्जिका सूक्ष्मास्थिता तत्त्वात्मनात्मनि ॥
स्थूला भुवनरूपेण शरीराद्यात्मनास्थिता ॥

सूक्ष्माः कलादयः पूर्वं स्थूला बध्नन्त्यणूंस्ततः ।
कला विद्या च रागश्च कालो नियतिरेव च ॥

पञ्चैतानि च तत्त्वानि मायेयानि द्विजोत्तमाः ।
ग्रहणाभावतस्तस्य ग्राहकःशून्यवत्स्थितः ॥

तन्निवृत्त्यर्थमादौ तु मायातो जायते कला ।
ततो विद्या कलातत्त्वादभूद्भोगार्थमात्मनः ॥

कलया कर्तृभूतस्य बुद्धिलक्षणकर्मणः ।
अलोकनेयत्करणं सा विद्या शिवशासने ॥

कलातो जायते रागः सद्यः पुंसां प्रवृत्तये ।
कलादिभिस्त्रिभिस्तत्त्वैः प्रवृत्तं पुरुषं ततः ॥
लवत्रुट्यादिभिः कालः कलयत्यात्मवृत्तिभिः ।
तांश्चभौवनदेहोत्था एवं यस्मात्क्रियास्तथा ॥
अतीतवर्तमानैष्यद्वृत्तीनां कारणं तु यत् ।
स काल इति मन्तव्यो भोग्यार्थोत्पादकोनृणाम् ॥
भोगायाभिप्रवृत्तस्य कलाविद्यादिवृत्तिभिः ।
कर्मणामार्जितानां तु फलोपहरणे सति ।
तद्विनाशे प्रवृत्तोयं नियतिः शिवशासने ।
अपिभोगेष्वनिश्चिन्तं नियोजयति सा बलात् ।
स्वार्जितेष्वेव नेहान्यैरार्जितेषु कदाचन ॥
पंचकंचुकसंयुक्तं प्रकृतिंभोक्तुमद्युतः ।
अविद्यादिसमायुक्तं पूरुषः परिकीर्तितः ॥

*மாயையினின்று ஸ்தூலமும் சூக்ஷமவடிவினதுமான இருவகைச் சிருஷ்டியுண்டாயிற்று.*

ஞானசக்தியினை வெளிப்படுத்துவதாம் சூக்ஷ்மம் தத்துவவடிவமாக ஆத்மாவில் நிற்பதாம். ஸ்தூலம் புவனரூபமாகவும் சரீராதிவடிவமாகவும் நிற்பதாம். கலாதிகளான சூக்ஷ்மங்கள் முன் அணுக்களைப் பந்தப்படுத்துகின்றன. அதன்பின் ஸ்தூலங்கள் பந்தப்படுத்துகின்றன. கலையும், வித்தையும், ராகமும், காலமும், நியதியுமாகிய இவ்வைந்து தத்துவங்களும் துவிஜோத்தமர்களே! மாயேய(மாயாகாரிய)ங்களாம். மலமறைப்பால் கிரகணமின்மைபால் அதன் (ஆத்மாவின்) கிராஹகம் (அறிதற்றன்மை செய்தற்றன்மைவடிவ சைதன்யம்) சூநியம்போல நின்றது. அதனை (சைதன்யமறைப்பினை) ஏகதேசம் நிவர்த்திக்கும்பொருட்டு ஆதியில் மாயையினின்று கலை பிறக்கின்றது. அக்கலாதத்துவத்தினின்று ஆத்மாவின் போகத்தின்பொருட்டு வித்தையுண்டாயிற்று. கலையால் கர்த்திருவடிவ ஆத்மாவினது புத்திலக்ஷணகர்மத்தின் காட்சியில் எது காரணமோ அது சிவசாஸ்திரத்தில் வித்தையாம். கலையினின்று தற்காலம் புருஷர்களது பிரவிருத்தியின் பொருட்டு ராகம் பிறந்தது. கலாதிமூன்று தத்துவங்களால் பிரவர்த்தித்த புருஷனை அதன்

பின் * க்க. லவம் திருடி (துடி) முதலிய தனது விருத்திகளாற் கலக்கு(பொருத்து)கின்றது. இவ்வாறே பௌவனமே தஹோர்த்துவங்களான கிரியைகள் எதனின்று உண்டாகின்றனவோ அவற்றையும் பொருத்துகின்றது. அவ்வாறே எது சென்றது நிகழ்வது வருவது எனும் விருத்திகட்குக் காரணமாமோ அது காலமென்று மதிக்கத்தக்கதாம்; நரர்களுக்குப் போக்பார்த்தத்தினை யுண்டுபண்ணுவதாம். சிவசாஸ்திரத்தில் எந்தக் கலாதிவிருத்திகளால் பிரவர்த்தித்தவனது போகங்கள் ஆர்ஜிக்கப்பட்ட கர்மங்களின் பலோபஹாரணமாகுங் (பலப்பிராப்தி)காலத்திலும், அந்த நியதி போகத்திலிச்சையில்லாதவனையும் வலியப்பொருத்துகின்றது. தன்னு லீட்டப்பட்டவற்றிற்றான் பொருத்தும். இங்கு பிறராலீட்டப்பட்டவற்றில் ஒரு போதும் பொருத்தாது. அதன் விநாசத்தும் பிரவர்த்தித்ததாம் இந்நியதி. பஞ்ச

---

* கக. தாமரையிதழ் நூறடுக்கி அதில் ஒரிதழில் ஊசிசெலுத்தும் காலம் க்ஷணமெனப்படும். க்ஷணமெட்டுக்கொண்டது லவம். லவம் எட்டுக்கொண்டது காஷ்டை. காஷ்டை எட்டுக்கொண்டது நிமிஷம். நிமிஷம் எட்டுக்கொண்டது துடி. (அது குறில்மாத்திரையின் நாலாவது பாகமாம்.)

கஞ்சுகங்களோடு கூடிய பிரகிருதியினைப் புசிக்க முயல்பவன் அவித்தையாதிகளோடுகூடிப் புருஷன் எனப்படுகின்றான்.'' பௌஷ்கரம்.

"अथ प्रकृतितत्त्वं तु क्रमायतं निरूप्यते ।
तच्च मायोद्भवं यस्मात्कलातः स्थूलतां गतम् ॥

गुणादिक्षितिपर्यन्ततत्त्वजातं यथो भवेत् ।
तदव्यक्तमिति प्रोक्तं क्षोभ्यं श्रीकण्ठविक्रमैः ॥

अथ प्रकृतितत्त्वात्तु गुणतत्त्वं व्यजायत ।
सत्त्वादयः समावस्थां प्राप्तास्तत्त्वं गुणात्मकम् ॥
क्षोभकोऽग्रमहातेजा श्रीकण्ठोऽनन्तविक्रमः ।

प्रबुद्धः परमेशानः शक्तिसंपर्कमात्रतः ।
सत्त्वं रजस्तमश्चेति गुणाः प्रकृतिसंभवाः ॥

இனி உத்தேசமுறையின் வந்த * கஉ. பிரகிருதிதத்துவம் நிரூபிக்கப்படுகின்றது. அதுவும் மாயையினின்றுண்டாகியதாம். எது கலை

---

* கஉ. இதனை அவ்வியக்தமென்றும், பிரதானமென்றும், பிரகிருதியென்றும், மூலப்பிரகிருதியென்றும் கூறுவர்.

யினால் ஸ்தூலத்தன்மையினை யடைந்ததோ, குணாதிபிலபரியந்தமான தத்துவக்கூட்டம் எதனின் றுண்டாகின்றதோ, அது அவ்வியக்தமெனப்படுகின்றது. ஸ்ரீகண்டாது விக்கிரமங் (சக்தி)களால் க்ஷோபிக்கப்பட்டதாம். இனிப் பிரகிருதிதத்துவத்தி னின்று குணதத்துவமுண்டாயிற்று. சமாவஸ்தையினை யடைந்துள்ள சத்துவாதிகள் குணாத்மகமான தத்துவமாம். உக்கிரமகாதேஜஸுள்ளவரும், அநந்தவிக்கிரமரும், பிரபுத்தரும், பரமேசானருமான ஸ்ரீகண்டர் சக்திசம்பந்தமாத்திரத்தால் க்ஷோபக(காரியாபிமுகப்படுத்துபவ)ராவர். சத்துவம் இராஜசு தமசு என்னும் குணங்கள் பிரகிருதியினின் றுண்டாயினவாம்." என்பது பௌஷ்கரம்.

"गुणतत्त्वात्परा बुद्धिरभवन्मुनिपुंगवाः ।
रजस्तमोभ्यां न्यग्भूता वृत्तिः सत्त्वेन चोत्कटा ॥
सा बुद्धिरुदिता तन्त्रे विषयाध्यवसायिनी ।
अत ऊर्ध्वमहङ्कारतत्त्वं संक्षिप्य वर्ण्यते ॥
प्रत्यात्मनियतं तच्च प्रसिद्धमहमात्मकम् ।
मनः पूर्वमधस्तत्त्वं यत एवोपजायते ।

स च त्रिविध उद्दिष्टं प्रथमस्तत्र तैजसः ॥
वैकारिको द्वितीयः स्यात्तथा भूतादिकः परः ।
सत्त्वेनोत्कृष्टभागो यः स तैजस इहोच्यते ॥
वैकृतो राजसोत्कृष्टो भूतादिस्तमसाधिकः ।
तैजसादप्यहंकारान्मनो बुद्धीन्द्रियाणिच ॥
बुद्धीन्द्रियाणि कथ्यन्ते श्रोत्रत्वक्चक्षुरेव च ।
जिह्वा घ्राणं च पंचेति सुप्रसिद्धानि तानि च ॥
प्रत्यक्षविषयत्वेन तेषां सिद्धेर्न युक्तयः ।
कथ्यन्ते तान्यहंकारादुपजातानि सात्त्विकात् ॥
पंचकर्मेन्द्रियाणि स्युरहंङ्कारात्तु वैकृतात् ।
कर्मेन्द्रियाणि वाक्पादौ पाणिगुह्यगुदानि च ॥
अहंकारात्तु भूतादेर्जाता तन्मात्रसंहतिः ।
महाभूतानि जायन्ते क्रमात्तन्मात्रपंचकात् ॥
आकाशः पवनस्तेजस्तोयं भूरिति संज्ञया ॥

முநிபுங்கவர்களே! குணதத்துவத்தினின்று மேலான புத்தி யுண்டாயிற்று. இராஜஸ்தமஸா களால் தாழ்ந்ததும்சத்துவத்தினால் அதிகரித்த

துமான விருத்தி எதுவோ அது தந்திரங்களில் விஷயநிச்சயஞ் செய்வதான புத்தியென்று சொல்லப்பட்டுளது. இதற்குமேல் அகங்கார தத்துவம் சுருக்கி வர்ணிக்கப்படுகின்றது. ஆத்மாக்கள்தோறும் நியதமாயுள்ளதாம். மனது பூர்வமான கீழ்த்தத்துவம் எதனினின்றே பிறக்கின்றதோ, யானென்னும் வடிவினதாகிய அதுவும் பிரசித்தமாம். அதுவும் மூன்று விதமாகச் சொல்லப்பட்டுளது. அவற்றுள் முதலாவது தைஜஸமாம். இரண்டாவது வைகாரிகமாம். மற்றையது (மூன்றாவது) பூதாதிகமாம். சத்துவத்தினால் மேம்பட்டபாகமெதுவோ அது தைஜஸமென்று இங்கு சொல்லப்படுகின்றது. இராஜஸமிகுந்தது வைகாரிகமாம். தமஸால் அதிகமானது பூதாதியாம். தைஜஸாகங்காரத்தினின்று மனதும் ஞானேந்திரியங்களுமுண்டாயின. சுரோத்திரம் துவக்கு சக்ஷு சிங்நுவை கிராணமென்னும் ஐந்தும் ஞானேந்திரியங்களெனப்படுகின்றன. பிரத்தியக்ஷவிஷயத்தன்மையால் அவை மிகப்பிரசித்தங்களாம்; அவற்றின் சித்திக்கு யுக்திகள் சொல்லப்படவில்லை. அவை சாத்துவிக அகங்காரத்தினின் றுண்டாயினவாம். வைகிருதாகங்

காரத்தினின்று கர்மேந்திரியங்களைக்து முண்டாயின. வாக்கு, பாதம், பாணி, குஹ்யம், குதமென்பன கர்மேந்திரியங்களாம். பூதாதியகங்காரத்தினின்று தன்மாத்திராசமூக முண்டாயிற்று. * ௧௫. தன்மாத்திராபஞ்சகத்தினின்று மகாபூதங்கள் ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, * ௧௬. பிருதிவி யென்னும் பெயரால் கிரமமா யுண்டாயின.'' பௌஷ்கரம்.

இவ்வைந்து பூதங்களினின்று ஸ்தூலதேகாதி பௌதிகங்க ளுண்டானமை பிரசித்தமாம்.

இவற்றின் விரிவைக் காணவிரும்புவோர் ஆகமங்களிற் காண்க.

இச்சூத்திரத்துள்ள கர்மம் என்னும் பதம் அவித்தையாகிய மலமுண்மைக்கும் உபலக்ஷ

---

* ௧௫. சப்ததன்மாத்திரை, ஸ்பரிசதன்மாத்திரை, ரூபதன்மாத்திரை, ரஸதன்மாத்திரை, கந்ததன்மாத்திரை யென்னு மிவை தன்மாத்திராபஞ்சகமாம். கலப்பின்றி அதனுமாத்திரமா யிருத்தலின் தன்மாத்திரை யெனப்படும்.

* ௧௬. அவ்வியக்தமாகிய பிரகிருதிமுதல் பிருதிவியந்தமான இருபத்துநான்கினையும் ஆத்மதத்துவமென்பர்.

ணமாம். அமலத்தின் லக்ஷணம் பின் நான்காவது சூத்ரவுரையிற் கூறப்படும்.

கர்மமென்பது ஜன்மாந்தரார்ஜிதமாய் மாயையிற் பொருந்தியிருக்கும் முக்காரணவினையின் சம்ஸ்காரமாகிய புண்ணியபாபவடிவ அதிருஷ்டமாம். அபூர்வமெனவும் படும். அதுவே சரீர சுகதுக்காதிகட்கேதுவும் அநாதியுமாம்.

இவ்வாறு முதலாவது இரண்டாவது சூத்திரங்களால் கர்த்தாவாகிய பதியின் பிரமாண லக்ஷணங்களும் மாயாகர்மாதிப் பிரமாணமும் ஆத்மநாநாத்வமும் கர்த்தாவின் செய்கையும் நிரூபிக்கும்வாயிலாக 'தத்துவமஸி' மகாவாக்கியத்தின் 'தத்'பத வாச்சியார்த்தம் கூறப்பட்டமை காண்க.

---

## மூன்றும் சூத்திரம்.

(அ-கை) இனி இவ்வுடலில் உடலாதிகளின் வேறாயவற்றை யறியுமான்மா வொன்றுளதென அநுமானவளவையாற் சாதிக்கின்றார் :—

नेतितो ममतोद्रेका दक्षोपरति बोधतः ।
स्वापे निर्भोगतो बोधे बोधृत्वादस्त्यणुस्तनौ ॥ ३ ॥

(இ-ள்) नेतितः= தத்துவங்களெல்லாவற்றையும் இங்ஙனமன்று; இங்ஙனமன்றென்று நீக்குதலானும், (இதனாற் சூநியாத்மவாதம் மறுக்கப்பட்டது.) ममतोद्रेकात् = உடலாதிகளில் மமதை(எனதெனுந்தன்மை)யின் ஆதிக்கமிருத்தலானும், (இதனால் தேகாத்மவாதம் மறுக்கப்பட்டது) अक्षोपरतिबोधतः= இந்திரியங்களினொடுக்கமாகிய சொப்பனத்தினை யறிதலின், (இதனால் இந்திரியாத்மவாதம் மறுக்கப்பட்டது.) स्वापे निर्भोगतः = உறக்கத்தில் போகமின்மையானும், (பிராணாத்மமன ஆத்மவாதம் மறுக்கப்பட்டது.) बोधे बोधृत्वात् = சாக்கிரத்தில் அறியுந்தன்மை யிருத்தலானும், (இதனால் அஞ்ஞானாத்மவாதம் மறுக்கப்பட்டது) तनौ अणुः अस्ति= சரீரத்தில் (யானென்னும் சொற்பொருளாகிய) அணுவாகிய ஜீவாத்மா உளது.

காரியப்பிரபஞ்சமான இதுவுமன்று காரணப்பிரபஞ்சமான இதுவுமன்று; என்று அவற்றினை நியதிகளைவதான ஆத்மாவொன்றுண்டென்பார் இங்ஙனமன்றென்பதனாலும் என்றார். அங்ஙனம் நியதிகளைந்தது தேகமா

மெனின், அது, என் மனை என் நிதியென்றாற் போலஎன் தலை, என் கை, என் கால், என் உடல் என்று தன்னின்வேறாய் வெவ்வேறுபெயர்களால் வியவகரிக்கப்படுதலின், ஆத்மாவன்றென்பார் மமதையின் ஆதிக்க மிருத்தலாலு மென்றார். இவ்வுடலின் வேறாய் இந்தியங்களுண்மையின் அவை ஆத்மாவாகுமே யெனின், அவை தனித்தனி ஒன்றறிந்ததை யொன்றறியாமையானும் அவை யொவ்வொன்றும் தனித்தனியா யறிந்தவற்றைக் கூட்டியறிதலோடு அவ்விந்திரியங்களின் ஒடுக்கநிலையாகிய சொப்பனத்தினை யறிதலானும் அவற்றின் வேறாயான்மா வுண்டென்பார் இந்திரியவொடுக்கமறிதலின் என்றார்.

அவ்வாறு இந்திரியங்கள் தனித்தனி யறிவதனைக் கூட்டியறிவதும் அவற்றினொடுக்கத்தினை யறிவதும் பிராணன் அல்லது மனமாகலின் அது ஆத்மாவாகுமெனின், சுழுத்தியில் பிராணவாயு உயிர்த்திருந்தும் சுகதுக்கங்களை யறியாமையினாலும் மனமும் இராது சுகதுக்கங்களை யறியாமையானும் அவை ஆத்மாவாகாவென்பார் உறக்கத்திற் போகமின்மையாலு மென்றார்.

உறக்கத்திற் போகமின்மையால் அங்குள அஞ்ஞான மாத்மாவெனலாமேயெனின், ஜாக்கிரத்தில் அவ்வுறக்கத்து நிகழ்ந்த அநுபவத்தினை 'யான் ஒன்றுந்தெரியாமற் சுகமாய்த் தூங்கினேன்' என்று உணர்வதாயிருத்தலின், அல்லது ஜாக்கிரத்தில் எல்லாவற்றையும் அறிவதாயிருத்தலின் அவ்வஞ்ஞானத்தின் வேறாய் அறிவுவடிவ ஆத்மாவுண்டென்பார் ஜாக்கிரத்தில் உணர்வதா யிருத்தலாலு மென்றார்.

இதனால் ஜாக்கிராதி மூன்றவத்தைகளிலும் நிகழுமியல்புபற்றி ஆன்மாவினுண்மை கூறப்பட்டது. இது ஜீவனது தடஸ்தலக்ஷணமாம்.

அணுவென்பதும் ஜீவாத்மாவுக்கு ஓர்பெயர் என்பதனை

"बन्धमोक्षौ न चैवेह मन स्वेच्छाचारिणः ।
अकर्ताऽज्ञः पशुर्जीवो विभुर्भोक्ता ह्यणुः पुमान् ॥

ஸ்வேச்சசாரியான எனக்கு இங்குப் பந்த மோக்ஷமிரண்டுமில்லை. அகர்த்தா, (சுவதந்திரமான செய்கையில்லாதவன்) அஞ்ஞன், பசு, ஜீவன், விபு, போக்தா, அணு, புமான் (புருஷன்)" என்னும் இலிங்கபுராண அஎ-ம் அத்யாயவசனமுதலியவற்றா லறிக. (ரு)

## நான்காம் சூத்திரம்.

(அ-கை) மேல் உண்டெனத் துணியப்பட்ட ஆன்மாவினியல்பினைக் கூறுகின்றார்:—

आत्मान्तः करणादन्योप्यन्वितो मन्त्रिभूपवत् ।
अवस्थापञ्चकस्थः स्यान्मलरुद्धस्वदृक्क्रियः ॥४॥

(இ-ள்) आत्मा = ஜீவனாகிய ஆத்மா, अन्तःकरणात् अन्यः अपि = அந்தக்கரணத்தி(உட்கருவியி)னும் வேறானவனாயினும், मन्त्रिभूपवत् अन्वितः = மந்திரியுமரசனும்போல் அதனோடு கூடியவனாய், मलरुद्धस्वदृक्क्रियः = அவித்தையாகிய ஆணவமலத்தினால் தகைக்கப்பட்ட ஞானக்கிரியைகளை யுடையவனாய், अवस्थापञ्चकस्थः स्यात् = அவத்தையைந்தினு மிருப்பவனாவன். எ-று.

இச்சீவன் இயற்கையாக நித்தியஞானஸ்வரூபியென்பது தோன்ற ஆத்மாவென்று கூறினார். "अत सातत्यगमने = அத என்பது இடையீடின்றிச்செல்லுதலில் அதாவது அறிதலிலாம்" என்

னும் தாதுவின் (வினைமுதல்) அடியாகப் பிறந்த தாகலின் ஆத்மாவென்னும் சொல்விற்கு நித்திய ஞானஸ்வரூபமான வியாபகவஸ்துவென்பதே பொருளாம். அதனை

"यच्चाप्नोति यदादत्ते यच्चात्ति विषयानिह ।
यच्चास्य सन्ततो भावस्तस्मादात्मेति कीर्त्यते ॥

எதனால் (எல்லாவற்றினையும்) அடைகின்றதோ, எதனால் (எல்லாவற்றினையும்) கொள்ளுகின்றதோ, எதனால் இங்கு விஷயங்களைப் புசிக்கின்றதோ, எதனால் இதன் இருப்பு இடையின்றியதா யிருக்கின்றதோ, அதனால் ஆத்மாவென்று சொல்லப்படுகின்றது" என்றும் ஸ்மிருதி கூறுதல் காண்க. இந்த ஸ்மிருதி ஆத்மசப்தவுற்பத்திவாயிலாக ஆத்மாவுக்கு முறையே வியாபகத்துவமும், உபாதானத்துவமும், உபலப்திருத்துவமும் (அருகிருந்துணருந்தன்மையும்), இடையின்றி யிருத்தற்றன்மையும் கூறுவது காண்க.

அவ்வாத்மா நித்தியஞானஸ்வரூபனாயினும், அநாதி மலசம்பந்தத்தால் ஞானமில்லாதவனைப் அந்த ஞானத்தினைப் பெறுமாறு அரசன் தான்

ஸ்வதந்திரமாகவின்றிச் சூழ்ச்சித்துணைவனான மந்திரியோடுகூடி அரசுபுரிவதுபோல அந்தக்கரணத்தோடுகூடி ஐந்தவத்தையைப் பொருந்துவன் என்பார் 'மந்திரியு மரசனும்போல் அதனோடு கூடியவனாய் அவத்தையைந்தினு மிருப்பவனாவன்' என்றார். சங்கற்ப விகற்பங்களைச்செய்யும் மனம், நிச்சயத்தினைச்செய்யும் புத்தி, சிந்தித்தலைச் செய்யும் சித்தம், அகங்கரித்தலைச் செய்யும் அகங்காரம் என்னும் நான்கு விருத்திகளையுடைய உள்ளமானது அந்தக்கரண மெனப்படும்.

இத்தன்மைய ஆத்மவியல்பினை

"पशुरात्माऽस्वतन्त्रश्च चिन्मात्रो मलदूषितः ।
संमूढो नित्यसंसारी किंचिज्ज्ञोऽनीश्वरोऽक्रियः ॥

பசுவாகிய ஆத்மா அஸ்வதந்திரன், சின்மாத்திரன், மலத்தினால் தூஷிக்கப்பட்டவன், சன்மூடன், நித்தியசம்ஸாரி, கிஞ்சிஞ்ஞன், அநீசுவரன், அக்கிரியன்," என்னும் சர்வஞானோத்தரவசனத்தினாலும்,

"मनोबुद्धिरहंकारश्चित्तं चेति चतुष्टयम् ।
अंतःकरणमित्याहुस्तत्र ते प्रतिबिंबिताः ॥

जीवत्वं प्राप्नुयुः कर्मफलभोक्तार एव ते ॥
ततो वैषयिकं तेषां सुखं वा दुःखमेववा ।
त एव भंजते भोगायतनेऽस्मिन् शरीरके ॥

மனது புத்தி அகங்காரம் சித்தமென்னும் நான்கினையும் அந்தக்கரண மென்பர். அதில் பிரதிபிம்பித்தனவாய் அவை ஜீவத்துவத்தினை யடைகின்றன. அவை கர்மபலத்தைப் புசிப்பனவாம். அதனால் விஷயசப்பந்தமான சுக மாவது துக்கமாவது உளதாம். அவர்களே! போகாயதனமான இச்சரீரத்திற் போகத்தைப் புசிக்கின்றனர்.'' என்னும் சிவகீதை, உ-வது அத்யாயவசனத்தினாலும்,

" कलादिपंचकेनैव भोक्तृत्वेन प्रकल्पितः ॥
प्रकृतिस्थः पुमानेष भुङ्क्ते प्रकृतिजान् गुणान् ।
इति स्थानद्वयान्तस्थः पुरुषो न विरोधकः ॥

கலாதிபஞ்சகத்தினாலே போக்தா வெனுந் தன்மையினாற் கற்பிக்கப்பட்டவனை பிரகிருதியிலுள்ள இப்புருஷன் பிரகிருதியினின் றுண்டான குணங்களைப் புசிக்கின்றான். இவ்

வாற்றால் ஸ்தானமிரண்டனுள் ளிருப்பவனாகிய புருஷன் விரோதமுடையவ னல்லன்." என்னும் சிவபுராண கைலாசசங்கிதை கஎ-ம் அத்தியாயவசனத்தினாலும்,

" आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥

இந்திரியமனதுகளோடுகூடிய ஆத்மா போக்தாவா மென்று அறிஞர் கூறுவர்." என்னும் கடவல்லி முதலிய சுருதி வசனங்களாலும் அறிக.

ஜீவனது வியாபகத்தினை மறைத்து அணுத்துவ மாக்குதலால் ஆணவ மெனப்படும். அவித்தையானது விசுத்தஞான ஆன்மாவின் பசுத்துவவியவகாரஹேது வாதலால் மலமென்றும், ஜீவனது பந்தத்திற்கு மூலமாயிருத்தலின் மூலமல மென்றும், ஜீவனோடு உடன்றோன்றியதாயிருத்தலின் ஸஹஜமல மென்றும் வியவகரிக்கப்படுகின்றது. அம்மல லக்ஷணம் காமிகத்தில்

" तथानादिमलस्त्वेकश्चित्रशक्तिशतावृतः ।
दृक्क्रियाच्छादकः पुंसो विशुद्धस्य स्वभावतः ॥
पशुत्वव्यवहारस्य निमित्तं त्रिविधाणुषु ।

यत्संभवमात्रेण न च मोक्षव्यवस्थितिः ।
अपयाते मले ह्यस्मिन्सर्वत्रोदितदृक्क्रियः ।
निरातंकं निरापायं शिवत्वमधिगच्छति ॥

அவ்வாறே அநாதிமலமோ ஏகமும் சித்திர சக்தி நானாற் சூழப்பட்டதும், ஸ்வபாவமாக விசுத்தனை புருஷனது ஞானக்கிரியையினை மறைப்பதும், மூவகையணுக்களிலும் பசுத்து வவியவகாரத்திற்கு நிமித்தமுமாம். அதன் சம்பவமாத்திரத்தினால் மோக்ஷவியவஸ்திதி (நிலை) இருப்பதில்லை. இம்மலம் நீங்கியபோது ஆத்மா எங்குமுதித்த ஞானக்கிரியை யுடைய வனாய் நோயின்றியதும் அபாய மின்றியது மான சிவத்துவத்தினை யடைகின்றான்.'' என்றும், மிருகேந்திரத்தில்.

" पर्यायैर्बहुभिर्गीतं अदृष्टं पशुभिः सदा ।
पशुत्व पशुनीहार मृत्युमूर्च्छामलांजनैः ॥

अविद्यावृतिरुग्ग्लानि पापमूलक्षयादिभिः ।
तदेकं सर्वभूताना मनादि निबिडं महत् ॥

प्रत्यात्मस्वकालान्नापायिशक्तिसमूहवत् ॥

பசுத்துவம், பசுநிஹாரம் (பசுவின்மூடல்), மிருத்தியு, மூர்ச்சை, மலம், அஞ்சனம்(மை), அவித்தை, ஆவிருதி (மறைப்பு), ரோகம், அருவருப்பு, பாபம், மூலம், க்ஷய * கரு. முதலிய வெகுபரியாயங்களாற் சொல்லப்படுவதும் பசுக்களால் எப்போதும் பார்க்கப்படாததுமான அது சர்வபூதங்கட்கும் * கசு. ஏகமும், அநாதியும், நெருக்கமானதும், பெரிதும், ஆத்மாக்கள்தோறும் ஸ்வகாலாந்தத்தில் நாசமுடைய சக்திசமூகமுடையதுமாம்." என்றும், சர்வசாரோபநிஷதத்தில்,

---

* கரு முதலிய என்பதனால் பாசம், அசுத்தி, பந்தனம், வியாகாதம், களங்கம், மோகம், கேவலம், ஆவரணம், தமசு, சடம், படலம், நிரோதம், ஆச்சாதனமென்பவும் கொள்ளப்படும்.

* கசு. இங்கு ஆணவமாகிய மாயையினை ஏகமென்றமையால் ஒரு ஆத்மாவுக்கு ஞானத்தாற் பந்தமொழியின் எல்லோரும் முத்தராதல் வேண்டும்; அதனால்பந்தமோக்ஷவியவஸ்தைசித்தியாதாகுமேயெனின்? அங்ஙனமன்று இருள்ஒன்றேயாயினும் அம்சபேதத்தால் பலவற்றை மறைத்துப் பிரகாசமுண்டாயவிடத்து மாத்திரமே நீங்கி, ஒழிந்தவிடமெல்லாம் மறைத்திருப்பதுபோல, அவித்தையும் ஒன்றேயாயினும் அம்சபேதத்தால் பலவாய்ப் பலவாத்மாக்களை மறைத்து ஞான

" या तदभिमानं कारयति सा अविद्या ॥

எது அந்த (தேகாதியநாத்மாக்களில் ஆத்மாவெனும்) அபிமானத்தினைச் செய்விக்கின்றதோ, அது அவித்தையாம்." என்றும், சூதகீதை, உ-ம் அத்யாயத்தில்

" आत्मानः पशवः सर्वेप्रोक्ता अज्ञानिनः सदा ।
अज्ञानमात्मनामेषा मनाद्येव स्वभावतः ॥

संसारबीजमज्ञानं संसार्यज्ञः पुमान्यतः ।
ज्ञानात्तस्य निवृत्तिः स्यात्प्रकाशात्तमसो यथा ॥

ஆத்மாக்களான பசுக்களெல்லோரும் எப்போதும் அஞ்ஞானிகளென்றுசொல்லப்படுவர். இவ்வாத்மாக்களுக்கு அஞ்ஞானம் ஸ்வபாவமாக அநாதியாம். எதனால் சம்ஸாரி அஞ்ஞனன் புருஷனே அதனால் சம்சாரபீஜம் அஞ்ஞான

---

முதிக்கப்பெற்ற வாத்மாவினை மாத்திரம் மறையாதொழிந்து பிறவாத்மாக்களை மறைத்தே நிற்றலான் பந்தமோக்ஷ வியவஸ்தைபொருந்து மென்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறி யிடர்ப்படுவர். அவர் கூற்றுக்களின் கண்டன மண்டனங்களெல்லாம் பெருநூற்களிற் காண்க.

மாம். அஃதன் நிவிருத்தி இருளின் நிவிருத்தி பிரகாசத்தினாலாவதுபோல ஞானத்தினாலாம்" என்றும் கூறப்பட்டுளது.

அம்மலத்தின் பேதகம்

" मलोपि सप्तधा ज्ञेयो मोहश्चापिमदस्तथा ।
रागोन्यश्च विषादश्च तापः शोषश्च सप्तमः ॥
वैचित्र्यमपि सर्वेषां मलिनानां प्रकीर्तितम् ॥

மலமும் ஏழுவகையாய் அறியதக்கதாம். மோகமு(அறிவிழப்பு)ம், அவ்வாறே மதமு(களிப்பு)ம், ராகமு(விருப்பு)ம், அதன்வேறான விஷாதமும் (கவலையு)ம், தாபமு(கொதிப்பு)ம், சோஷ(வாட்ட)முமாம். ஏழாவதான வைசித்திரியமு(புதுமையு)ம் எல்லாமுடையவர்கட்கும் சொல்லப்படும்." என்று பௌஷ்காரத்தில் ஏழுவிதமாய்ச் சொல்லப்பட்டுளது.

இங்கு அவத்தை ஐந்து என்றது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவற்றையாம். அது

" पञ्चावस्थाः जाग्रत्स्वप्नसुषुप्तितुरीयतुरीयातीताः

இந்தவத்தைகளாவன ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பனவாம்.'' என்ற மண்டலப்பிராஹ்மண சுருதிவாக்கியத்தானும், "இவ்வான்மா சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்கு மென்றது'' என்னும் மெய்கண்டதேவநாயனார் திருவாக்கு முதலியவற்றானு மறிக.

அவற்றுள்,

"मन आदिचतुर्दशकरणैः पुष्कलैरादित्याद्यनुगृहीतैः शब्दादीन्विषयान्स्थूलान्यदोपलभते तदात्मनो जागरणम् ॥

ஆதித்தன் முதலிய அதிஷ்டானதேவதைகளா லநுக்கிரகிக்கப்பட்ட புஷ்களமான மன முதலிய பதினான்கு கரணங்களால் ஸ்தூலமான சப்தாதிவிஷயங்களை எப்போது அறிகின்றானோ அப்போது ஆத்மாவுக்கு ஜாக்கிரணமாம்'' என்னும் சுருதியால் சாக்கிராவத்தையும்,

"करणोपरमे जाग्रत्संस्कारोत्थप्रबोधवद्
ग्राह्यग्राहक रूपस्फुरणं स्वप्नावस्था भवति ॥

கரணங்க ளொடுங்கியவிடத்துஜாக்கிரஸம்ஸ்காரத்தி னெழுந்த ஞானமுடைய கிராகிய கிராஹகஸ்புரணம் (கொள்ளப்படுவதுகொள்வதெனும்விளக்கம்) ஸ்வப்னாவஸ்தையாகின்றது'' என்னும் சுருதியால் சொப்பனாவஸ்தையும்,

“ चतुर्दशकरणोपरमाद्विशेषविज्ञानाभावाद्यदा शब्दादीन्नोपलभते तदात्मनः सुषुप्तम् ॥

பதினான்கு கரணங்களி னொடுக்கத்தால் விசேஷவிஞ்ஞானமின்மையால் எப்போது சப்தாதிவிஷயங்களை அறிகின்றானோ அப்போது ஆத்மாவுக்குச் சுழுத்தமாம்.'' என்னும் சுருதியால் சுழுத்தியவத்தையும்,

“ अवस्थात्रयभावाभावसाक्षी स्वयं भावरहितं नैरन्तर्यं चैतन्यं यदा तदा तुरीयं चैतन्यमित्युच्यते

ஸ்வயம்பாவ மின்றிய நிரந்தரத்தன்மையான சைதன்யம் எப்போது அவஸ்தைமூன்றன் உண்மையின்மைகளின் சாக்ஷியாகின்றதோ அப்போது துரியமான சைதன்ய மெனப்படுகின்றது' என்னும் சுருதியினால் துரியாவத்தையும்,

“ चतुर्भिर्विरहितं तुरीयातीतम् ॥

நான்கவத்தைகளு மின்றியது அதாவது மூன்றவத்தைகளின் உண்மையின்மைகளின் சாக்ஷி யானென்னும் விருத்தியு மின்றிய நிலை துரியாதீதமாம்" என்னும் சுருதியால் துரியா தீதாவத்தையும் கூறப்பட்டிருத்தல் காண்க.

இவ்வைந்தவத்தைகளின் ஸ்தானங்களும் காரணங்களும் இவை யென

"मुखे जाग्रमितिज्ञेयं स्वप्नन्तु हृदयात्मकम् ।
हृदयान्तं समारभ्य नाभ्यन्तन्तु सुषुप्तिकम् ।
तस्मादधःतुरीयं तु तुर्यातीतं तु लिंगकम् ॥
जाग्रादिस्थानमेवं हि प्रवर्तकमिहोच्यते ॥
श्रोत्रंत्वक्चक्षुषी जिह्वाघ्राणं चैवतुपंचकम् ।
वाक्पादपाणिगुह्यानि गुदंचैव तु पंचकम् ।
शब्दस्पर्शरस रूपगंधाश्चैवतु पंचकम् ।
वचनादानगमन विसर्गानन्द पंचकम् ।
प्राणोपानस्तथा व्यान उदानस्समान एव ।
नागः कूर्मश्च कृकरो देवदत्तो धनंजयः ।

मनोबुद्धिरहंकारश्चित्तं क्षेत्रज्ञ एव च ।
पंचत्रिंशद्भिर्वर्तन्ते जाग्रे तानि विनिर्दिशेत् ॥

शब्दादिर्वचनादिश्च प्राणादिश्च मनादिकम् ।
एते चरन्ति वै स्वप्ने मायारूपेण जाग्रतः ॥

क्षेत्रज्ञश्चित्तप्राणैश्च सुषुप्तिश्चित्तवर्जितः ।
तुर्ये तुर्यातीतके स्यात् क्षेत्रज्ञः सर्ववर्जितः ॥

முகத்தில் (புருவநடுவில்) ஜாக்கிரமென்றும், ஸ்வப்னம் இதயவடிவினதென்றும், இதயாந்தம்தொட்டு நாபியந்தம் சுழுத்திகமென்றும், அதன்கீழ் துரியமென்றும், லிங்கம் துரியாதீதமென்றும் ஜாக்கிராதிஸ்தானமாம். இவ்வாறு பிரவர்த்தகம் இங்கு சொல்லப்படுகின்றது. சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்ஙுவை, ஆக்கிராணமென்னும் ஐந்தும்; வாக்கு, பாதம், பாணி, குஹ்யம், குதமென்னும் ஐந்தும், சப்தஸ்பரிசரூபரஸகந்தங்களென்னும் ஐந்தும்; வசனதானகமனவிஸர்க்காநந்தமென்னும் ஐந்தும்; பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பனவும்; மனம்

புத்தி அகங்காரம் சித்தம் க்ஷேத்ரஞ்ஞனென்பனவுமாகிய முப்பத்தைந்தும் ஜாக்கிரத்தில் நிகழ்கின்றன. சப்தாதியும், வசனாதியும், பிராணாதியும், மனாதியுமான இவை இருபத்தைந்தும் ஜாக்கிரத்தினின்று மாயாரூபமாகச்சொப்பனத்தில் நிகழ்கின்றன. சித்தப்பிராணன்களோடு க்ஷேத்திரஞ்ஞன் சுழுத்தியிற் சரிக்கின்றான். சித்த மின்றியவனாய்த் துரியத்திற் சரிக்கின்றான். துரியாதீதத்தில் எல்லா மொழிந்தவனாய் க்ஷேத்திரஞ்ஞன்மாத்திர மிருப்பன்." அசிந்தியம் கூறுகின்றது.

இவை ஒவ்வொன்றும் நன்னான்காவதனை

"जाग्रदवस्थायां जाग्रदादिचतस्रोऽवस्थाः स्वप्ने स्वप्नादिचतस्रोऽवस्थाः सुषुप्ते सुषुप्त्यादिचतस्रोऽवस्थाः तुरीये तुरीयादिचतस्रोऽवस्थाः न त्वेवं तुरीयातीतस्य निर्गुणस्य ॥

ஜாக்கிராவஸ்தையில் ஜாக்கிராதி நான்கவஸ்தைகளும், சொப்பனத்தில் சொப்பனாதி நான்கவஸ்தைகளும், சுழுத்தியில் சுழுத்தியாதி நான்கவஸ்தைகளும், துரியத்தில் துரியாதி

நான்கவஸ்தைகளுமுள. நிர்குணமான துரியாதீதத்திற்கு இவ்வாறு பாகுபாடில்லை." என்று நாரதபரிவிராஜகோபநிஷதம் கூறுகின்றது. இவற்றின் இலக்கணங்களைப் பிறவிடங்களிற் காண்க. இஃதன்றி; ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, மூர்ச்சை, மரண மென்னும் ஐந்தவத்தைகளுளவென்று பைங்கலமும், அப்பிரபுத்தன், புத்தன், புத்தியமானன், பிரபுத்தன், ஸம்ப்பிரபுத்தன் என்று ஐந்தவத்தைகளையுடையவனுவனென்று இலக்ஷணங்களோடு ஐவகையினையும் ஸ்வச்சந்தபாரமேசுவரமும் கூறுகின்றன.

இவை யெல்லாவற்றையும் சகலம் கேவலம் சுத்த மென்று மூவகைப்படுத்தி

"अथात्मा समलोबद्धः पुनर्मुक्तश्चदीक्षया ।
विज्ञेयःसात्रिधावस्था केवलःसकलोऽमलः ॥

இனி ஆத்மா மலத்தோடுகூடியவனாய்ப் பெத்தனுகின்றான். மறுபடியும் தீக்ஷையினுல் முக்தனுகின்றான். கேவலம், சகலம், அமலம் (சுத்தம்) என்னும் அம்மூவகை யவஸ்தை அறியத்தக்கதாம்" என்று ஸ்வாயம்புவாதிகள் கூறுகின்றன. அவற்றுள் கேவலம் ஐவகைப்படும். சகலம்

மூவகைப்பட்டு ஒவ்வொன்றும் ஐவகைப்படும். சுத்தம் ஐவகைப்படும். அவற்றினிலக்கண முதலியவற்றை விரிந்த நூல்களிற் காண்க.

இவ் வவஸ்தைகள் மூவகையணுக்களுக்கும் சாதாரணமாம். மூவகையணுக்களாவார்.

"जीवाश्च त्रिविधा ज्ञेया सकलाः प्रळयाकलाः ।
विज्ञानकेवलाश्चेति तेषां लक्षणमुच्यते ॥
मायाकर्ममलैर्युक्तः सकलस्तत्र चोच्यते ।
मलकर्मयुतो विप्राः प्रळयाकल इष्यते ॥
मलेन रुद्धचैतन्यो न मुक्त इति कथ्यते ।
द्विधाप्ययं समाख्यातो विप्राः विज्ञानकेवलः ॥

ஜீவர்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞான கேவலர் என்று மூவகையா யறியத்தக்கவரா வர். அவர்களிலக்கணம் சொல்லப்படுகின்றது:- அவர்களுள் மாயை, கர்மம், மலமென்னும் மூன்றோடுகூடியவன் சகலனெனப்படுவன், விப் பிரர்களே! மலம் கர்ம மிரண்டோடுகூடியவன் பிரளயாகல னென்று கொள்ளப்படுவன். மல மொன்றினால் மறைக்கப்பட்ட சைதன்னியம்

முக்தனென்று சொல்லப்படுகிறதில்லை. விப்பிரர்களே! இது இருவகையினதாயினும் விஞ்ஞானகேவலனெனப்படும்." என்பனமுதலிய ஆகமவசனங்களாலும்.

"मलमायाकर्मलक्षणपाशत्रयबद्धा जीवाः पशवः। तत्र मलपाशमात्रबद्धा विज्ञानकलाः। ते द्विधाः। समाप्तकलुषा असमाप्तकलुषाश्च। आद्या विद्येशाः। द्वितीयाः सप्तकोटिमहामन्त्रात्मकाः। मलकर्मलक्षण पाशद्वयबद्धाः प्रलयाकलाः तेऽपि मलकर्मणोः परिपाकभावाभावाभ्यां द्विविधाः। येषां परिपाको नास्ति ते कर्मवशान्नानायोनिषु जायन्ते। एषां तु मलकर्मपरिपाकोस्ति तेषु केषुचिदीश्वरानुग्रहाद्भुवन पतयो भवन्ति। पाशत्रयबद्धास्तु कलादियोगात्सकलाः। तत्राष्टादशाधिकशतसंख्यकाः शिवानुग्रहान्मन्त्रेश्वरा भवन्ति। तत्र शतरुद्राः शतमण्डलिनोऽष्टौ क्रोधादयोऽष्टौ श्रीकण्ठविश्वेश्वरौ चेति। तद्व्यतिरिक्तानां मध्ये

येषां मलत्रयपरिपाकस्तानाचार्यरूपेण शिव एव दीक्षयाऽनुगृह्णाति । अपरिपक्वमलांस्तु मलपरिपाकार्थं भोगाय नानायोनिषु विनियुङ्क्ते । एते सर्वेऽपि पशवः सत्यपि ज्ञानोत्कर्षतरतमभावे सार्वज्ञ्याभावान्न जगतः कर्तारः । प्रकृतेस्तु जडत्त्वाद्दूरत एव कर्तृत्वम् । अतोऽन्यो जगत्कर्ता महेश्वरः ॥

மலமாயாகர்மலக்ஷண பாசமூன்றினுல் பந்தப்பட்ட ஜீவர்கள் பசுக்கள். அவர்களுள், மலபாசமாத்திரத்தினுல் பந்தப்பட்டவர்கள் விஞ்ஞானகலர்கள். அவர்கள் சமாப்தகலுஷர்(முடிந்தவழுக்கினையுடையார்) அசமாப்தகலுஷ ரென்று இருவகையின ராவர். முந்தியவர்கள் வித்தியேசர்கள். பிந்தியவர்கள்ஏழுகோடி மந்திரவடிவினர். மலகர்மலக்ஷண பாசமிரண்டினுற் பந்தப்பட்டவர்கள் பிரளயாகலர். அவர்களும் மலகர்மங்களின் பரிபாக முண்மையின்மைகளால் இருவகையின ராவர். எவர்களுக்கு அவற்றின் பரிபாக மில்லையோ அவர்கள் கர்மவசத்தினுல் நாநா யோனிகளிற் பிறக்கின்றனர். எவர்கட்கு மலகர்மபரிபாகமுளதோ அவர்

கள் சிலருள் ஈசுவரானுக்கிரகத்தினால் புவன பதிகளாகின்றனர். பாசமூன்றினாற் பந்திக்கப் பட்டவர்கள் கலாதிகளின் சம்பந்தத்தினால் சகலர்களாகின்றனர். அவர்களுள் நூற்றுப் பதினெண்மர் சிவானுக்கிரகத்தால் மந்திரேசு வர்ராகின்றனர். அவர்களுள், சதருத்திரர், *கஎ. சதமண்டலிகள் எண்மர், குரோதாதி யர் எண்மர் *கஅ. ஸ்ரீகண்டவிசுவேசுவரர் இருவர் என்க. அவர்களின் வேறுபட்டவர் களின் இடையில் எவர்கட்கு மலமூன்றன் பரி பாக முளதோ, அவர்களை ஆசாரியரூபத்தால் சிவனே தீக்ஷையினால் அநுகிரகிக்கின்றார். அபரிபக்குவ பலமுள்ளவர்களை மலபரிபாகத் தின்பொருட்டுப் போகத்திற்காக நாநாயோனி களிற் பொருத்துகின்றார். இவர்களெல்லோரும் பசுக்களாயினும் ஞானோத்கர்ஷத்தின் தாரதம் மியத்தில் சர்வஞ்ஞத்துவ மின்மையால் ஜகத் திற்குக் கர்த்தர்களாகார். பிரகிருதிக்கு ஜடத் துவ முண்மையின் அதன் கர்த்திருத்துவம் தூரத்திலேயாம் (இல்லையென்பது பொருள்). ஆதலால் அந்நியனான மகேசுவரன் ஜகத்கர்த்

* கஎ. வித்தியாமண்டலிகள் என்றும் கூறுவர்.
* கஅ. ஸ்ரீகண்டவீரேசர் என்றும் கூறுவர்.

தா" என்னும் வித்தியாரணியஸ்வாமிகள் திருவாக்கானும்,

"மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்; கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்— மெய்ஞ்ஞானம்; பின்னுணர்த்து மந்தப் பிரளயா கலருக்கு; முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்." என்னும் மெய்கண்டதேவநாயனார் திருவாக்கானும், விஞ்ஞானகேவலர், பிரளயாகலர், சகல ரெனப்படுவார்.

சகலரும்,

" सांसिद्धिको वैनायिकः प्राकृतश्च भवत्यणुः ।
विशिष्टधर्म संस्कारसमुद्दीपितचेतसाम् ॥

गुणः सांसिद्धिको भाति देहाभावेपि पूर्ववत् ।
लोकधीगुरुशास्त्रेभ्यो भाति वैनायिको गुणः ॥

समार्जितो वैनयिको मनोवागनुचेष्टया ।
प्राकृतो देहसंयोगे व्यक्तस्वप्नातिबोधवत् ॥

அணுவும் ஸாம்ஸித்திகன், வைநயிகன், பிராகிருதன் ஆகின்றான். விசிஷ்டதர்மசம்ஸ்காரத்தினால் செவ்விபெற்ற கொழுந்திய சித்தமுடையா

ருக்கு முந்தியதேக மில்லையாயினும் முற்பிறப் பிற்போல் ஸாம்ஸித்திகமான குணம் விளங்கு கின்றது. (ஸ்ரீகண்டேசர் கண்ணப்பர் முதலி யோர்களுக்குப்போல) லோகபுத்தி குரு சாஸ் திர மென்பவற்றால் வைநயிகமான குணம் விளங்குகின்றது. வைநயிககுணமானது மனோ வாக்குகளை யநுசரித்த சேஷ்டையினால் செவ் வையாய் ஆர்ஜிக்கப்பட்டதாம். பிராகிருத குணம் தேகசம்யோகத்தில் வியக்தசொப் பனுதிபோக முடையதாம்." என்னும் ஆகம வசனத்தால் மூவகையாவர்.

இவ்விரண்டு சூத்திரங்களால் துவம்பதவாச் சியார்த்தம் கூறப்பட்டது. (ச)

## ஐந்தாம் சூத்திரம்.

(அ-கை) இனிஅவ்வாத்மா அறிதலும் சுவ தந்திரமா யின்றிச் சிவனைலே யறியு மென்பத னைக் கூறுகின்றார் :—

विदन्त्यक्षाणि पुंसार्थान्न स्वयं सोपि शंभुना !
तद्विकारि शिवश्चेन्न कान्तोऽयोवत्स तं नयेत् ॥ ५ ॥

(இ-ள்) अक्षाणि अर्थान् पुंसा विदन्ति = இந்திரியங்கள் விஷயங்களை புருஷனாகிய ஜீவனால் அறிகின்றன. सः अपि = அச்சீவனும், स्वयं न = தானே அறிகிறதில்லை, शंभुना = சம்புவினால் नयेत् = அறிகின்றான். तत् शिवः विकारिचेत् = அதனால் சிவன் விகாரியாவனெனின், न = விகாரியாகான். सः = அச்சிவன், तं = அச்சீவனை, कान्तः अयोवत् = காந்தம் இரும்பினைச் சேட்டிப்பிப்பதுபோற் செலுத்துகின்றான்.

இதனால் இந்திரியவாயிலாகப் புருஷன் அறிவதுபோல சீவன்வாயிலாகச் சிவனே யறிகின்றான். சீவனுக்குச் சுதந்திரமான அறிவில்லையென்பது பெறப்பட்டது. அது சூரியன் நேரே பிரகாசித்தற் கேதுவாகாத இருட்டறையிலுள்ள பதார்த்தத்தினை ஒரு கண்ணாடியினது சாயாப்பிரகாசவாயிலாக விளக்குவதுபோல சிவன் அவித்தையினால் மறைபட்டுள்ள பிரபஞ்சவிஷயங்களை அந்தக்கரணப்பிரதிபிம்ப சிதாபாஸவறிவாகிய ஜீவாத்மாவின்வாயிலாக அறிவன் என்பதனால் பொருந்துமாறு காண்க.

ஜீவனுக்குச் சுதந்திரமின்மையால் சிவனறிவன் என்பதனை

"येनेदँ सर्वँ विजानाति तं केन विज्ञानीयाद्विज्ञारमरे केन विजानीयात् ॥

எதனால் இவ்வெல்லாவற்றையும் அறிகின்றானோ அதனை எதனால் அறிவான். அறிகிறவனை எதனால் அறிவான்." என்னும் பிருகதாரணியகம்,

" केनेषितं पतति प्रेषितं मनः
केनप्राणः प्रथमः प्रैति युक्तः ।
केनेषितां वाचमिमां वदन्ति चक्षुः
श्रोत्रं क उ देवो युनक्ति ॥ १ ॥

श्रोत्रस्य श्रोत्रं मनसो मनोय
द्वाचो ह वाचँ स उ प्राणस्य प्राण
श्चक्षुषश्चक्षुरतिमुच्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ २ ॥

यच्चक्षुषा न पश्यति येन चक्षूँषि पश्यति तदेव ब्रह्म त्वं विद्धि ॥

எதனால் விரும்பப்பட்டு பிரேரிக்கப்பட்டதாய் மனது விஷயங்களிற் செல்லுகின்றதோ, எதனால் முதலாவதான பிராணன் பிரேரிக்கப்பட்டதாய்ச் செல்லுகின்றதோ, எதனால் பிரேரிக்கப்பட்ட வாக்குப் பேசுகின்றதோ, சக்ஷுவினையும் சுரோத்திரத்தினையும் எந்தத் தேவதை பிரேரிக்கின்றதோ, எது சுரோத்திரத்திற்குச் சுரோத்திரமும் மனதுக்கு மனதும் வாக்கிற்கு வாக்குமாமோ அது பிராணனுக்குப் பிராணனும் சக்ஷுவிற்குச் சக்ஷுவுமாம். தீரர்கள் அதனை யடைந்து இவ்வுலகத்தி னின்று நீங்கி அதாவது இவ்வுடலைவிட்டு அமிருதர்கள் ஆகின்றனர். எதனைச் சக்ஷுவினாற் காண்கிறதில்லையோ, எதனால் சக்ஷுவிந்திரியம் காண்கின்றதோ, அதனையே பிரஹ்ம மென்று நீ அறி.” என்னு மிவை முதலியன கேனம்,

“ स्वतः शिवः पशुपतिः साक्षी सर्वस्य सर्वदा ७
सर्वेषां तु मनस्तेन प्रेरितं नियमेन तु ।
विषये गच्छति प्राणश्चेष्टते वाग्वदत्यपि ॥ ८ ॥
चक्षुः पश्यति रूपाणि श्रोत्रं सर्वं शृणोत्यपि ।
अन्यानि खानि सर्वाणि तेनैव प्रेरितानि तु ॥ ९ ॥

स्वं स्वं विषयमुद्दिश्य प्रवर्तन्ते निरन्तरम् ।
प्रवर्तकं चाप्यस्य मायया न स्वभावतः ॥ १० ॥
श्रोत्रमात्मनि चाध्यस्तं स्वयं पशुपतिः पुमान् ।
अनुप्रविश्य श्रोत्रस्य ददाति श्रोत्रतां शिवः ॥ ११

சிவமாகிய பசுபதி தானே எப்போதும் எல்லாவற்றின் சாக்ஷியாவன் எல்லோருடைய மனமும் அதனாற் பிரேரிக்கப்பட்டதாய் நியமமாக விஷயங்களிற் செல்லுகின்றது. பிராணன் சேஷ்டிக்கின்றது. வாக்குப் பேசுகின்றது. சக்ஷு ரூபங்களைப் பார்க்கின்றது. சுரோத்திரம் எல்லாவற்றினையும் கேட்கின்றது. மற்றவிந்திரியங்களெல்லாம் அவனாலேயே பிரேரிக்கப்பட்டனவாய் தத்தம் விஷயங்களை யுத்தேசித்து நிரந்தரம் பிரவர்த்திக்கின்றன. இப்பதியின் பிரவர்த்தகமும் மாயையினாலாம்; ஸ்வபாவமாகவன்று. பசுபதியாகிய புருஷனான சிவன் தன்னிடத்து அத்தியஸ்தமான சுரோத்திரத்தினைத் தானே தொடர்ந்து பிரவேசித்துச்சுரோத்திரத்திற்குச் சுரோத்திருத்தன்மையினைத் தருகின்றான்." என்பன முதலிய பாசுபதப்பிரஹ்மோபநிஷதம்.

"अज्ञो जन्तुरनीशोऽयमात्मा यस्माद्द्विजर्षभाः ।
सोपि सापेक्ष एव स्यात्स्वप्रवृत्तौ घटादिवत् ॥

த்விஜசிரேஷ்டர்களே! இவ்வாத்மா எதனால் ஞானமின்றியதும் ஈசத்துவமின்றியதுமான ஜந்துவாயிருக்கின்றதோ, ஆதலால் அதுவும் தனது பிரவிருத்தியில் கடாதிகளைப் போல மற்றொன்றன் அபேக்ஷையுடையதேயாம்" என்னும் பௌஷ்கரம்.

"पशुत्वारूढचिच्छक्तेः स्वातंत्र्यं न पशोरतः ।
कर्मचिद्रहितं तस्माद्योजकं तदपेक्षते ॥
योजकस्स महेशानः स्वेच्छया बलवान्यः ॥

பசுத்துவமேறிய சிற்சக்தியான பசுவுக்கு சுவதந்திரத்துவமில்லை. அதனாற் கர்மஞானமின்றியதாம். ஆதலால் அது யோஜ(பிரேர)கனை அபேக்ஷிக்கின்றது. யோஜகன் எவனோ அவன் ஸ்வேச்சையினால் பலவானாகிய மகேசனவன்." என்னும் பராக்கியம்.

"सर्वावभासकः प्रोक्तस्तेन भातमिदं जगत् ।
अतोरूपाणि तेनैव पश्यतीशेन मानवः शृणोत्यनेन ॥

எல்லாவற்றையும் விளக்குபவ னெனப்படு கின்றான். அவனால் விளக்கப்பட்டதாம் இச் சகத்து. ஆதலால் மானவன் அவ்வீசனாலே ரூபங்களைக் காண்கின்றான். சப்தங்களை அவ னாற் கேட்கின்றான்.'' என்றல்முதலிய பிரஹ்ம கீதை ௩-ம் அத்யாயம்.

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே" என்னும் தேவாரப்பா,

"விளம்புமா விளம்பே. நினையுமா நினையே. விரும்புமா விரும்பே. தொடருமா தொடரே. நுகருமா நுகரே." என்னும் திருவிசைப்பா,

"அறிவானுந்தானே யறிவிப்பான்றானே. அறிவாயறிகின்றான்றானே" என்னும் காரைக் காலம்மையார் அற்புதத்திருவந்தாதி,

"காணவுளத்தைக் கண்டுகாட்டலின்" சிவ ஞானபோதம் கக-ம் சூத்திரம்,

"அறிதருஞ்சிவனேயெல்லா மறிந்தறிவித் துநிற்பன்" என்றும்,

"காட்டிக்கண்டிடுமாபோலக் காட்டிக்கண் டிடுவன்" என்னும் சிவஞானசித்தியார்,

"அக்கரங்கட்கெல்லா மகரவுயிர்நின்றாற் போன்; மிக்கவுயிர்க்குயிராய் மேவினே—மெக் கண்ணு; நில்லாவிடத்துயிர்க்கு நில்லாதறி வென்று; நல்லாகமமோதுநாடு." என்னும் உண்மைவிளக்கம் இவை முதலிய வாக்கியங் கள் கூறுவது காண்க.

அங்ஙனம் அறியினும் தானோர் விகாரமு மின்றி யிருப்பனென்று காந்ததிருஷ்டாந்தத் தால் கூறியதுபோலவே

"सूर्यो यथा सर्वलोकस्य चक्षुर्न लिप्यते चाक्षुषै र्बाह्यदोषैः । एकस्तथा सर्वभूतान्तरात्मा नलिप्यते लोकदुःखेन बाह्यः ॥

எப்படி சர்வலோகத்தின் சக்ஷுஸ்வான சூரி யன் சக்ஷுஸ்சம்பந்தமான பாகியதோஷங்க ளாற் பற்றப்படானோ, அப்படி ஒருவனான சர் வபூதாந்தராத்மா லோகதுக்கத்தினால் அவற் றின் புறம்பானவனாய்ப் பற்றப்படான்." என் னும் கடவல்லி,

"अत्रायं पुरुषः स्वयंज्योतिः ।
असंगो ह्ययं पुरुषः ॥

இங்கு இப்புருஷன் ஸ்வயம்ஜோதி. இப்புருஷன் அசங்கன்." என்னும் பிருகதாரணியகம்,

"आदित्यसन्निधौ लोकश्चेष्टते स्वयमेव तु ।
तथा मत्सन्निधावेव समस्तं चेष्टते जगत् ॥

சூரியன் சந்நிதியில் எப்படி உலகம் தானே சேஷ்டிக்கின்றதோ, அதுபோல் என்சந்நிதியில் சமஸ்தஜகத்தும் சேஷ்டிக்கின்றது." என்னும் வராகோபநிஷதம், ந-கச.

"यथार्को दिनचेष्टानां सन्निधेरुपकारकः ।
तथा सन्निधिमात्रेण विदधात्यखिलंशिवः ॥

எப்படிச் சூரியன் சந்நிதிமாத்திரத்தால் பகலில் நடக்கும் வியாபாரங்கட்கு உபகாரகனாகின்றானோ, அதுபோல சிவன் சந்நிதிமாத்திரத்தால் எல்லாவற்றையும் செய்கின்றார்." என்னும் பௌஷ்கரம்.

"மாயையைக் கடிந்தவான்மா மாயையாஞ் சகத்தைதானு, மோய்வற நடத்தேனென்னை யின்றிமற் றதுவுமொல்லா; தாயவையென்கோ லென்னிற் காந்தமுன் னூசியேபுற வென்

முனிந்த விருஞ்சக நடக்குமன்றே" என்றும் கூர்மபுராணமுதலியனவும் கூறியது காண்க.

இதனுல் சிவனொருவனே ஸ்வயம்பிரகாச வடிவ சுவதந்திரஞானஸ்வரூப னென்பது அறிவிக்கப்பட்டது. (ரு)

ஆறும் சூத்திரம்.

(அ-கை) ஆத்மாவிற் குபகாரகனுன சிவனது சிறப்பியல்பாகிய சொரூபலக்ஷணம் யாதெனக் கூறுகின்றுர் :—

अदृश्यं चेदसद्भावो दृश्यंचेज्जडिमा भवेत् ।
शंभोस्तद्व्यतिरेकेण ज्ञेयं रूपं विदुर्बुधाः ॥ ६ ॥

(இ-ள்) शंभोः रूपं= சம்புவாகிய (சுகஸ்வரூபனுன) சிவனது ரூபம், अदृश्यं चेत्= அதிருசியம் (காணப்படாதது) எனின், असद्भावः= அசத்துத்தன்மையாம் (மலடிமைந்தன்போல் ஸ்வரூபமின்றியதன்மையாம்), दृश्यं चेत्= திரு

சியம்(காணப்படுவது) எனின், जडिमा भवेत् = ஜடத்(அறிவின்றிய)தன்மையாம். तद्व्यतिरेकेण = அவ்விரண்டன் வேருக அதாவது சத்துத்தன்மை சித்துத்தன்மையாக, ज्ञेयं = அறியத்தக்கதா மென்று, बुधाः विदुः = அறிஞர் அறிவர் (எ-று).

எது முக்காலத்தும் பாதிக்கப்படாத சத்துரூபமும் குன்றுப்பிரகாசமான சித்துருபமுமாமோ அதுவே மேலான பிரியத்திற்கு விஷயமாகும் ஆநந்தரூபமாம். அவ்வாநந்தத்தன்மைலக்ஷணத்தினைச் சம்புவென்னும் பதத்தால் அறிவித்தமையும் காண்க. சத்தெனும் பதம் முக்காலத்து மிருத்தற்றன்மையாகிய நித்தியத்துவத்தினையும், இருக்கிறது இருக்கிறது என்னும் வடிவத்தால் எங்கு மிருத்தற்றன்மையாகிய பூர்ணத்துவத்தினையும், உண்மையில் சத்தின்வேருனவஸ்து வின்மையால் அநந்தத்தன்மையினையு மறிவித்தல் காண்க.

இவ்வாறே பிறவிலக்கணங்களையும் சத்வசித்வங்களால் ஊகித்தறிக.

இதனல் அவாங்மனோகோசரமாயினும் சிவத்தின்ரூபம் பிரபஞ்சலக்ஷணமான அசத்துவ

ஜடத்துவ துக்கத்துவ முதலியவற்றை நிஷேதிக்கும்வாயிலாக அவற்றின் வேருயது என்றறிவிக்கப்பட்டது.

அதனை,

" सत्यं ज्ञानमनन्तं ब्रह्म ॥

சத்தியம் ஞானம் அநந்தம் பிரஹ்மமாம்" என்று கடம் உ-க-ம்,

आनन्दं ब्रह्मणो विद्वान्

பிரஹ்மத்தின் ஆநந்தத்தினை யறிந்தவன்" என்றும் கடம் உ-கூ-ம்,

" आनन्दो ब्रह्मेति व्यजानात् ।

ஆநந்தம் பிரஹ்ம மென்று விசேஷமா யறிந்தான்" என்னும் கடம் ங-சூ-ம்,

सत्यज्ञानमनन्तमानन्दं ॥ सत्यमविनाशि । अविनाशि नाम देशकालवस्तुनिमित्तेषु विनश्यत्सु यन्न विनश्यति तदविनाशि । ज्ञानं नामोत्पत्तिविनाशरहितं नैरन्तर्यं चैतन्यं ज्ञानमित्युच्यते ॥ अनन्तं नाम मृद्वि

कारेषु मृदिव स्वर्णविकारेषु स्वर्णमिव तन्तुविकारेषु तन्तुरिवाऽव्यक्तादि सृष्टिप्रपंचेषु पूर्णं व्यापकं चैतन्यमनन्तमित्युच्यते ॥ आनन्दं नाम सुखचैतन्यरूपोऽपरिमितानन्दसमुद्रोऽवशिष्टसुखस्वरूपश्चानन्द इत्युच्यते ॥

பிரஹ்மம் சத்தியம் ஞானம் அநந்தம் ஆநந்தமாம். சத்தியம் அவிநாசி. அவிநாசியாவது தேசகாலவஸ்து நிமித்தங்கள் நசிக்குமிடத்து எது நசிக்கிறதில்லையோ, அஃது அவிநாசி. ஞானமாவது உற்பத்திநாசமில்லாத இடையீடின்றிய சைதன்னியம் ஞானமெனப்படும். அநந்தமாவது மண்விகாரங்களில் மண்ணினைப்போலவும், சுவர்ணவிகாரங்களில் சுவர்ணத்தினைப்போலவும், நூல்விகாரங்களில் நூலினைப்போலவும் அவ்வியக்தாதி சிருஷ்டிப்பிரபஞ்சங்களில் பூர்ணவியாபகமான சைதன்னியம் அநந்தமெனப்படுகின்றது. ஆநந்தமாவது சுகசைதன்னியஸ்ரூபமும் அபரிமித ஆநந்தசமுத்திரமுமான அவசிஷ்டசுகஸ்வரூபம் ஆநந்தமெனப்படுகின்றது." என்னும் சர்வஸாரமும்,

" नित्यशुद्धविमुक्तैकमखण्डानन्दमद्वयम् ।
सत्यं ज्ञानमनन्तं यत्परं ब्रह्माहमेवतत् ।

आनन्दरूपोऽहमखण्डबोधः ।
परात्परोऽहं घनचित्प्रकाशः ॥

நித்தியசுத்தமும் விமுக்தமும் ஏகமும் அகண்டாநந்தமும் அத்வயமும் சத்தியமும் ஞானமும் அநந்தமுமான பரம்பிரஹ்ம மெதுவோ அது நானே. அகண்டபோதனுன ஆநந்தரூபன் யான். கனசித்பிரகாசனுன பராத்பரன் யான்" என்னும் வராகோபநிஷதம் உ-ம் அத்யாயமும்,

" निष्कलं निर्गुणं शान्तं निर्विकारं निराश्रयम् ।
निर्लेपकं निरापायं कूटस्थमचलं ध्रुवम् ॥

ज्योतिषामपि तज्ज्योतिस्तमःपारे प्रतिष्ठितम् ।
भावाभावविनिर्मुक्तम् ॥

நிஷ்களமும், நிர்குணமும், சாந்தமும், நிர்விகாரமும், நிராசிரயமும், நிர்லேபகமும், நிராபாயமும், கூடஸ்தமும், அசலமும், துருவமும், ஜோதிகட்கெல்லாம் ஜோதியும், இருளிற்கப்புறத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டதும், பாவாபாவங்களினின்று விடுபட்டதுமாம்." என்னும் யோகசிகோபநிஷதம் உ-ம் அத்யாமும்,

" निष्कलं निष्क्रियँ शान्तं निरवद्यं निरञ्जनम् ।
अमृतस्य परँ सेतुं दग्धेन्धनमिवानलम् ॥

நிஷ்கலமும், நிஷ்கிரியமும், சாந்தமும், நிரவத்யமும் (குற்றமற்றதும்), நிரஞ்சனமும், அமிருதத்தின் பாமும், சேதுவும், எரிந்த இந்தனம்போன்ற அநலமுமாம்." என்னும் சுவேதாசுவதரம் சு-ம் அத்யாயமும்,

" सत्यज्ञानात्मकोनन्तो विभुरात्मा महेश्वरः ।

சத்தியஞானவடிவினதும், அநந்தமும், விபுவுமான ஆத்மா மகேசுவரன்." என்னும் சிவகீதை, உ-ம் அத்யாயமும்,

" सत्यं ज्ञानमनन्तश्च चिदानन्द उदाहृतः ॥
निर्गुणो निरुपाधिश्च निरञ्जनोऽव्ययस्तथा ॥

சத்தியமும், ஞானமும், அநந்தமும், சிதாநந்தமும், நிர்குணமும், நிருபாதியும், நிரஞ்சனமும், அவ்வியயமுமாக உதாகரிக்கப்பட்டுளது" என்னும் சிவபுராணஞானசங்கிதை எசு-ம் அத்யாயமும்,

" सच्चिदानन्दरूपत्वं वदति ब्रह्मणः श्रुतिः ॥

असन्निवर्तकः शब्दः सदात्मेति निगद्यते ।
निवर्तनं जडत्वस्य चिच्छब्देन विधीयते॥

शिवशक्त्योस्तु संयोगादानन्दः सततोदितः ॥

பிரஹ்மத்திற்குச் சச்சிதாநந்தரூபத்துவம் சுருதி கூறுகின்றது. அசத்தினை நிவர்த்திக்கும் சப்தம் சத்து ஆத்மா வென்று சொல்லப்படுகின்றது. ஜடத்துவத்தினை நிவர்த்தித்தல் சித்துசப்தத்தினால் விதிக்கப்படுகின்றது. சிவசக்திகளின் ஸம்யோகத்தினால் ஆநந்தம் சந்தத முதித்ததாம்." என்னும் சிவபுராணம் கைலாசஸங்கிதை கO-ம் அத்யாயமும்,

" अस्तिकश्चित्स्वतः सिद्धः सत्यज्ञानसुखाद्वयः ।
विश्वस्य जगतः कर्ता पशुपाशविलक्षणः ॥

எல்லா ஜகத்திற்கும் கர்த்தா பசுபாசவிலக்ஷணனும், ஸ்வதசித்தனும், சத்தியஞான சுகாத்வயனுமான ஒருவனுளன்." என்னும் சூதகீதை உ-ம் அத்யாயமும்,

" निरंजनं निष्प्रतिमं निरीहमदृश्यमग्राह्यमचिन्त्यरूपम् ॥

நிரஞ்சனமும், உவமமின்றியதும், இச்சையின்றியதும், நிருசியமல்லாததும், கிரகிக்கப்படாததும், சிந்தித்தற்கரிய ரூபமுடையதுமாம்." என்னும் தேவிகாலோத்தரமும்,

" परमं शाश्वतं सत्यज्ञानानन्दसुखात्मकम् ।
वाच्यवाचकराहित्यं वाङ्मनोतीतगोचरम् ॥

பரமும் சாசுவதமும் சத்தியஞானாநந்தசுக வடிவினதும் வாச்சியவாசகமின்றியதன்மையினதும் வாக்குமனதுகட்கப்பால்விஷயமாவதுமாம்." என்னும் அசிந்தியவிசுவசாதாக்கியமும்,

" शिवं परात्परं सूक्ष्मं नित्यं सर्वगताव्ययम् ।
अचिन्तितमनौपम्यमप्रमेयमनामयम् ॥

சிவமும், பராத்பரமும், சூக்ஷ்மமும், நித்தியமும், எல்லாவற்றி னிருப்பதான அவ்வியயமும், சிந்திக்கப்படாததும், உவமிக்கப்படாததும், அப்பிரமேயமும் (பிரமாணத்தாலறியப்படாததும்), அநாமயமும் (நோயின்றியதும்)." என்று வாதுளமும்,

"அநாதியமலன் சச்சிதாநந்தன் சுத்தனென்றுதிசிவனேகனுளனென்று" என்னும் சை

வசமயநெறியுமான இவைமுதலிய பிரமாணங்களாற் காண்க.

இதனால் துவம்பதலக்ஷியமான சித்தே தத்பதலக்ஷியமான சிவ மென்ப தறிவிக்கப்பட்டது. (சூ)

---

## ஏழாம் சூத்திரம்.

(அ-கை) பிரபஞ்சத்திற்கும் சுத்தசித்திற்கும் பந்தமோக்ஷாநுபவம்கூடாமையின் அவற்றை யநுபவிப்பது யாதெனக் கூறுகின்றார்:—

नाचिच्चित्सन्निधौ किंतु न वित्तस्ते उभे मिथः ।
प्रपञ्चशिवयोर्वेत्ता यः स आत्मा तयोः पृथक् ॥ ७ ॥

(இ-ள்) अचित् அசத்தான ஜடப்பிரபஞ்சம், चित्सन्निधौ= சத்தாகிய சித்ரூபசிவத்தின்முன், न=பிரகாசியாது, ते उभे=பிரபஞ்சம் சிவ மென்னும் அவ்விரண்டும், मिथः= ஒன்றனை யொன்று न वित्तः=அறியா. प्रपंचशिवयोः= பிரபஞ்சம் சிவ

பிரண்டினையும், वेत्ता यः = உணர்பவன் எவனோ, सः आत्मा = அவ்வாத்மா, तयोः पृथक् = ஜடசித்துக்களின் வேறும். (எ-று)

சித்தாகிய சிவம், சுட்டறிவின்மையாலும், சூரியன்முன் இருள்போல் தன்முன் பிரபஞ்சம் பிரகாசியாமல் அசத்தாதலாலும் பிரபஞ்சத்தினை யறியாது. பிரபஞ்சம் கேவலம் அறிவின்றிய ஜடமாகலின் சிவத்தினை யறியாது. ஆதலால் ஜடமாகியஅசத்து சித்தாகியசத்து என்னும் இரண்டன்வேறான அதாவது சதசத்துவடிவ ஆத்மா இரண்டனையும் உணரும். எனவே பந்தமோக்ஷங்களைச் சித்ஜடமல்லாத சித்துபோலியான ஜீவனே அநுபவிப்பவன் எனச் சித்தித்தது. அவன் பிரபஞ்சத்தினைநோக்க சத்தும் சித்துமாதலாலும் சிவத்தைநோக்க அசத்தும் ஜடமுமாதலாலும் அவனுக்குச் சதசத்ரூபமும் சிற்சடரூபமும் வடிவாமென்று கூறுவர்; பளிங்குபோல் சித்தைச் சார்ந்தபோது சித்துவடிவமும் அசத்தைச் சார்ந்தபோது அசத்துவடிவமு மாதலால். அல்லது அஞ்ஞானதசையில் ஜீவத்துவத்தோடிருத்தலின் ஜீவனுளனென்று சத்ரூபனும், அஞ்

ஞானநீங்கிய முக்திதசையில் ஜீவத்துவநீங்கிச் சிவமாதலின் ஜீவனிலனென்று அசத்ரூபனுயு மிருத்தலால் சதசத்ரூபனு மென்பர். இவ்வா றன்றி ஒரேகாலத்தில் ஒருதர்மியில் விருத்த மான இரண்டு தர்மங்களிருத்தல் பொருந் தாமை காண்க. அன்றியும், சிற்சடங்களுக்கு வேறானது எனவே சித்தும் ஜடமு(சத்தும் அசத்து)மான இருவடிவத்தினைக்கொள்ளுத லும் பொருந்தாது. இதுபற்றியே சூரியனைச் சார்தற்கும் சூரியனால் விளக்ககூடாத விஷயங் களை விளக்குதற்கும் யோக்கியமான கண்ணடி முதலிய உபாதியா னமைந்த சூரியச்சாயையி னைப்போல சிவத்தினைச் சார்வதற்கும், சிவத்தி னாற்சுட்டி யறியப்படாத விஷயங்களை அறிவ தற்கும் யோக்கியமான சுட்டுணர்வாகிய ஜீவ னைச் சிதாபாஸன் (சித்துப்போலி) என்றும் சிற் பிரதிபிம்ப னென்றும், சிற்சாயை யென்றும் சுருதியாதிகள் கூறுகின்றன.

" अज्ञानात्तु चिदाभासो बहिस्तापेन तापितः ।
दग्धं भवत्येव तदा तूलपिण्डमिवाग्निना ॥

அஞ்ஞானத்தினால் சிதாபாஸன் வெளித்தாபத் தினால் தபிக்கப்பட்டவனாய் அப்போது அக்னி

யினால் பஞ்சுப்பொதிபோலத் தகிக்கப்பட்டவனை யாகின்றான்." என்னும் யோககுண்டலியுபநிஷதமும்,

இதனை "யாவையுஞ்சூநியஞ்சத்தெதிராகலிற்; சத்தேயறியா தசத்திலதறியா; திருதிறனறிவுள திரண்டலவான்மா." என்று மெய்கண்டதேவநாயனாரும்,

"நன்றாவுரைக்கக்கே ணல்லசித்தின்முன்னசித்திங்; கொன்றாது சித்தசித்தை யோராது—நின்றிவற்றை; யன்றேபகுத்தறிவ தான்மாவேயென்றுமறை; குன்றாமலோதுங்குறித்து." என்று மானவாசகங்கடந்த தேவருங்கூறியது காண்க. (எ)

---

## எட்டாம் சூத்திரம்.

(அ-கை) பிரபஞ்சத்தை நோக்கித் தன்மயமாய்ப் பந்தப்பட்டுள்ள இவ்வான்மா சிவத்தினையடைத லெவ்வா றெனக் கூறுகின்றார்:—

स्थित्वा सहेन्द्रियव्याधैस्त्वां न वेत्सीति बोधितः ।
मुक्त्वैतान्गुरुणानन्यो धन्यः प्राप्नोति तत्पदम् ॥८॥

धन्यः = அநேகஜன்மார்ஜித சுகிருதவானான தன்னிய(பாக்கியவா)ன், गुरुणा = தம் முதல்வனான குருவினால், इन्द्रियव्याधैः सह स्थित्वा = இந்திரியங்களான வேடர்களோடு கூடியிருந்து, त्वां न वेत्सि = உன்னை நீ சிவமென்று அறிந்தாயில்லை, इति = என்று, बोधितः = போதிக்கப்பட்டவனாய், एतान् मुक्त्वा = இவ்விந்திரியவேடர்களை விட்டு, अनन्यः = அந்நிய மில்லாதவனாய், तत्पदम् = தற்பதமான சிவஸ்வரூபத்தினை, प्राप्नोति = அடைகின்றான். (எ-று)

அநேக ஜன்மங்களாற் செய்துவந்த சரியா கிரியா யோகங்களால் * கக. இருவினையொப்பு மலபரிபாகம் வந்த சத்திநிபாதத்துத்

---

*கக. இருவினையொப்பாவது அசுவமேதஞ்செய்த புண்ணியகர்மமும் பிரஹ்மஹத்திசெய்த பாவகர்மமுமாகிய இரண்டும் பக்குவப்பட்டு. ஒரேசமயத்தில் பயன் கொடுத்தற்கேது வாகுங்கால், அவை சுந்தோபசுந்த நியாயமாகத் தம்மாற்பாதிக்கப்பட்டொழிதலாம். எல்லாப்புண்ணியமும் எல்லாப்பாவமும் சமமாதல்என்பதுமொன்று. சாரதாமாய் நோக்குங்கால், நல்வினை

தமனுன உத்தமஜிஞ்ஞாசு வென்பது தோன்ற தன்ணியனென்ருர்.

சத்திநிபாதக்கிரமமானது

"सत्कर्मपरिपाकतो बहूनां जन्मनामन्ते नृणां मोक्षेच्छा जायते। तदा सद्गुरुमाश्रित्य चिरकालसेवया बन्धमोक्षं कश्चित्प्रयाति ॥

நல்வினையின் பரிபாகத்தினுல் வெகு ஜன்மங்களின் முடிவில் நரர்களுக்கு மோக்ஷேச்சை பிறக்கின்றது. அப்போது சற்குருவினை யாசி

---

தீவினை யிரண்டும் பந்தத்தினைத் தருவனவா மென்று இரண்டினையும் சமமாய்நோக்கி அவற்றி லுவர்ப்புண் டாதலே இருவினையோப்பாம்.

மலபரிபாகமாவது மலமாகிய அவித்தை தான் க்ஷயமாதற்குரிய சாமக்கிரிகளோடு பொருந்துதலாம்.

சத்திநிபாதமாவது திரோபவசக்தியாகிய நிக்கிரகமே மலபரிபாகத்தில் அநுக்கிரகவடிவ அருட்சத்தியாய் அத்மாவினிடத்துச் செவ்வையாய் வீழ்தலாம் (சத்தி சிவசக்தியின், நி = ஏற்றமான, பாதம் = வீழ்ச்சி.) சத்திநிபாதமும் மலபரிபாக தாரதம்மியத்தால் தீவிரதரம், தீவிரம், மந்தம், மந்ததரமென நால்வகைப்படும். அவற்றினிலக்கணங்களைப் பிறவிடங்களிற் காண்க.

ரயித்து நெடுங்கால சேவையினால் ஒருவன் பந்தமோக்ஷத்தினை யடைகின்றான்" என்று பைங்கலோபநிஷத்தும்,

"मायया मोहितः पश्चाद्बहुजन्मान्तरे पुनः ।
सत्कर्मपरिपाकात्तु स्वविचारं चिकीर्षति ॥

மாயையினால் மோகிக்கப்பட்டவனாய் பின் வெகு ஜன்மங்கட்குப்பிறகு மறுபடியும் நல்வினையின் பரிபாகத்தால் தனது விசாரத்தினைச் செய்யவிரும்புகின்றான்" என்று யோககுண்டலியுபநிஷத்தும்,

"सकलानां च सर्वत्र कर्मसाम्यं न कारणम् ।
यतः कर्मसमत्वेऽपि तदन्येषांतु कर्मणाम् ॥

अपाके परमेशाज्ञा विरुद्धान्यप्रदास्थिता ।
कर्मणोऽप्यस्य साम्ये वा पक्के तदितरेपि च ॥

तं प्रत्येवैश्वरी शक्तिरूपसर्पति तच्चिते ।
अनुग्रहे ततो नेष्टं तत्साम्यं मुनिपुंगवाः ॥

कर्मनाशान्मलस्यापि विपाके सहकारिणः ।
पतत्युन्मीलिनीशक्तिस्तदनुग्रहरूपिणी ॥

तस्यां पतितमात्रायां मलस्याधोनियामिका ।
शक्तिर्निवर्तते तस्यां निवृत्तायां महात्मनः ॥
वैराग्यं जायते क्षिप्रं संसाराद्दुःखसागरात् ।
दिदृक्षा जायते शंभोः पादपंकजयोरपि ॥
कदा द्रक्ष्यामि देवेशं मोक्षेऽहं बन्धतः कदा ।
को वा दर्शयिता शंभोरिति संजायते मतिः ॥

சகலர்களுக்கு எங்கும் கர்மஸாம்யம் காரணமன்று. எதனாலெனின், கர்மஸாம்யமுள போது அதனின்வேறான கர்மங்கட்குப் பாகமில்லாதபோது பரமேசனாஞ்ஞை விருத்தமான வேறொன்றனைத் தருவதாய் நிற்கின்றது. இக்கர்மத்திற்குச் சாமியமுண்டாய் அதனின் வேறாயது பக்குவமானபோது, அதனைக்குறித்தே ஈசுவரீசக்தி அப் பக்குவகர்மத்தின் பொருட்டு நெருங்குகின்றது. ஆதலால் முனிபுங்கவர்களே! அநுக்கிரகத்தில் அக் கர்மசாமியம் இஷ்டமன்று. கர்மநாசத்தினால் சககாரியான மலத்தின் பரிபாகமு முளபோது அவ்வநுக்கிரகவடிவினதான விழித்தற்சக்தி பதிகின்றது. அது பதிந்தமாத்திரத்தில் மலத்

தின் கீழ்ச்செலுத்தும் சக்தியானது நீங்குகின்றது. அஃது நீங்கவே விரைவில் சம்ஸாரதுக்கசாகரத்தின் வைராக்கியம் பிறக்கின்றது. சம்புவினது பாதபங்கயங்களின் தரிசனேச்சையு முண்டாகின்றது. தேவேசனை என்று காண்பேன்? பந்தத்தினின்று யான் எப்போது விடுபடுவேன்? சம்புவினைக்காட்டுபவர் யாவர் என்னும் மதி பிறக்கின்றது."

"एवं संसारतो भीतमनुगृह्णाति चेश्वरः ।
तद्योग्यतानुसारेण करुणया गभया दृशा ॥

இவ்வாறு சம்ஸாரத்தின் அஞ்சியவனை ஈசுவரன் கருணையுட்பொதிந்த திருஷ்டியினால் அவன் யோக்கியதையை யநுசரித்து அநுக்கிரகிக்கின்றார்." என்று பௌஷ்கரத்தும்,

"एषां शरीरिणां शक्तिः पतत्यपि निवृत्तये ।
तेषां तल्लिंगमौत्सुक्यं मुक्तौ द्वेषो भवस्थितौ ॥
भक्तिश्च शिवभक्तेषु श्रद्धा तच्छासके विधौ ।

எச்சரீரிகட்கு நிவிருத்தியின்பொருட்டுச் சக்தி பதிகின்றதோ, அவர்கட்கு அதன்குறி முத்தியில் உற்சாகத்துவமும், சம்ஸாரஸ்திதி

யில் துவேஷமும், சிவபக்தர்களிடத்துப் பக்தியும், அவராணையாகிய விதியில் விசுவாசமுமாம்''

"देहपातस्तथा कंपः परमानन्दहर्षणे ।
देहेरोमाञ्च इत्येतच्छाक्तिपातस्य लक्षणम् ॥

தேகம் வீழ்தல், நடுக்கமும் பரமாநந்தஹர்ஷத்தில் தேகத்து மயிர்க்குச்சுண்டாதல் என்னுமிது சக்திபாதத்தின் லக்ஷணமாம்.'' என்று மிருகேந்திரத்தும் பிறவிடத்தும்.

"பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு, மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த; விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்; மருவுவனு ஞானத்தை வந்து.'' என்று சிவஞானபோத வெண்பாவினுலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

* உ0. குருவினையொழிந்து ஜீவனுக்குச் சுவதந்திரமாகச் சிவஞானம்பெற எல்லாவற்றுனு மாற்றலில்லை யென்பது தோன்ற குருவினு லுபதேசிக்கப்பட்டவனு யென்முர்.

---

*உ0. விசாரசந்திரோதயம் டிப்பணி கஅ. பார்க்க.

ஞானவாயிலாக முத்தியைப் பெறுதற்கு அருவனாயினும் கருணையினால் சகளீகரித்து வெளிப்படும் சிவமாகிய குருமூர்த்தியே பரம சாதன மென்பதனை இப்பிரமாணங்களாற் காண்க:—

"आचार्यवान् पुरुषो वेद ॥

ஆசாரியனையுடைய புருஷன் அறிகின்றான்" சாந்தோக்கியம் சு-ச-உ.

तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥

அதன் சாக்ஷாத்காரத்தின்பொருட்டு அவன் சமித்பாணியாய் சுரோத்திரியனும் பிரஹ்ம நிஷ்டனுமான குருவினையே சரணடைக." முண்டகம் க-உ-கஉ.

"गुरुवाक्यसमुद्भूतस्वानुभूत्यादिशुद्धया ।
यस्याभ्यासेन तेनात्मा सततं चावलोक्यते ॥

குருவாக்கியத்தினாற் செவ்வையா யுண்டாகிய சுவாநுபூதிமுதலிய சுத்தத்தினால் எந்

னப்பியாசமாகிய அதனால் ஆத்மா சந்ததம் அறியப்படுகின்றதோ" மகோபநிஷதம் ச-உ-கூ

"सद्ब्रह्मणि स्थिरे स्फारे पूर्णे विषयवर्जिते ।
आचार्यशास्त्रमार्गेण प्रविश्याशु स्थिरो भव ॥ शिवो गुरुः ।

"நிலையானது பெரிதும் பூர்ணமும் விஷயமின்றியதுமான சத்பிரஹ்மத்தில் ஆசாரிய சாஸ்திரமார்க்கத்தால் விரைவில் பிரவேசித்து ஸ்திரமுடையவனாகுக. சிவனே குரு" என்பது வராகசுருதி ச-ங-க.

"ज्ञानेनैव हि संसारविनाशो नैव कर्मणा ।
श्रोत्रियं ब्रह्मनिष्ठं स्वगुरुं गच्छेद्यथाविधि ॥३५॥
गुरुस्तस्मै परां विद्यां दद्याद्ब्रह्मात्मबोधिनीम् ॥

ஞானத்தினலேயே ஸம்சாரவிநாசமாம்; கர்மத்தினலன்று. ஆதலால் சுரோத்திரியனும் பிரஹ்மநிஷ்டனுமான தன் குருவை விதிப்படி சரணடைக. குரு அவனுக்குப் பிரஹ்மாத்மாவினைப் போதிக்கும் பாவித்தையினைக் கொடுக்க" என்பது ருத்ரஹ்ருதயோபநிஷத்.

" एवं यस्तु विजानाति स्वगुरो रुपदेशतः ।
स साध्वसाधुकर्मभ्यां सदा न तपति प्रभुः ॥

இவ்வாறு எவன் தன் குருவுபதேசத்தினால் சாக்ஷாத்கரிக்கின்றானோ, அந்தப் பிரபு சாது வசாது கர்மங்களால் எப்போதும் தபிக்கிற தில்லை." என்பது கடருத்ரோபநிஷதம்.

" गुरुवाक्यसमाभिन्ने ब्रह्मज्ञानं प्रकाशते ॥

குருவாக்கியத்தினால் தேகாதிபாசம் சிதைந்தபோது பிரஹ்மஞானம் பிரகாசிக்கின்றது."

" कर्णधारं गुरुं प्राप्य तद्वाक्यं प्लववद्दृढम् ।
अभ्यासवासनाशक्त्या तरन्ति भवसागरम् ॥

மீகாமனாகிய குருவினை யடைந்து படகு போல் அவன் வாக்கியத்தினைத் திடமாகக் கொண்டு அப்பியாசவாசனாசக்தியால் பவசாகரத்தினைக் கடக்கின்றனர்." என்பது யோகசிகோபநிஷதம் அத்யாயம் க.

" मामेवं वेदवाक्येभ्यो जानात्याचार्यपूर्वकम् ।
यः पशुः स विमुच्यते ज्ञानाद्वेदान्तवाक्यजात् ॥

இவ்வாறு என்னை வேதவாக்கியங்களால் ஆசாரியன்முன்னாக எப் பசு அறிகின்றானோ, அவன் (ஆசாரியோபதேசரூப) வேதாந்தவாக்கியத்தா லுண்டாகிய ஞானத்தினால் பந்தத்தினின்று விடுபடுகின்றான்" என்பது சூதசங்கிதை சிவமாகாத்மியகண்டம், அத்யாயம் உ.

"ईदृशी परमा निष्ठा श्रौती स्वानुभवात्मिका ॥
देशिकालोकनेनैव केवलेन हि सिध्यति ॥ ५४ ॥

இத்தன்மைய சுருதிசித்தமும் ஸ்வாநுபவ வடிவினதுமான பரமநிஷ்டை கேவலம் தேசிகனது * உக. பார்வையாகிய தீக்ஷையினாலேயே சித்திக்கின்றது." என்பது சூதகீதை, அத்யாயம் ரு.

---

*உக. ஆசிரியன் பாசநீங்குதற்குச் செய்யும் தீக்ஷை "சாக்ஷுஷீ, ஸ்பரிசதீக்ஷா, வாசகீ, மானஸீ, சாஸ்திரீ, யோகதீக்ஷா, ஹௌத்ரீ யென்று அநேகவிதமா" மென்று ஆகமங்களிற் சொல்லப்பட்டுளது. ஹௌத்ரீயும் ஞானவதீ கிரியாவதீ யென்று இருவகையாம்.

அவற்றுள், குண்டலமண்டலாதிகளை மனதினாலேயே பாவித்துச் செய்வது ஞானவதீ. புறத்தில் குண்டல மண்டலாதி சாதனங்களைக்கொண்டு செய்வது கிரியாவதீ. அவ்விரண்டும் மறுபடியும் நிர்ப்பீஜம் ஸபீஜமென இருவகைப்படும்.

" अयमेव हि संसारी मायया मोहितः पशुः ॥
शिवादभिन्नं न जगदात्मानं भिन्नमित्यपि ।
जानतोऽस्य पशोर्देवमोहोभवति न प्रभोः॥
यथैन्द्रजालिकस्यापि योगिनो न भवेद्भ्रमः ।
गुरुणा ज्ञापितैश्वर्यः शिवो भवति चिद्घनः ॥

இப்புருஷனே சம்ஸாரி. மாயையினால் மோகிக்கப்பட்ட பசு. தன்னைச் சிவத்தின் அபின்னமென்றென்றும் ஜகத்தினையும் தன்னையும் பின்னமென்றும் அறிகின்ற இப்பசுவிற்கு தேவனது போக முண்டாகின்றது. பிரபுவிற் குண்டாகிறதில்லை. இந்திரஜாலிகனுக்கும் யோகிக்கும் பிரம முண்டாகாதது போல குருவினால் அறிவிக்கப்பட்ட ஐசுவரிய முடையவனாய் சித்கனனான சிவனாகின்றான்." என்பது சிவ புராணம் கைலாஸசங்கிதை, அத்யாயம். கഠ.

---

"दीयते विमलं ज्ञानं क्षीयते कर्मवासना तेन दीक्षेति प्रोक्ताः ॥

விமலஞானம் கொடுக்கப்படுகின்றது கர்மவாசனை குறைகின்றது அதனால் தீக்ஷை யெனப்பட்டது என்பது தந்திரவசனம். இவற்றின் விரிவை ஆகமங்களிற் காண்க.

" स देशिकमनुप्राप्य दीक्षाविच्छिन्नबंधनः ।
प्रयाति शिवसायुज्यं निर्मलो निरुपप्लवः ॥
अनेन क्रमयोगेन परां केवलतां गतः ।
अनाद्यशुद्धिशून्यत्वात्प्राप्नोति न भवान्तरम् ॥

சத்திபதியப்பெற்ற அவன் தேசிகனைச் சரணடைந்து தீக்ஷையினாற் சேதிக்கப்பட்ட பந்தமுடையவனாய் நிர்மலமும் சலிப்பின்றியதுமான சிவசாயுச்சியத்தினை யடைகின்றான். இந்தக் கிரமயோகத்தினால் மேலான கேவலத்தன்மை(தனிமையானமுத்தி)யினை யடைந்தவனாய் அநாதிமல மின்மையால் வேறுபிறப்பினை யடையான்'' என்பது ஸ்வாயம்புவம்.

" मले निवर्तिते ज्ञानादीक्षया वा मुनीश्वराः ।
परमात्मेति विज्ञेयास्ततः केवलमश्नुते ॥

ஆசாரியனது தீக்ஷையினாலும் உபதேசவாக்கியஜந்நிய ஞானத்தினாலும் மலம் நீங்கியபோது முநீசுவரர்களே! பரமாத்மா வென்று அறியத்தக்கதாம், அதனால் கேவலத்தினை அநுபவிக்கின்றான்.'' என்பது காமிகம்.

"அகளமா யாரு மறிவரி தப்பொருள், சகள மாய் வந்ததென் றுந்தீபற; தானாகத் தந்ததென் றுந்தீபற." திருவுந்தியார்.

இங்கு ஓர் அரசகுமாரன் வேடர்வசப்பட்டு அறியாமையினால் தான் வேடனென்று கீழ்மை யடைந்திருந்தான் அவனை யோராப்தன் நீ வேடனல்லை, இராஜகுமார னென்றறிவிக்க அவ்வறியாமை நீங்கி முன்னரே சித்தித்துள்ள இராஜத்தன்மையினை யடைந்தான் (கர்ணன் போல) என்னும் திருஷ்டாந்தமும் தாஷ்டாந் தத்தில் பொருந்துமாறு இந்திரியங்களான வேடர்களோடுகூடியிருந்து என்று ரூபகப் படுத்திக் கூறினார்.

இந்திரியபதம்* ௨௨. பாசோபலக்ஷணமாம். முன்னமே சிவமாயிருந்த ஆத்மா பாசவசப் பட்டுச் சம்ஸாரியாய்ப் பின் உபதேசவாயிலா கப் பாசத்தினீங்கிச் சிவமாதலை பின்வரும் பிரமாணங்களாற் றெளிக.

---

*௨௨. பாசம் என்பது ஆணவம், மாயை, கர்மம் என் னும் மூன்றுமாம். மாயாகாரியமான மாயேயத்தினை யும், ஜீவனுக்கு ஜன்மாந்திர காரியமுதலியவற்றைத் தெரியாதவண்ண மறைப்பதான திரோதான மென்

அந்தப் பிரமாணங்களாவன :—

" निष्कलं निर्मलं शान्तं सर्वातीतं निरामयम् ।
तदेव जीवरूपेण पुण्यपापफलैर्वृतम् ॥ ८ ॥

परमात्मपदं नित्यं तत्कथं जीवतां गतम् ।
सर्वभावपदातीतं ज्ञानस्वरूपं निरञ्जनम् ॥ ९ ॥

वारिवत्स्फुरितं तस्मिंस्तत्राहंकृति रुत्थिता ।
पञ्चात्मकमभूत्पिण्डं धातुबद्धं गुणात्मकम् ॥ १० ॥

सुखदुःखसमायुक्तं जीवनभावनया कुरु ।
तेन जीवाभिधा प्रोक्ता विशुद्धे परमात्मनि ॥ ११ ॥

कामक्रोधभयं चापि मोहलोभमदो रजः ।
जन्ममृत्युश्च कार्पण्यं शोकस्तन्द्रा क्षुधा तृषा ॥ १२ ॥

---

னும் சிவசக்தியுமாகிய இரண்டனையும் கூட்டி ஐந் தென்றும் கூறுவர். இப்பாசத்தினையே மலமென்பர்.

"पाश्यते बध्यते येन पशुः = எதனால் பசு பாசப் படு(கட்டப்படு)கின்றதோ அது பாசம்" என்பத னால் பாச மென்றும், அநாதியான சுத்தத்தன்மை யினை மறைத்தலால் மல மென்றும் வியவகரிக்கப்படும்.

तृष्णा लज्जा भयं दुःखं विषादो हर्ष एव च ।
एभिर्दोषैर्विनिर्मुक्तः स जीवः केवलो मतः ॥१३॥

நிஷ்கலமும், நிர்மலமும், சாந்தமும், சர்வாதீதமும், நிராமயமுமான அதுவே ஜீவரூபத்தால் புண்ணியபாபங்களால் சூழப்பட்டதாம். நித்தியமான பரமாத்மபதமாகிய அது எவ்வாறு ஜீவத்துவ மடைந்தது? சர்வபாவபதங்கட்கப்பாற்பட்டதும், ஞானரூபமும், நிரஞ்சனமுமான அதன்கண் ஜலத்திற்போல ஸ்புரணமுண்டாயிற்று. அங்கு அகங்காரம் எழுந்தது. ஐந்துவடிவினதும் தாதுக்களால் யாக்கப்பட்டதும், குணவடிவினதுமான பிண்ட முண்டாயிற்று. சுகதுக்கங்களோடுகூடியதனை ஜீவபாவனையாகச் செய் அதனால் விசுத்தமான பரமாத்மாவில் ஜீவனென்னும் பெயர் சொல்லப்பட்டது. காமம், குரோதம், பயம், மோகம், லோபம், மதம், இராஜசு, பிறப்பு, மரணம், கிருபணத்துவம், சோகம், தந்திரை (சோம்பல்) பசி, தாகம், திருஷ்ணை (ஆசை), நாணம், பயம், துக்கம், விஷாதம் (மனக்கலக்கம்), ஹர்ஷம் (மகிழ்ச்சி) யென்னும் இத்தோஷங்களி னின்று விடுபட்டவனான அச்சீவன் கேவல (சிவ) னாக

மதிக்கப்படுகின்றான்" என்னும் யோகதத்துவோபநிஷதம்,

"स एव मायापरिमोहितात्मा
शरीरमास्थाय करोति सर्वम् ।
स्त्रीयन्नपानादि विचित्रभोगैः
स एव जाग्रत्परितृप्तिमेति ॥ १२ ॥

स्वप्ने स जीवः सुखदुःखभोक्ता
स्वमायया कल्पितजीवलोके ।
सुषुप्तिकाले सकलेविलीने
तमोऽभिभूतः सुखरूपमेति ॥ १३ ॥

पुनश्च जन्मान्तरकर्मयोगा
त्सएव जीवः स्वपिति प्रबुद्धः ।
पुरत्रयेक्रीडति यश्च जीव
स्ततः सुजातं सकलं विचित्रम् ॥
आधारमानन्दमखण्डबोधं
यस्मिल्लयं याति पुरत्रयं च ॥ १४ ॥

மாயையினால் மோகிக்கப்பட்ட அவனே சரீரத்தினைக்கொண்டு எல்லாவற்றினையும் செய்கின்றான், ஸ்திரீ அந்நபானாதி விசித்திரபோகங்களால் அவனே ஜாக்கிரத்தில் திருப்தியினை அடைகின்றான். சொப்பனத்தில் தனது மாயையினாற் கற்பிக்கப்பட்ட ஜீவலோகத்தில் சுகதுக்கங்களைப் புசிப்பவனாய்ச்சுழுத்தியில் யாவுமொடுங்கியபோது அஞ்ஞானத்தாலமிழ்த்தப்பட்டவனாய்ச் சுகரூபத்தினை யடைகின்றான். மறுபடியும் ஜன்மாந்திரகர்மயோகத்தினால் விழித்துள்ளவனான அச்சீவனே உறங்குகின்றான். எச்சீவன் புரமூன்றிலும் கிரீடிக்கின்றானோ, அவனிடத்திலிருந்து சகலவிசித்திரமுமுண்டாயிற்று. புரமூன்றும் எதிலொடுங்குகின்றதோ, அது ஆதாரமும் ஆநந்தமும் அகண்டபோதமு மாம்." என்னும் கைவல்யோபநிஷதம்.

"अविज्ञातः पशुःसो हि सृष्टिधर्मसमाश्रितः ।
विज्ञातः शाश्वतः शुद्धः स शिवो नात्र संशयः ॥

அறியாத பசுவாகிய அவனே சிருஷ்டிதர்மத்தினைச் செவ்வையாய் ஆசிரித்தவனாகின்றான், சாக்ஷாத்கரிக்கப்பட்டபோது அவன்

சாசுவதமான சுத்தசிவனுகின்றான். இதிற் சம்சய மில்லை."

" सर्वज्ञता तृप्तिरनादिबोधः
स्वतन्त्रता नित्यमलुप्तशक्तिः ।
अनन्तशक्तिश्च निरामयात्मा
विशुद्धदेहः स शिवत्वमेति ॥

சர்வஞ்ஞத்வம், திருப்தி, அநாதிபோதம், ஸ்வதந்திரத்துவம், என்றும்குன்றுதவாற்றல், அநந்தசக்தி, நிராமயாத்மா, விசுத்ததேக மென்பவற்றையுடைய அவன் சிவத்துவத்தினைப் பெறுகின்றான்" என்னும் சர்வஞானோத்தரம்,

" चिन्मात्रं सर्वगं सत्यं संपूर्णसुखमद्वयम् ।
साक्षाद्ब्रह्मैव नान्यदिति तत्वविदां स्थितिः ॥४५॥

शास्त्रं सत्यचिदानन्दमनन्तं वस्तु केवलम् ।
शुद्धं ब्रह्मेति सश्रद्धं प्राह वेदविदां वराः ॥४६॥

प्रत्यगात्माऽयमद्वन्द्वः साक्षीसर्वस्य सर्वदा ।
सत्यज्ञानसुखानन्तलक्षणः सर्वदाऽनघाः ॥४७॥

अतोऽयं प्रत्यगात्मैव स्वानुभूत्यैकगोचरः ।
शास्त्रसिद्धं परं ब्रह्म नापरं परमार्थतः ॥ ४८
एवं तर्कप्रमाणाभ्यामाचार्योक्त्या च मानवः ।
अविज्ञाय शिवात्मैक्यं संसारे पतति भ्रमात् ४९

சின்மாத்திரமும், எல்லாவற்றினிருப்பதும், சத்தியமும், சம்பூர்ணசுகமும், அத்வயமும் சாக்ஷாத் பிரஹ்மமே; அந்நியமன்றென்பது தத்துவஞானிகளின் ஸ்திதியாம். சாஸ்திரம் சத்தியசிதாநந்தமும், அநந்தமும், வஸ்துவும், கேவலமும் சுத்தப்பிரஹ்மமென்று சிரத்தையோடு கூறுகின்றது. வேதவித்துக்களுள் சிரேஷ்டர்களே! இப்பிரத்தியகாத்மா துவந்துவமின்றியதும், எப்போதும் எல்லாவற்றின் சாக்ஷியும், எப்போதும் சத்தியசுகஅநந்தலக்ஷணமுமாம். பாபமற்றவர்களே! ஆதலால் ஸ்வாநுபூதியொன்றற்கே விஷயமாம் இப் பிரத்தியகாத்மாவே சாஸ்திரசித்தமான பரப்பிரஹ்மமாம். உண்மையாக வேறன்று. இவ்வாறு தர்க்கப்பிரமாணங்களாலும் ஆசார்யோபதேசத்தினாலும் சிவாத்மைக்கியத்தினை அறியாது மானவன் பிரமத்தினால் சம்ஸாரத்தில் விழுகின்றான்," என்னும் பிரஹ்மகீதை ரு-ம் அத்யாயம்.

" स एव भगवानीशो माययैवात्मभूतया ।
मुह्यमान इव स्थित्वा स्वस्वातन्त्र्यबलेन तु ॥१९॥

शरीरमिदमास्थाय करोतिसकलं पुनः ।
जाग्रसंज्ञमिदं धाम प्रकल्प्य स्वीयमायया ॥ २० ॥

राजपुत्रादिवत्तस्मिन्क्रीडया केवलं हरः ।
अन्नपानादिभिः स्त्रीभिस्तृप्तिमेति सुरर्षभाः ॥ २१ ॥

स्वप्नकाले तथा शंभुर्जीवत्वेन प्रकाशितः ।
सुखदुःखादिकान्भोगान्भुङ्क्ते स्वेनैव विनिर्मितान् ॥

सुषुप्तिकाले सकले विलीने तमसावृतः ।
स्वस्वरूपमहानन्दं भुङ्क्ते दृश्यविवर्जितः ॥ २३ ॥

स न जीवः शिवादन्यो यो भुङ्क्ते कर्मणां फलम् ।
भेदाभावाच्चितश्चेत्यं न कर्मफलमर्हति ॥ २७ ॥

इदं धामत्रयं शंभोर्विभेदेन न विद्यते ।
शंभुरेव तथा भाति न ह्यन्यत्परमेश्वरात् ॥ ३० ॥

जीवरूप इव स्थित्वा यः क्रीडयति पुरत्रये ।
स न जीवः स शंभुः सत्यमेव न संशयः ॥ ३५ ॥

ततस्तु जातं सकलं विचित्रं सत्यवत्सुराः ।
स सत्योऽसत्यसाक्षित्वाच्चित्सुखं तथा ॥ ३६ ॥

प्रेमास्पदत्वादद्वैतो भेदाभावात्सुरर्षभाः ।
तस्मिन्नेव लयंयाति पुरत्रयमिदं ततः ॥ ३७ ॥

न जीवो जीववद्भाति साक्षाद्ब्रह्मैव केवलम् ।
अज्ञानाज्जीवरूपेण भासते न स्वभावतः ॥ ३८ ॥

यस्त्वंशाब्दस्य लक्ष्यार्थः स तच्छब्दार्थ एव हि ।
तत्त्वंशब्दौ स्वतः सिद्धे चिन्मात्रे पर्यवस्यतः ४१

यः पदद्वयलक्ष्यार्थस्तस्मिन्भेदः प्रकल्पितः ।
मायाविद्यात्मकोपाधिभेदेनैव न वस्तुतः ॥ ४२ ॥

அந்தப் பகவானாகிய ஈசனே தனது வடிவமான மாயையினாலேயே மோகிக்கப்பட்டவரைப்போன்றிருந்து தனது சுவாதந்திரிய பலத்தினால் இச்சரீரத்தினைக்கொண்டு எல்லாவற்றினையும் செய்கின்றார். மறுபடியும் ஜாக்கிரமென்னும் பெயருள்ள இப்புரத்தினைத் தனது மாயையினால் கற்பித்து தேவசிரேஷ்டர்களே! அதில் ராஜபுத்திராதியரைப்போல கேவலம்

கிரீடையினால் ஹாரன் அந்நபானமுதலியவற்றாலும் ஸ்திரீகளாலும் திருப்தியினை யடைகின்றார். அவ்வாறே சொப்பனகாலத்தில் சம்புவானவர் ஜீவத்தன்மையால் பிரகாசிப்பவராய்த் தன்னாலேயே படைக்கப்பட்ட சுகதுக்காதி போகங்களைப் புசிக்கின்றார். சுழுத்திகாலத்தில் யாவுமொடுங்கத் தமத்தினாற் சூழப்பட்டவராய்த் திருசியமின்றியவராய் ஸ்வஸ்வரூபமான மகாநந்தத்தினைப் புசிக்கின்றார். கர்மங்களின் பயனை எவன் புசிக்கின்றானோ அந்த ஜீவன் சிவனைவிட வேறல்லன், பேதமின்மையால். சித்திற்கு ஜடமான கர்மபலம் உரியதன்று. புரத்திரயமான இது சம்புவின்வேறாக இருப்பதில்லை; சம்புவே அவ்வாறு பிரகாசிக்கின்றார். பரமேசுவரனைவிட வேறில்லை. ஜீவவடிவம்போன்றிருந்து எவர் முப்புரத்திலும் கிரீடிக்கின்றாரோ அவர் ஜீவனல்லர்; அவர் சம்புவாவர்; உண்மையே. சம்சயமில்லை. அவரினின்று சகல விசித்திரமும் சத்தியம்போல் பிறந்தன. தேவர்களே! அவர் சத்தியமானவர். அசத்தியசாக்ஷியாதலால் சித்தாவர். பிரேமைக்கு விஷயமாதலால் ஆநந்தமாவர். தேவசிரேஷ்டர்களே ! பேதமின்மையால் அத்வைதமாவர். அவரிடத்திலேயே இப்புரமூன்றும் லயமாகின்

றது. ஆதலால் ஜீவன்போலத் தோற்றுகிறார்; ஜீவனாகார். கேவலம் சாக்ஷாத் பிரஹ்மமேயாவர். அஞ்ஞானத்தினால் ஜீவவடிவமாக விளங்குகின்றார்; ஸ்வபாவமாக இல்லை. துவம்பதத்தின் இலக்ஷியார்த்தம் எதுவோ அது தத்சப்தத்தின் அர்த்தமேயாம். தத் துவம் சப்தங்களிரண்டும் தானாகச் சித்தித்துள்ள சின்மாத்திரத்தில் முடிவுபெறுகின்றன. பதத்துவய லக்ஷியார்த்தம் எதுவோ, அதில் பேதம் மாயாவித்தைவடிவ வுபாதிபேதத்தினாலேயே கற்பிக்கப்பட்டுளது; உண்மையாக இல்லை." என்னும் பிரஹ்மகீதை அ-ம் அத்யாயம்.

" अज्ञानाकारभेदेनाविद्याख्येनैव केवलम् ।
पशूनामात्मनां भेदः कल्पितो न स्वभावतः ॥८॥

அஞ்ஞானாகாரபேதமான கேவலம் அவித்தை யென்பதினாலேயே பசுக்களான ஆத்மாக்களின் பேதம் கற்பிக்கப்பட்டதாம்; ஸ்வபாவமாக வன்று." என்னும் சூதகீதை உ-ம் அத்யாயம்.

स्वस्यैवांशश्च जीवो वै अविद्यामोहितोऽवशः ।
अहमन्यं च जानाति तया मुक्तो भवेच्छिवः ॥

सर्वं व्याप्य शिवः साक्षाद्व्यापकस्सर्वजंतुषु ।
चेतनाचेतनो सो वै सर्वत्र शंकरः स्वयम् ॥

उपायं यः करोत्यस्य दर्शनं स लभेध्द्रुवम् ।
यथाग्निर्व्यापकश्चैव काष्ठे काष्ठेच तिष्ठति ॥

यो वै मथ्नाति तत्काष्ठं स वै पश्यत्यसंशयम् ।
भक्त्यादिसाधनानीह करोति ऋषिसत्तमाः ।

स वै पश्यत्यवश्यं वै नात्र कार्या विचारणा ॥
शिवः शिवः शिवश्चैव नान्यदस्तीह किंचन ॥

नानाभाति स्वरूपो हि भासते शंकरस्सदा ।
यथा समुद्रो मृच्चैव सुवर्णमथवा पुनः ॥

उपाधितो हि नानात्वं लभते च तथैवच ।
कार्यकारणयोर्भेदो वस्तुतो न प्रवर्तते ॥

यथा बीजात्प्ररोहश्च नानाविधः प्रकाशते ।
अंते च बीजमेव स्यान्नात्र कार्या विचारणा ॥

ज्ञाने बीजं प्रदृश्येत ह्यज्ञाने विविधं जगत् ।
स र्वं शिवः शिवः सर्वं नात्र भेदोस्ति कश्चन ॥

कथं च विविधं पश्येदेकत्वं न कथं पुनः ।
यथैकं चन्द्रसूर्याख्यं ज्योतिर्नानाविधं पुमान् ॥

जलादौ च विशेषेण दृश्यते च तथैव सः ।
सर्वत्र व्यापकः सो वै स्पर्शत्वेन निबध्यते ॥

तथैव व्यापको देवो न बध्नाति पुनः क्वचित् ।
अहंकारतया जीवस्तन्मुक्तः शंकरः स्वयम् ॥

यथैकं च सुवर्णं हि ताम्रेण मिलितं यदा ।
अल्पमूल्यं प्रजायेत तथा जीवो ह्ययं पुनः ॥

तदेव च सुवर्णं हि क्षारादिशोधितं यदा ।
पूर्ववन्मूल्यतां याति तथा जीवस्य संमतम् ॥

यदा च सद्गुरुं प्राप्य भक्तिभावसमन्वितः ।
शिवबुध्या करोत्युच्चैः पूजनं स्मरणं शुभम् ॥

ध्यानं स्तवं च तद्बुध्या पापादि दूरतो गतम् ।
तथाऽज्ञानं च नश्येत शरीरं चास्थिरं बुधः ॥

मत्वा च नित्यरूपं हि शिवमेव सनातनम् ।
अज्ञानाद्दूरतो भूत्वा ज्ञानवाञ्जायते यदा ॥

तदाहंकारनिर्मुक्तो याति शंकरतां तु सः ॥

ஜீவன் பரமாத்மாவாகிய என தம்சமே, அவித்தையினால் மோகிக்கப்பட்டு அதன் வசமுடையவனாய் யான் வேறென் றறிகின்றான். (சிரவணாதிகளால்) அவ்வவித்தையினின்று விடுபட்டவனாய்ச் சிவனாகின்றான். சிவன் எல்லாவற்றையும் வியாபித்து எல்லாப் பிராணிகளிடத்தும் சாக்ஷாத் வியாபகனாகின்றான். சேதனாசேதனங்க ளிரண்டும் அவனே. எங்கும் ஸ்வயம்சங்கரனே. எவன் உபாயம் செய்கின்றானோ, அவன் நிச்சயமாக இவனுடைய தரிசனத்தினைப் பெறுகின்றான். அக்கினியானது வியாபகமாய்க் கட்டைகள்தோறும் நிற்கின்றது. எவன் அக்கட்டையினைக் கடைகின்றானோ, அவன் (அவ்வக்கினியைச்) சம்சயமின்றிக் காண்கின்றான். அதுபோல ரிஷீசுவரர்களே! எவன் இங்குப் பக்தியாதிசாதனங்களைச் செய்கின்றானோ, அவன் அவசியம் காண்கின்றான். இதில் விசாரணைசெய்யவேண்டியதில்லை. சிவமே சிவமே சிவமே யுளது. இங்கு இதனின் வேறான தொதுவு மில்லை. ஆகாயவடிவம் (ஒன்றாயிருந்தும் கடாதி யுபாதிபேதத்தால்) நாநாவாகக் காணப்படுகின்

றது. அதுபோலச் சங்கரனும் எப்போதும் விளங்குகின்றார். எப்படிச் சமுத்திரம், மண், பொன் என்பவை உபாதியினால் (முறையே அலையாதியாகவும், கடாதியாகவும், குண்டலாதியாகவும்) நாநாத்துவத்தினை அடைகின்றனவோ, அப்படியே சிவனும் உபாதிபேதத்தால் நாநாத்துவத்தினை அடைகின்றார். காரியகாரணங்களின் பேதமானது வாஸ்தவமாகப் பிரவர்த்திக்கிறதில்லை. வித்தினின்று விளைவானது (மரம், கிளை, கொம்பு, இலை, பூ, காய்முதலிய) நாநாவிதமாகப் பிரகாசிக்கின்றது; முடிவில் பீஜமே யாகின்றது. இதில் விசாரம் செய்யவேண்டியதில்லை. ஞான முண்டானபோது வித்தாகிய சிவம் காணப்படுகின்றது. அஞ்ஞான முளபோது பல்வகையுலகு காணப்படுகின்றது. எல்லாம் சிவமே. சிவமே யெல்லாம். இங்குப் பேதம் எதுவுமில்லை. எவ்வாறு நாநாவிதத்தினைக் காண்பன்? மறுபடியும் ஏகத்துவத்தினை எவ்வாறு காணான்? எப்படிச் சந்திரசூரியனென்னும் ஜோதி யொன்று நாநாவிதமாக ஜலமுதலியவற்றில் புருஷனுக்கு விசேஷமாய்க் காணப்படுகின்றதோ அப்படியே அச்சிவன் காணப்படுகின்றான். எங்கும் வியாபகனாயுள்ள அவ

னே ஸ்பரிசத்தன்மையாற் கட்டுப்படுகின்றான். அவ்வாறே மறுபடியும் வியாபகனான தேவன் ஓரிடத்தும் கட்டுப்படுகிறதில்லை. அகங்காரத் தன்மையால் ஜீவன் அதனின்று விடுபட்டவன் ஸ்வயம் சங்கரன். எப்படிச் சுவர்ணமொன்றே தாமிரத்தோடு சேர்க்கப்பட்டபோது சொற்ப விலையுடைய (மாற்றுக்குறைந்த)தாகின்றதோ, அப்படியே (சிவன் அகங்காராதி பாசத்தோடு கூடியபோது) இச்சீவ னாகின்றான். அச்சுவர்ணமே காரமுதலியவற்றாற் சுத்தீகரிக்கப்பட்ட போது முன்விலை யுயர்ந்த(மாற்றுயர்ந்த) தாகின்றது. அதுபோல ஜீவனுக்குமாம். (அகங்காராதி நீங்கியபோது முன்போற் சிவ னாகின்றான்.) எப்போது சற்குருவினை யடைந்து, பக்திபாவத்தோடுகூடியவனாய், சிவபுத்தியினால் உயர்வான பூஜனம், சுபமான ஸ்மரணம், தியானம், ஸ்துதி என்பவற்றைச் செய்கின்றானோ, அப்புத்தியினால் பாபமுதலியன விலகிப்போகின்றனவோ, அப்போது அஞ்ஞானமும் நசிக்கும். அறிஞன் சரீரம் நிலையில்லாதது நித்தியரூபம் சநாதனமான சிவமே யென்று மதித்து, எப்போது அஞ்ஞானத்தினின்று விலகி ஞான முடையவனாகின்றானோ,

அப்போது அவன் அகங்காரத்தினின்று விடு பட்டவனுப்ச் சங்கர(சிவ)த் தன்மையை யடைகின்முன்." என்னும் சிவபுராணம் ஞானசங்கிதை எஅ-ம் அத்யாயம்,

"अद्वैतशैववेदोऽयं द्वैतं न सहते क्वचित् ।
सर्वज्ञः सर्वकर्ता च शिव एव स्वमायया ॥
संकुचद्रूप इव सन् पुरुषः संबभूव ह ॥

அத்வைதசைவஞானமான இஃது ஓரிடத்தும் துவைதத்தினைச் சகியாது. சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவுமான சிவனே தனது மாயையினுல் சுருங்கியவடிவுடையவனைப்போலாகிப் புருஷனுயினுன்." என்னும் சிவபுராணம் கைலாசசங்கிதை கo-ம் அத்யாயம்.

"ग्रहाविष्टो द्विजः कश्चिच्छूद्रोहमिति मन्यते ।
ग्रहनाशात्पुनःस्वीयं ब्राह्मण्यं मन्यते यथा ॥
मायाविष्टस्तथा जीवो देहोहमिति मन्यते ।
मायानाशात् पुनः स्वीयं रूपं ब्रह्मास्मि मन्यते ॥

எப்படிக் கிரகத்தினுற் பற்றப்பட்ட ஓர் பிராஹ்மணன் தன்னைச் சூத்திரன் யானென்று

மதிக்கின்றானே, கிரகமொழிந்தபோது மறு படியும் தனது பிராஹ்மண்யத்தினை மதிக்கின் றானே, அப்படியே மாயையினாற் பற்றப்பட்ட ஜீவன் தேகம் யானென்று மதிக்கின்றான். மாயை நசித்தபோது மறுபடியும் தனது வடிவமான பிரஹ்மம் யான் என்று அறிகின்றான்." என்னும் கருடபுராணம்.

"पंचकोशातिरिक्तस्तु स जीवः परमेश्वरः ॥
उपाधिभेदैरज्ञानाद्बहुधा भाति शंकरः ।
देहादिवासनाबद्धः संसारी च प्रवर्तते ।
देहादिवासनात्यक्तः स जीवः परमेश्वरः ॥
सत्यंतःकरणे धर्मे शिवो जीवत्वमाप्नुयात् ।
तस्मिन्विलीने तस्माच्च जीवत्वं च विनश्यति ॥
प्रतिबिंबं बिंबजातमादर्शोपाधिभेदतः ।
आदर्शे यदि नष्टे तु बिम्बे तत्प्रविलीयते ।
कारणोत्थितं कार्यं कारणे प्रविलीयते ॥
यथा स्वर्णविकाराणि स्वर्णत्वं प्रतिपद्यते ॥

नानोपाधिवशादेव जातिनामाश्रमादयः ।
आत्मन्यारोपितास्तोये रसवर्णादिभेदतः ॥
मायोपाधिवशादेव बहुधा भाति शंकरः ।
तस्मिन्नष्टे ह्युपाधौ च एक एव परःशिवः ॥

பஞ்சகோசத்தின் வேறுபட்டவனுன அச்சீவனே பரமேசுவரனுவன். சங்கரன் அஞ்ஞானத்தினுல் உபாதிபேதங்களால் வெகுவிதமாய் விளங்குகின்றான். தேகாதிவாசனையினுற் கட்டப்பட்டவனும் சம்ஸாரியாயும் பிரவர்த்திக்கின்றான். தேகாதிவாசனையின் விடுபட்டவனுன அச்சீவன் பரமேசுவரனுவன். அந்தக்கரணதர்மமுள்ளபோது சிவன் ஜீவத்தன்மையினை யடைகின்றான். ஆதலால் அவ்வந்தக்கரணதர்மம் கெட்டபோது ஜீவத்தன்மையும் நசிக்கின்றது. பிரதிபிம்பம் கண்ணுடியுபாதிபேதத்தினுல் பிம்பத்தினின்று பிறந்ததாம். கண்ணுடி நசித்தகாலத்து அது பிம்பத்தில் ஒடுங்குகின்றது. காரணத்தினின் றெழுந்த காரியம் காரணத்தி லொடுங்குகின்றது சுவர்ணத்தின்விகாரங்கள் சுவர்ணத்தி லொடுங்குவதுபோல, நாநோபாதிவசத்தினுலேயே ஜாதி

பெயர் ஆச்சிரம முதலியன ஜலத்தில் இரஸவர்ஞ்ஞாதி பேதம்போல் ஆத்மாவில் கற்பிக்கப்பட்டுள. மாயோபாதிவசத்தினாலேயே சங்கரன் வெகுவிதமாய் விளங்குகின்றான். அவ்வுபாதி நசித்தபோது பரனான சிவன் ஒருவனாகவே இருக்கின்றான்." என்னும் ஸ்கந்தபுராணம் சநத்குமாரசங்கிதை மலயாசலகண்டம் ரு-ம் அத்யாயம்,

इदं नाम ममेति इयं जातिर्ममैव च ।
इत्येतान्यभिमानानि संसारः स च वै मतः ।
संसारी जीव एव स्यात्ततो मुक्तः सदाशिवः ॥

இப்பெயர் எனதே என்பதும், இச்சாதி எனதே என்பதுமான இவை அபிமானங்களாம். அவ்வபிமானமே சம்ஸாரமெனப்படுகின்றது. சம்ஸாரி ஜீவனேயாகின்றான். அதனின்று விடுபட்டவன் சதாசிவனாகின்றான்.', என்னும் சநத்குமாரசங்கிதை மலயாசலகண்டம் கூ-ம் அத்யாயம்,

"संसार बद्धो जीवो हि तस्मान्मुक्तः सदाशिवः ॥

சம்ஸாரத்தினாற் கட்டுப்பட்டவன் ஜீவன். அதனினின்று விடுபட்டவன் சதாசிவன்."

"अध्यास एव संसारः तस्मान्मुक्तः सदाशिवः ॥

அத்தியாசமே சம்ஸாரம். அதனின்று விடுபட்டவன் சதாசிவனாகின்றான்." என்னும் சநத்குமாரசங்கிதை மலயாசலகண்டம் எ-ம் அத்யாயம்.

"பதியாகி யுறைபவனே மாயையெனும் பாசத்தாற் பசுக்களாகி" என்னும் இலிங்கபுராணம் பதிபசுபாச அத்யாயம் என்னு மிவை முதலியனவாம்.

பேதமின்மையால் சிவத்தையுணர்ந்த அவன் சிவத்தின் வேறாகாது சிவமே யாகின்றான். அங்ஙன மபேதமாய்ச் சிவ மாதலே,

"नेह नानास्ति किंचन । मृत्योः स मृत्युं गच्छति य इह नानेव पश्यति ॥

இங்கு நாநா எதுவுமில்லை. எவன் இதில் நாநாவைப்போலக் காண்கின்றானோ, அவன் மிருத்யுவி னின்று மிருத்தியுவை யடைகின்றான்" என்னும் கடோபநிஷதம் உ-ச-கக.

"चिद्रूप एवाविकारो ह्युपलब्धः सर्वस्य सर्वत्र न ह्यस्ति द्वैतसिद्धिरात्मैव सिद्धोऽद्वितीयो मायया ह्यन्यदिव स वा एष आत्मा परः एषैव सर्वम् ॥

எங்கும் எல்லாவற்றின் அவிகாரமான சித்ரூபமே அறியப்படுவதாகின்றது. துவைதசித்தியில்லை. அத்விதீய ஆத்மாவே மாயையினால் அந்நியம்போற் சித்தித்துளது. அந்த இவ்வாத்மா பரமாம். இதுவே எல்லாம்." என்னும் நிருசிம்ஹோத்தரதாபினியுபநிஷதம் அ-வது கண்டம்.

"सर्पादौ रज्जुसत्तेव ब्रह्मसत्तैव केवलम् ॥
प्रपञ्चाधाररूपेण वर्ततेऽतो जगन्नहि ।
यथेक्षुरससंव्याप्ता शर्करा वर्तते तथा ॥

अद्वयरूपेण व्याप्तोऽहं जगत्त्रयम् ।
ब्रह्मादिकीटपर्यन्ताः प्राणिनो मयि कल्पिताः ।
बुद्बुदादिविकारान्तस्तरङ्गः सागरे यथा ।

சர்ப்பமுதலியவற்றில் இரச்சுசத்தையினைப்போல கேவலம் பிரஹ்மசத்தையே பிரபஞ்சா

தாரரூபத்தா லுளது. ஆதலால் ஜகத்தில்லை. எப்படிச் சர்க்கரை கரும்பி னிரசத்தால் செவ்வையாய் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ, அப்படியே யான் உலகமூன்றையும் அத்வயரூபத்தால் வியாபித்தவனா யிருக்கின்றேன். குமிழி முதல் விகாராந்தமான தரங்கம் சாகரத்திற் கற்பிக்கப்படுவதுபோல பிரஹ்மாதி கீடபரியந்தமான பிராணிகள் என்னிடத்தில் கற்பிக்கப் பட்டனவாம்." என்னும் ஆத்மபோதோபநிஷதம்,

"अन्यो सावन्योहमस्मीति ये विदुस्तेपशवः ॥

இவன் அந்நியன் யான் அந்நிய னென்று எவர்க ளறிகிறார்களோ, அவர்கள் பசுக்கள்" என்பது நாரதபரிவிராஜகோபநிஷதம்,

"द्वौ सुपर्णौ शरीरेऽस्मिञ्जीवेशाख्यौ सह स्थितौ ।
तयोर्जीवः फलं भुङ्क्ते कर्मणो न महेश्वरः ॥
केवलं साक्षि रूपेण विना भोगं महेश्वरः ।
प्रकाशते स्वयं भेदः कल्पितो मायया तयोः ॥
घटामहाकाशौ यथाकाशप्रभेदतः ।
कल्पितौ परमौ जीवशिवरूपेण कल्पितौ ॥

तत्त्वतश्च शिवः साक्षाच्चिज्जीवश्च स्वतः सदा ।
चिच्चिदाकारतोऽभिन्ना न भिन्ना चित्त्वहानितः ॥

चिताश्चिन्न चिदाकाराद्भिद्यते जडरूपतः ।
भिद्यते चेज्जडे भेदश्चिदेका सर्वदा खलु ॥

तर्कतश्च प्रमाणाच्च चिदेकत्वव्यवस्थितेः ।
चिदेकत्वपरिज्ञाने न शोचति न मुह्यति ॥

अद्वैतं परमानन्दं शिवं याति तु केवलम् ॥

இச்சரீரமாகிய விருக்ஷத்தில் ஜீவன் ஈசனெனப்படும் இரண்டு பக்ஷிகள் உடனிருப்பனவாம். அவ்விரண்டனுள் சீவன் கர்மங்களின் பலத்தைப் புசிக்கின்றான்; மகேசுவரன் புசிக்கிறதில்லை மகேசுவரன் போகமின்றிக் கேவலம் சாக்ஷிரூபமாகப் பிரகாசிக்கின்றான். அவ்விருவர்களின் பேதம் மாயையினால் கற்பிக்கப்பட்டதாய்த் தானே பிரகாசிக்கின்றது. கடாகாயமகாகாயங்கள் ஆகாயபேதமாகக் கற்பிக்கப்படுவதுபோலப் பரமர்கள் ஜீவசிவரூபமாகக் கற்பிக்கப்படுகின்றனர். உண்மையாகவோ ஜீவன் எப்போதும் தானே சாக்ஷாத் சித்தாகிய சிவனாவன். சித்து சிதாகாரத்தின் அபின்ன

மாம். சித்துவம் கெடுதலால் பின்னமன்று; சித்து சிதாகாரமான சித்தின் வேறுபடுகிற தில்லை; ஜடரூபத்துவத்தால் பேதப்படுமெனின் ஜடத்தில் பேதமாம். நிச்சயமாகச் சித்தொன்றே என்று முளதாம்; தர்க்கத்தினுலும் பிரமாணத்தினுலும் சித்தொருமையின் வியவஸ்திதி யிருத்தலின். சித்தின் ஒருமையினை உணர்ந்தபோது சோகிக்கிறது மில்லை; மோகிக்கிறது மில்லை. கேவலம் அத்வைதமும் பரமாநந்தமுமான சிவத்தினை அடைகின்றான்." என்னும் ருத்ரஹிருதயோபநிஷதம்,

यथा नद्यः स्यन्दमानाः समुद्रेऽस्तं गच्छन्ति नाम रूपे विहाय । तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यं ॥ स यो ह वै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति नास्याब्रह्मवित्कुले भवति तरति शोकं तरति पाप्मानं गुहाग्रन्थिभ्यो विमुक्तोऽमृतो भवति ॥

எப்படி நதிகள் ஒழுகுகின்றனவாய் நாமரூபங்களைவிட்டுச் சமுத்திரத்தில் அஸ்தமிக்கின்றனவோ, அப்படியே சிவஞானி நாமரூபங்களி

னின்று விடுபட்டவனாய் பராத்பரமான திவ்ய புருஷனை அடைகின்றான். எவன் அந்தப் பரமமான பிரஹ்மத்தினை அறிகின்றானோ, அவன் பிரஹ்மமே யாகின்றான். இவனது குலத்தில் பிரஹ்மவித்தல்லாதவ னிரான். சோகத்தினைக் கடக்கின்றான். பாபத்தினைக் கடக்கின்றான். குஹாகிரந்தியி(பஞ்சகோசகுகையாகிய முடிச்சி)னின்றும் விடுபட்டவனாய் அமிருத னாகின்றான்." என்னும் முண்டகம் ௩-உ-அ, கூ.

" स यथेमा नद्यः स्यन्दमानाः समुद्रायणाः समुद्रं प्राप्यास्तं गच्छन्ति भिद्येते चासां नामरूपे समुद्र इत्येवं प्रोच्यते ॥ एवमेवास्य परिद्रष्टुरिमाः षोडश कलाः पुरुषायणाः पुरुषं प्राप्यास्तं गच्छन्ति भिद्येते तासां नामरूपे पुरुष इत्येवं प्रोच्यते स एषोऽकलोऽमृतो भवति ॥

அது எப்படி இந்நதிகள் சமுத்திரத்தை நோக்கிச் செல்வனவாய்ச் சமுத்திரத்தினை யடைந்து மறைகின்றனவோ, இவற்றின் பெயரும் உருவமும் பேதிக்(நீங்கு)கின்றனவோ,

சமுத்திரமென் றிவ்வாறு சொல்லப்படுகின்றதோ, இவ்வாறே சூழப்பார்ப்பவனாகிய இவனது புருஷனைநோக்கிச்செல்லும் பதினாறு கலைகளும் புருஷனை அடைந்து மறைகின்றன. அவற்றின் பெயரும் உருவமும் பேதிக்கின்றன. புருஷனென்று இவ்வாறு சொல்லப்படுகின்றான். அத்தன்மைய இவன் அகலனும் அமிருதனு மாகின்றான்.'' என்னும் பிரசினம் ௬-ஞ.

"एवंविच्छान्तो दान्त उपरतस्तितिक्षुः समाहितो भूत्वात्मान्येवात्मानं पश्यति सर्वमात्मानं पश्यति नैनं पाप्मा तरति सर्वं पाप्मानं तरति नैनं पाप्मा तपति सर्वं पाप्मानं तपति ॥

இவ்வா றுணர்ந்தவன் சாந்தனும் (சமமுடையவனும்), தாந்த(தமமுடையவ)னும், உபரதனும், திதிக்ஷையுடையவனும், சமாதானமுடையவனுமாய் ஆத்மாவிலேயே ஆத்மாவினைக் காண்கின்றான். எல்லாமுமான ஆத்மாவினைக் காண்கின்றான். இவனைப் பாபம் நெருங்காது. எல்லாப் பாபங்களையும் கடக்கின்றான். இவனைப் பாபம் தபியாது. எல்லாப் பாபங்களையும் தபிக்கின்றான்.''

"स वा एष महानज आत्माऽजरोऽमरोऽमृतोऽभयो ब्रह्माभयँ वै ब्रह्माभयं हि वै ब्रह्म भवति यं एवं वेद ॥

அந்த இவ்வாத்மா பெரிதும் பிறப்பின்றியதும், மூப்பின்றியதும் மரணமின்றியதும், அமுதமும், அபயமுமாம். பிரஹ்மம் அபயமென்பது பிரசித்தம்; பிரஹ்மம் அபயமென்பது பிரசித்தம். எவன் இவ்வாறு அறிகின்றானோ அவன் பிரஹ்மமே யாகின்றான்." என்னும் பிருகதாரணியகம் ௪-௪.உ௩, உ௫.

"न निजं निजवद्भात्यन्तःकरणजृम्भणात् ।
अन्तःकरणनाशेन संविन्मात्रस्थितो हरिः ॥ २ ॥

संविन्मात्रस्थितश्चाहमजोऽस्मि किमतः परम् ।
व्यतिरिक्तं जडं सर्वं स्वप्नवच्चाविनश्यति ॥ ३ ॥

चिज्जडानां तु यो द्रष्टा सोऽच्युतो ज्ञानविग्रहः ।
स एव हि महादेवः स एव हि महाहरिः ॥ ४ ॥

स एव ज्योतिषां ज्योतिः स एव परमेश्वरः ।
स एव हि परं ब्रह्म तद्ब्रह्माहं न संशयः ॥ ५ ॥

जीवः शिवः शिवो जीवः सजीवः केवलः शिवः ।
तुषेण बद्धो व्रीहिः स्यात्तुषाभावेन तण्डुलः ॥ ६ ॥

एवं बद्धस्तथा जीवः कर्मनाशे सदाशिवः ।
पाशबद्धस्तथा जीवः पाशमुक्तः सदाशिवः ॥ ७ ॥

देहो देवालयः प्रोक्तः स जीवः केवलः शिवः ।
त्यजेदज्ञाननिर्माल्यं सोऽहंभावेन पूजयेत् ॥ ८ ॥

அந்தக்கரணவிரிவால் நிஜம் நிஜம்போல் விளங்குகிறதில்லை. அந்தக்கரணநாசத்தினால் சம்வித்துமாத்திரமாய் நிற்பவன் ஹரி. சம்வித்துமாத்திரமாய் நிற்கும் யான் பிறப்பில்லாதவனா யிருக்கின்றேன். இதற்குமேல் என்னை யுளது? என்னின் வேறுபட்ட ஜடம் யாவும் சொப்பனம்போல் நசிக்கின்றது. சிற்சடங்களைக் காண்பவன் எவனோ அவன் அச்சுதனான ஞானவிக்கிரகன். அவனே நிச்சயமாக மகாதேவன். அவனே நிச்சயமாக மகாஹரி. அவனே சோதிகட்கெல்லாம் சோதி. அவனே பரமேசுவரன். அவனே நிச்சயமாகப் பரப்பிரஹ்மம். அந்தப் பிரஹ்மம் யான். சம்சயமில்லை. ஜீவன் சிவன். சிவனே ஜீவன். அந்த ஜீவன் கேவலம் சிவன். உமியினால் மூடப்பட்டது

நெல்லாம். உமியின்மையால் அரிசியாம். இவ்வாறு கர்மத்திறுற் கட்டப்பட்டவன் ஜீவன் கர்மநாசத்தில் சதாசிவனுகின்றான். அவ்வாறே பாசபத்தன் ஜீவன். பாசத்தின் விடுபட்டவன் சதாசிவன். தேகம் தேவாலய மெனப்படும். அச்சீவன் கேவலம் சிவனும். அஞ்ஞானமாகிய நிர்மாலியத்தினை நீக்கி அவன் யானெனுந்தன்மையால் பூஜிக்க." என்னும் ஸ்கந்தோபநிஷதம்,

"स होवाच महादेवः । देहो देवालयःप्रोक्तः स जीवः केवलः शिवः । त्यजेदज्ञाननिर्माल्यं सोऽहं भावेन पूजयेत् ॥

அம்மகாதேவர் உபதேசித்தனர்:— தேகம் தேவாலய மெனப்படும். அந்த ஜீவன் கேவலம் சிவனவன் அஞ்ஞானநிர்மாலியத்தினை விட்டு அவனை யானெனுந்தன்மையாற் பூஜிப்பாயாக." என்னும் மைத்திரேயியுபநிஷதம் உ-ம் அத்யாயம்,

" सर्वसाक्षिणमात्मानं वर्णाश्रमविवर्जितम् ।
ब्रह्मरूपतया पश्यन्ब्रह्मैव भवति स्वयम् ॥

வர்ணாச்சிரமமின்றியதும் சர்வசாக்ஷியு மான ஆத்மாவினை பிரஹ்மவடிவத்தன்மையாகக்கண்டு ஸ்வயம் பிரஹ்மமே யாகின்றான்." என்னும் வராகோபநிஷதம் அத்யாயம் உ.

" ब्रह्मवेदनमात्रेण ब्रह्माप्नोत्येव मानवः ॥

பிரஹ்மஞானமாத்திரத்தால் மானவன் பிரஹ்மத்தினையே அடைகின்றான்."

" प्रत्यगात्मानमज्ञानमायाशक्तेश्च साक्षिणम् ।
एकं ब्रह्माहमस्मीति ब्रह्मैव भवति स्वयम् ॥

பிரத்தியகாத்மாவும், அஞ்ஞானமாயாசக்தியின் சாக்ஷியும், ஏகமுமான பிரஹ்மம் யானென்று சாக்ஷாத்கரித்து ஸ்வயம் பிரஹ்மமே யாகின்றான்." என்னும் கடருத்ரம்;

" दीक्षैव मोचयेत्पाशाञ्छिवत्वं च ददात्यणोः ।
दानं नामस्वसक्तेव या सा ज्ञानक्रियात्मिका ॥
न तु स्थानान्तरादानादप्युत्पत्तिः कदाचन ॥

ஆசாரியனாற் செய்யப்படும் தீக்ஷையே பாசங்களை நீக்கிச் சிவத்துவத்தினைக் கொடுக்கும்,

கொடுப்பதாவது தன்னிலிருப்பதான ஞானக் கிரியாசத்திவடிவம் எதுவோ அது விளங்குத லாம். வேறு இடத்திலிருந்து எடுத்துக் கொடுத்தலா லில்லை. ஒருபோதும் உற்பத்தியு மில்லை." என்னும் பௌஷ்கரம்,

" पाशान्ते शिवता श्रुतेः ॥

பாசாந்தத்தில் சிவத்துவம் கேட்கப்படுத லால்." என்னும் மிருகேந்திரம்,

" ताम्रस्यैव तु हेमत्वमन्तर्लीनं यथास्थितम् ।
अंतर्लीनं तथा ज्ञेयं शिवत्वं पुद्गलस्य तु ॥
रससिद्धं यथा ताम्रं हेमत्वं प्रतिपद्यते ।
तथात्मा ज्ञानसंबद्धः शिवत्वं प्रतिपद्यते ॥

எப்படித் தாமிரத்தின் சுவர்ணத்துவம் உள் ளொடுங்கி உள்ளவா றிருக்கின்றதோ, அப் படியே ஜீவனது சிவத்துவமும் உள்ளொடுங்கி யிருக்கிற தென்றறியத்தக்கதாம். எப்படி இர ஸத்தினுற் சாதிக்கப்பட்ட தாமிரம் சுவர்ணத் தன்மையினை யடைகின்றதோ, அப்படியே சிவஞானசம்பந்தமுடைய ஆத்மா சிவத்தன் மையை யடைகின்றது," என்னும் சர்வஞா னோத்தரம்.

" अतो विशेषाकारेण भेदं ये सर्वसाक्षिणः ।
वदंति ते महाभ्रान्ता निमग्नाश्च भवार्णवे ॥

आत्मनः सर्वसाक्षित्वमेकत्वं च तथैव च ।
नित्यत्वं चैव शुद्धत्वं भूमानन्दत्वमेव च ॥

ब्रह्मत्वं च द्विजा वेदा वदन्ति श्रद्धया सह ।
स्मृतयश्च पुराणानि भारतादीनि चास्तिकाः ॥

महादेवश्च विष्णुश्च ब्रह्मा च मुनयस्तथा ।
नित्यत्वं शुद्धबुद्धत्वमात्मनः प्रवदन्ति हि ॥

तस्मादात्मैव विप्रेन्द्रा नित्यं वस्तु न चापरम् ।
जिह्वायां परशुं तप्तं धारयामि न संशयः ॥

ஆதலால் விசேஷவடிவமாகச் சாக்ஷிக்கு எவர்கள் பேதத்தினைக் கூறுகின்றார்களோ, அவர்கள் மகா பிராந்தர்களும் பவசமுத்திரத்தில் மூழ்கினவருமாவர். துவிஜர்களே! ஆத்மாவுக்குச் சர்வசாக்ஷித்துவமும், ஏகத்துவமும், அவ்வாறே நித்தியத்துவமும், சுத்தத்துவமும், பிரஹ்மா(வியாபகா)நந்தத்துவமும், பிரஹ்மத்துவமும் வேதங்கள் சிரத்தை

யோடு கூறுகின்றன. ஆஸ்திகர்களே! ஸ்மிருதிகளும், புராணங்களும், பாரதாதிகளும், மகாதேவரும், விஷ்ணுவும், பிரஹ்மாவும் அவ்வாறே முநிகளும் ஆத்மாவுக்கு நித்தியத்துவமும் சுத்தபுத்தத்துவமும் கூறுகின்றன பிரசித்தம். ஆதலால் பிராஹ்மணோத்தமர்களே! ஆத்மாவே நித்தியவஸ்து; அந்நிய மன்று. நாவிற் பழுக்கக் காய்ச்சிய பரசினைத் தரிப்பேன்; சம்சயமில்லை." என்னும் சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் அத்யாயம் கக.

"आत्मभेदस्तथैवात्मब्रह्मभेदश्च सुव्रताः ।
उपाधिनैव क्रियते न स्वतो मुनिपुङ्गवाः ॥
घटाद्युपाधिसंपर्कादाकाशस्य भिदा यथा ।
एकमेवेति वेदान्तास्तात्पर्येण महेश्वरम् ॥
आहुश्चिद्रूपतो भेदश्चितो नास्त्येव सर्वथा ।
चैत्यरूपेण भेदस्तु चैत्यस्यैव चितो न हि ॥
आत्मभूतः शिवः साक्षाच्चिन्मात्रज्योतिरेव हि ।
घटादीनां तु चैत्यानामनात्मत्वस्य दर्शनात् ॥

आत्मनोपि स्वतो भेदमाहुः केचिन्मुनीश्वराः ।
तन्न संगतमेव स्यादात्माऽभेदस्य साधकः ॥
भेदसाक्षी शिवो ह्यात्मा कथं भिन्नो भवेद्विजाः ।
अत आत्मनि भेदस्तु भ्रान्तिसिद्धो न वस्तुतः ॥
एकस्य नभसो भेदो यथा भ्रान्त्या प्रतीयते ।
स्वरूपत्वेन वा विप्रा धर्मत्वेनैव वा भिदा ।
अपिवर्षशतेनापि वस्तुतो न निरूप्यते ॥

நல்விரதமுடையோரே! முநிபுங்கவர்களே! ஆத்மபேதமும், அவ்வாறே. ஆத்மப்பிரஹ்ம பேதமும் உபாதியினாலேயே செய்யப்படுகின்றது; இயல்பாக இல்லை; கடமுதலிய வுபாதி சம்பந்தத்தினால் ஆகாயத்திற்குப் பேதமுண்டாவதுபோல. வேதாந்தங்கள் தாற்பரியத்தினால் மகேசுவரனை ஒன்றேயென்று கூறுகின்றன. சித்திற்குச் சித்ரூபத்தாற் பேதம் எவ்விதத்தாலு மிலதேயாம். (பிரமாத்ருலக்ஷணமாகிய) சைத்தியவடிவத்தாற் பேதம் சைத்திய (ஜட)த்திற்கேயாம்; சித்திற் கில்லை. ஆத்மசொரூபமான சிவன் சாக்ஷாத் சின்மாத்திரஜோதியே யென்பது பிரசித்தம்; கடாதி

களான சைத்திய(ஜட)ங்கட்கு அநாத்மத்துவம் காணப்படுதலால். முநீசுவரர்களே! ஆத்மாவுக்கும் இயல்பாகப் பேதத்தினைச் சிலர் கூறுகின்றனர். அது பொருத்தமேயாகாது. ஆத்மா அபேதத்தின் சாதகமாம். துவிஜர்களே! பேதசாக்ஷியான சிவமாகிய பிரசித்த ஆத்மா எவ்வாறு பின்னமாம்? ஆதலால் ஆத்மாவினிடத்துப் பேதமோ பிராந்திசித்தமாம். வாஸ்தவமாக இல்லை. ஒரே ஆகாயத்திற்குப் பேதம் பிராந்தியினாற் காணப்படுவதுபோல சொரூபத்தன்மையாலாவது தர்மத்தன்மையாலாவது வருஷநூற்றினாலும் பேதம் வாஸ்தவமாக நிரூபிக்கப்படமாட்டாது." என்னும் சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் கய-ம் அத்தியாயம்,

"साधकस्यैव जीवस्य स्वाभाविकशिवात्मताम् ।
बोधयन्ती श्रुतिर्भ्रान्तजीवत्वं बाधते खलु ॥
जीवत्वं चेतनस्यास्य स्वाभाविकमिति द्विजाः ।
केचिद्वदन्ति वार्तैषा न तत्स्वाभाविकं सदा ॥
यदि स्वाभाविकं तर्हि जीवत्वं सर्वदा भवेत् ।
नास्ति तस्य निवृत्तिर्हि स्वतः सिद्धं न नश्यति ॥

சாதகஞான ஜீவனது சுவாபாவிக சிவாத்மத் தன்மையினைப் போதிக்குஞ் சுருதி நிச்சயமாகப் பிராந்தியாலாகிய ஜீவத்தன்மையினைப் பாதிக்கின்றது. துவிஜர்களே! ஜீவத்துவம் இச்சேதனத்திற்குச் சுவாபாவிகமா மென்று சிலர் கூறுகின்றனர். இது சொன்மாத்திரமாம். அஃதெப்போதும் சுவாபாவிக மன்று. சுவாபாவிக மாமாயின், ஜீவத்தும் எப்போதுமுளதாம். அதற்கு நிவிருத்தியில்லை. இயல்பாகச் சித்தித்தது நசியாதென்பது பிரசித்தம்" என்னும் சூதசங்கிதை யஞ்ஞவைபவ கண்டம் அத்யாயம் ௩௧.

"यथाकाशो घटाकाशमहाकाशप्रभेदतः ।
कल्पितः परचिज्जीवशिवरूपेण कल्पितः ॥

तत्त्वतश्चिच्छिवः साक्षाच्चिज्जीवश्च ततः सदा ।
चिच्चिदाकारतोऽभिन्ना न भिन्ना चित्वहानितः ॥

चितश्चिन्न चिदाकाराद्भिद्यते जडरूपतः ।
भिद्यते चेज्जडे भेदश्चिदेका सर्वदा खलु ॥

तर्कतश्च प्रमाणाच्च चिदेकत्वे व्यवस्थिते ।
अपि पापवतां पुंसां विपरीता मतिर्भवेत् ॥

श्रौतस्मार्तसमाचारैर्विशुद्धस्य महात्मनः ।
प्रसादादेव रुद्रस्य चिदेकत्वे मतिर्भवेत् ॥
चिदेकत्वपरिज्ञानान्न शोचति न मुह्यति ।
अद्वैतं परमानन्दं शिवं याति तु केवलम् ॥

எப்படி ஆகாயம் கடாகாயமகாகாயபேதமாகக் கற்பிக்கப்படுகின்றதோ, அப்படியே பரமாகிய சித்து ஜீவசிவரூபமாகக் கற்பிக்கப்படுகின்றது. உண்மையாகச் சிவன் சித்தாம். ஜீவனும் சாக்ஷாத் சித்தாம். ஆதலால் எப்போதும் சித்தானது சித்துவடிவத்தினும் அபின்னமாம். சித்துத்தன்மைக்குக் கேடுவருதலால் பின்னமன்று. சித்து சித்தின் வேறுபடுகிறதில்லை. சிதாகாரமாதலால் ஜடரூபத்துவத்தால் பேதப்படுகிறதெனின், ஜடத்தில் பேதமாம். நிச்சயமாக எப்போதும் சித்தொன்றேயாம். தர்க்கத்தினாலும், பிரமாணத்தினாலும் சித்தொருமை வியவஸ்தை செய்யப்பட்டுளதாகவும் பாபமுடைய புருஷர்களுக்கு விபரீதமான மதியுண்டாகின்றது. சிரௌதஸ்மார்த்த நல்லொழுக்கங்களால் விசுத்தனான மகாத்மாவுக்கு உருத்திரனுடைய பிரசாதத்தினாலேயே சித்தொருமையில் மதியுண்டாம்.

சித்தொருமையுணர்ச்சியால் சோகியான்; மோகியான்; அத்வைத பரமாநந்த கேவல சிவத்தினை யடைகின்றான்"

"शिवस्थाने शरीरेऽस्मिन्स्थितोऽपि स्वात्ममायया ।
दुःखादिसागरे मग्नो मुह्यमानश्च शोचति ॥
स्वस्मादन्यतया भातमीशं स्वेनैव सेवितम् ।
अधिष्ठानं समस्तस्य जगतः सत्यचिद्घनम् ॥
अहमस्मीति निश्चित्य वीतशोको भवत्ययम् ॥

சிவஸ்தானமாகிய இச்சரீரத்தில் நின்றும் ஸ்வாத்மமாயையினால் மோகிக்கப்பட்டவன் துக்காதிசாகரத்தில் மூழ்கினவனாய்ச் சோகிக்கின்றான். தன்னின்வேறாக விளங்கப்பட்டவனும், தன்னாலேயே சேவிக்கப்பட்டவனும், சமஸ்தஜகத்தின் அதிஷ்டானமும், சத்தியசித்கனமுமான ஈசனை யானென்று நிச்சயித்து இவன் சோகநீங்கியவனாகின்றான்."

"यथा नद्यःस्यन्दमानाः समुद्रेऽस्तं यान्ति नामरूपे विहाय । तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषं ब्रह्म याति ॥ स यो ह वै तत्परमं ब्रह्म वेद सुरर्षभाः । ब्रह्मैव भवति ज्ञानान्नास्ति संशयकारणं ॥

எப்படி ஒழுகுகின்ற ஆறுகள் சமுத்திரத்தில் பெயரும் உருவமும் விட்டு மறைகின்றனவோ, அப்படி சிவஞானி நாமரூபங்களின் விடுபட்டவனாய் பராத்பரபுருஷனை பிரஹ்மத்தினை அடைகின்றான். தேவசிரேஷ்டர்களே! எவன் அந்தப் பரப்பிரஹ்மத்தினை அறிகின்றானோ அவன் ஞானத்தினால் பிரஹ்மமே யாகின்றான்; சம்சயத்திற்குக் காரணமில்லை." என்னும் பிரஹ்மகீதை எ-ம் அத்யாயம்.

"घटाकाशमहाकाशविभागः कल्पितो यथा ।
तथैव कल्पितो भेदो जीवात्मपरमात्मनोः ॥

கடாகாய மகாகாய விபாகம் எப்படிக் கற்பிதமோ, அப்படியே ஜீவாத்ம பரமாத்மாக்களின் பேதம் கற்பிதமாம்." என்னும் சூதகீதை உ-ம் அத்யாயம்,

"परमाद्वैतविज्ञानं सिद्धं स्वानुभवेन च ।
श्रुतिस्मृति पुराणाद्यैस्तर्कैर्वेदानुसारिभिः ॥

परमाद्वैतविज्ञानमेव ग्राह्यं यथास्थितम् ।
नान्यतर्कैश्च हन्तव्यमिदमाम्नायवाक्यजम् ॥

विनैव परमाद्वैतं भेदं केचन मोहिताः ।
कल्पयन्ति तदा शंभुः सद्वितीयो भविष्यति ॥

आम्नायार्थं महाऽद्वैतं नैव जानन्ति ये जनाः ।
वेदसिद्धं महाऽद्वैतं को वा विज्ञातुमर्हति ॥

भिन्नाभिन्नतया देवं मरमाद्वैत लक्षणम् ।
कल्पयन्ति महामोहात्केचित्तच्च न संगतम् ॥

भेदाभेदेपिभेदांशो मिथ्या भवति सत्तमाः ।
भेदानिरूपणादेव धर्म्यादेरनिरूपणात् ॥

பரமாத்வைத விஞ்ஞானம் சுவாநுபவத்தினு லும், சுருதிஸ்மிருதிபுராணுதிகளாலும் வேத த்தினை யநுசரித்த தர்க்கங்களினுலும் பெறப் பட்டதாம். உள்ளவாறிருக்கும் பரமாத்வைத விஞ்ஞானமே கொள்ளத்தக்கதாம். வேத(மகா) வாக்கியத்தினுற் றேன்றிய இது மற்றைய தர்க்கங்களால் பாதிக்கத்தக்க தன்று. பரமாத் வைதஞான மின்றியே பேதத்தினை மோகிக் கப்பட்ட சிலர் கற்பிக்கின்றனர். அப்போது சம்புவானவர் இரண்டாவதோடுகூடியவ ராகி ன்றூர். (அதனுல் "ஒரே அத்விதீயப் பிரஹ்ம

முளது" என்னும் சுருதிசித்தமான அத்வைதத்திற்கு ஹானி வருகின்றது.) வேதார்த்தமாகிய மகா அத்வைதத்தினை ஜனங்கள் அறியவே மாட்டார்கள். வேதசித்தமான மகாத்வைதத்தினை எவன் அறிதற்குரியவனுவன்? (ஒருவனுமாகான்.) சிலர் பரமாத்வைதலக்ஷணமுள்ள தேவனை மகாமோகத்தினுல் பின்னுபின்னத் தன்மையாகக் கற்பிக்கின்றனர். அது பொருந்துவ தாகாது. நலமிக்கோரே! பேதாபேதத்தினும் பேதாம்சம் மித்தையாகின்றது; பேதம் நிரூபிக்கக்கூடாமையினுலேயே தர்மிமுதலியன நிரூபிக்கக்கூடாமையின்" என்னும் சூதகீதை ௩-ம் அத்யாயம்,

परतत्त्वं परं ब्रह्म जीवात्मपरमात्मनोः ।
औपाधिकेन भेदेनद्विधाभूतमिवस्थितम् ॥

ஜீவாத்மபரமாத்மாவிரண்டன் பரதத்துவமான பரப்பிரஹ்மம் உபாதியினுலாகிய பேதத்தினுல் இருவகைவடிவினதுபோல் நிலைத்திருக்கின்றது." என்னும் சூதகீதை ௬-ம் அத்யாயம்.

"அடுத்தது காட்டுந்தூயப் பளிங்குபோலான் மாமுன்னர்த்; தொடுத்தது காட்டுமிந்தச் சுட

ரிணை மறையாற்கேட்டு; மெடுத்தநல் லுத்தி தன்னு லளவையா லெண்ணிநெஞ்சிற்; படுத்திய வுருவந்தானுப் பாவிக்கிற் பரமதாவான்.(உக) தன்னுளே சகத்து மந்தச் சகத்துளே தானுமாகப் பின்னமதின்றி யென்றுகாண்குவன் பிரமந்தன்னின்; மன்னிய தானலாமை மற்றொன்றுங் காண்கலானென்; றன்னகா லத்தின் முத்தனுருவன் யோகியன்றே" என்னும் கூர்ம புராணம் சாங்கியயோகமுரைத்த அத்யாயம்.

"இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமா; யந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச், சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட; வந்தமிலா வாநந்த மணிகொடில்லை கண்டேனே."

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப், பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ் சித்தமல மறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட, வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே." என்னும் திருவாசகம்,

"கண்டசர் தாமாம்பரிசளித்தார்"

"மேலைச்சிவமாம்பரிசினையுந்தேர்ந் துணர்ந் தார் சேர்ந்த; பவமாம் பரிசறுப்பார் பார்." என்னும் திருக்களிற்றுப்படியார்.

"தொம்பதந் தற்பதஞ்சொல்லு மசிபத; நம் பிய்முத்துரி யத்துமே ளுடவே; யும்பதமுப் பத மாகு முயிர்பரன்; செம்பொருளான சிவ மெனலாமே"

"சீவனெனச்சிவ னென்ன வேறில்லை; சீவ ளுர் சிவனுரையறிகிலர்; சீவனர்சிவனுரை யறிந் தபின்; சீவனுர்சிவனுயிட்டிருப்பாரே."

"மாசற்றவென்னைச் சிவமாக்கி" என்னு மிவைமுதலிய திருமந்திரம் முதலியனவாம்.

ஈசன் ஆசாரியனு யிருந்துபதேசிக்கும் வாக் கிய மிது வெனப் பின்வரும் பிரமாணங்களாற் கூறப்படுகின்றது:—

स य एषोऽणिमैतदात्म्यमिदँ सर्वं तत्सत्यँ स आत्मा तत्त्वमसि श्वेतकेतो इति ॥

யாதொரு அந்த இது மிக நுண்ணியதாம். இவ்வடிவினதேயாம் இவ்வெல்லாம். இது சத் தியம், அது ஆத்மா. சுவேதகேதுவே! அது

நீ என்றுபதேசித்தார்." என்றும் சாந்தோக்கியம் ௬-அ-எ,

" सर्वं ह्येतद्ब्रह्मायमात्मा ब्रह्म ॥

இவ்வெல்லாம் பிரஹ்மம். இவ்வாத்மா பிரஹ்மம்." என்னும் மாண்டூக்யம்,

" प्रज्ञानं ब्रह्म ॥

பிரஞ்ஞானம் (பேரறிவு) பிரஹ்மம்." என்னும் தைத்திரீயம் ௩-௩.

" यत्परं ब्रह्म सर्वात्मा विश्वस्यायतनं महत् ।
सूक्ष्मात्सूक्ष्मतरं नित्यं स त्वमेव त्वमेव तत् ॥

எது பரப்பிரஹ்மமும் சர்வாத்மாவும், எல்லாவற்றினுக்கும் இடமும், பெரிதும், சூக்ஷ்மத்தினும் சூக்ஷ்மமும், நித்தியமுமாமோ அது நீயே, நீயே அது" என்னும் கைவல்யோபநிஷதம்,

" तत्त्वमसि त्वं तदसि त्वं ब्रह्मासि ॥

அதுநீ, நீ அது, நீ பிரஹ்மம்." என்னும் பைங்கலோபநிஷதம் ௩-ம் அத்யாயம்.

" यदेकमाद्वितीयम् । आकाशवत्सर्वगतं सुसूक्ष्मं
निरञ्जनं निष्क्रियं सन्मात्रं चिदानन्दैकरसं शिवं
प्रशान्तममृतं तत्परं च ब्रह्म । तत्त्वमासि ॥

எதுவேகமும் அத்விதீயமும், ஆகாயத்தினைப் போல எல்லாவற்றிலுள்ளதும், மிகச் சூக்ஷ்மமும், நிரஞ்சனமும், நிஷ்கிரியமும், சன்மாத்திரமும், சிதாநந்தைகரஸமும், சிவமும், மிகச் சாந்தமும், அமிருதமுமாமோ அது பரப்பிரஹ்மமாம். அது நீ." என்னும் சாண்டில்யம் அத்யாயம் உ.

" ज्ञात्वा स्वं प्रत्यगात्मानं बुद्धितद्वृत्तिसाक्षिणम् ।
सोऽहमित्येव तद्वृत्त्या स्वान्यत्रात्ममतिं त्यजेत् ॥

புத்திக்கு மதன் விருத்திக்கும் சாக்ஷியும் பிரத்தியகாத்மாவுமான தன்னை யறிந்து அதுயானென்றே அவ்விருத்தியினால் தனக் கந்நியமான விடத்தில் தானென்னும் புத்தியினை விடுக."

"घटाकाशं महाकाश इवात्मानं परमात्मनि ।
विलाप्याखण्डभावेन तूष्णीं भव सदा मुने ॥

स्वप्रकाशमधिष्ठानं स्वयंभूय सदात्मना ।
ब्रह्माण्डमपि पिण्डाण्डं त्यज्यतां मलभाण्डवत् ॥

चिदात्मनि सदानन्दे देहारूढाहंधियम् ।
निवेश्य लिंगमुत्सृज्य केवलो भव सर्वदा ॥

यत्रैष जगदाभासो दर्पणांतःपुरं यथा ।
तद्ब्रह्माहमिति ज्ञात्वा कृतकृत्यो भवानघ ॥

अहंकारग्रहान्मुक्तः स्वरूपमुपपद्यते ।
चन्द्रवन्विमलः पूर्णः सदानन्दः स्वयंप्रभः ॥

மகாகாயத்தில் கடாகாயத்தினைப்போல பரமாத்மாவில் ஒடுக்கி முநியே! அகண்டபாவத்தால் எப்போதும் சும்மாவிரு. சொப்பிரகாசாதிஷ்டானம் சதாத்மாவினால் தானேயாகி பிரஹ்மாண்டத்தினையும் பிண்டாண்டத்தினையும் மலபாண்டம்போல் விடுக. தேகாரூடமான அகம்புத்தியைச் சிதாத்மாவாகிய சதாநந்தத்தில் செலுத்தி, இலிங்கத்தினைவிட்டு, எப்போதும் கேவலனாவாய். எதில் இந்த ஜகத்தோற்றம் கண்ணாடியிற் புரம்போல தோற்றுகின்றதோ, அந்தப் பிரஹ்மம் யானென்றறிந்து,

பாபமற்றவனே! கிருதகிருத்திய னுவாயாக! அகங்காரகிரகத்தினின்று விடுபட்டவன் சந்திரனைப்போல் விமலனாய்ப் பூர்ணனாய்ச் சதாநந்தனாய் ஸ்வயம்பிரகாசனாய் ஸ்வரூபத்தினை யடைகின்றான்." என்னும் அத்தியாத்மோபநிஷதம்,

"நீயதுவானா யெனநின்றபேருரை; யாயதுநானானேனென்னச்சமைந்தறச்; சேயசிவமாக்குஞ் சீர்நந்திபேரரு; ளாயதுவாயனந்தானந்தியாகுமே." என்னும் திருமந்திரம் முதலியனவாம்.

மூலத்துள்ள "तत् पदम्" என்பதிலுள்ள तत् (தத்) என்பது சத்பதார்த்தமாகிய சிவத்தின் வாசகமாம். அதனை

ॐतत्सदिति निर्देशो ब्रह्मणस्त्रिविधःस्मृतः ॥

ஓம் தத் ஸத் என்று பிரஹ்மத்திற்கு மூன்றுவிதமான பெயர் சொல்லப்படுகின்றது" என்னும் கீதாவசனமுதலியவற்றாற் காண்க. பதமென்பது வஸ்துவாசகமென்பது நிகண்டுமுதலியவற்றாற் பிரசித்தமாம். (அ)

## ஒன்பதாம் சூத்திரம்.

(அ-கை) முன் ஆசாரியனால் உபதேசிக்கப் பெற்ற ஞானம் திடமாமாறு அநுஷ்டிக்கும் முறைமையினைக் கூறுகின்றார்:—

चिद्दृशात्मनि दृष्ट्वेशं त्यक्त्वा वृत्ति मरीचिकाम् ॥
लब्ध्वा शिवपदच्छायां ध्यायेत्पञ्चाक्षरीं सुधीः ॥९॥

(இ-ள்) सुधीः = நற்புத்தியுடையோன், चिद्दृश = சிவஞானதிருஷ்டியினால், आत्मनि = ஆத்மாவாகிய தன்னிடத்தில், ईशम् = ஈசனை அதாவது அந்தரியாமியாயுள்ள சிவத்தினை, दृष्ट्वा = அநந்நியமாயறிந்து, मरीचिकाम् वृत्तिं त्यक्त्वा = சிவத்திற்கந்நியமான பொய்ப்பொருள்களை யறியும் கானற்சலவுணர்ச்சிபோன்ற பொய்யுணர்ச்சியினைவிட்டு, शिवपदच्छायाम् = சிவப்பொருளான ஜோதிஸ்வரூபத்தினை, लब्ध्वा = பெற்று, पञ्चाक्षरीं ध्यायेत् = அது திடமாமாறு பஞ்சாக்ஷரப்பொருளினைப் பாவிக்கக்கடவன் (எ-று)

சித்தாகிய சிவம் சித்ரூபதிருஷ்டியினாலன்றிச் சீவனது சுட்டுணர்வால் அறியப்படமாட்டா தென்பார் ஞானதிருஷ்டியினா லென்றும்,

ஆரோபிதமான தன்னிடத்தில் தனததிஷ்டான ஸ்வரூபமான சத்திய சிவத்தினை யறிவேண்டுமென்பார் தன்னிடத்தி லீசனை யறிந்து என்றும், உலகம்பொய்யாகலின் அதனுணர்ச்சியினை கானற்சலவுணர்ச்சியென்றும், அவ்வுணர்வு மெய்யுணர்வால் நீங்கவே எஞ்சுவது அதிஷ்டானசிவஸ்வரூபமே யன்றி வேறின்மையின் சிவப்பொருளான ஜோதிஸ்வரூபத்தினைப் பெற்று என்றும் கூறினார். * உரு. (சாயை யென்பது ஜோதிஸுக் கொருபெயர் என்பதனை அமரமுதலிய நிகண்டுகளிற் காண்க.)

சீவன் ஈசனருளாகிய ஞானதிருஷ்டியினாலேயே சிவத்தை யறியவேண்டு மென்பதனை,

"प्रज्ञया त्वं विजानासि ईश्वरानुगृहीतया ।

---

* உரு. சாயையென்பதற்கு நிழலென்று பொருள் கொண்டு சம்சாரதாபத்தின் விசிராந்திக்கேதுவான நிழலாம் பதியென்று பொருளுரைப்பது மொன்று.

ஈசுவரரா லநுக்கிரகிக்கப்பட்ட பிரஞ்ஞை யினல் நீ அறிவாயாக." என்னும் மகோபநிஷத் தானும்

"नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुनाश्रुतेन । यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनंस्वाम् ॥

இவ்வாத்மாவாகிய சிவம் வேதாத்தியயன த்தா லடையப்படாது. மேதை(புத்தியின் தார ணசக்தி)யின லடையப்படாது. (குருவின்றிய) வெகுகேள்வியின லடையப்படாது. எவனை இவ்வாத்மா வரி(அநுக்கிரகி)க்கின்றதோ அவ னல் அடையத்தக்கதாம். அல்லது எவனை இவ்வாத்மா வரிக்(பிரீதியாகச்சார்)கின்றதோ அவனல் அடையத்தக்கதாம். அவனுக்கு இவ் வாத்மா தனது ஸ்வரூபத்தினை விரிக்(காட்டு) கின்றது." என்னும் முண்டகம் ௩-௩. னலும்,

"त्वमहंशब्दलक्ष्यार्थमसक्तं सर्वदोषतः ।
सर्वगं सच्चिदात्मानं ज्ञानचक्षुर्निरीक्षते ॥

நீ நான் என்னும் சொற்களின் லக்ஷியார்த் தமும் எத்தோஷத்தானும் பற்றப்படாததும்,

எல்லாவற்றினிருப்பதும் சத்தும் சித்துமான ஆத்மாவினை ஞானக்கண்ணுடையவன் காண்கின்றான்" என்னும் வராகோபநிஷதம்-உ-கஅ, னுலும்,

மற்றும் சூதசங்கிதைமுதலியவற்றானும்,

"அவனிவனாகவனருளாலல்ல; திவனவனாகானென்றுந்தீபற; வென்றுமிவனேயென்றுந்தீபற." என்னும் திருவுந்தியார்,

"அவனருளாலேயவன்றாள்வணங்கி" என்னும் திருவாசகமுதலியவற்றானும் காண்க.

தன்னிலே தலைவனான ஈசனைக் காணவேண்டுமென்பதனை

"तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषाँ सुखँ शाश्वतं नेतरेषाम् ।

ஆத்மாவின்கணுள்ள அவனை எத்தீரர்கள் பின்பற்றி யறிகின்றார்களோ, அவர்களுக்குச் சாசுவதமான சுகமாம். மற்றவர்களுக்கில்லை." என்னும் கடவல்லி உ-ரு-கஉ சுவேதாசுவதரம் சா-கஉ வாக்கியத்தானும்,

" आत्मन्येवात्मानं पश्यति सर्वमात्मानं पश्यति ।

ஆத்மாவிலேயே ஆத்மாவினைக் காண்கின்றான், எல்லாமாகிய ஆத்மாவினைக் காண்கின்றான்." என்னும் பிருகதாரணியகம் ச-ச-உரு,

" एतज्ज्ञेयं नित्यमेवात्मसंस्थं नातः परं वेदितव्यं हि किंचित् ॥

ஆத்மாவிலிருப்பதான இதுவே நித்தியம் அறியத்தக்கதாம். இதனின்வேறாக அறிய வேண்டிய தெதுவுமில்லை"

" एवमात्मात्मनि गृह्यतेऽसौ ॥

இவ்வாறு இவ்வாத்மா ஆத்மாவில் கிரகிக்கப்படுகின்றது" என்னும் சுவேதாசுவதரம் க-கஉ, கரு,

" नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं च तदव्ययम् ।
तद्भूतयोनिं पश्यन्ति धीरा आत्मानमात्मनि ॥

நித்தியமும், விபுவும், எல்லாவற்றினிருப்பதும், மிகச்சூக்ஷ்மமும், அந்த அவ்வியயமும், பூதயோனியுமான அவ்வாத்மாவினைத் தீரர்கள்

ஆத்மாவிலறிகின்றனர்." என்னும் ருத்ரஹ்ருதயோபநிஷதம்,

" सर्वभूतेषु चात्मानं सर्वभूतानि चात्मनि ।
संपश्यन्नात्मयाजी वै स्वाराज्यमधि गच्छति ॥

சர்வபூதங்களிலு மாத்மாவினையும், ஆத்மாவில் சர்வபூதங்களையும் செவ்வையாய்க்கண்டு ஆத்மயாகஞ் செய்வோன் சுவாராஜ்யத்தினை அடைகின்றான்" என்னும் மனுதர்மசாத்திரம் கஉ-கூக.

" தன்னிற்றன்னையறியுந்தலைமகன்; தன்னிற்றன்னையறியற்றலைப்படும்; தன்னிற்றன்னையறியிலனாயிடின்; தன்னிற்றன்னையுஞ் சார்தற்கரியனே" திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாக்கு,

" தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லதானென்றுந்; தன்னைத்தான் பெற்றவன்றானாரென்னிற்—தன்னாலே; யெல்லாந்தனுட் கொண்டு கொண்டதனைக்கொள்ளாதே; யெல்லாமாய்நிற்குமிவன்," என்னும் திருக்களிற்றுப்படியார் முதலியவற்றா லறிக.

சிவஞானத்தாற் பாசமொழியு மென்பதனை,

" अव्यक्तात्तु परः पुरुषो व्यापकोऽलिङ्ग एव च ।
यज्ज्ञात्वा मुच्यते जन्तुरमृतत्वं च गच्छति ॥

அவ்வியக்தத்தினும் மேலானது வியாபகமும் அலிங்கனுமான புருஷனேயாவன். அவனை யறிதலால் ஜீவன் பாசத்தினின்று விடுபடுகின்றான்; அமிருதத்துவத்தினை யடைகின்றான்." என்னும் கடவல்லி உ-கூ-அ.,

भिद्यन्ते हृदयग्रन्तिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥

அந்த பராவரமான வஸ்து அறியப்பட்ட போது தேகாதிஅநாத்மபதார்த்தங்களை யாத்மாவென் றறிதலாகிய இதயமுடிச்சு அறுகின்றது. சர்வசம்சயங்களும் சிதைகின்றன. இவனது கர்மங்கள் நசிக்கின்றன." என்னும் முண்டகம் உ-உ-அ, அந்நபூர்ணோபநிஷதம் ச-ங-க, மகோபநிஷதம் ச-அஉ,

" ज्ञात्वा देवं सर्वपाशापहानिः ।
क्षीणैः क्लेशैर्जन्ममृत्युप्रहाणिः ॥

தேவனை யறியவே சர்வபாசங்களின் நாசமாம். அவித்யாதிகிலேசங்களின் நாசத்தால் ஜன்மமிருத்தியு நாசமாய்."

" तमेव विदित्वातिमृत्युमेति नान्यः पन्था विद्यतेऽयनाय ॥

அப்புருஷனை அறிந்து மிருத்யு வொழிந்த தான முக்தியினை அடைகின்றான். அதனைச் சேர்வதற்கு வேறுவழி யில்லை." என்னும் சுவேதாசுவதரம் க-கக, ங-அ.

" निर्विकल्पमनन्तं च हेतुदृष्टान्तवर्जितम् ।
अप्रमेयमनाद्यं च ज्ञात्वा च परमं शिवम् ॥ ९ ॥
न निरोधो न चोत्पत्तिर्नबन्धो न च शासनम् ।
न मुमुक्षा न मुक्तिश्च इत्येषा परमार्थता ॥ १० ॥

நிர்விகற்பமும், அநந்தமும், ஏதுதிருஷ்டாந்தங்களின்றியதும், அப்பிரமேயமும், முதலின்றியதுமான பரமசிவத்தினை யறியவே, நிரோதமு மில்லை. உற்பத்தியு மில்லை. வந்திக்கத்தக்கவனு மில்லை. கட்டளையு மில்லை. மோக்ஷ விருப்பமு மில்லை. முக்தியு மில்லை யென்னு

மி-து பரமார்த்தத்தன்மையாம்." என்னும் பிரஹ்மபிந்தூபநிஷதம்.

" जाग्रत्स्वप्नसुषुप्त्यादिप्रपञ्चं यत्प्रकाशते ।
तद्ब्रह्माहमिति ज्ञात्वा सर्वबन्धैः प्रमुच्यते ॥ १७॥

ஜாக்கிர சொப்பன சுழுத்தியாதிப் பிரபஞ்சத்தினை எது பிரகாசிக்கின்றதோ, அந்தப் பிரஹ்மம் யானென்றறிந்து சர்வ பந்தங்களினின்றும் விடுபடுகின்றான்" என்னும் கைவல்யோபநிஷதம்.

" एवं ज्ञात्वा विद्वान्मृत्युमुखात्प्रमुच्यते नान्यः पन्था विद्यतेऽयनाय ॥

இவ்வாறு பிரஹ்மசொரூபத்தினை அநந்நியமாயறிந்து வித்வான் மிருத்யுவின் வாயினின்று விடுபடுகின்றான். முக்தியினைச் சார்வதற்கு வேறுவழியில்லை." என்னும் நாரதபரிவிராஜகோபநிஷதம், கூ-௯.

" गुरुशास्त्रोक्तमार्गेण स्वानुभूत्या च चिद्घने ।
ब्रह्मैवाहमिति ज्ञात्वा वीतशोको भवेन्मुनिः ॥

குருசாஸ்திரங்களாற் சொல்லப்படும் வழியி ளுைம் சுவாநுபூதியிளுைம் சிற்கனஸ்வரூபத் தில் பிரஹ்மமே யானென் றறிந்து முநியான வன் சோகநீங்கியவனுகின்ருன்." என்னும் மகோபநிஷதம் ச-உரு.

" तद्ब्रह्मानन्दमद्वन्द्वं निर्गुणं सत्यचिद्घनम् ।
विदित्वा स्वात्मरूपेण न बिभेति कुतश्चन ॥

ஆநந்தமும், துவந்துவ மில்லாததும், நிர் குணமும், சத்தியசித்கனமுமான அந்தப் பிர ஹ்மத்தினை தனதாத்மவடிவாக அறிந்து எத னினின்று மஞ்சுகிறதில்லை." என்னும் கடருத் ரம், வராகம் க-உ௦.

" गुहायां निहितं साक्षादक्षरं वेदचेन्नरः ॥
छित्वाऽविद्यामहाग्रन्थिं शिवं गच्छेत्सनातनम् ॥

குகையில் வைக்கப்பட்டுள்ள சாக்ஷாத் அக்ஷரமான ஆத்மாவினை அறிவாளுயின், நரன் அவித்தையாகிய பெருமுடிச்சினை யறுத்து சநாதனமான சிவத்தினை அடைகின்ருன்." என்னும் ருத்ரஹ்ருதயோபநிஷதம்.

" सोऽयं स्वापरया शक्त्या बद्धवत्प्रतिभासते ।
एकैव परमा शक्तिर्माया दुर्घटकारिणी ॥ ६ ॥

शिवस्यानन्तरूपा सा विद्यया तस्य नश्यति ।
याविनश्यति सा माया चिन्मात्रे परिकल्पिता ॥७॥

अधिष्ठानावशेषो हि नाशः कल्पितवस्तुनः ।
भावस्यैव ह्यभावत्वं नाशोऽभावस्य भावतः ॥

भावाभावस्वभावाभ्यामन्य एव हि कल्पितः ॥८॥

अधिष्ठानस्य नाशो न सत्यत्वादेव सर्वदा ।
सर्वाधिष्ठान मीशानं पश्यन्नेव विमुच्यते ॥ ९ ॥

அந்த இது (சிவம்) தன்னின் வேறாகாத சக்தியினால் பந்தமுடையது போல் தோற்றுகின்றது. ஒரே பரமசக்தியான மாயை நிகழாததனை நிகழ்த்துவிப்பதாம். சிவனது அநந்தவடிவமான அது அவனது வித்தையி(ஞானத்தி)னால் நசிக்கின்றது. எது நசிக்கின்றதோ அது மாயை. சின்மாத்திரத்தில் கற்பிக்கப்பட்டதாம். கற்பிதவஸ்துவின் நாசம் அதிஷ்டானம் மிஞ்சுவதாமென்பது பிரசித்தம். பாவத்திற்கே அபாவத்துவமாம். அபாவத்திற்குப்

பாவத்தால் நாசமாம். பாவாபாவஸ்வபாவங் கட்கு வேருனதேயாம் கற்பிதம். அதிஷ்டா னம் சத்தியமாதலின் அதற்கு என்றும் நாச மில்லை. சர்வாதிஷ்டானனுன ஈசானனைக் கண் டமாத்திரத்தால் பாசங்களினின்று விடுபடு கின்றான்." என்னும் சூதசங்கிதை யஞ்ஞவை பவகண்டம் உ-ம் அத்யாயம்.

" संसारकारणं माया सा सदा सद्विलक्षणा ।
प्रतीत्यैव तु सद्भावस्तस्या नैव प्रमाणतः ॥

सापि ब्रह्मातिरेकेण वस्तुतो नैव विद्यते ।
तत्त्वज्ञानेन मायाया बाधो नान्येन कर्मणा ॥

शिवः सर्वमिति ज्ञानं सर्वज्ञानोत्तमोत्तमम् ।
तत्तुल्यं तत्परं चापि न किंचिदपि विद्यते ॥

சம்ஸாரகாரணம் மாயையாம். அஃது எப் போதும் சத்துவிலக்ஷணமாம். அதனிருப்புத் தோற்றமாத்திரத்தினாலாம்; பிரமாணத்தினால் இருப்பு இலதேயாம். அதுவும் பிரஹ்மத் தின்வேருக வாஸ்தவமாக இருப்பதேயில்லை. மாயையின் பாதம் தத்துவஞானத்தினாலாம்;

வேறு கர்மத்தினு லாகாது. யாவும் சிவ னென்னும் ஞானம் சர்வஞானேத்தமோத்தமமாம். அதற்குச் சமமானதும் மேலானதும் எதுவுமில்லை." என்னும் சூதகீதை அ-ம் அத்யாயம்.

"அவிழுவிருக்கு மறிவுடனின்றவர்க்; கவிழுமிவ்வல்லலென்றுந்தீபற; வன்றியவிழாதென்றுந்தீபற." என்னும் திருவுந்தியார்.

"அறிந்தேயுயிராலயத்தின்பேத; மறிந்தான் மெய்ஞ்ஞானிமலமற்று" என்னும் சைவசமய நெறி என்னு மிவை முதலியவற்றுற் காண்க.

சிவஞானத்தால் பாசமாகிய அநர்த்தம் நீங்கவே எஞ்சிய பரமாநந்தமான சிவத்தினையடைகின்ருன் என்பதனை,

"यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि श्रिताः ।
अथ मर्त्योऽमृतो भवत्यत्रब्रह्म समश्नुते ॥

यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्येह ग्रंथयः ।
अथ मर्त्योऽमृतो भवत्येतावदनुशासनम् ॥

எப்போது இவன் இதயத்திற் சார்ந்துள்ள காமங்களெல்லாம் நீங்குகின்றனவோ அப்

போது மரணதர்மமுள்ளவன் அமிருதனாகின்றான். இங்குப் பிரஹ்மத்தினைச் செவ்வையாயநுபவிக்கின்றான். எப்போது இங்கு இருதயத்தின் கிரந்திகள் யாவும் அறுகின்றனவோ அப்போது மரணதர்மமுடையவன் அமிருதனாகின்றான். இவ்வளவே ஆஞையாம்." என்னும் கடவல்லி உ-சு-கசு, கரு.

"तदेव निष्कलं ब्रह्म निर्विकल्पं निरञ्जनम् ।
तद्ब्रह्माहमिति ज्ञात्वा ब्रह्म संपद्यते ध्रुवम् ॥

அதே நிஷ்களம் பிரஹ்மம் நிர்விகற்பமும் நிரஞ்சனமுமாம். அந்தப் பிரஹ்மம் யானென்றறிந்து நிச்சயமாகப் பிரஹ்மத்தினை அடைகின்றான்." என்னும் பிரஹ்மபிந்தூபநிஷதம்.

लक्ष्यालक्ष्यमतिंत्यक्त्वा यस्तिष्ठेत्केवलात्मना ।
शिव एव स्वयं साक्षादयं ब्रह्मविदुत्तमः ॥

லக்ஷியாலக்ஷிய மதியினை விட்டுக் கேவலாத்மாவாக எவன் நிற்கின்றானோ அந்தப் பிரஹ்மவித்துத்தமன் ஸ்வயம் சாக்ஷாத் சிவமே." என்னும் மகோபநிஷதம் ச-அரு.

"एवं विदित्वा परमात्मरूपं गुहाशयं निष्कल-मद्वितीयम् समस्तसाक्षिं सदसद्विहीनं प्रयाति शुद्धं परमात्मरूपम् ॥

குகையிலிருப்பதும், நிஷ்களமும், அத்விதீயமும், சமஸ்தசாக்ஷியும், சத்தசத்தல்லாததுமான பரமாத்மவடிவத்தினை இவ்வாறு அறிந்து, சுத்தமான பரமாத்மவடிவத்தினையடைகின்றான்." என்னும் கைவல்யோபநிஷதம் உ-உ௩. சிவகீதை கூ-ருக.

"यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तारमीशं पुरुषं ब्रह्मयोनिम् । तदा विद्वान्पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति ॥

எப்போது பார்ப்பவன் பொன்னிறமும் (பிரகாசவடிவமும்), கர்த்தாவும், பிரஹ்மயோனியும், ஈசனுமான புருஷனைக் காண்கின்றானோ அப்போது வித்வான் புண்ணியபாபங்களிரண்டினையு மொழித்து, நிரஞ்சனனாய் மேலான சாமிய(சமத்துவ)த்தினை யடைகின்றான்." என்னும் முண்டகம் ௩-க-௩.

"शिवापरोक्षात्संसारकारणेन वियुज्यते ॥ २१ ॥
ततः स्यान्मुक्तसंसारो मुक्तः शिवसमो भवेत् ।

சிவாபரோக்ஷத்தினால் சம்ஸாரகாரணத்தினின்று விடுபடுகின்றான். அதனால் சம்ஸாரத்தினின்று முக்தனாகின்றான். முக்தன் சிவசமனாகின்றான். [இங்குக் கூறிய சமத்துவமானது ஒருமையேயாம்; சமானத்துவம் (ஒப்புமை) ஜீவேசுரர்களுக்கு எவ்விதத்தாலும் கூடாதென்பது பிரஹ்மகீதை எ-ம் அத்யாயம் சுரு-வது சுலோகமுதல் எஉ-வது சுலோகம் வரையில் கூறப்பட்டிருத்தலான்.]" என்னும் வாயு சங்கிதை பூர்வபாகம் உஅ-ம் அத்யாயம்.

"विद्यया तद्विनाशेन स्वसाम्यं याति नान्यथा ।
अतः साम्यं तयोः साक्षादैक्यमेव न चेतरत् ॥७३॥

ஞானத்தினால் அவ்வவித்தை நாசமாதலால் தனது சாம்யத்தினை யடைகின்றான்; வேறுவிதமாக இல்லை. ஆதலால் அவ்விருவரின் சாம்யம் சாக்ஷாத் ஐக்யமே (ஒருமையே)யாம்; வேறில்லை." என்னும் பிரஹ்மகீதை எ-ம் அத்யாயம்.

"केचित्सामान्यमद्वैतं वदन्ति भ्रान्तचेतसः ।
विशेषं द्वैतमाश्रित्य न तेषामस्तिवेदनम् ॥

द्वैतमेव हि सर्वत्र प्रवदन्ति हि केचन ।
नते मनुष्याः कीटाश्च पतङ्गाश्च घटा हि ते ॥

अविशेषेण सर्वं तु यः पश्यति महेश्वरम् ।
स एव साक्षाद्विज्ञानी स शिवः स तु दुर्लभः ॥

சில பிராந்தசித்தமுடையோர் விசேஷமான துவைதத்தினை யாசிரயித்துச் சாமானியமான அத்வைதத்தினைக் கூறுகின்றனர். அவர்கட்கு ஞான முளதாகாது. சிலர் எங்கும் துவைதத்தினையே கூறுகின்றனர். அவர்கள் மனிதரும் கீடங்களும் பதங்கங்களு மல்லர். அவர்கள் கட (ஜட)ங்களை யாவர் நிச்சயம். விசேஷ மின்றி எல்லாவற்றையும் மகேசுவரனாக எவன் அறிகின்றானோ அவனே சாக்ஷாத் விஞ்ஞானி. அவன் சிவனவன். அவன் துர்லபன்" என்னும் பிரஹ்மகீதை கூ-ம் அத்யாயம்.

"जाग्रदादित्रयं यस्तु विजानाति चिदात्मना ।
ततो भेदेन नैवास्ति पुरत्रयमिदं सदा ॥२५॥

चैतन्यमात्रो भगवाञ्शिव एव स्वयंप्रभः ।
पुरत्रयात्मना भाति न भाति च महाप्रभुः ॥

ஜாக்கிரமுதலிய மூன்றனையும் எவன் சிதாத்மாவாக அறிகின்றானோ, அவ்வாத்மாவின்வேறாக இம்முப்புறமும் எப்போது மில்லை. ஸ்வயம்பிரகாசனும் சேதனமாத்திரனும் பகவானுமாகிய சிவனே முப்புரவடிவமாக விளங்குகின்றான்; விளங்குகிறதுமில்லை மகாப்பிரபு." என்னும் பிரஹ்மகீதை கக-ம் அத்யாயம்,

"ब्रह्म सर्वमिति ज्ञानं ब्रह्मप्राप्तेस्तु साधनम् ।
जगन्मायेति विज्ञानमज्ञानं फलतो भवेत् ॥
तथापि परमाद्वैतज्ञानस्येदं तु वेदनम् ।
उपकारकमत्यन्तं तद्दृष्ट्वावक्ति च श्रुतिः ॥

யாவும் பிரஹ்மமென்னும் ஞானம் பிரஹ்மப்பிராப்திக்குச் சாதனமாம். ஜகத்து மாயையென்னும் விஞ்ஞானம் பயனால் அஞ்ஞானமாகின்றது. அவ்வாறாயினும் இந்த ஞானம் பரமாத்வைதஞானத்திற்கு அத்தியந்தம் உபகாரகமாம். அதனைக் கண்டு சுருதியும் கூறுகின்றது." என்னும் பிரஹ்மகீதை கஉ-ம் அத்யாயம்,

"प्रज्ञानमेव तद्ब्रह्म शिवरुद्रादिसंज्ञितम् ।
एवंरूपपरिज्ञानादेव मर्त्योऽमृतोभवेत् ॥

பிரஞ்ஞானமே சிவருத்திராதிப்பெயருடைய அந்தப் பிரஹ்ம்மா மென்னும் இவ்வடிவஞானத்தினாலேயே மர்த்தியன் அமிருதனாகின்றான்." என்னும் பிரஹ்மகீதை ௩-ம் அத்யாயம்,

"தன்னைத்தான் றெளியநோக்கித் தன்னிடத் தணப்பிலாத; வென்னுருவதனிற் சேர்ந்தோ னிருவினைச் சிமிழ்ப்பினெய்தி; மன்னிய திகிரி போலும் பவத்தினின் மயங்காணாகி; யுன்னரு முத்திவீட்டி னுவந்தினி திருப்பனன்றே." என்னும் கூர்மபுராணம் சாங்கியயோக முரைத்த வத்தியாயம்,

"ஆன்மாவை; மூறையிலந்த மாயைதான் மூடுமல மாயைகெட, வுறைவதுவே சிவமென னவுரைப்பரா லெனவுரைத்தான்."

"மலமாயை வீந்ததற்பின்; ஓவலிலப்புருடனே சிவனென்னவுறைவன்."

"சிவனை; மருளின்றாகியேயுணரின் மன்னு பசுத்வமொடுபாச; மொருவ மழுவாளேர்ந்து

சிவனுருவாய்ப்பொருந்துமென்றுரைத்தான்" என்பன வாயுசங்கிதை,

"செம்பிற்களிம்புபோற் சிவத்தைவிழுங்கு மிக, வெம்பிநின்றழும்மலத்தை வேறுசெய்வ தெக்காலம்" பத்திரகிரியார்.

"சேதனனைக் கொண்டேதெளிவுற்றுச்; சேதனனைச்; சேதனனிலேசெலுத்திச் சிற்பரத் தாயிருப்பா ரேதமறக்கண்டவர்களின்று."

"சிவமேசிவமாக யானினைந்தாற்போலச் சிவமாகியிருப்பதேயன்றிச்—சிவமென்; றுணர் வாருமங்கேயுணர்வழியச் சென்று; வுணர் வாருமுண்டோ புவி" என்னும் திருக்களிற் றுப்படியார்,

"சீவனெனச்சிவனென்ன வேறில்லை; சீவ னார் சிவனாரையறிகிலர்; சீவனார் சிவனாரை யறிந்தபின்; சீவனார் சிவனாயிட்டிருப்பாரே."

"தானேசிவமானதன்மை தலைப்பட; தன் னையறிவதறிவா மஃதன்றிப்; பின்னையறிவது பேயறிவாமே."

"சேருஞ்சிவமானா ரைம்மலந்தீர்ந்தவர்."

"திரிமலந்தீர்ந்து சிவனவனாமே." என்னும் திருமந்திரம் இவை முதலியவற்றாற்காண்க.

உலகம் கானற்சலமுதலியவற்றைப்போல் மித்தை யென்பதனை,

"एष त आत्मा सर्वान्तरोऽतोऽन्यदार्तम् ।

இவ்வுனதாத்மா சர்வாந்தரமாம். இதனின் வேறாயது பொய்யாம்." என்னும் பிருகதாரணியகம் ௩-௪-௨,

"आलोकयन्तं जगदिन्द्रजालमापत्कथं मां प्रविशेदसङ्गम् ।

ஜகத்தை இந்திரஜாலமாகக் காணும் அசங்கனான என்னை ஆபத்து எப்படிச் சாரும்" என்னும் மைத்திரேயியுபநிஷதம் க-கஉ,

"मायामात्रविकासत्वान्मायातीतोऽहमद्वयः ।

உலகம் மாயாமாத்திரவிகாசமாயிருத்தலின் (பந்தாதிகளெனக்கில்லை) மாயாதீதனாகிய யான் அத்துவயன்" என்னும் ஆத்மபோதோபநிஷதம்,

"कालत्रये यथा सर्पोरज्जौ नास्ति तथा मयि ॥
अहंकारादिदेहान्तं जगन्नास्त्यहमद्वयः ।
चिद्रूपत्वान्न मे जाड्यं सत्यत्वान्नानृतंमम ॥
आनन्दत्वान्न मे दुःखमज्ञानाद्भाति सत्यवत् ॥

காலமூன்றிலும் எப்படி இரஜ்ஜுவில் சர்ப்பமில்லையோ, அப்படி என்னிடத்தில் அகங்காராதிதேகாந்தமான ஜகத்து இல்லை. யான் அத்துவயன். சித்ரூபனாதலால் எனக்கு ஜடத்துவமில்லை. சத்தியத்தன்மையால் பொய் எனக்கில்லை. ஆநந்தத்தன்மையால் துக்கம் எனக்கில்லை. அஞ்ஞானத்தினால் சத்தியம்போல் தோற்றுகிறது." என்னும் ஆத்மபோதோபநிஷதம்,

इन्द्रजालमिव मायामयं स्वप्नइव मिथ्यादर्शनं कदलीगर्भ इवासारं नट इव क्षणवेषं चित्रभित्तिरिव मिथ्यामनोरमम् ॥

உலகம் இந்திரஜாலம்போல் மாயாமயமும், ஸ்வப்பனம்போல் மித்தியாதரிசனமும், கன்னிக்கதலிவிருக்ஷத்தின் இடைபோல் அசார

மும், நடனைப்போல் க்ஷணவேஷமும், சித்திரச்சுவர்போல் மித்தையான மனோரமமுமாம்" என்னும் மைத்திராயணியுபநிஷதம் ச-உ.

" अनित्यं जगद्यज्जनितं स्वप्नजगदभ्रगजादितुल्यम् । तथा देहादिसंघातं मोहगुणजालकलितं तद्रज्जुसर्पवत्कल्पितम् ॥

ஜநித்ததான ஜகத்து எதுவோ, அது அநித்தியமாம். சொப்பனவுலகு மேகத்திற் றோற்றும் யானை முதலியவற்றை யொத்ததாம். அவ்வாறே தேகாதிசங்காதம் மோககுணக் கூட்டங்களாற் கூடியதாம். அது இரஜ்ஜு சர்ப்பம்போல் கற்பிதமுமாம்." என்னும் மண்டலப்பிராஹ்மணோபநிஷதம்.

" एक एव शिवो नित्यस्ततोऽन्यत्सकलं मृषा ।

சிவனொருவனே நித்தியன். அவனின்வேறாய சகலமும் பொய்." என்னும் சரபோபநிஷதமும்,

" संकोचविकासात्मकमहामायाविलासात्मक एव सर्वोऽप्यविद्याप्रपंचः । परमार्थतो न किंचिदस्ति

क्षणशून्यानादि मूलाविद्या विलासत्वात् । तत्कथमिति । एकमेवाद्वितीयं ब्रह्म । नेह नानास्ति किंचन तस्माद्ब्रह्मातिरिक्तं सर्वं बाधितमेव ॥

சுருங்குதல் விரிதல் வடிவ மகாமாயாவிலாசவடிவினதேயாம் சகல அவித்தியாப்பிரபஞ்சமும். பாமார்த்தமாக எதுவு மிருப்ப தில்லை; க்ஷணசூநியமான அநாதிமூலாவித்தையின் விலாசமாதலால். அஃதெங்ஙனமெனின்:—ஒரே அத்விதீயப் பிரஹ்ம முளது; இங்கு நாநாவென்ப தெதுவு மில்லை. ஆதலால் பிரஹ்மத்தின் வேறான யாவும் பாதிக்கப்பட்டதேயாம்." என்னும் மகாநாராயணோபநிஷதம்.

" यदिदं दृश्यते सर्वं जगत्स्थावरजङ्गमम् ।
तत्सुषुप्ताविव स्वप्नः कल्पान्ते प्रविनश्यति ॥

யாதொரு ஸ்தாவர ஜங்கமமான இவ்வெல்லாஜகத்தும் காணப்படுகின்றதோ, அது சுழுத்தியில் சொப்பனம்போலக் கற்பாந்தத்தில் நசிக்கின்றது." என்னும் மகோபநிஷதம் ௪-௪௪

" मरुभूमौ जलं सर्वं मरुभूमात्रमेव तत् ।
जगत्त्रयमिदं सर्वं चिन्मात्रं स्वविचारतः ॥

மருபூமியில் தோற்றும் அந்த ஜலமுழுவதும் மருபூமிமாத்திரமேயாம். அதுபோல மூவுலகமாகிய இவ்வெல்லாம் தனது விசாரத்தினால் சின்மாத்திரமேயாம்." என்னும் மகோபநிஷதம் ச-அச.

साक्षिभूते समे स्वच्छे निर्विकल्पे चिदात्मनि ।
निरिच्छं प्रतिबिम्बन्ति जगन्ति मुकुरे यथा ॥

சாக்ஷிவடிவினதும், சமமும், ஸ்வச்சமும், நிற்விகற்பமுமான சிதாத்மாவில் உலகங்கள் கண்ணாடியிற்போல இச்சையின்றிப் பிரதிபிம்பிக்கின்றன." என்னும் மகோபநிஷதம் ரு-ருஙி

"प्रत्यगात्मा परंज्योतिर्माया सा तु महत्तमः ।
तथा सति कथं मायासंभवः प्रत्यगात्मनि ।
तस्मात्तर्कप्रमाणाभ्यां स्वानुभूत्या च चिद्घने ॥
स्वप्रकाशैकसंसिद्धे नास्ति माया परमात्मनि ।
व्यावहारिकदृष्टयेयं विद्याविद्ये न चान्यथा ।
तत्त्वदृष्टया तु नास्त्येव तत्त्वमेवास्ति केवलम् ॥

பிரத்தியகாத்மா பரஞ்ஜோதி. அம்மாயையோ பெருத்த இருள். அவ்வாறாகவே, பிரத்

தியகாத்மாவில் மாயை எவ்வாறு சம்பவிக்கும்? ஆதலால் தர்க்கப்பிரமாணங்களாலும் ஸ்வாநுபூதியினாலும் ஸ்வப்பிரகாசைகமாய்ச் சித்தித்துள்ள சிற்கனமான பரமாத்மாவில் மாயை இலதாம். வித்தையவித்தை யென்னு மிது வியாவகாரிகதிருஷ்டியினாலாம்; வேறுவகையாலன்று; தத்துவதிருஷ்டியினாலோ இலதேயாம். கேவலம் தத்துவமே யுளது." என்னும் பாசுபதப்பிரஹ்மோபநிஷதமும் பிரஹ்மகீதை ச-உஅ-௬௦.

" अस्तितालक्षणा सत्ता सत्ता ब्रह्म न चापरा ।
नास्ति सत्तातिरेकेण नास्तिमाया च वस्तुतः ॥
योगिनामात्मनिष्ठानां माया स्वात्मनि कल्पिता ।
साक्षिरूपतया भाति ब्रह्मज्ञानेन बाधिता ॥

இருக்கிறதெனுந்தன்மைலக்ஷண முள்ளது சத்தையாம். சத்தை பிரஹ்மமாம்; வேறன்று. சத்தையின் வேறாக இல்லை. உண்மையாக மாயையு மில்லை. ஆத்மநிஷ்டர்களான யோகிகட்கு மாயை ஸ்வாத்மாவில் கற்பிக்கப்பட்டதாம்; பிரஹ்மஞானத்தினால் பாதிக்கப்பட்டதாய்ச் சாக்ஷிவடிவத்தன்மையாக விளங்

குகின்றது." என்னும் பாசுபதப்பிரஹ்மோப நிஷதமும்,

"बद्धो मुक्तो महाविद्वानज्ञ इत्यादिभेदतः ।
एक एव सदा भाति नानेव स्वप्नवत्स्वयम् ॥

अतः स्वमुक्तावन्येषामाभासानामपि ध्रुवम् ।
मुक्तिं जानाति हे देवा आत्मनात्मविद्वरः ॥

स्वसंसारदशायां तु स्वभ्रान्त्या सर्वदेहिनाम् ।
आभासानां च संसारं वेद मुक्तिं तथैव च ॥

பெத்தன் முக்தன் மகாவித்துவான் அஞ் ஞன் என்றல் முதலிய பேதத்தால் ஒருவனே ஸ்வயம் சொப்பனம்போல் எப்போதும் நானா வைப்போல் விளங்குகின்றான். ஆதலால் ஏ! தேவர்களே! ஆத்மாவால் ஆத்மாவினை யறிப வரிற் சிரேஷ்டன் தனது முக்தியில் மற்ற வாபாசர்களின் முக்தியினையும் நிச்சயமாக அறி கின்றான். தனது சம்ஸாரதசையிலோ தனது பிராந்தியினால் ஆபாஸர்களான சர்வதேகிக ளின் சம்ஸாரத்தினையும் அவ்வாறே முக்தியி னையும் அறிகின்றான்." என்னும் பிரஹ்மகீதை ச-ம் அத்யாயம்,

"यस्मिन्नध्यस्तरूपेण स्थितं सर्वं निरूपणे ।
स एव सकलं नान्यदिति सम्यङ्निरूपणे ॥

सर्वाधारे स्वतः सिद्धे शिवसंज्ञे तु निर्मले ।
प्रत्यग्रूपे परानन्दे नेह नानाऽस्ति किंचन ॥

मृत्योः स मृत्युमाप्नोति इह नानेव पश्यति ।
तस्मादध्यस्तमज्ञानं तत्कार्यं चात्मरूपतः ॥

நிரூபிக்குமிடத்து எதில் யாவும் அத்தியஸ்தரூபமாக நிலைத்திருக்கின்றனவோ, அதுவே எல்லாமாம்; வேறில்லை. செவ்வையாய் நிரூபிக்குமிடத்து சர்வாதாரமும், இயல்பாகச் சித்தித்துள்ளதும், சிவனென்னும் பெயருள்ளதும், நிர்மலமும், பிரத்தியக்குவடிவினதுமான பராநந்தத்தில் இங்கு நாநாவென்பது எதுவுமில்லை. எவன் இங்கு நாநாவைப்போல் காண்கின்றானோ, அவன் மிருத்தியுவினின்று மிருத்தியுவினை அடைகின்றான். ஆதலால் அஞ்ஞானமும் அதன் காரியமும் ஆத்மரூபத்தினின்று அத்தியஸ்தமாம்" என்னும் பிரஹ்மகீதை ௧௦-ம் அத்தியாயம்.

" शुक्तिकायां यथा तारं कल्पितं मायया तथा।
महदादिजगन्मायामयं मय्येव कल्पितम् ॥

எப்படிச் சுத்திகையில் வெள்ளி கற்பிக்கப் படுகின்றதோ, அப்படியே மாயாமயமான மகதாதிஜகத்து மாயையினால் என்னிடத்திலேயே கற்பிக்கப்பட்டதாம்." என்னும் யஞ்ஞவராக பகவற்கீதை.

" द्वैतभ्रान्तिरविद्याख्या ॥

அவித்தையென்பப்படுவது துவைதப் பிராந்தியாம்." என்னும் பிரஹ்மபுராணம்.

" துயின்மலமுண்மைத்தென்னிற் சொல்லுதற்கரியவாய; மயர்வறுசன்மகோடிமருவினுமுத்தியின்றே."

"வெளிற்றறி வெறிந்தமெய்ம்மை முதுக்குறைவுடையமேலோர்; தளிர்த்தவிச் சகத்தையெல்லாந் தற்பரமாகக்காண்ப;—ரளிக்குலம் வீழுங்கண்ணி யரவென மருளுமாபோற்; களித்தபுல் லறிவினோரிச் சகத்தினைச் சகமாய்க் காண்பார்."

"ஆதலாற்பிரமமொன்றே நித்தியமலகைத் தேரிற் ; பேதுறத்தோன்றுநீரிற் பிரபஞ்சமருண்டுதோன்றுந் ; தீதுறுமனத்தர்தீய பிரபஞ்சம்பிரமம்வேறென் ; றோதுவரொக்கநோக்கும் யோகியரொன்றாய்க்காண்பார்." என்னும் கூர்மபுராணம் சாங்கியயோகமுரைத்த வத்தியாயம்

"எவ்வமறு பிரமத்தினுருவாகுஞ் சகமிதனைச்சகமென்றெண்ண ; னெவ்வமறு மென்சிப்பியினை வெள்ளியெனமருண்டெண்ணு நோன்மைத்தாமால்" என்னும் கூர்மபுராணம் சம்பிரதாய வத்தியாயம்.

"விரிந்தபூதங்களினோடு விளம்பிந்தியங்கள் தத்துவங்கள் ; திருந்தாவகங்காரத்தினோடு செறிமுக்குணங்கண் மாத்திரைகள் ; பொருந்துமாயை ஜீவனிவை பொய்யாம் யாமே பொய்யின்றி ; யிருந்தெவ்விடத்து நிலைபெறுமேவாமதனாற்றாணு வெனவிசைப்பார்." இலிங்கபுராணம் தியானவிதி.

"பேய்த்தேய் முகக்குறும்பேதை குணமாகாமே"

"இந்திரஜால விடாப் பிறவித்துய ரேகுவ தாகாதே" என்னும் திருவாசகம்.

"பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற"

"இம்மாயைப்பிறப்பென்னும்" என்னும் திருநாவுக்கரசுசுவாமிகள் திருத்தாண்டகம்,

"ஆயும்பொய்மாயை யகம்புறமாய்நிற்கும்"
"பொய்கண்டமாமாயை" என்னும் திருமந்திரம்.

"பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்சித்தவோ" என்னும் திருவிளையாடல்.

"கானலிடைத் தெண்ணீருங் கயிற்றினில்வாளரவுமலை கடலிற்பட்ட; கூன்முதுகிப் பியிற்றோன்றும் வெள்ளியுமம் முதலுண்மைக் குறிக்கிற்றீரு; மானவைபோல் நிலையறியிற் றோன்றுஞ்சக மனைத்துநில்லா தழியுமாற்றால்; தேனவிழ்பூங் கடுக்கையணி செல்வநின தறைகழற்றுன் சென்னிசேர்ப்பாம்" என்னும் காசிகாண்டம்.

"மையாடுகண்ணியு மைந்தரும் வாழ்வுமனையுஞ்செந்தீ, யையாநின்மாயையுருவெளித்தோ

ற்ற மகிலத்துள்ளே ; மெய்யாயிருந்தது நாட் செலநாட்செல வெட்டவெறும்; பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போன துவே."

"மாயப்பேய்த்தேர்போன்று நீப்பருமுறக் கத்துக்களவேபோன்று நனவுபெயர்பெற்றமா யவாழ்க்கையைமதித்து."

"யாவையுமெனக்குப் பொய்யெனத்தோ ன்றி ; வேறுநீயே மெய்யெனத்தோன்றினை ; யோவியப்புலவன்சாயல் பெறவெழுதிய; சிற்ப விகற்பமெல்லாமொன்றித் ; தவிராதுதடவினர் தமக்குச் ; சுவராய்த்தோன்றுந் துணிபோன் றனவே."

"பொய்வைத்த சொப்பனமா மன்னர்வாழ் வும் புவியுமெங்கே, மெய்வைத்த செல்வமெங் கே மண்டலீகர்தம் மேடையெங்கே, கைவை த்தநாடகசாலையெங்கே யிதுகண்மயக்கே."

"மனமாய்க்கனவாகி மாய்கையா யுள்ளி ருந்து, நினைவாகிநின்ற நிலையறியேன் பூர ணமே"

"வீட்டிலொருவரில்லை வெட்டவெளியானே ண்டி, காட்டுக்கெறித்த நிலாகனவாச்சேகண் டதெல்லாம்."

"மனமாய்க் கனவாகி மாய்கையா புள்ளிரு ந்து, நினைவாகி நின்ற நிலையறியேன் பூரணமே" பட்டினத்தார்.

"உராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவ" என்னும் சிவஞானபோதசூத்திரம்,

"அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா; மசத்தாகு மெய்கண்டா னுயின்—அசத்தலாய்; நீரிலெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு; மோ ரினவையின்றுமாறுப்பு." சிவஞானபோத வெண்பா.

"அசத்தாஞ்சுட்டியுணர்பொருளான வெல் லாம்"

"ஆசைதருமுலகமெலா மலகைத்தேரா மென்றறிந்தகல" என்னும் சிவஞானசித்தி யார்,

"இல்லையெனுமாயையிலிட்டெனை நீ" என் னும் கந்தரநுபூதி,

"என்தென்பதும் பொய் யானெனல் பொய் யெல்லாமிறந்த விடங்காட்டும்; நினதென்ப தும் பொய் நீயெனல் பொய் நிற்கு நிலைக்கே நேசித்தேன்"

"போதமென்பதே விளக்கொவ்வு மவித்தை பொய்யிருளாம்: தீதிலாவிளக்கெடுத்திருட்டே டவுஞ்சிக்கா; தாதலாலறிவாய்நின்ற விடத் தறியாமை; யேதுமில்லை யென்றெம்பிரான் சுருதியேயியம்பும்." என்னும் தாயுமானசுவா மிகள் பாடல் முதலியவற்று னுணர்க.

இவ்வாத்மா சிவஞானத்தால் பாசநீங்கிச் சிவத்துவம் பெறினும், அநாதிவாசனுவசத் தால் பாசத்தினை நோக்குமாகலின், அவ்வா சனை அடியோடு நீங்கிச் சிவாநுபூதியி லழுந்து மாறு பஞ்சாக்ஷரப்பொருளினைப் பாவிக்கக்கட வன் என்றார்.

இங்கு பஞ்சாக்ஷரீ யென்றது ஸோஹம் (சிவோஹம்) பாவனையாம்; அதுவே பண்டை வாசனையை யொழித்துச் சிவாநுபூதியி லழுந் துவிப்ப தாகலின் அது அகார உகார மகார

பிந்து நாதாத்மகமான * உச. ஓம் என்பதும் சிவாயநம: வென்பது மாம்; அவற்றிற்கும் சிவமே யானென்பது பொருளாகலின். அதனைச் சூதசங்கிதையில் பிரணவபஞ்சாக்ஷரங்களின் பொருளுரைத்த விடங்களிற் றெளிவாய்க் கூறியிருத்தல் காண்க:—

இச் சோகம் பாவனையினையே ஸோஹம் அகம்பிரஹ்மாஸ்மி என்னும்வடிவமாகச் சுருதியாதிகள் கூறுவது காண்க:—

" नाहं देहो न च प्राणो नेन्द्रियाणि मनो नहि ॥
सदा साक्षिस्वरूपत्वाच्छिव एवास्मि केवलः ।

யான் தேகமல்லன், பிராணனல்லன், இந்திரியங்களல்லன், மனதல்லன். எப்போதும் சாக்ஷிஸ்வரூபனு யிருத்தலின் கேவலசிவனே யான்."
என்பது ஜாபாலதர்சனோபநிஷதம் கo-ச.,

---

*உச. அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து என்னும் ஐந்தெழுத்து வடிவினதாம் பிரணவமென்னும் ஓங்காரம். ஸோஹம் என்பதே ஸகார ஹகார உபாதிகளான மெய்யெழுத்துக்களை விட்டபோது ஓம் என்று நிற்கின்றது.

"ऋतं सत्यं परं ब्रह्म सर्वसंसारभेजषम् ।
ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपं महेश्वरम् ।
सोहमित्यादरेणैव ध्यायेद्योगीश्वरेश्वरम् ॥

சத்தியசங்கற்பவடிவினதும், சத்தியமும், பரமும், பிரஹ்மமும், சர்வசம்ஸார அவுஷதமும், ஊர்த்துவரேதஸுள்ளதும், விரூபாக்ஷமுள்ளதும், விசுவவடிவினதும், மகேசுவரனுமான யோகீசுவரேசுவரனை அவன் யானென்று ஆதரவுடனேயே தியானிக்க"

"आत्मानं सच्चिदानन्दमनन्तं ब्रह्म सुव्रत ।
अहमस्मीत्यभिध्यायेध्येयातीतं विमुक्तये ॥

நல்விரதமுடையவனே! சச்சிதாநந்தமும் அநந்தமும் தியேயாதீதமு(தியானிக்கப்படுவதற்கப்பாற்பட்டது)மான ஆத்மாவாகிய பிரஹ்மத்தினை விசேஷமுக்தியின்பொருட்டு யானென்று தியானிக்க." என்பன ஜாபாலதர்சனோபநிஷதம் கூ-க, ரு,

"पञ्चब्रह्मात्मकं सर्वं स्वात्मनि प्रविलाप्य च ।
सोहामिति जानीयाद्विद्वान्ब्रह्मामृतो भवेत् ॥

इत्येतद्ब्रह्मजानीयाद्यः स मुक्तो न संशयः ।
पञ्चाक्षरमयं शुभं परब्रह्मस्वरूपिणम् ।
नकारादियकारान्तं ज्ञात्वा पञ्चाक्षरं जपेत् ॥

சத்தியோஜாத முதலிய பஞ்சப்பிரஹ்ம வடிவமான எல்லாவற்றினையும் தனதாத்மாவில் செவ்வையா யொடுக்கி அது நானென்று அறிய வேண்டும். அறிந்தவன் பிரஹ்மாமிருத ஞகின்ருன். இவ்வாறு இந்தப் பிரஹ்மத்தினை எவன் அறிவனே அவன் முக்தனுவன்; சம்சயமில்லை. பரப்பிரஹ்மசொரூபியான பஞ்சாக்ஷரமயசம்புவினை நகாராதி யகாரபரியந்தமா யறிந்து பஞ்சாக்ஷரத்தினை ஜபிக்க" என்பது பஞ்சமபிரஹ்மோபநிஷதம்,

"स्वस्वरूपं तु चिन्मात्रं सर्वदा सर्वदेहिनाम् ॥
नैव देहादिसंघातो घटवद्दृशिगोचरः ।
स्वात्मनोऽन्यतयाभातं चराचरमिदं जगत् ॥
स्वात्ममात्रतया बुध्द्वा तदस्मीति विभावय ।
स्वस्वरूपं स्वयं भुङ्क्ते नास्ति भोज्यं पृथक्स्वतः ॥

எல்லாத் தேகிகட்கும் தனது ஸ்வரூபமோ எப்போதும் சின்மாத்திரமாம். தேகாதி சங்காதம் கடம்போல் திருஷ்டிகோசரமாவதாகலின் ஸ்வஸ்வரூபமாகாது. தனதாத்மாவின் வேற்றுத்தன்மையாற் ரோற்றும் சராசரமான இச்சகத்தினை ஸ்வாத்மமாத்திரத்தன்மையாக அறிந்து அது நானென்று விசேஷமாய்ப் பாவிப்பாயாக. ஸ்வஸ்வரூபத்தினை ஸ்வயம் புசிக்கின்றான். தன்னின் வேறாகப் புசிக்கப் படுவதில்லை." என்பது வராகோபநிஷதம்,

" नित्यः शुद्धो बुद्धमुक्तस्वभावः
सत्यः सूक्ष्मः संविभुश्चाद्वितीयः ।
आनन्दाब्धिर्यः परः सोहमस्मि
प्रत्यग्धातुर्नात्र संशीतिरस्ति ॥

நித்தியமும், சுத்தமும், புத்தமுக்தஸ்வபாவமும், சத்தியமும், சூக்ஷமமும், நல்விபுவும், அத்விதீயமும், ஆநந்தசமுத்திரமுமான பரம் எதுவோ, அந்தப் பிரத்தியக் தாது யான். இதிற் சம்சயமில்லை." என்பது மைத்திரேயி உபநிஷதம் க-கக,

" अहं ब्रह्मास्मीत्यनुसंधानं कुर्यात् ॥

யான் பிரஹ்மமென்று அநுசந்தானம் செய்க" என்பது பைங்கலம் உ-ம் அத்யாயம்,

" य एवं वेदाहं ब्रह्मास्मीति स इदँ सर्वं भवति ।

எவன் இவ்வாறு யான் பிரஹ்ம மென்று அறிகிறானோ அவன் இவ்வெல்லாமாகின்றான்" என்பது பிருகதாரணியகம் க-ச-கம,

" त्रिषु धामसु यद्भोग्यं भोक्ता भोगश्च यद्भवेत् ।
तेभ्यो विलक्षणः साक्षी चिन्मात्रोऽहं सदाशिवः ॥
मय्येव सकलं जातं मयि सर्वं प्रतिष्ठितम् ।
मयि सर्वं लयं याति तद्ब्रह्माद्वयस्म्यहम् ॥

ஜாக்கிராதி முப்புரங்களிலும் எது போக்கியமும் எது போக்தாவும் போகமு மாகின்றதோ, அவற்றின் விலக்ஷணசாக்ஷியான சின்மாத்திரனாகிய யான் சதாசிவன் என்னிடத்திலேயே சகலமு முண்டாயிற்று. என்னிடத்தில் யாவும் நிலைத்துளது. என்னிடத்தில் யாவும் லயமாகின்றது. அத்தன்மைய பிரஹ்மமான அத்துவயம் யான்." என்பது கைவல்யோபநிஷதம். க-கஅ, கக,

"ब्रह्म चिद्ब्रह्म भुवनं ब्रह्म भूतपरंपरा ।
ब्रह्माहं ब्रह्म चिच्छत्रुर्ब्रह्म चिन्मित्रबांधवाः ॥
ब्रह्मैव सर्वमित्येव भाविते ब्रह्म वै पुमान् ।

பிரஹ்மம் சித்து, பிரஹ்மம் புவனம், பிரஹ்மம் பூதபரம்பரை, பிரஹ்மம் யான். பிரஹ்மமாகிய சித்து சத்துருவாம். பிரஹ்மசித்து மித்திரபாந்தவர்களாம். யானாகிய பிரஹ்மமே எல்லா மென்று பாவிக்கவே புருஷன் பிரஹ்மமாகின்றான்," என்பது அந்நபூர்ணோபநிஷதம்.

"अहं ममेति यो भावो देहाक्षादावनात्मनि ।
अध्यासोयं निरस्तव्यो विदुषा ब्रह्मनिष्ठया ॥
ज्ञात्वा स्वं प्रत्यगात्मानं बुद्धितद्वृत्तिसाक्षिणम् ।
सोहमित्येव तद्वृत्त्या स्वान्यत्रमतिं त्यजेत् ॥

தேகேந்திரியாதியநாத்மாவில் யான் எனதென்னுந் தன்மை எதுவோ அவ்வத்தியாஸம் ஞானியினால் பிரஹ்மநிஷ்டையால் நீக்கத்தக்கதாம். புத்திக்கும் அதன் விருத்திக்கும் சாக்ஷியான பிரத்தியகாத்மாவாகிய தன்னை அறிந்து,

அது யானென்னும் அவ் விருத்தியினாலேயே தன்னின் வேறாகியவற்றி லுண்டாம் மதியினை விடுக." என்பது அத்யாத்மோபநிஷதம்,

"अहं ब्रह्मेति नियतं मोक्षहेतुर्महात्मनाम् ।

யான் பிரஹ்மமென்பது மகாத்மாக்களுக்கு நியதமாக மோக்ஷஹேதுவாம்." என்பது பைங்கலம் ச-கக, வராகோபநிஷதம் உ-சஉ,

"सत्यचिद्घनमखण्डमद्वयं सर्वदृश्यरहितं निरामयम् । यत्पदं विमलमद्वयं शिवं तत्सदाहमिति मौनमाश्रय ॥

சத்தியசிற்கனமும், அகண்டமும், அத்வயமும், சகலதிருசிய மொழிந்ததும், நிராமயமும், விமலாத்வயமும் சிவமுமான எப்பதமுளதோ அது யான் எப்போதும் என்று மௌனத்தினை ஆசிரியிப்பாயாக." என்பது வராகோபநிஷதம் ங-கூ,

"सर्वोपाधिविनिर्मुक्तं चिद्रूपं यन्निरंतरम् ।
तच्छिवोहमिति ध्यात्वा सर्वासक्तिं विवर्जयेत् ॥

சர்வோபாதிகளினின்று விடுபட்டதும் சித்ரூபமும் எதுவோ, அச்சிவம் யானென்றிடைவிடாது தியானித்து, சகல பற்றையும் ஒழிக்க வேண்டும்." என்பதும்,

"अहमेव परं ब्रह्म जगन्नाथोहमीश्वरः ।
इति स्यान्निश्चितो मुक्तो बद्धः स्यादन्यथा पुमान् ॥

யானே பரப்பிரஹ்மமாகிய ஜகந்நாதன்; நான் ஈசுவரன் என்னும் நிச்சயமுடையவன் முக்தனாகின்றான். வேறுவிதத்தால் பெத்தனாகின்றான் புருஷன்" என்பது, தேவிகாலோத்தரம்,

"अहमात्मा शिवो ह्यन्यः परमात्मेति यः स्मृतः ।
एवमुपासयेन्मोहान्न शिवत्वमवाप्नुयात् ॥
शिवोन्यस्त्वहमेवान्यः पृथग्भावं विवर्जयेत् ।
यः शिवः सोहमेवेति अद्वैतं भावयेत्सदा ॥
घटसंवृतमाकाशं नीयमाने यथा घटे ।
घटो नीयते नाकाशं तद्वज्जीवो नभोपमः ॥
भिन्ने कुम्भे यथाकाशमाकाशत्वं प्रपद्यते ।
विभिन्ने प्राकृते देहे तथात्मा परमात्मनि ॥

யான் ஆத்மா, சிவமாகிய பரமாத்மா வேறு, என்று கருதியவனுப் எவன் மோகத்தினுல் இவ்வாறு உபாஸிக்கின்றுனே, அவன் சிவத்து வத்தினை யடையான். சிவன் வேறு, யான் வேறுதான் என்னும் வேற்றுத்தன்மையினை விடவேண்டும். சிவன் எவனே அவனே யானென்று எப்போதும் அத்வைதத்தினைப் பாவிக்கவேண்டும். கடத்தைக் கொண்டுபோகுங் கால் கடத்தாற் செவ்வையாய்ச் சூழப்பட்டுள்ள ஆகாயம் கொண்டுபோவதாகக் காணப்படுகின்றது; ஆனுல் கடம் கொண்டுபோகப்படுகின்றது; ஆகாயம் கொண்டுபோகப்படுகிறதில்லை. அதுபோல ஜீவன் ஆகாயசமனுவன். குடமுடைந்தபோது எப்படி ஆகாயம் ஆகாயத்தன்மையை யடைகின்றதோ, அது பிராகிருத தேகம் விசேஷமாய் நீங்கியபோது (பரமுக்தியில்) ஆத்மா பரமாத்மாவில் ஒன்றுகின்றது அதாவது பரமாத்மத்தன்மையாகிய சிவத்துவத்தைப் பெறுகின்றது" என்பது சர்வஞானேத்தரம்,

अतिस्वल्पतरायुश्रीर्भूतेशांशाधिपोपि यः ।
स तु राजाहमस्मीति वादिनं हन्ति सान्वयम् ॥

कर्तापि सर्वलोकानामक्षयैश्वर्यवानपि ।
शिवः शिवोहमस्मीति वादिनं यं कंचन ।
आत्मना सह तादात्म्य भागिनं कुरुते भृशम् ॥

மிகச்சொற்பதரமான ஆயுளும் ஐசுவரியமு முடைய பூதேசாம்சாதிபனுயுள்ளவன் எவனே அவன் அரசன் யானென்று சொல்லுபவனை அவன் குலத்தோடு கொல்லுகின்றான். சர்வலோகங்கட்கும் கர்த்தாவும் அக்ஷயமான ஐசுவரியவானுயிருந்தும் சிவன் 'சிவன் யான்' என்று சொல்லும் யாவனொருவனையும் மிகவும் தன்னோடு தாதாம்யபாகமுடையவனுகச் செய்கின்றான்." என்பது சிவகீதை க-ம் அத்யாயம்,

" अयमात्मा परं ब्रह्म अहमस्मीति मुच्यते ।
अहं साक्षी च चिन्मात्रो जाग्रत्स्वप्नाधिकस्य च ।
नाज्ञानञ्चैव तत्कार्यं संसारादिकबंधनम् ॥
नित्यशुद्धबन्धमुक्तसत्यमानन्दमद्वयम् ।
ब्रह्माहमस्म्यहं ब्रह्म परंज्योतिर्विमुक्तओँ ॥

अहं ब्रह्म परं ज्ञानं समाधिबंधघातकः ।
चिरमानन्दकं ब्रह्म सत्यज्ञानमनन्तकम् ॥
अयमात्मा परं ब्रह्म तद्ब्रह्म त्वमसीति च ।
गुरुणा बोधितो जीवो ह्यहं ब्रह्मास्मि बाह्यतः ॥
सोऽसावादित्य सोऽसावखण्डओँ ।
मुच्यतेऽसारसंसाराद्ब्रह्मज्ञो ब्रह्मतद्भवेत् ॥

இவ் வாத்மாவாகிய பரப்பிரஹ்மம் யானென்று விடுபடுகின்றான். யான் சாக்கிரசொப்பனுதிகளின் சாக்ஷியான சின்மாத்திரன். அஞ்ஞானமும் அதன் காரியமான சம்ஸாராதி பந்தனமுமில்லை. நித்தியசுத்தமும் பந்தமுக்தமும் ஆநந்தமும் அத்வயமுமான பிரஹ்மம் யான்; யான் பரஞ்சோதியும் விமுக்தமுமான பிரஹ்மம் ஓம். அகம் பிரஹ்ம பரம் ஞானம் சமாதி பந்தத்தினைக் கெடுப்பதாம். நீண்ட ஆநந்தமுடையதும் சத்திய ஞான அநந்தமுமாம் பிரஹ்மம். இவ்வாத்மா பரம்பிரஹ்மம். அந்தப் பிரஹ்மம் நீ யாகிறு யென்று குருவினல் போதிக்கப்பட்ட ஜீவன் யான் பிரஹ்மம் புறம்பாக அந்த இது ஆதித்தியன் அந்த இது

அகண்டம் ஓம். அசாரசம்ஸாரத்தினின்று விடுபடுகின்றான். பிரஹ்ம முணர்ந்தவன் அந்தப் பிரஹ்ம மாகின்றான்" என்பது அக்கினி புராணம் ௩எ௪-ம் அத்யாயம் பிரஹ்மஞானங் கூறுதல்,

" शिवो दाता शिवो भोक्ता शिवः सर्वमिदं जगत् ।
शिवो यजति यज्ञैश्च यः शिवः सोऽहमेव हि ॥

சிவன் கொடுப்பவன். சிவன் புசிப்பவன். இவ்வுலகம் யாவும் சிவன். சிவன் யஞ்ஞங்களால் யஜிக்கின்றான். சிவன் எவனோ அவன் யானே நிச்சயம்." என்பது ஆகமமுணர்ந்தோர் வாக்கு,

"ஏது மொன்றும் மறிவிலராயினும்; ஓதி யஞ்செழுத்துமுணர்வார்கட்குப்; பேதமின்றி யவரவருள்ளத்தே; மாதுந்தாமுமகிழ்வார்மாற் பேறரே." என்பது திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்,

"சோகமெனப்பாவிக்கத் தோற்றுவன்வேறின்றி; விண்டகலுமலங்களெல்லாங் கருடதியானத்தால் விடமொழியுமதுபோல விமலதையுமடையும்; பண்டைமறைகளு மதுநானே

னென்று பாவிக்கச்சொல்லுவதிப் பாவகத்தை க்காணே." என்பது சிவஞானசித்தியார் என் பன முதலியனவாம்.

இதனால் மோக்ஷத்திற்கு ஞானமே பரமசா தனமா மென்பது நிரூபிக்கப்பட்டது. (௯)

---

## பத்தாம் சூத்திரம்.

(அ-கை.) இவ்வாறு சிவப்பேற்றினை யடை ந்த ஜீவன்முக்தன தியல்பினைக் கூறுகின்றார்:—

शिवेनैक्यं गतस्सिद्धस्तदधीनस्ववृत्तिकः ।
मलमायाद्यसंस्पृष्टो भवति स्वानुभूतिमान् ॥ १० ॥

(இ-ள்.) **सिद्धः** = சிவஞானம் பெற்ற (சீவன் முக்தனாகிய) சித்தன், **शिवेन ऐक्यं गतः** = சிவத் தோடு ஐக்கியத்தினை (ஒருமையை) யடைந்தவ னாய், **तदधीनस्ववृत्तिकः** = அச்சிவன் வசத்தான தனது விருத்தியினை (வியாபாரத்தினை)யுடைய வனாய், **मलमायाद्यसंस्पृष्टः** = மலமாயை முதலிய வற்றாற் பற்றப்படாதவனாய், **स्वानुभूतिमान् भवति**

= ஸ்வ(சிவஸ்வரூபமான தனது) அநுபவத்தை யுடையவனாகின்றான். எ-று.

சிவஞானத்தாற் சர்வாநர்த்தவடிவ பாசங் களும் நீங்கிப் பரமாநந்தவடிவ சிவத்தினைப் பெற்றுக் கிருதகிருத்தியனும் பிராப்தப்பிரா ப்பியனுமான சீவன்முத்தனுக்கு இதன்மேற் பெறும் பேறு வேறில்லையாகலின் அவனைச் சித்தனென்றார்.

ஞானதிருஷ்டியாற் பார்க்குமிடத்து சிவத் தைவிட வேறு தோன்றாமையானும், பசுத்து வம் நீங்கினமையால் யானென்னும் சுட்டுணர் வின்மையாற் சித்தாகிய சிவசொருபமே யாத லானும் சிவத்தோடைக்கியத்தினை யடைந்த வனாய் என்றார்.

இங்கு ஐக்யமென்ற சொல்லிற்குப் பிரமாண மின்றிய யுக்திகளாற் பலவாறு பொருளுரைப் பர். ஏகத்தின் (ஒன்றின்)பாவம்(தன்மை) ஐக் கியம் என்னும் பதவிற்பத்தியினானே தெளிய லாம். அவ்வாறு விபரீதவுரை செய்யாதவாறு மெய்கண்டதேவரும்,

"ஏகனாகி" என்று மொழிபெயர்த்து,

"அவனிடத்தேகனாய் நிற்க" என்று மொழிப்புரைத்ததும் காண்க,

முன்னர் பாசவசத்தால் பேதமாகிய துவைதத்தோற்றமுடையவனாகிய இவன் பாசநீங்கிய வழி அந்தத் துவைதத் தோற்ற மொழிந்து, அத்துவிதனாய் ஏகனாய் நிற்றலாகிய இதனையே இரண்டறக்கலத்தல் அதாவது இரண்டென்பதொழியக்கலத்தல் என்பதாம். எனவே ஒன்றென்பதாயிற்று. இவ்வாறின்றி இரண்டென்பது தோன்றாது கலத்தலெனப் பொருள் செய்யின் ஏகனெனும் சொல்லிற்குப் பொருளாகாமையோடு சிவபூரணத்தன்மைக்கும் குறைவுண்டாகும்,

இவ்வைக்கியத்திற்கு ஒருமையே பொருளென்னும் அபிப்பிராய முள்ள சுருதியாதிகள் இவை யாம்:—

"यस्मिन्सर्वाणि भूतान्यात्मैवाभूद्विजानतः ।
तत्र को मोहः कः शोक एकत्वमनुपश्यतः ॥

எதில் சர்வபூதங்களும் ஆத்மாவே ஆயிற்று என்று விசேஷமா யறிபவனாகிய ஏகத்துவத்தி

னைக் காண்பவனுக்கு அதில் மோகம் யாது? சோகம் யாது?" என்னும் ஈசாவாசியம்,

"यथोदकं शुद्धे शुद्धमासिक्तं तादृगेव भवति ।

எப்படிச் சுத்த ஜலத்தில் சுத்த ஜலம் வார்க்கப்பட்ட தாமோ அத்தன்மையினதே யாகின்றது" என்னும் கடோபநிஷதம்,

"ज्ञानात्सायुज्यमेवोक्तं तोये तोयं यथा तथा ॥

ஜலத்தில் ஜலம் சேர்ந்தா லெப்படியோ அப்படியே ஞானத்தினால் சாயுச்சியம் சொல்லப்பட்டுள்ளது." என்பது பிரஹ்மவித்யோபநிஷதம்,

"यथा जले जलं क्षिप्तं क्षीरे क्षीरं घृते घृतम् ।
अविशेषो भवेत्तद्वज्जीवात्म परमात्मनोः ॥

எப்படி ஜலத்தில் ஜலமும், பாலிற் பாலும், நெய்யில் நெய்யும் வார்க்கப்பட்டபோது விசேஷமின்றிய தாகின்றதோ அப்படியே ஜீவபரமாத்மாக்களின் ஐக்கியமாம்." என்பது பைங்கலோபநிஷதம்,

"शैलूषो वेषसद्भावाभावयोश्च यथा पुमान् ।
तथैव ब्रह्मविच्छ्रेष्ठः सदा ब्रह्मैव नापरः ।
घटे नष्टे यथा व्योमव्योमैव भवति स्वयम् ।
तथैवोपाधिविलये ब्रह्मैव ब्रह्मवित्स्वयम् ॥
क्षीरं क्षीरे यथा क्षिप्तं तैलं तैले जलं जले ।
संयुक्तमेकतां याति तथात्मन्यात्मविन्मुनिः ॥

வேஷக்காரன் வேஷமுள்ளபோதும் இல்லாதபோதும் எப்படி புருஷனே யிருக்கின்றானோ அப்படியே பிரஹமவிச் சிரேஷ்டன் எப்போதும் பிரஹ்மமே யாகின்றான். வேறில்லை; கடம் நஷ்டமானபோது எப்படி ஆகாயம் ஸ்வயம் ஆகாயமே யாகின்றதோ அதுபோலவே உபாதிவிலயமானபோது பிரஹ்ம முணர்ந்தவன் ஸ்வயம் பிரஹ்மமே யாகின்றான். பாலில் பாலும் தைலத்தில் தைலமும் ஜலத்தில் ஜலமும் விடப்பட்டுக் கூடியபோது எப்படி ஒருமை யடைகின்றதோ அதுபோல் ஆத்மாவையுணர்ந்தவனான முநி ஆத்மாவில் ஒருமை யடைகின்றான்." என்பது ஆத்மோபநிஷதம்,

"जले जलं यथा क्षिप्तं क्षीरे क्षीरमिवार्पितम् ।
तथैव शिवतां याति दीक्षामात्रेण मंत्रवित् ॥

ஜலத்தில் வார்க்கப்பட்ட ஜலமும் பாலில் வார்க்கப்பட்ட பாலும் எப்படியோ அப்படியே மந்திர முணர்ந்தவன் தீக்ஷாமாத்திரத்தினால் சிவத்தன்மையினை அடைகின்றான்."

"यथा जलं जले क्षिप्तं क्षीरे क्षीरं घृते घृतं ।
अविशेषं भवेत्तद्वज्जीवात्म परमात्मनोः ॥

நீரில் நீரும் பாலிற் பாலும் நெய்யில் நெய்யும் வார்க்கப்பட்டதாய் ஏப்படி விசேஷமின்றிய தாகின்றதோ அப்படியே ஜீவாத்மபரமாத்மாக்களுக்கு அவிசேஷ முண்டாகின்றது" என்பன அசிந்தியவிசுவசாதாக்கியமும் பிறவாகமுமாம்,

"उक्तलक्षणमात्मान मुक्तलक्षणमीश्वरम् ।
एकं पश्यन्ति ये विप्रास्तर्कतश्च प्रमाणतः ॥

விப்பிரர்களே! கூறியலக்ஷணமுள்ள ஆத்மாவினையும், கூறியலக்ஷணமுள்ள ஈசுவரனையும் ஒன்றென்று தர்க்கத்தாலும் பிரமாணத்

தாலும் எவர்கள் அறிகின்றார்களோ” என்பது சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் கக-ம் அத்யாயம்.

“कोमोहस्तत्र कः शोक एकत्वमनुपश्यतः
इति चाह हि सा साध्वी श्रुतिरद्वैतमास्तिकाः ॥

एकत्वमेव वाक्यार्थो नापरः परमास्तिकाः ।
स्तुतिनिन्दे विरुध्येते भेदो यदि विवक्षितः ॥

ஒருமையினைக் காண்பவனுக்கு அங்குச் சோக மேது? மோக மேது? என்று ஆஸ்திகர்களே! நலமுடையதான அச் சுருதியானது அத்வைதத்தினைக் கூறுகின்றது.” என்பது சூதகீதை ங-ம் அத்யாயம்.

“ஈங்கிவைமுதல யாவையுநீத்திட் டியானெனதென்பவைநீக்கி, யோங்குசீவான்மா வினைப் பரமான்மாத் தன்னொடும் பிறிதற வொடுக்கி”

“தன்னுளமதனிற் சகமெலாநோக்கித் தானதிற் புகுந்திடாதொழுகி, முன்னதின் முன்னுயுரையுணர் விறந்த முழுமுதலாகியொன்றாகிப்; பின்னமற்றின்றிக் குணங்குறிக்கடந்த பிரமபாவனையினிலடையா; வுன்னருமியோ

கத்துறங்கிநற் சீவன்முக்தனு யொழுகிடு நாளில்"

"செழுங்கனற் பிழம்பாமுக்கணெம் பெருமான் றிருவருள்பெற்று வேறின்றி, யழுங்கலில் சிவமாந் தன்னுருத் தானு யமர்ந்துயரின்ப முற்றதுவே" என்பது கூர்மபுராணம் பூர்வகாண்டம் முதலத்யாயம்.

"கங்கையை முதலவாயபற்பல நதியுங்கலிலன்; பொங்குதெண்டிரையவாரி புகுதிலொன்ருகுமாபோற்; றங்கியஞானபாதஞ் சார்ந்திடிலான்மாயாவுஞ்; சிங்கலில் பிசமந்தன்னிற் பிறிதின்றியொன்ருய்ச்சேரும்." என்பது கூர்மபுராணம் உத்தரகாண்டம் உ-ம் அத்யாயம்.

"நித்தியாநந்தமாகி நிமலமாம்பிரமந்தன்னை; தத்துவவித்தாயுள்ளோர் பிரணவந்தன்னுலொன்று; முத்தமதியானஞ் செய்யாவுளமுவந்தெனதுதாளிற்; பத்திசெய்தென்பால் பாலிற்பால்கலந்தென்னச்சேர்வார்" என்பது கூர்மபுராணம் கΟ-ம் அத்யாயம்.

"நாமொழிந்து சிவமானவாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ"

"நீயலாற்பிறிதுமற்றின்மை சென்றுசென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தோன்றும் திருப்பெருந்துறை யுறைசிவனே பொன்றுநீயல்லையன்றியொன்றில்லை யாருன்னையறியகிற்பாரே"

"தன்னைத்தந்தவென்னாரமுதை" என்பது திருவாசகம்.

"திகழ்ந்தமெய்ப்பொருள் சேர்வார்தாமே தானாகச்செயுமவனுறையுமிடம்" என்பது திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

"நானென்றுந்தானென்று நாடிநான்சாரவே;
தானென்று நானென்றிரண்டிலாத் தற்பதந்;
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்;
றானென்று நானென்றுஞ் சாற்றகில்லேனே."

"அவனுமவனுமவனையறியா; ரவனையறியிலறிவானுமில்லை; யவனுமவனு மவனையறியி; லவனுமவனுமவனிவனாமே"

"தானவனாகியதற்பரம்"

"இவனுமவன்வடிவாமே"

"நானென்றுந் தானென்று நாடினே னாடாது; நானென்றுந்தானென்றிரண்டில்லை."

" சித்தஞ்சிவமாய் மலமூன்றுஞ் செற்றவர் ; சுத்தசிவமாவர் தோயார் மலபந்தம்."

" தன்னையறியா துடலைமுன் றானென்றான் ; தன்னைமுன் கண்டான் றுரியன்றனைக்கண்டான் ; துன்னு துரியமு மூசனோடொன்றாக்கால் ; பின்னையும்வந்து பிறந்திடுந்தானே." என்பன திருமந்திரம்.

" ஆனவமுதே யயில்வேலரசே ; ஞானகரனே நவிலத்தகுமோ ; யானாகிய வென்னைவிழுங் கிவெறுந் ; தானாய்நிலைநின்றது தற்பரமே." என்பது கந்தரநுபூதியே.

" உருக்கலந்துநின்றபோது நீயுநானுமொன்றலோ"

" என்னகத்து ளென்னையன்றி யாது மொன்றுமில்லையே."

" அவனுநானு மெய்ம்முயங்கி யநுபவிக்குமளவிலே அவனுமில்லை நானுமில்லை யாருமில்லை யானதே." என்பன சிவவாக்கியர் பாடல்கள்.

" பெறினுமபேதம் பிரமத்துலகத் ; துறுதியுளிச்செய்க வினையும்" என்னும் சைவசமய நெறி. இவையல்லாது

"तत्त्वमसि = தத்துவமஸி"
"अयमात्मा ब्रह्म = அயமாத்மா பிரஹ்மம்"
"प्रज्ञानं ब्रह्म = பிரஞ்ஞானம் பிரஹ்மம்"
"अहं ब्रह्मास्मि = அகம் பிரஹ்மாஸ்மி"

முதலிய மகாவாக்கியங்களும் இவ்வைக்கியத்தினை யுணர்த்துவனவேயாம்.

இவ்வாக்கியங்களின் அர்த்தம் சூதசங்கிதை சிவபுராணம் கைலாஸசங்கிதை முதலியவற்றில் விஸ்தாரமாய்க் கூறப்பட்டுளது.

இதற்குமுன் இவ்வுரையிற் பலவிடங்களில் வந்துள்ள பிரமாணங்களையும் இங்குப் பொருத்திக் காண்க.

அவ்வாறு ஐக்கியமடைந்த சீவன்முக்தனது கரணங்களெல்லாம் சிவகரணங்களானமையால் பிராரப்தம் நசிக்குமளவும் கர்த்திருத்வம் (செய்வான்றன்மை முதலியன) இன்றிச் செய்யும் அவன் செயல்களெல்லாம் சிவசெய்லேயா மென்பார் அவன் வசத்ததான தனது விருத்தியினையுடையனாய் என்றார்.

இதனால் பிராரப்தம் புசித்துத் தொலையும் ளவும் செய்யப்படுவனவாகிய ஆகாமியகர்மங் கள் கர்த்திருத்வமின்மையால் இவனைப் பற்று வென்பது பெறப்பட்டது சஞ்சிதமோ ஞானாக் கினியால் நீறாயிற்று. தற்போதமின்மையால் மலமும் இவனை யணுகுதற் கிடமில்லை. மலகர் மங்களிலவாகவே அவைகாரணமாகப் பொருந் தும் தனு கரண புவன போகவடிவ மாயையு மிலதாகும். இதுபற்றியே மலமாயைமுதலிய வற்றாற் பற்றப்படாதவனா யென்றார். முத லிய என்பதனால் கர்மமும் கொள்ளப்படும். அப்படியானால் ஞானோதயத்தின்பின் அவன்பா ணிகழும் புண்ணியபாவங்கட்கு கதியாதெ னின்,

"प्रारब्धं भोगतो नश्येच्छेषं ज्ञानेन दह्यते ।
इतरं द्वितयः कर्म तद्वेषीप्रियवादिनाम् ॥

பிராரப்தம் போகத்தினால் நசிக்கும். சஞ் சிதம் ஞானத்தினாற் சாம்பலாம். மற்றைய ஆகாமியமான இருவகைக் கர்மம் (புண்ணியபா வம்) அவனை நிந்திப்பவர்கட்கும் துதிப்பவர் கட்குமாம்" என்னும் பாரதம்.

"स्तुतिनिन्दाप्रसङ्गाभ्यां पुण्यपापमवाप्नुयात् ॥

ஸ்துதிநிந்தைகளான பிரசங்கங்களால் புண்ணியபாவங்களை யடைவர்'' என்னும் தேவிகாலோத்தரம்.

"இவனுலகி லிதமகிதஞ்செய்த வெல்லாமிதமகிதமிவனுக்குச் செய்தார் பாலிசையும்'' என்னும் சிவஞானசித்தியார் முதலியவற்றின்படி அவை இவனுக்கு இதம் அகிதம் செய்தாரைச் சாரும் என்க.

மலாதி சாராதாகவே எப்போதும் சிவசொரூபமாகவே நிற்பன் என்பது தோன்ற ஸ்வாநுபவத்தை யுடையவனாகின்றா னென்றார்.

சிவஞானி பாசபந்த மின்றிச் சுவாநுபூதியுடையவனா யிருப்ப னென்பதற்கு

"देहे ज्ञानेन दीपिते बुद्धिरखण्डाकारा यदा भवति तदा विद्वान्ब्रह्मज्ञानाग्निनाकर्मबन्धं निर्दहेत् ।

தேகம் ஞானத்தினால் கொழுந்தப்பட்டபோது, எப்போது புத்தி அகண்டாகாரம் (சிவவடிவினது) ஆகின்றதோ அப்போது வித்வான் பிரஹ்ம ஞானாக்கினியினால் கர்மபந்தத்தினைச் சுடுகின்றான்'' என்னும் பைங்கலோபநிஷதமும்.

"सर्वत्रावस्थितं शान्तं चिद्ब्रह्मेत्यनुभूयते ॥

எங்கு மிருப்பதும் சாந்தமுமான சித்து பிரஹ்ம மென்று அநுபவிக்கின்றான்.

"न तस्य वर्णा विद्यन्ते नाश्रमाश्च तथैव च ॥
न तस्य धर्मोऽधर्मश्च न निषेधो विधिर्न च ।
यदा ब्रह्मात्मकं सर्वं विभाति तत एव तु ॥
तदा दुःखादिभेदोऽयमाभासोपि न भासते ।
जगज्जीवादिरूपेण पश्यन्नपि परात्मवित् ॥
न तत्पश्यति चिद्रूपं ब्रह्मवस्त्वेव पश्यति ।

அச் சிவஞானிக்கு வர்ணங்களில்லை. அப்படியே ஆசிரமங்களு மில்லை. அவனுக்கு தர்மமும் அதர்மமு மில்லை; நிஷேதமுமில்லை; விதியு மில்லை. எப்போது பிரஹ்மவடிவமாக யாவும் விளங்குகின்றதோ அதனாலேயே அப்போது துக்காதிபேதமாகிய இஃது ஆபாஸமாயினும் தோற்றுகிறதில்லை. பரமாத்மஞானி ஜகத்து ஜீவன் முதலியவடிவாகக் காணினும், அதனைக் காண்பதில்லை. சித்ரூபமான பிரஹ்மவஸ்து வினையே காண்கின்றான்"

" स्वस्वरूपं स्वयं भुङ्क्ते नास्ति भोज्यं पृथक् स्वतः ॥

ஸ்வஸ்வரூபத்தினை ஸ்வயமே புசிக்கின்றான்; தன்னின் வேறாக போஜ்யமில்லை"

" ब्रह्मविज्ञानसंपन्नः प्रतीतमखिलं जगत् ।
पश्यन्नपि सदा नैव पश्यति स्वात्मनः पृथक् ॥

பிரஹ்மவிஞ்ஞான முடையவன் காணப்படும் சகல ஜகத்தினையும் கண்டும் எப்போதும் தன்னின்வேறாகக் காண்பதே யில்லை" என்னும் வராகோபநிஷத பாசுபதப்பிரஹ்மோபநிஷதங்களும்.

" अज्ञानान्धतमोरूपं कर्मधर्मादिलक्षणम् ।
स्वयंप्रकाशमात्मानं नैव मां स्प्रष्टुमर्हति ॥

सर्वसाक्षिणमात्मानं वर्णाश्रमविवर्जितम् ।
ब्रह्मरूपतया पश्यन्ब्रह्मैव भवति स्वयम् ॥

भासमानमिदं सर्वं मानरूपं परं पदम् ॥

पश्यन्वेदान्तमानेन सद्य एव विमुच्यते ।
देहात्मज्ञानवज्ज्ञानं देहात्मज्ञानबाधकम् ॥

आत्मन्येव भवद्यस्ये स नेच्छन्नपि मुच्यते ॥

கர்மதர்மாதிலக்ஷணமாகிய அஞ்ஞானவிருள் சுவயம்பிரகாச ஆத்மாவான என்னைப் பரிசித்தற் குரியதன்று. வர்ணாசிரமமின்றிய சர்வசாக்ஷியான ஆத்மாவினைப் பிரஹ்மவடிவமாயறிந்து ஸ்வயம் பிரஹ்மமே யாகின்றான். காணப்படும் இவ்வெல்லாம் மானவடிவ பரபதமாக வேதாந்தப்பிரமாணத்தினாற் கண்டு அப்பொழுதே முத்தனாகின்றான். தேகாத்மஞானத்தினைப் பாதிப்பதாய்த் தேகாத்மஞானத்தினைப் போன்ற ஞானம் ஆத்மாவிலேயே எவனுக்குண்டாகின்றதோ, அவன் இச்சியாதிருந்தும் முக்தனாகின்றான்" என்னும் வராகோபநிஷதம் உ-ம் அத்தியாயமும்.

" यत्र यत्र मनो याति तत्र तत्र परं पदम् ।
तत्र तत्र परं ब्रह्म सर्वत्र समवस्थितम्॥

ஜீவன்முக்தனது மனது எங்கெங்கே செல்லுகின்றதோ அங்கங்குப் பரமபதமாம். அங்கங்கு எங்குஞ்செவ்வையாய் நிலைத்துள்ள பரப்பிரஹ்மமாம்" என்னும் பைங்கலோபநிஷதமும்.

" मायी च मायया बद्धः कर्मभिर्युज्यते सः ।
ज्ञानं ध्यानं च बन्धश्च मोक्षो नास्त्यात्मनो द्विजाः ॥

यदैव मयि विद्वान् यस्तस्यापि न च सर्वतः ।
एषा विद्याह्यहं वेद्यः प्रज्ञैषा च श्रुतिः स्मृतिः ॥

மாயையினாற் கட்டப்பட்டவனாகிய மாயி எவனோ அவன் கர்மங்களோடு கூடுகின்றான். துவிஜர்களே! ஞானமும் தியானமும் பந்தமும் மோக்ஷமும் ஆத்மாவிற் கில்லை. எப்போது என்னிடத்தி லில்லையோ, அப்போது என்னை யுணர்ந்தவன் எவனோ அவனுக்கும் முற்று மில்லை. இது வித்தையாம்; யானே வேத்தியன் (வித்தையினா லறியப்படுபவன்). இந்தப் பிரஞ்ஞை சுருதியும் ஸ்மிருதியுமாம்" என்னும் லிங்க புராணம் பூர்வபாகம் அஎ-ம் அத்யாயமும்.

"ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்; தேட்டற்றிடஞ்சிவமுந்தீபற; தேடுமிடமதென்றுந்தீபற"

"உள்ளும் புறம்பு நினைப்பறினின்னுள்ளே; மொள்ளாவமுதாமென்றுந்தீபற; முளையாது பந்தமென்றுந்தீபற."

"நஞ்செயலற்றிந்த நாமற்ற பின்னுதன்; றன்செயலுனேயென் றுந்தீபற; தன்னையே தந்தா னென்றுந்தீபற."

"உள்ளமுருகினுடனுவரல்லது தெள்ளவரிய ரென்றுந்தீபற; சிற்பரச்செல்வரென்றுந் தீபற"

"பெற்றசிற்றின்பமே பேரின்ப மாங்கே; முற்றவரும் பரிசுந்தீபற; மூளையாது மாயை யென்றுந்தீபற" என்னும் திருவுந்தியாரும்;

"ஈண்டிய மாயவிருள்கெடவெப் பொருளும் விளங்கத் தூண்டிய சோதியை."

"கடிய மலமகற்றிப் பழமலம் பற்றறுத் தாண்டவன்."

"கதிக்கும் பசுபாசமொன்று மிலோமெனக் கறித் திங்கு."

"பொய்யெலாம் விடத்திருவருடந்து தன் பொன்னடியிணை காட்டி; மெய்யனுய் வெளி காட்டி முன்னின்றதோரற்புதம்விளம்பேனே"

"உணர்வுதந்தொளியாக்கிப் பாசமானவை பற்றறுத்து."

"இன்பம்பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந்; துன்பந் தொடர்வறுத்துச்சோதியா-யன்பமைத்து."

"பந்தமறுத்தெனை யாண்டு பரிசறவென் றுரிசுமறுத் தந்தமெனக் கருளியவா றார்பெறுவாரச்சோவே" என்னும் திருவாசகமும்,

"अस्माच्छरीरात्समुत्थाय परंज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः स तत्र पर्येति जक्षन्क्रीडन्रममाणः स्त्रीभिर्वा यानैर्वा ज्ञातिभिर्वा ।

எவன் இச் சரீரத்தினின்றும் செவ்விதினெழுந்து (யானெனு மபிமானத்தினை இதினின்று நீக்கி) பரஞ்சோதியினை யடைந்து தனது ரூபமாகப் பொருந்துகின்றானோ, அவன் உத்தம புருஷன். அவன் ஸ்திரீகளோடும் யானங்களோடும் ஞாதிகளோடும் புசித்தும் கிரீடித்தும் இரமிப்பிவனாய் அங்கு (ஸ்வரூபத்தில்) பொருந்துகின்றான்" என்னும் சாந்தோக்கியம் அ-௧௨-௩-மாகிய இவை முதலியன பிரமாணமாதல் காண்க. (௧௦)

## பதினோரும் சூத்திரம்.

(அ-கை) அச் சீவன்முக்தன் பிராரத்தவசத்தால் விஷயங்களை யறியுங்காலத்தும் அச் சுவாநுபூதி நழுவா திருக்குமாறு செய்யவேண்டிய திதுவெனக் கூறுகின்றார் :—

दृशोर्दर्शयिता चात्मा तस्य दर्शयिता शिवः ।
तस्मात्तस्मिन्परां भक्तिं कुर्यादात्मोपकारके ॥ ११ ॥

(இ-ள்.) दृशोः = கண்களுக்கு, दर्शयिता च = காட்டுவானும் (च காரத்தால் = உம்மையால்) காண்பானும், आत्मा = ஆத்மாவாம், तस्य = அவ்வாத்மாவுக்கு, दर्शयिता = காட்டுவானும் காண்பானும், शिवः = சிவனுவன். तस्मात् = ஆதலால், आत्मोपकारके तस्मिन् = ஆத்மாவுக் குபகரிப்பவனுன அச்சிவனிடத்தில் परां भक्तिं कुर्यात् = *உடு. பரா (மேலான) பக்தியினைச் செய்யவேண்டும், எ-று.

---

*உடு. பக்தி யென்பது பூஜ்யர்களிடத் துண்டாகும் தொடர்ந்த பிரியமாம். அது கநிஷ்டபக்தி, பிரேம

விஷயாநுபவத்திலும் அவனே அறிவித்து அறிகின்ருன் என்னு முணர்ச்சி யுளதாயின் யானெனுந் தன்மை யின்றிச் சிவாநந்தாகார விருத்தியே நிகழும். நிகழவே அவ் வநந்யாகார விருத்தியாகவே இடைவிடாது நிற்றலாகிய பராபக்தியினைச் செய்யவேண்டும். செய்யவே அவன் சிவாநுபூதியினின்று எவ்வாற்ருனும் நழுவானென்பது கருத்து.

இவ்வாறு பராபக்தியினைச் செய்து சீவன்முக்தனது சரீரம் பிராரப்தக்ஷயத்தில் நீங்கவே நிருபாதிகனுய் சிவஸ்வரூபனுகவே எஞ்சியிருப்பன். அது பரமுக்தி யென்றும் விதேகமுக்தி யென்றும் கூறப்படும்.

அச் சீவன்முக்தனது செயல்களையும் பரமுக்தியினையும் கூறும் சுருதியாதிகள் வருமாறு:—

"अंगुष्टमात्रमात्मानमधूमज्योति रूपकम् ।
प्रकाशयन्तमन्तःस्थं ध्यायेत्कूटस्थमव्ययम् ।

---

பக்தி, பராபக்தியென மூவகைப்படும். அவற்றுள், இங்குக் கூறியது மூன்ருவதான பராபக்தியாம். இவற்றின் விரிவெல்லாம் எம்மாற் செய்யப்பட்டுள்ள நாரத பக்திசூத்திரவுரையிற் காண்க.

ध्यायन्नास्ते मुनिश्चैव चासुप्तेरामृतेस्तु यः ।
जीवन्मुक्तः स विज्ञेयः स धन्यः कृतकृत्यवान् ।
जीवन्मुक्तपदं त्यक्त्वा स्वदेहे कालसात्कृते ।
विशत्यदेहमुक्तत्वं पवनोऽस्पन्दतामिव ॥

अशब्दमस्पर्शमरूपमव्ययं
तथाऽरसं नित्यमगन्धवच्च यत् ।
अनाद्यनन्तं महतः परं ध्रुवं
तदेव शिष्यत्यलं निरामयम् ॥

*அங்குஷ்டமாத்திரமும், புகையின்றிய ஜோதிவடிவினதும், பிரகாசிக்கின்றதும், உள்ளிருப்பதும், கூடஸ்தமும், அவ்வியமுமான ஆத்மாவினைத் தியானிக்க. எந்த முநி சுழுத்தி பரியந்தமும் மரணபரியந்தமும் தியானித்துக் கொண்டிருக்கின்றானோ அவன் ஜீவன்முக்தனென்று அறியத்தக்கவனாகின்றான். அவன் தன்னியன்; கிருதகிருத்தியனாகின்றான். தனது தேகம் காலவசப்படவே (விழவே) ஜீவன்முக்தபதத்தினை விட்டு, வாயு தனது அசைவின்மையைப் பெறுவதுபோல அதேகமுக்தத்*

தன்மையினை அடைகின்ருன். சப்தமின்றியதும், ஸ்பரிசமின்றியதும், ரூபமின்றியதும், அவ்யயமும் அவ்வாறே இரஸமின்றியதும், நித்தியமும், கந்தமின்றியதும், அநாதியநந்தமும், மகத்திற்கு மேலானதும், துருவ(சாசுவத)மும், பூர்ணமும், நிராமயமும் எதுவோ அதுவே மிஞ்சுகின்றது." என்னும் பைங்கலோபநிஷதம், யோககுண்டலியுபநிஷதம்.

"ब्रह्मैव विद्यते साक्षाद्वस्तुतोऽवस्तुतोऽपि च ।
तथैव ब्रह्मविज्ञानी किंगृह्णाति जहाति किम् ॥

अधिष्ठानमनौपम्यमवाङ्मानस गोचरम् ।
यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रं रूपवर्जितम् ॥

अचक्षुः श्रोत्रमत्यर्थं तदापाणिपदं यथा ।
नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं च तदव्ययम् ॥

ब्रह्मैवेदममृतं तत्पुरस्ताद्ब्रह्मानन्दं परमं चैव पश्चात् ।
ब्रह्मानन्द परमं दक्षिणे च ब्रह्मानन्दं परमं चोत्तरं च ॥

स्वात्मन्येव स्वयं सर्वं सदा पश्यति निर्भयः ।
तदा मुक्तो न मुक्तश्च बद्धस्यैव विमुक्तता ॥

வஸ்துத்தன்மையாலும் அவஸ்துத்தன்மை யாலும் சாக்ஷாத் பிரஹ்மமே யுளது. அவ்வா ருகவே பிரஹ்மவிஞ்ஞானி எதனைக் கொள்ளு வான்? எதனை விடுவான்? அதிஷ்டானமும், உவமை யற்றதும், வாக்குமனதுக் கெட்டாத தும் எதுவோ அது காணப்படாததும், கொள் ளப்படாததும், கோத்திர மின்றியதும், ரூப மின்றியதும், கண்கா தின்றியதுமாம்; அவ் வாறே அது கைகால்க ளின்றியதுமாம்; அது நித்தியமும், விபுவும், எல்லாவற்றினிருப்பதும், மிக நுண்ணியதுமாம்; குறைவுநிறை வின்றிய துமா மது; அது முன்னும் இவ் வமிருதமாகிய பிரஹ்மமே; பின்னும் பரமமான பிரஹ்மா நந்தமே; தெற்கிலும் பரமமான பிரஹ்மாநந் தமே; வடக்கிலும் பரமமான பிரஹ்மாநந் தமே. தன்னிடத்திலேயே எல்லாவற்றையும் எப்போதும் தானாகவே பயமின்றியவனுய்க் காண்கின்ருன். அப்போது முக்தனுவன், முக் தனு மல்லன்; பெத்தனுக்கே விமுக்தத்தன் மையாம்." என்னும் பாசுபதப்பிரஹ்மோப நிஷதம்,

"अज्ञस्य दुःखौघमयं ज्ञस्यानन्दमयं जगत् ॥

அஞ்ஞனுக்கு ஜகத்து துக்கசமூகமயமாம்; ஞானிக்கு ஆநந்தமயமாம்.'' என்னும் வராகோபநிஷதம் ௨-௨௨,

"अध्यात्मरतिराशान्तः पूर्णपावनमानसः ।
प्राप्तानुत्तमविश्रान्तिर्न किंचिदिह वाञ्छति ।
सर्वाधिष्ठानसन्मात्रे निर्विकल्पे चिदात्मनि ।
योजीवति गतस्नेहः स जीवन्मुक्त उच्यते ।
नापेक्षते भविष्यच्च वर्तमाने न तिष्ठति ।
न संसरत्यतीतं च सर्वमेव करोति च ।
अनुबंधपरे जन्तावसंसर्गमनाः सदा ।
भक्ते भक्तसमाचारः शठे शठ इव स्थितः ॥
बालो बालेषु वृद्धेषु वृद्धो धीरेषु धैर्यवान् ।
युवा यौवन वृत्तेषु दुःखितेषु सुदुःखधीः ॥
धीरधीरुदितानन्दः पेशलः पुण्यकीर्तनः ।
प्राज्ञः प्रसन्नमधुरो दैन्यादपगताशयः ॥
अभ्यासेन परिस्पन्दे प्राणानां क्षयमागते ।
मनः प्रशममायाति निर्वाणमवशिष्यते ॥

அத்தியாத்மாவில் இரமிப்பவனும், ஆசையொழிந்தவனும், பூர்ணபாவன (பரிசுத்த) மனதுடையவனும், இணையற்ற விசிராந்திபெற்றவனுமாயுள்ளவன் இங்குளதனையும் விரும்பான். சர்வாதிஷ்டான சன்மாத்திரமும் நிர்விகற்பமுமான சிதாத்மாவில் யானெனதென்னும் பற்றொழிந்தவனாய் எவன் ஜீவிக்கின்றானோ, அவன் ஜீவன்முக்தனெனப்படுவன். வரத்தக்கதனை அபேக்ஷிக்கிறதுமில்லை, நிகழ்வதில் நிற்கிறதுமில்லை. சென்றதனை நினைக்கிறதுமில்லை, எல்லாவற்றினையுமே செய்கின்றான். தொடர்புடைய ஜந்துக்களில் எப்போதும் பற்றின்றிய மனதுடையவனாய்ப் பக்தர்களிடத்துப் பக்தர்களின் நன்னடையுடையவனும் சடர் (முன்னே துதித்து பின்னே யிகழுவோர்) களிடத்திற் சடனும்போல விருப்பன். பாலர்களிடத்துப் பாலனும், விருத்தர்களிடத்து விருத்தனும் தீரர்களிடத்துத் தைரியமுடையவனும், யௌவனநடையினர்பால் யௌவனனும், துக்கித்தவர்களிடத்து மிகத்துக்கபுத்தியுமாயிருப்பன். தீரபுத்தியுள்ளவனும் உதித்தவாநந்தமுடையவனும், மெத்தென்றவனும், புண்ணியகீர்த்தியும், பிராஞ்ஞனும், மலர்ச்சி

யும் மதுரமு முடையவனும், ஆசையாற்றூழ்த லாகிய சைதன்னியத்தி னீங்கிய வபிப்பிராய முள்ளவனு மாவன். அப்பியாசத்தினல் பிராணன்களின் அசைவு க்ஷயமடைந்தபோது மனதுமிக்க வொழிவினை யடைகின்றது; நிர்வாணம் மிஞ்சுகின்றது." என்னும் அந்நபூர்ணோபநிஷதம் ௨-௨௯-௩௨,

" तपः प्रभृतिना यस्मै हेतुनैव विना पुनः ।
भोगा इह न रोचन्ते स जीवन्मुक्त उच्यते ॥४२॥

தவசுமுதலிய வதுக்க ளின்றியே எவனுக்கு இங்கு மறுபடியும் போகங்கள் உருசிக்கிறதில் லையோ அவன் ஜீவன்முக்த னெனப்படுகின் ருன்" என்பது முதல் ௬௨-முடிய ஜீவன்முக்த னிலக்கணம் கூறிப் பின்

" जीवन्मुक्तपदं त्यक्त्वा स्वदेहे कालवशात्कृते ।
विशत्यदेहमुक्तत्वं पवनोऽस्पन्दतामिव ॥ ६३ ॥
विदेहमुक्तो नोदेति नास्तमेति न शाम्यति ।
न सन्नासन्न दूरस्थो न चाहं न च नेतरः ॥ ६४ ॥
ततः स्तिमितगम्भीरं न तेजो न तमस्ततम् ।
अनाख्यमनभिव्यक्तं सत्किंचिदवशिष्यते ॥ ६५ ॥

தனது தேகம் காலவசப்பட்டபோது ஜீவன் முக்தபதத்தினை விட்டு வாயு அசைவின்மையைப் பெறுவதுபோல அதேக(பர)முக்தத்தன்மையினை யடைகின்றான். விதேக(பர)முக்தன் உதிக்கிறது மில்லை; அஸ்தமிக்கிறது மில்லை; சமிக்கிறது மில்லை. சத்து மல்லன்; அசத்து மல்லன்; தூரத்தனல்லன்; நானுமல்லன்; அந்நியனு மல்லன். அதன்பின் தமும்பும் ஆழமுடைய தாம்; தேஜசு மில்லை; இருள் விரிந்தது மில்லை. பெயரின்றியதும் வெளிப்படுதலின்றியதுமான ஓர் சத்து மிஞ்சுகின்றது." என்று பின். விதேகமுக்தனிலக்கணம் கூறும் மகோபநிஷதமும் தேஜோபிந்துமுதலிய வுபநிஷதங்களும்,

" प्रारब्दकर्मपर्यन्तं कदाचित्परमात्मवित् ।
जगज्जीवाद्दिकं वेद कदाचिन्नैव वेद तत् ॥ ५० ॥

कदाचिद्ब्रह्म जानाति प्रतीतमखिलं सुराः ।
कदाचिन्नैव जानाति स्वभावादेव तत्त्ववित् ॥५१॥

जगज्जीवादिरूपेण यदा ब्रह्म विभासते ।
तदादुःकादिभोगोपि भाति चाभासरूपतः ॥५२॥

यदा ब्रह्मात्मना सर्वं विभाति स्वत एव तु ।
तदा दुःकादिभोगोऽयमाभासो न विभासते ॥५३॥

जगज्जीवादिरूपेण पश्यन्नपि परमात्मवित् ।
न तत्पश्यति तद्रूपं ब्रह्मवस्त्वेव पश्यति ॥ ५४ ॥

ब्रह्मणोऽन्यत्सदा नास्ति वस्तुतोऽवस्तुतोऽपिच ।
तथा सति शिवादन्यत्कथं पश्यति तत्त्ववित् ५५

ब्रह्मरूपेण वा साक्षाज्जगज्जीवात्मनाऽथवा ।
यथा यथा प्रथा साक्षाद्ब्रह्म भाति तथा तथा ५६

यथा यथाऽवभासोऽग्रं स्वभावादेव भासते ।
तथा तथाऽनुसंधानं योगिनः स्वात्मवेदनम् ॥५७॥

नामतश्चार्थतश्चापि महादेवो यदि प्रभुः ।
किं जहाति तदा विद्वान्किं गृह्णाति सुरर्षभाः ५८

ग्राह्यं वा शंकरादन्यत्त्याज्यं वा यदिविद्यते ।
महत्त्वं तस्य हीयेत स्वभावो न विहन्यते ॥५९॥

महत्त्वं नैव धर्मोऽस्य भेदाभावात्परात्मनः ।
धर्म धर्मित्ववार्ता च भेदे सति हि विद्यते ॥ ६० ॥

भेदोऽभेदस्तथा भेदाभेदः साक्षात्परात्मना ।
नास्ति स्वात्मातिरेकेण स्वयमेवास्ति सर्वदा ६१

ब्रह्मैव विद्यते साक्षाद्वस्तुतोऽवस्तुतोपि च ।
तथा सति शिवज्ञानी किं गृह्णाति जहाति किम् ६२

मायया विद्यते सर्वमिति केचन मोहिताः ।
शिवरूपातिरेकेण नास्ति माया च वस्तुतः ६३

मायया वा शिवादन्याद्विद्यते चेच्छिवस्य तु ।
महत्त्वं परमं साक्षाद्धीयते सुरपुंगवाः ॥ ६४ ॥

महत्त्वस्यतु संकोचो नास्ति सम्यङ्निरूपणे ।
अस्ति चेदप्रमाणं स्याच्छ्रुतिः सत्यार्थवादिनी ६५

तस्मादस्ति महादेव एव साक्षात्स्वयं प्रभुः ।
आनन्दरूपः संपूर्णो न ततोऽन्यत्तु किंचन ॥६६॥

इयमेव तु तर्काणां निष्ठा काष्ठा सुरोत्तमाः ।
प्रत्यक्षादिप्रमाणानां वेदान्तानामपीश्वराः ॥ ६७ ॥

स्मृतीनां च पुराणानां भारतस्यतथैव च ।
वेदानुसारिविद्यानामन्यासामास्तिकोत्तमाः ॥६८॥

शैवागमानां सर्वेषां विष्णुप्रोक्तागमस्य च ।
अस्मदुक्तागमस्यापि सुराः सूक्ष्मनिरूपणे ॥ ६९ ॥

பிராரப்தகர்மத்தினளவும் ஒருகால் பரமார்த்தஞானி ஜகத்து ஜீவன் முதலியவற்றை அறிகின்றான். ஒரு காலத்தில் அதனை அறிகிறதே யில்லை. தேவர்களே! ஒருகால் தோற்றிய வெல்லாவற்றையும் பிரஹ்மமாக வறிகின்றான்; ஒருகால் இயல்பாகவே அறிகிறதே யில்லை தத்துவஞானி. ஜகத்து ஜீவன் முதலிய வடிவாக எப்போது பிரஹ்மம் விளங்குகின்றதோ, அப்போது துக்காதி போகமும் ஆபாஸரூபமாக விளங்குகின்றது. எப்போது இயல்பாகவே யாவும் பிரஹ்மவடிவாகத் தோற்றுகிறதோ, அப்போது ஆபாஸமான இத்துக்காதிபோகமும் தோற்றுகிற தில்லை. ஜகத்து ஜீவன்முதலியவடிவாகப் பார்க்கினும், பரமாத்மஞானி அதனைப் பார்க்கிறதில்லை. அவ்வடிவத்தினைப் பிரஹ்மவஸ்துவாகவே காண்கின்றான். வஸ்துத்தன்மையினாலும் அவஸ்துத்தன்மையினாலும் எப்போதும் பிரஹ்மத்தின் வேறான தில்லை. அவ்வாறாகவே சிவத்தின் வேறாயதனை எவ்வாறு காண்பன் தத்துவஞானி? பிரஹ்மரூபமாகவாவது சாக்ஷாத்ஜகத்துஜீவவடிவாக

வாவது எப்படி எப்படி சொல்லப்படுகின்றதோ அப்படி அப்படிச் சாக்ஷாத்பிரஹ்மமே விளங்குகின்றது. எப்படி யெப்படி இத்தோற்றம் இயல்பாகவே விளங்குகின்றதோ, அப்படி யப்படி அநுசந்தானமாம் ஸ்வாத்மவேதனம் ஞானிக்கு பெயராலும் பொருளாலும் மகாதேவனை பிரபுவே யெனின், தேவசிரேஷ்டர்களே! அப்போது சிவஞானி எதனை விடுவான்? எதனைக் கொள்ளுவான்! சங்கரனின் வேறான கொள்ளத்தக்கதாவது தள்ளத்தக்கதாவ துளதாயின், அச்சங்கரனது மகத்துவம் குறையும். ஸ்வபாவம் கெடாது. இப்பரமாத்மாவுக்குப் பேதமின்மையால் மகத்துவம் தர்மமாகாது. தர்மதர்மித்தன்மைவார்த்தைப்பேத முளதாயினுளதாம். சாக்ஷாத்பரமாத்மாவோடு பேதமும் அபேதமும் பேதாபேதமும் ஸ்வாத்மாவின் வேறாக எப்போதும் இல்லை; எப்போதும் தானே யுளது. வஸ்துத்தன்மையாலும் அவஸ்துத்தன்மையினாலும் சாக்ஷாத் பிரஹ்மமே யுளது. அவ்வாறாகச் சிவஞானி எதனைக்கொள்ளுவன்? எதனை விடுவன்? மாயையினால் மோகிக்கப்பட்ட சிலர் மாயையினால் யாவு முளதா மென்பர். உண்மையாக சிவஸ்வரூபத்

தின் வேருக மாயை யில்லை. மாயையினுல் சிவத்தின் வேருன துளதெனின், சுரசிரேஷ்டர்களே! சாக்ஷாத் சிவத்தின் பரமமகத்துவம் நீங்குகின்றது. செவ்வையாய் நிரூபிக்குமிடத்து மகத்துவத்திற்குச் சுருக்க மின்று. உளதெனின் சத்தியார்த்தத்தினைப் புகல்வதான சுருதி அப்பிரமாணமாம். ஆதலால் சாக்ஷாத் ஸ்வயம் ஆநந்தரூபனும், சம்பூர்ணனும் பிரபுவுமான மகாதேவனேயுளன். அவனின் வேருன தெதுவு மில்லை. சுரோத்தமர்களே! சூக்ஷமமாய் நிரூபிக்குமிடத்து இதுவே தர்க்கங்கட்கும், பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்கட்கும், வேதாந்தங்களான உபநிஷதங்கட்கும், தேவர்களே! ஸ்மிருதிகட்கும், புராணங்கட்கும், பாரதத்திற்கும் அவ்வாறே மற்ற வேதாநுசாரிவித்தைகட்கும், ஆஸ்திகோத்தமர்களே! எல்லாச் சைவாகமங்கட்கும், விஷ்ணுவினுற் சொல்லப்பட்ட வாகமத்திற்கும், (பிரஹ்மாவாகிய)என்னுற் சொல்லப்பட்ட ஆகமங்கட்கும் சுரர்களே! நிஷ்டையும் காஷ்டை (எல்லை)யுமாம்." என்னும் பிரஹ்மகீதை ௨-ம் அத்தியாயமுதலியனவுமாம்.

இச் சூத்திரத்திற்கு, "சிவஞானைக்கிய முறினும் தனக்கு அந்தரியாமியாகவும் * ௨௬. குரு

---

* ௨௬ பிரசங்கத்தால் குருபக்தி ஆவசியகமென்பதனை

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
न गुरोरधिकं कश्चित्त्रिषु लोकेषु विद्यते ॥

दिव्यज्ञानोपदेष्टारं देशिकं परमेश्वरम् ।
पूजयेत्परयाभक्त्या तस्य ज्ञानफलं भवेत् ।
यथा गुरुस्तथैवेशो यथैवेशस्तथा गुरुः ॥

पूजनीयो महाभक्त्या न भेदो विद्यतेऽनयोः ।
नाद्वैतवादं कुर्वीत गुरुणा सह कुत्रचित् ।
अद्वैतं भावयेद्भक्त्या गुरोर्देवस्य चात्मनः ॥

குரு பிரஹ்மா, குரு விஷ்ணு, குரு தேவனை மகேசுவரன். குருவின்மேலான தெதுவும் மூன்றுலகத்து மில்லை. * திவ்யஞானோபதேசஞ் செய்யும் பரமேசுவரனை தேசிகனை மேலான பக்தியோடு பூஜிக்கவேண்டும். அவனுக்கு ஞானபலமுண்டாகிறது. குரு எப்படியோ அப்படியே ஈசுவரனும் ஈசுவரன் எப்படியோ அப்படியே குருவும் மகாபத்தியோடு பூஜிக்கத்தக்க

வடிவாகவு மிருந்து உண்மையை யுணர்த்

வாாவர். இவ்விருவருள் பேதமில்லை. குருவோடு ஓரிடத்தும் அத்வைதவாதம் செய்யலாகாது. குருவின், தெய்வத்தின், ஆத்மாவின் அத்வைதத்தினைப் பக்தியோடு பாவிக்கவேண்டும்" என்னும் யோகசிகோபநிஷதம்,

"यस्य देवे परा भक्तिर्यथा देवे तथा गुरौ तस्यैते कथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥

எவனுக்குத் தேவனிடத்து மேலான பக்தியும் தேவனிடத்தி லெப்படியோ அப்படியே குருவினிடத்திலு மிருக்கின்றதோ அம்மகாத்மாவிற்கு கூறிய இவ்வர்த்தங்கள் பிரகாசிக்கும்; நிச்சயம்" என்னும் சுவேதாசுவதர முதலியவற்றுற் காண்க.

குருலக்ஷணம்.

"तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ।

அவ் வாத்மசாக்ஷாத்காரத்தின்பொருட்டு சமித்தினைக் கரத்திற்றாங்கியவனாய் அவன் சுரோத்திரியரும் பிரஹ்மநிஷ்டருமான குருவினையே அடைக," என்னும் முண்டகம் க-உ-கஉ,

திய உபகாரி யாகலின், அச்சிவத்தின்பால்

"गुशब्दस्त्वन्धकारः स्याद्रुशब्दस्तन्निरोधकः ।
अन्धकारनिरोधित्वाद्गुरुरित्यभिधीयते ॥

கு சப்தமோ அந்தகாரமாம். ரு சப்தம் அதனை நீக்குவதாம். அந்தகாரமான அஞ்ஞானத்தினை உபதேசவாயிலாக நீக்குந்தன்மையிருத்தலின் குருவென்று சொல்லப்படுகின்றார்." என்னும் அந்வயதாரகோபநிஷதம்,

"एतेषां देशिकानां च लक्षणं श्रुणु सुव्रत ।
अहिंसः सत्यशौचादि विश्वजीवदयापरः ॥

क्षमावान् शान्तचित्तश्च निग्रहानुग्रहेक्षमः ।
समाचारयुतो दक्षो जपध्यानपरायणः ॥

ज्ञानदीक्षासमायुक्तो गुरुभक्तिविशारदः ।
ज्ञानयोगक्रियाचर्या चतुष्पादान्त शास्त्रवित् ।
दंभाचारविनिर्मुक्तः क्षुद्रकर्मविवर्जितः ।
शिष्याणां गुणदोषेषु विज्ञानी च जितेन्द्रियः ।
रागद्वेषविनिर्मुक्तः कृपया च समन्वितः ।

समयानां च सर्वेषां ज्ञानसारपरिग्रही ।
शिवानुभूतिसंयुक्तः संशयश्छिदसंशयः ।
क्षयकुष्ठादिरहितः वीतरागश्च सुन्दरः ।
निर्ममो निरहङ्कारो निश्शङ्को निर्विकल्पकः ।
तमोविहीनःशास्त्रज्ञः परमार्थविचिन्तकः ॥
एवं लक्षणसंयुक्तो ह्याचार्यवर उच्यते ।
भौतिकोपि विशेषेण धर्मपत्नीसमन्वितः ।
पूर्वोक्तलक्षणोपेतो ह्याचार्यवर उच्यते ॥
सन्यासाश्रममत्यन्तमुत्तमंदीक्षितं विदुः ॥

இத்தேசிகர்களின் இலக்ஷணத்தினை நல்விரதமுடையோனே, கேட்பாயாக:- ஹிம்ஸையில்லாதவனும், சத்தியம் சௌசாதிகளுள்ளவனும், சகலஜீவர்களிடத்தும் தயாபரனும், க்ஷமையுள்ளவனும், சாந்தசித்தனும், சாபாநுக்கிரகத்திற் சமர்த்தனும், நல்லொழுக்கத்தோடு கூடியவனும், வல்லவனும், ஜபத் தியான பாராயணனும், ஞான தீக்ஷையோடு கூடியவனும், குருபக்தியிற் சிறந்தவனும், ஞானம் யோகம் கிரியை சரியை யென்னும் நாற்பாதாந்தம் சாஸ்திர முணர்ந்தவனும், இடம்

முளதாமாறு மேலான பக்தியினைச் செய்ய

---

பாசாரமின்றியவனும், க்ஷுத்ரகர்மம் (இழிவான செய்கை) இல்லாதவனும், சிஷ்யர்களின் குணதோஷங்களில் விசேஷ ஞானமுடையவனும், இந்திரியஜயமுடையவனும், இராகத்துவேஷங்க ளில்லாதவனும், கிருபையோடு கூடியவனும், எல்லாச் சமயங்களின் ஞானசாரத்தைச் செவ்வையாய்க் கிரகிப்பவனும், சிவாநுபூதியோடு கூடியவனும், சம்சயங்களைச் சேதிப்பவனும், சம்சயமின்றியவனும், க்ஷயகுஷ்டாதிகளின்றியவனும், வைராக்கியமுள்ளவனும், அழகுள்ளவனும், எனதென லில்லாதவனும், அகங்கார மில்லாதவனும், சங்கையின்றியவனும், விகற்பமின்றியவனும் தமஸில்லாதவனும், சாஸ்திரஞ்ஞனும், பரமார்த்தத்தினை விசேஷமாய்ச் சிந்திப்பவனுமாவன். இத்தன்மைய லக்ஷணங்களோடு கூடியவன் ஆசாரியசிரேஷ்டனெனப்படுகின்றான். விசேஷமாகத் தர்மபத்நியோடுகூடிய பௌதிகனும் முற்கூறிய லக்ஷணங்களோடு கூடியவனுய் ஆசாரிய சிரேஷ்டனெனப்படுகின்றான். தீக்ஷிக்கப்பட்ட சந்நியாஸாசிரமத்தினை அத்தியந்தம் உத்தமமென் றறிவர்.'' என்னும் அசிந்தியவிசுவசாதாக்கியாகமம்,

"दृश्यरूपमिदं सर्वं दृग्रूपेण विलाप्य च ।
दृग्रूपं ब्रह्म यो वक्ति स गुरुर्नापरः पुमान् ॥

வேண்டு" மென்றுரைசெய்வது முண்டு. அது

---

திருசியவடிவ இவ்வெல்லாவற்றினையும் திருக்கு வடிவமாக வொடுக்கித் திருக்குவடிவப் பிரஹ்மத்தினை எவன் உபதேசிக்கின்றானோ அவனே குரு; மற்றப் புருஷ ஞகான்." என்னும் பிரமகீதை அத்யாயம் கஉ-சந. முதலியவற்றா னறியத்தக்கதாம்

**சிஷ்யலக்ஷணம்.**

" तस्मै स विद्वानुपसन्नाय सम्यक्
प्रशान्तचित्ताय शमान्विताय ।
येनाक्षरं पुरुषं वेद सत्यं
प्रोवाच तां तत्त्वतो ब्रह्मविद्याम् ॥

அந்த வித்வான் நல்ல மிக வடங்கிய சித்தமுள்ள வனும் மனோநிக்கிரகமுள்ளவனும் தன்னை விதிப்படி சரண்புகுந்தவனுமான அவனுக்கு எதனால் சத்தியமான அக்ஷரபுருஷனை யறிவானோ அத்தன்மைய பிரஹ்மவித் தையினை உண்மையாக உபதேசித்தனர்" என்னும் முண்டகம் க-உ-கந,

" तस्मै मृदितकषायाय तमसः पारं दर्शयति ॥

அந்தக்கரணதோஷங்க ளொழிந்த அவனுக்குத் தமத் திற் கப்பாற்பட்டதனைக் காட்டுகின்றார்." என்னும் சாந்தோக்கியம் எ-உ௬-உ,

வும் சுருதியாதிகட் குடன்பாடேயாம். (௧௧)

---

शान्तो दान्त उपरतस्तितिक्षुः समाहितो भूत्वा ॥

சமமுடையவனும், தமமுடையவனும், உபரதனும், திதிக்ஷையுள்ளவனும், சமாதான முள்ளவனுமாகி" என்னும் பிருகதாரணியகம் ௪-௪-௨௩,

" चतुर्वर्णे तु संजातः शास्त्रज्ञाननिरूपकः ।
भक्तिज्ञानविरागेण बुद्धिमान्नीतिमान्सदा ॥

पुरुषार्थप्रकर्ता च सदा निर्णयबुद्धिमान् ।
शुश्रूषायां च कुशलो गुरुकार्ये प्रयत्नवान् ॥

सन्ततं गुरुशुश्रूषावागुल्लङ्घनभीरुकः ॥
एतल्लक्षणसंपन्नः स शिष्यः परिकीर्तितः ॥

अमद्यपास्तु ये शूद्राः शौचाचाराक्रियादराः ।
शिवभक्ताश्च ह्येतेषां दीक्षा कार्याऽन्यथा नहि ॥

सर्वेषामेव शिष्याणामधिकं शतगुणं शृणु ।
भक्तिविश्वासमद्रोहो गुर्वाज्ञापालनस्थितिः ।

श्रद्धा शान्ति क्षमा सत्यं तथा शौचं तपः श्रुतम् ।
कृतज्ञता द्वादशकं यस्य शिष्यस्य विद्यते ।
शिष्याणां च प्रधानश्च नान्ये ते हि प्रधानकाः ॥

நான்கு வர்ணங்களில் செவ்வையாய்ப் பிறந்தவனும், சாஸ்திரஞான நிரூபகனும், பக்திஞானவிராகத்தினால் புத்திமானும், நீதியுள்ளவனும், எப்போதும் புருஷார்த்தத்தினை (முயற்சியை) மிகச்செய்பவனும், எப்போதும் நிச்சயபுத்தியுள்ளவனும், பணிவிடையில் தேர்ச்சியுள்ளவனும், குருகாரியத்தில் இடைவிடாது பிரயத்தனமுள்ளவனும், குருபணிவிடையினையும் வாக்கினையும் கடக்கவஞ்சு மியல்பினனுமான இத்தன்மைய லக்ஷணமுடைய அவன் சிஷ்யனெனப்படுகின்றான். கட்குடியில்லாதவர்களும் சௌசாசாரக்கிரியைகளில் ஆதரவுடையவர்களும் சிவபக்தர்களுமான சூத்திரர் எவர்களோ அவர்கட்கே தீக்ஷை செய்யத்தக்கதாம். வேறுவகையானில்லை. சிஷ்யர்களெல்லோருக்குமே நூறுமடங்கதிகமானதனைக் கேள்:—பக்தி, விசுவாசம், துரோகமின்மை, குருவாணையினைப் பரிபாலிக்கும் நிலை, சிரத்தை, சாந்தி, க்ஷமை, சத்தியம், சௌசம், தபசு, கேள்வி, செய்நன்றி யறிதல் என்னும் பன்னிரண்டும் எச்சிஷ்யனுக்குளதோ அவன் சிஷ்யர்களுள் பிரதானன். மற்றையோராகிய அவர்கள் பிரதானரல்லார்.'' என்னும் பாரக்கிய முதலியவற்றானறியத்தக்கதாம்.

## பன்னிரண்டாம் சூத்திரம்.

(அ-கை.) இனி ஞானவாயிலாக முக்தியைப் பெறுவதற்கு முக்கிய சாதனம் யாதெனக் கூறுகின்றார்:—

मुक्त्यै प्राप्य सतस्तेषां भजेद्वेषं शिवालयम् ।
एवं विद्याच्छिवज्ञानबोधे शैवार्थ निर्णयम् ॥१२॥

(இ-ள்.) **मुक्त्यै** = முக்தியின் பொருட்டு, **सतः प्राप्य** = சிவஞானிகளான சத்துக்களை யடைந்து, **तेषां वेषम्** = அவர்கள் வேடத்தினையும், **शिवालयम्** = சிவாலயத்தினையும், **भजेत्** = பஜிக்கக்கடவன், **एवं** = இவ்வாறு, **शिवज्ञानबोधे** = சிவஞானபோத மென்னும் இந்நூலில், **शैवार्थनिर्णयम्** = சைவார்த்த நிர்ணயத்தினை, **विद्यात्** = அறிக. எ-று.

சமம், சந்தோஷம், விசாரம், சாதுசங்கமென்னும் மோக்ஷத்துவாரம் நான்கனுள், சாது சங்கமே முக்திக்கு இன்றியமையாத முக்கிய

சாதனமா மென்பது தோன்ற முக்தியின்பொ ருட்டுச் சத்துக்களை அடைந்து என்றார்.

சத்துக்களை யடைந்தபோது அவர்களால் சொல்லப்படும் ஈசுவர வழிபாட்டினைச் செய் தற்கு அவன் அவாங்மானஸகோசர னாகலின், சாந்நித்தியமிக்க அவனது ஸ்தாவர ஜங்கம வடிவங்களை வழிபடுக வென்பார் அவர்கள் வேடத்தினையும், சிவாலயத்தினையும் பஜிக்கக் கடவன் என்றார்.

அங்ஙனமின்றி இச்சூத்திரத்துக்கு மலநீங் கிச் சிவனோடைக்கிய மடைந்த சீவன்முக்தன் மலநீங்குமாறு வழிபடுக என்று பொருள்கொ ளின், முன்னமே மலநீங்கிய அவன் பின்னரும் அது நீங்க வழிபடுதல் * ௨எ. பிஷ்டபேஷ ணநியாயமாவதோடு முற் சூத்திரங்களிலும் சுருதியாதிகளிலும் கூறப்பட்டுள்ளவற்றிற்கு விரோதமாதலும் காண்க. அவ்வாறாயின், லோகரக்ஷணையின்பொருட்டுச்செய்வானெனக் கொள்ளின் இழுக்கென்னை யெனின், இழுக் கின்று, அவ்வாறு செய்தல் சுருதியாதிகட்

---

* ௨எ. அரைத்ததனை மறுபடியும் அரைத்தல் பிஷ்டபேஷணமாம்.

குடன்பாடேயாம். அவனுக்கு இயற்கையுமாம். அது இச் சூத்திரப்பொருளாகாமை 'मुक्त्यै முக்தியின்பொருட்டு,' 'செம்மலா நோன்றாற் சேரலொட்டா அம்மலங்கழீஇ' * உஅ. என்னும் சூத்திரபதங்களாற் காண்க.

ஈசனடியார்களாகிய சத்துக்களை இவர்களெனக் கண்டுதெளிதல் கூடாமையின் அவர்கள் வேடத்தினை யென்றார். வேடத்தினைக் கண்டமாத்திரத்தில் சிவனாகப் பாவித்து வழிபடவேண்டு மென்பதனை,

"दुर्वृत्तो वा सुवृत्तो वा मूर्खो वा पण्डितोपि वा ।
वेषमात्रेण संन्यासी पूज्यः सर्वेश्वरो यथा ॥

தீயொழுக்க முடையவனாயினும், நல்லொழுக்க முடையவனாயினும், மூர்க்கனாயினும், பண்டிதனாயினும் காஷாயதண்டாதிவேஷ மாத்திரத்தால் சந்நியாசி சர்வேசுவரனைப்போலப் பூஜித்தற் குரியனாகின்றான்." என்னும் சூதசங்கிதை ஞானயோக கண்டம் அத்யாயம்-௬.

* உஅ. கழுவுதற்பொருட்டு, செய்பிய வென்பது செய்தெனத்திரிந்தது.

"ब्राह्मणक्षात्रियवैश्यस्त्री शूद्रो वा शिवाश्रमी ।
ब्रह्मचारी ग्रहस्थो वा वानप्रस्थोऽथ भिक्षुकः ।
भूति शासनसंयुक्तः संपूज्यो राजपुत्रवत् ॥

சிவாசிரமியானவன் பிராஹ்மணனாயினும், க்ஷத்திரியனாயினும், வைசியனாயினும், ஸ்திரீயாயினும், சூத்திரனாயினும், பிரஹ்மசாரியாயினும், கிருகஸ்தனாயினும், வானப்பிரஸ்தனாயினும், சந்நியாசியாயினும் பூதிசாதனங்களோடு கூடியவனாயின் இராஜபுத்திரனைப்போலச் செவ்வையாய்ப் பூஜிக்கத்தக்கவனாகின்றான்." என்னும் சிவதர்மோத்தரம்,

"எவரேனுந்தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமுங் கண்டாலுள்கி, யுவராதே யவரவரைக்கண்டபோ துகந்தடிமைத் திறனினைந்தங் குவந்து நோக்கி யிவர்தேவ ரவர்தேவ ரென்றிரட்டா தொழிந் தீசன் றிறமேபேணி; கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே." என்னும் திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரப்பா முதலியவற்றாற் காண்க.

சிவாகமங்களிற் கூறப்பட்ட பதி பசு பாசங்களின் நிச்சயம் இங்கு சைவார்த்தநிர்ணயமெனப்பட்டது.

இவ்வாறு இரௌரவாகமத்துள்ள
சிவஞானபோதநூலின்
தத்துவார்த்தப்பிரகாசிகை என்னும் உரை
முடிந்தது.

ஸ்ரீ சிவகாமவல்லிசமேத
சிதம்பரேசன்
வாழ்க.

॥ ॐ तत् सत् ॥

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழையும். | திருத்தமும். |
|---|---|---|---|
| ௩ | ௧௨ | दशदा | दशधा |
| ,, | ௧௫ | சைவாகமும் | சைவாகமமும் |
| ௪ | ௨௦ | व शिवः | एव शिवः |
| ௫ | ௧௨ | राजाः | राजः |
| ,, | ௨௦ | भा वि | भावि |
| ௪ | ௧௬ | सर्वज्ञः सर्वविद्य | यःसर्वज्ञःसर्वविद्यस्य |
| ,, | ,, | स्यज्ञान | सर्वज्ञान |
| ௭ | ௧௫ | प्रभूः | प्रभुः |
| ௧௦ | ௯ | दात्मन | दात्मनः |
| ,, | ௧௪ | तसृष्ट्वा | तत्सृष्ट्वा |
| ௧௧ | ௧௧ | एन | येन |
| ௧௨ | ௩ | भूतामि | भूतानि |
| ௧௩ | ௧௪ | वेता | वैता |
| ,, | ௧௮ | * ௧௯ | * ௯ |
| ௧௭ | ௨ | आत्मात | आत्मत |
| ௧௯ | ௬ | दीत्पा | दीप्ता |
| ,, | ௮ | ह्यमूर्तेः | ह्यमूर्तः |

| | | | |
|---|---|---|---|
| ,, | ௯ | वाह्य | वाह्य |
| ,, | ௧௧ | ज्योति | ज्योति |
| ,, | ௧௭ | * சஅ | * ச |
| ௨0 | ௧௨ | एषः | एष |
| ,, | ௨0 | சத்தாவே | சத்தாகவே |
| ௨௩ | ௧௭ | क्लिया | क्रिया |
| ௨௫ | ௩ | शास्त्रायोनि | शास्त्रयोनि |
| ௨௮ | ௧௧ | मत्तान्यो | मत्तोन्यो |
| ௨௯ | ௧௮ | காண்டம் | கண்டம் |
| ௩௧ | ௪ | சம்மந்தத்தி | சம்பந்தத்தி |
| ௩௩ | ௧0 | दृश्यं | द्दृश्यं |
| ௩௫ | ௧௪ | सर्वे | सर्वं |
| ௪௫ | ௩ | சக்தியும | சக்தியும் |
| ௪௯ | ௧௭ | श्वेत्यं | श्वेत्थं |
| ௪௭ | ௫ | दुर्गट | दुर्घट |
| ,, | ௯ | ऽनधाः | ऽनघाः |
| ,, | ௮ | तत्त्यो | तस्यो |
| ௪௬ | ௨0 | ணியல | ணியல் |
| ௫௧ | ௨ | ह्यान्य | ह्यन्य |

| | | | |
|---|---|---|---|
| ,, | ௪ | भृदा | मृदा |
| ,, | ௬ | सर्वभ्रका | सर्वप्रका |
| ,, | ௧௨ | शाश्ववत | शाश्वत |
| ௫௨ | ௩ | ऐतदाम्य | ऐतदात्म्य |
| ௫௫ | ௧ | சொல்லா | சொல்லலா |
| ,, | ௮ | मात्रैण | मात्रेण |
| ௬௪ | ௧௫ | कर्मानू | कर्मानु |
| ௬௮ | ௪ | पूर्व | पूर्वं |
| ௯௯ | ௧ | वियव | व्यव |
| ௭௨ | ௧௮ | बुर्द्धा | बुद्धी |
| ,, | ௨௦ | मित्या | मिथ्या |
| ௭௪ | ௧௧ | ससमस्तं | समस्तं |
| ௮௩ | ௨௧ | தோற | தோற் |
| ௮௫ | ௨ | வடித்தில | வடிவத்தில் |
| ௮௮ | ௫ | सर्बाव | सर्वाव |
| ௯௧ | ௧௬ | धर्म्यादरे | धर्म्यादेर |
| ௯௨ | ௬ | सिद्य | सिध्य |
| ௧௦௨ | ௧௦ | यत्किचि | यत्किंचि |

| | | | |
|---|---|---|---|
| ௧௦௫ | ௬ | नैर्घृण्ये | नैघृण्ये |
| ௧௦௯ | ௭ | தனது | (தனது) |
| ௧௧௦ | ௧௦ | पात्यते | पाद्यते |
| ௧௨௦ | ௯ | मत्राध्वा | मन्त्राध्वा |
| ௧௨௧ | ௧௮ | புதாத்வா | பதாத்வா |
| ௧௨௨ | ௩ | तत्तरमं | तत्परमं |
| ,, | ௧௩ | मुत्तत्य | मुत्पत्य |
| ௧௨௩ | ௯ | சந்திரினை | சந்திரினை |
| ,, | ௧௨ | गोषो निभः | घोषोन्निभः |
| ௧௨௪ | ௧௨ | श्रेत्रविषयास्तूल | श्रोत्रविषयास्थूल |
| ௧௨௮ | ௧௩ | भातस्त | भावतस्त |
| ,, | ௧௭ | अलोक | आलोक |
| ௧௨௯ | ௧௧ | ष्वेव | ष्वेव |
| ,, | ௧௨ | मधुः | मुद्य |
| ௧௩௨ | ௪ | क्रमाय | क्रमाया |
| ,, | ௫ | यथो | यतो |
| ௧௩௪ | ௧ | उद्दिष्टं | उद्दिष्टः |
| ,, | ௪ | मूतादि | भूतादि |

| | | | |
|---|---|---|---|
| க௩௭ | ௨0 | बोधृ | बोध्दृ |
| க௩௮ | க௨ | बोधृ | बोध्दृ |
| க௩௯ | ௬ | இந்தியங்க | இந்திரியங்க |
| க௪0 | க௭ | ஸ்வேச்சசாரி | ஸ்வேச்சாசாரி |
| க௪க | க0 | दृक्रियः | दृक्क्रियः |
| க௪௪ | ௩ | भंजते | भुंजते |
| க௪௫ | ௫ | मणीषिः | मनीषि |
| க௫0 | ௨0 | स्वम्ना | स्वप्ना |
| க௫௪ | க௩ | ऽवस्वा | ऽवस्था |
| க௫௫ | ௮ | புததன் | புத்தன் |
| க௫௬ | ௬ | ज्ञेया | ज्ञेयाः |
| க௫௭ | ௬ | द्विधाः | द्विविधाः |
| ,, | ௮ | भहा | महा |
| ,, | கக | एषां | येषां |
| க௫௯ | க௩ | பல | மல |
| க௬௩ | ௩ | विज्ञानी | विजानी |
| ,, | ௪ | द्विज्ञार | द्विज्ञातार |
| க௬௫ | க | विरन्त | निरन्त |
| க௬௬ | ௪ | மினறிய | மின்றிய |

| | | | |
|---|---|---|---|
| கஎக | உ | तद्यदि | तद्यति |
| கஎந | உ | सृष्टि | सृष्ट |
| ,, | கஎ | ஸ்ரூபமும் | ஸ்வரூபமும் |
| ,, | உக | ज्ञानमन्तं | ज्ञानमनन्तं |
| கஎச | ககூ | அதயாமும் | அத்யாயமும் |
| கஎசு | கக | லாசங்கிதை | லாஸசங்கிதை |
| கஎஎ | கச | குக்ஷ்ம | ஸூக்ஷ்ம |
| கஅக | கஅ | व्याथै | व्याधै |
| கஅஉ | ந | व्याथै | व्याधौ |
| கஅச | கரு | शक्तिरूप | शक्तिरुप |
| கஅரு | ரு | मोक्षे | मोक्ष्ये |
| கஅசு | க0 | करुणया | करुणा |
| ககூஉ | க0 | போக | மோக |
| ககூரு | ந | पापपलै | पापफलै |
| ,, | ரு | ज्ञानस्वरूपं | ज्ञानरूपं |
| ,, | அ | जीवनभाव | जीवभाव |
| உ00 | கச | சத்தியசுக | சத்தியஞானசுக |
| உ0உ | எ | शाब्दस्य | शब्दस्य |
| ,, | கஅ | புரத்திராதி | புத்திராதி |

| | | | |
|---|---|---|---|
| ௨௦௫ | ௨ | चेतनो | चेतनै। |
| ௨௦௯ | ௧ | पश्य | पश्ये |
| ௨௧௧ | ௧௬ | कारणोत्थि | कारणादुत्थि |
| ௨௧௬ | ௧௯ | घटामहा | घटाकाशमहा |
| ௨௧௮ | ௧௫ | भवति | भवति |
| ௨௨௦ | ௧௦ | भूत्वात्मा | भूत्वात्म |
| ௨௨௪ | ௨ | बै | वै |
| ,, | ௭ | பிரஹ்மம் அபய மென்பது பிர சித்தம். | |
| ௨௨௯ | ௧௭ | बधते | बाधते |
| ௨௩௦ | ௮ | ஜீவத்தும் | ஜீவத்துவம் |
| ,, | ௧௫ | सदाः | सदा |
| ௨௩௨ | ௭ | घनमू | घनम् |
| ,, | ௨௦ | सशय | संशय |
| ௨௩௪ | ௫ | मरमा | परमा |
| ௨௩௫ | ௧௪ | ब्रह्य | ब्रह्म |
| ௨௩௮ | ௧ | என்றும் | என்னும் |
| ,, | ௧௫ | त्थं | त्वं |

| | | | |
|---|---|---|---|
| ௨௪0 | ௩ | रूढाहं | रूढामहं |
| ,, | ௮ | वन्विमलः | वह्निमलः |
| ௨௪௨ | ௫ | त्यत्क | त्यक्त्वा |
| ,, | ௧௧ | त्यत्का | त्यक्त्वा |
| ௨௪௩ | ௫ | யறி | யறிய |
| ௨௪௪ | ௧௧ | (அநுக்கிரகி)க் | (அநுக்கிரகி |
| ௨௪௭ | ௭ | சுவாராஜ்ய | சுவராஜ்ய |
| ௨௪௮ | ௮ | ग्रन्ति | ग्रन्थि |
| ௨௫0 | ௧௭ | चिद्र | चिद् |
| ,, | ௧௮ | वत | वीत |
| ௨௫௫ | ௯ | मिती | मिति |
| ,, | ௧௪ | म।ते | मतिं |
| ௨௫௯ | ௧௫ | ஈசனமு | ஈசனு |
| ௨௫௯ | ௨ | यात्माना | यात्मना |
| ௨௯௨ | ௧0 | सङ्कम् | सङ्कम् |
| ௨௯௫ | ௧௩ | जगस्था | जगत्स्था |
| ௨௯௯ | ௧௫ | परमात्म | परात्म |
| ௨௯௮ | ௪ | स्वप्नव | स्वमव |
| ௨௯௯ | ௨ | सम्यङ् | सम्यङ् |

| | | | |
|---|---|---|---|
| ௨௭௮ | ௨ | शुभं | शंभु |
| ௨௭௯ | ௧௫ | दाब्दि | दाब्धि |
| ௨௮௦ | ௧௧ | स्म्यहम् | मस्म्यहम् |
| ௨௮௫ | ௧௫ | स्वप्नाधि | स्वप्नादि |
| ௨௯௧ | ௧௮ | யுணர்ந்த | யுணர்ந்த |
| ௨௯௭ | ௫ | ழுசமேஞ | மீசமேஞ |
| ௨௯௯ | ௧ | தொலையும் | தொலையும |
| ,, | ௨௨ | प्रसङ्गा | प्रसङ्गा |
| ௩௦௧ | ௧௨ | அதாமமு | அதர்மமு |
| ௩௦௩ | ௧ | भवद्यस्ये | भवेद्यस्य |
| ௩௧௦ | ௧௨ | वर्जा | वर्जि |
| ,, | ௧௫ | ब्रह्मै | ब्रह्मै |
| ௩௧௫ | ௧௫ | प्रारब्द | प्रारब्ध |
| ,, | ௨௦ | दुःका | दुःखा |
| ௩௧௬ | ௨ | दुःका | दुःखा |
| ௩௨௪ | ௨ | श्छिद | च्छिद |
| ௩௨௭ | ௧௨ | चाराक्रिया | चारक्रिया |
| ௩௨௮ | ௧ | शान्ति | शान्तिः |
| ,, | ௨௧ | சிஷ்ய | சிஷ்ய |

ஓம்.

ஸ்ரீ பிரஹ்ம நிஷ்டபண்டித
ஸ்ரீமான் வி. துப்புஸ்வாமி அவர்களால்
வெளிப்படுத்தப்பட்டவைகளில் இப்பொழுது
விற்பனைக்குத்தயாராகவிருக்கும்
புத்தகங்கள்

## ஸ்ரீ பஞ்சதசி.

(வித்தியாரண்ணிய சுவாமிகள் ஸ்ரீ
காயத்திரிதேவியின் வரத்தால் இயற்றியது.)
விலை ரூ 10—0—0

பலநாளும் பலரும்
வெளிவரவேண்டுமென்றெதிர்பார்த்ததும்,
இதுகாறும் வெளிவராததுமான
**சிவயோகப்பிரதீபிகை.**

ஸ்ரீ சதாசிவயோகீந்திரர் இயற்றியது

இதில் மந்திரயோகம், லயயோகம், ஹடயோகம், ராஜயோகம், பாகியசதுரங்கம், ஆப்பியந்தர சதுரங்கம், பாகிய சதுரங்கவிதானம், இயமம், நியமம்: ஆத்ம சுத்தி, ஆசனம், மடலக்ஷணம், பிராணயாமம், பிராணயாமபேதம், பிராகிருத பிராணயாமம், வைகிருதபிராணயாமம், கேவலகும்பகம், நால்வகை யோகம், மூலபந்தம், ஒட்டியானபந்தம், ஜாலந்தரபந்தம், அந்தரங்கசதுரங்கவிதானம், பிரத்யாகாரம், தியானம், நவசக்கிரம், ஷோடசஆதாரம், தாரணை மூன்று, தியானம் பஞ்சதாரணை, சமாதி, ஞானஷ்டாங்கயோகம், தாரகயோகம், லக்ஷியத்திரயம், ஞானசிவபூஜை முதலியனவிருக்கின்றன. இந்நூல் சிவயோகிகளுக்கும், சைவர்களுக்கும் மிக முக்கியமானது. பொன்போற் போற்றதக்கது. விலை ராபர் அணா 10. கலிகோ அணா 12.